# செல்லும் வழி இருட்டு

வீரகேசரி பிரசுரம்



சொக்கன்

# செல்லும் வழி இருட்டு

சொக்கன்

RAJASEEKEREN
14/2 STATION ROAD
[illegible]AGODA

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# "Sellum Vali Iruttu"

by

K. Sokkalingam

*FIRST EDITION*

OCTOBER 1973.

*COPY RIGHTS*

RESERVED WITH
THE PUBLISHERS

***Price Rs. 2/60***

Published by:

VIRAKESARI
P.O. Box 160, COLOMBO.

Sole Distributors:
EXPRESS NEWSPAPERS (CEY.) LTD,
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

S. JEYADEVAN
243, FRUIT HILL - LANE
HATTON

# பதிப்புரை

ஈழத்து வாசகர்கள் மத்தியில் ''சொக்கன்'' அறிமுகம் வேண்டாதவர். அன்னாரது படைப்புக்கள் பல பத்திரிகைகளி லும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து பிரபல்யமடைந்துள்ளன.

இந் நவீனம் கதாசிரியருக்கு மிகவும் பிடித்தமானது. இது சித்தரிக்கும் ஆசிரிய சமூகத்தினரின் வாழ்க்கையையும் பிரச்சினைகளையும் திரு. சொக்கன் உய்த்து உணர்ந்தவர். ஏனென்றால் அவரும் ஓர் தமிழாசிரியர். ஆதலால் அவரது எழுத்தில் உயிர்த்துடிப்பு விரவி நிற்கின்றது.

இந் நவீனம் சித்தரிக்கும் ஆசிரிய சமூகத்தினரின் இன் னல்கள், ஏக்கங்கள் நிறைந்த வாழ்க்கை, தனியார் பாட சாலை நிர்வாகம் ஆட்சி புரிந்த சகாப்தத்திற்கு பெரும் பாலும் பொருந்துமென்றாலும், இதில் படம் பிடித்துள்ள மனித உள்ளங்களின் அபிலாஷைகளும், பலவீனங்களும், நம்பிக்கைகளும், தோல்விகளும் என்றைக்கும் உண்மை யானவையே.

ஆதலால் இந் நவீனத்தின் இலக்கியச் சுவை, கால எல்லை கடந்து வாசகர்களை என்றென்றும் கவரக்கூடியது.

வீரகேசரியின் பதினாறாவது பிரசுரமாக இந் நவீனத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

—பதிப்பாளர்.

அடுத்த வெளியீடு:

பிரபல நாவலாசிரியர்
''செங்கை ஆழியான்''
எழுதும்

"வாடைக் காற்று"

(சமூக நவீனம்)

மலையாளத்தில் எழுதப்பட்ட ''செம்மீன்'' நாவ லுக்கு இணையான வெற்றிப் படைப்பு!

# ஆசிரியர் முன்னுரை

1961 ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கையிலே பெருந் தொகையான பாடசாலைகள் சமய நிறுவனங்களாலும், தனியாராலும் நடாத்தப்பட்டன. அக்காலத்தில் ஆசிரியர்களின் வாழ்க்கை நரகமாகவே இருந்தது. பாடசாலை முகாமையாளர்களின் கைகளிலே இவர்கள் பாவைகள் போல் இயங்கினார்கள். அடிமைத்தனத்தின் மொத்த உருவங்கள் ஆசிரியர்கள்தாம் என்ற கேலிக்கு இலக்கானார்கள். இவர்கள் நடந்த வழியிலே இருள்மூடிக் கட்டிபட்டுக் கிடந்தது.

இடையிடையே இந்த நாவலில் வரும் தியாகராசன், தணிகாசலம், கந்தையா போன்றவர்கள் இருளிடத்தே ஒளிவிளக்கேந்தி, ஆசிரியர்களுக்குச் சுதந்திரவழி இதுதான் என்று வழிகாட்ட முயன்றதும் உண்டு.

அப்பர் கல்விச்சபை முகாமையாளர் இராமலிங்கம், அவரின் அடித்தொண்டராம் உபாத்தியாயர் இராமுப்பிள்ளை, அட்டைபோல் ஒட்டிக்கொள்ளும் பரிஸ்டர் மூர்த்தி, அலுவலக எழுதுவினைஞர் செந்தில் போன்றவர்கள் ஒளி விளக்கைப் பறித்திட மூர்த்தண்ணியமாய் முயன்றதும் உண்டு.

இதனால் நிகழ்ந்த போராட்டத்தைச் சித்தரிப்பதுதான் "செல்லும் வழி இருட்டு"

இது வெறும் நாவல் மட்டுமல்ல; ஒரு சகாப்தத்தின் வரலாறு. அந்தக் காலத்து கல்வி உலகத்தின் சீரும், இழிவும் கதாபாத்திரங்களாக உருவாகி உள்ளன. அவ்வளவு தான்.

"சொக்கன்"

# செல்லும் வழி இருட்டு

மார்கழி மாத நடுப்பகுதி. சூல்கொண்ட மேகங்கள் வானவெளியிலே அலைந்த வண்ணம் இருந்தன. காற்றிலே பிசுபிசுக்கும் நுண்ணிய மழைத்துளிகள் பூமித்தாயைத் தொட்டுச் சிலிர்க்க வைத்தன.

மாலை பவனிக்குத் தயாராகியது. வெற்றிலைக் காவி படிந்த உதடுகளிடையே மினுங்கும் பற்கள் போல அந்திச் செக்கரிடையே சூரியனின் மங்கிய கதிர்கள் தலை காட்டின.

செம்மண் காவி ஏறிய துணிகளுடனும், புழுதிபடிந்த உடல்களுடனும் சில சிறுவர்கள் மந்தையைத் துரத்திக் கொண்டு அந்தத் தெருவழியாகப் போனார்கள்.

தெருவின் இடது கோடியில், அமைதியான சூழ்நிலையில் புத்தூர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி அமைந்திருந்தது.

பகலில், விரிவுரை நேரங்களில் ஆசிரிய மாணவர்கள் அவர்களைக் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் முதலியோர் ஏதாவது பேசினால் உண்டு. மற்றப்படி அந்த இடத்திலே மௌனத்தின் பேராதிக்கமே!

ஆனால். இன்று அங்கே அமைதி குலைந்துவிட்டது. எங்கும் ஒரே கலகலப்பு! ஆசிரிய மாணவரின் ஆரவார

ஒலி! அவர்களின் முகங்களிலே மகிழ்ச்சி ஆழமாய் வேரோடி இருந்தது.

காரணம்?

ஆசிரிய மாணவர்களுடைய இறுதிப் பரீட்சை அன்று தான் முடிந்திருந்தது. கடந்த இரண்டாண்டுகளின் முயற்சி பேனாவில் உருவாகி, விடைத்தாள்களிலே தவழ்ந்து அவர்களின் நெஞ்சகங்களிலே இன்பக் கிளுகிளுப்பை உண்டாக்கியிருந்தது.

விரிவுரை நிகழும் மண்டபங்களிலும், வெளித் தாழ்வாரங்களிலும் ஆசிரிய மாணவருடைய குதூகலம் பெருகி ஓடியபடி இருந்தது.

ஒரு கூட்டம் ஆசிரிய மாணவர், சிரிப்பலைகளிடையே மிதந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

“அப்பாடா! இரண்டு வருஷப்பாடு ஒருபடியாய் முடிந்துவிட்டது. இனியாவது பிள்ளைகுட்டிகளோடு சந்தோஷமாக இருக்கலாம்” என்று கந்தவனம் சொன்னார், நிம்மதியான பெருமூச்சோடு. அவருக்கு வயது முப்பத்தைந்து. இருண்ட கடலிடையே வெள்ளலைகள் மிதப்பது போல, அவரின் தலையிலே நரை மயிர்கள் இடையிடையே தலைகாட்டின.

பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் பயிற்சி பெறாத ஆசிரியராய்க் கல்வி கற்பித்துவிட்டு, இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் சம்பள லீவில் பயிற்சிபெற வந்திருந்தார் அவர். கல்லூரியின் கட்டுப்பாடுகளும், கடுமையான மூளை உழைப்பும், சேர்ந்து இந்த இரண்டு வருடங்களையும் அவர் வரையில் இரண்டு யுகங்களாய் ஆக்கிவிட்டிருந்தன. அதன் பிரதிபலிப்புத்தான் அவருடைய நீண்ட பெருமூச்சு.

“இன்றோடு தேகப்பயிற்சி, தோட்டவேலை எல்லாவற்றிற்கும் பிரியாவிடை கூறியாகிவிட்டது. சத்தியமாய் இனி எந்தப் பள்ளிக்கூடத்திலும் தேகப்பயிற்சிப் பாடம் மாத்

திரம் எடுக்க மாட்டேன்'' என்று சிறுநகை அரும்பக் கூறி ஞர் வேலும்மயிலும். இவருக்கு இரட்டை நாடித்தேகம். கடந்த இரண்டு வருடங்களாய் அந்தப் பாரிய உடலை வளைத்து, நிமிர்த்தித் தேகப்பயிற்சி செய்த அனுபவம் இருக் கிறதே? அது மிகப் பயங்கரமானது! ''இனிஇந்தத் தொல்லை ஒன்றும் இல்லை'' என்ற எண்ணமே இருநூறு இறாத்தலாய் இருந்த அவரை, இருபது றாத்தல் உள்ளவராய் ஆக்கி விட்டது.

''உங்களுக்கென்ன? அரசாங்கத்தில் கடமையாற்றி விட்டு வந்தவர்கள். நாளைக்கே உங்களுக்கு இடம் கிடைத்துவிடும். எங்கள் பாடுதான் திண்டாட்டம்'' என்று சிறிது வேதனையோடு கூறினான் தணிகாசலம்.

இளமைக்கும், வாலிபத்துக்குமிடையே அரும்பிவரும் பூனை மீசையோடு காட்சிதரும் இவன், ஓர் ஏழையின் மகன். பாடசாலைப் படிப்பு முடிந்த சூட்டோடு, ஆசிரியப் பயிற்சிபெற வந்துவிட்டான். இவனது படிப்பை நிறைவு செய்ய இவன் தந்தைபட்ட இன்னல்கள் கொஞ்சமல்ல. தணிகாசலம் செலவழித்த ஒவ்வொரு சதத்திலும் தகப்ப னின் வியர்வைக்கறை படிந்தேயிருந்தது.

''அட! இடம் கிடைப்பதுதான் பெரிய காரியமா? ஆயிரமோ, இரண்டாயிரமோ என்று பணத்தை வீசி எறிந்தால், எத்தனை பாடசாலை முகாமைக்காரர் நான், நீ என்று போட்டியிட்டு இடம் தருவார்கள் தெரியுமா?'' என்று மிகுந்த அலட்சியமாகக் கூறினான் இராமநாதன். இவன் பரம்பரைப் பணக்காரன். படிப்பு இவனுக்குப் பொழுதுபோக்கு. 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்ற பழமொழியை அனுசரித்தே இவன் ஆசிரியப் பயிற்சிக் கல் லூரியில் நுழைந்தவன்.

இராமநாதனுடைய பேச்சு, தியாகராசன் என்ற இளைஞனது கோபத்தைக் கிளறியது. ''ஆமாம்! பணமுள்ள வர்கள், பந்தம்பிடிக்கத் தெரிந்தவர்கள். தங்கள் வீட்டிற் குப் பக்கத்திலேகூடப் பள்ளிக்கூடத்தைக் கொண்டுவரச்

செய்துவிடுவார்கள். எல்லோருக்கும் அது முடிந்த காரியமா?'' என்று வார்த்தைகளிலே சூடேற அவன் பேசினான்.

''பெரிய இலட்சியபுருஷன்! பேச வந்துவிட்டார். ஊர் விட்டு ஊர் போய்க் கஷ்டப்படாமல் ஊரோடிருந்து நாலு காசைச் சம்பாதிக்க வேண்டுமானால் முகாமைக்காரரைத் திருப்திப்படுத்தாமல் என்ன செய்வது? நீ பணம் கொடுக்காமல் வெளியிடத்தில் படிப்பிக்கப் போகிறாய் என்று வைத்துக்கொள்வோம். சாப்பாட்டிற்கென்றும், பிரயாணத்திற்கென்றும் எவ்வளவு பணம் செலவழிக்கவேண்டும் தெரியுமா? அவ்வளவும் ஊரிலிருந்தால் மிச்சந்தானே? நானும் இளமைத் துடிப்பில் உன்னைப் போலத்தான் பேசினேன். ஆனால் காலகதியில் உண்மை புலனாகிவிட்டது. ரெயில் பிரயாணத்தில் செலவழியும் காசை முகாமைக்காரர்களுக்குக் கொடுப்பதால் நட்டமில்லை என்று உணர்ந்தேன்'' என்று தன் அனுபவத்தை விளம்பினார் தருமலிங்கம். இவர் ஊரோடிருந்து பல காலம் கல்வி கற்பித்துப் பழுத்த அனுபவசாலி. பள்ளிக்கூட முகாமைக்காரர்களை எப்படியெல்லாம் திருப்திப்படுத்துவது என்ற கலையில் மிகவும் கெட்டிக்காரர் அவர்.

''பணம் கொடுத்து ஒரு பள்ளிக்கூடத்தில் இடம் எடுப்பதோடு தொல்லை தீர்ந்துவிடுவதில்லை. அடிக்கடி முகாமையாளருக்குத் தூபதீப நைவேத்தியம் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் சாமிகலைகொண்டு ஆடத் தொடங்கிவிடும்'' என்று கிண்டல் பண்ணுவதில் திறமைசாலியான முத்துவேலு கூறினான். எல்லாரும் பேசிவந்த முக்கியத்தை மறந்து கலகலவென்று சிரித்தார்கள்.

சிரிப்பைத் தொடர்ந்து, சிறிது நேரம் அமைதி நிலவியது.

தியாகராசன் மீண்டும் பேசினான். ''நாங்கள் பேசிய விஷயம் ஒன்றும் சிரிக்க வேண்டியதல்ல. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். கடன்பட்டோ, காணி பூமியை ஈடு

வைத்தோ ஆசிரியப் பயிற்சி பெறுகிறோம். சுயமரியாதையோடு நாலுகாசு உழைக்கத்தானே இவ்வளவு பாடும். பாடசாலை முகாமைக்காரரின்கீழ், தன்மானமற்று, சுதந்திர மற்று உணர்ச்சி மரத்த மரக்கட்டைகளாய் வாழ்வதென்றால் இந்தப் பயிற்சிகளால் பயன் என்ன? இன்னும் சில காலத்தில் அடிமை என்ற சொல்லிற்குத் தமிழாசிரியன் என்ற கருத்து அகராதியில் ஏறிவிடும்.''

''இவ்வளவு வீரம் பேசுகிறாயே? ஒரு 'முகாமைக்காரர் வசதியான ஒரு பள்ளிக்கூடத்தில் இடம்தந்தால் அதை ஏற்பதற்குத் தயாராக இருக்கமாட்டாயா? ஆயிரம் ரூபாயென்ன? இரண்டாயிரம் ரூபாயும் தருவேன் என்று சொல்லத் தயங்கமாட்டாய். எல்லாம் வெறும் வாய் வீச்சு!'' என்று தருமலிங்கம் சொன்னார்.

தியாகராசன் சிரித்தான். ''மனிதனுக்கு சில இலட்சியங்கள் இருக்கின்றன. உண்ணும் உணவிலும், உயிர்க்கும் உயிர்ப்பிலும் இந்த இலட்சியங்களே அவனுக்கு முக்கியம். என் வாழ்க்கையிலும் சில இலட்சியங்கள் இருக்கின்றன. அவற்றை என் உயிரைக் கொடுத்தும் காப்பாற்ற நான் தயங்க மாட்டேன். பணம் கொடுக்காமல் பாடசாலையில் இடம் பெறுவதும் அந்த இலட்சியங்களுள் ஒன்று'' என்று அவன் உறுதி தொனிக்கும் குரலிலே கூறினான்.

''சரி! சரி! எல்லாம் ஆற அமர யோசிக்க வேண்டிய விஷயங்கள். இப்பொழுது என்ன அவசரம்? வாருங்கள் தேநீர் அருந்தப் போவோம்'' என்று தணிகாசலம் சொல்லிப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

எல்லாரும் எழுந்து விடுதிச்சாலையை நோக்கிப் போனார்கள்.

## 2.

தியாகராசனுடைய கிராமம் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து ஐந்து மைல் தொலைவிலிருந்தது. சாதாரண நாட்களில் அவன் வீட்டுக்கே போய்விடுவான். இன்றோ பெட்டி, படுக்கை, புத்தகங்கள் முதலியவற்றைக் கொண்டு செல்ல வேண்டியிருந்தமையால் மாட்டு வண்டியைப் பூட்டிவரும்படி தகப்பனுருக்குக் கடிதம் போட்டிருந்தான். அவரும் அவ்வாறே வண்டி கொண்டுவந்திருந்தார்.

தியாகராசனுடைய தகப்பனுருக்கு அறுபது வயதிருக்கும். துன்பம் என்ற கலப்பை அவரின் முகத்தை ஆழமாக உழுதுவிட்டிருந்தது. மிச்சம் மீதி வைக்காமல் தலையிலுள்ள மயிர் அத்தனையும் பாலின் வண்ணத்தைப் பெற்றிருந்தன. கருமை பரிவட்டமிட்ட விழிகளில் எல்லையில்லாத சோகம் கவிந்திருந்தது. சுருங்கச் சொன்னால் இருள் செறிந்த வாழ்க்கைப்பாதையில் வழி தவறி அலைகின்ற யாத்திரீகன் போல அவர் காட்சி தந்தார்.

கல்லூரி மைதானத்திலே வண்டி மாடுகளை அவிழ்த்துக் கட்டியவர், நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்து விட்டுக்கொண்டார்.

தகப்பனுரின் வருகையைக் கண்ட தியாகராசன் தனது பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவர் நின்ற இடத்தை நெருங்கிவந்தான்.

அமைதியாய் அவன் பின்னே நிழல் போலத் தொடர்ந்து வந்த தணிகாசலம், தியாகராசனின் தலையணையையும், புத்தகங்கள் வைத்துக் கட்டப்பெற்ற கடதாசிப் பெட்டியையும் தூக்கிவந்தான்.

நண்பர்கள் ஒருவரோடொருவர் பேசவில்லை. இரண்டாண்டுகளாய், உயிரொன்றாக ஒட்டிக்கொண்ட அவர்கள் பிரிகின்ற நேரத்தில் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? நெஞ்சில் பொங்கிப் பெருகும் துன்பம் என்ற காட்டாற்று வெள்ளத்தில் வார்த்தைகள் யாவும் அடிபட்டுப் போயினவோ? அல்லது தங்களது மௌனத்தால் அதற்கு அணை கட்டிவிட்டனரோ?

இருவரும் பொன்னம்பலம் நின்ற இடத்தை அடைந்ததும் தம் தோளில் கிடந்த துணியால் முதுகு, கைகளில் பெருகிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு நின்ற பொன்னம்பலம், தம் துயரங்களையெல்லாம் மறந்துவிட்டவர் போலத் தியாகராசனைப் பார்த்துச் சிரித்தார். அவனைத் தம் கண்களால் அளந்தார். ஆஜானுபாகுவாய் நிமிர்ந்து நின்ற மகனின் தோற்றத்தைக் கண்டு தந்தையுள்ளம் புளகாங்கிதமடைந்தது.

“இனி என்ன? பாரத்தையெல்லாம் என்மகன் சுமந்துகொண்டு எனக்கு ஓய்வளிப்பான்” என்று அவர் எண்ணியிருக்க வேண்டும். அந்த எண்ணத்தின் வெளிப்பாடு போல அவரின் கண்கள் பனித்தன. அதைத் தன் மகன் காணாதபடி லாவகமாகத் துடைத்துக் கொண்டார்.

“தம்பி போவமே?” என்று அவர் கேட்டதற்குத் தணிகாசலம்தான் பதில் கொடுத்தான். “ஓம்! வண்டியைப் பூட்டுங்கோ” என்ற அவன் சொற்கள் தியாகராசனுக்குத் தொலை தூரத்திலிருந்து கேட்பது போலிருந்தது.

செம்பாட்டு மண் ஏறிய அழுக்கு வேட்டியுடன் எலும்பும் நரம்புமாய் நிற்கின்ற தந்தையின் வறிய கோலம் அவனை உணர்ச்சியற்ற மரமாய் நிற்கவைத்தது. வெள்ளை வெளேரென்ற சட்டை, வேட்டியுடன் திணவெடுக்கும் தோள்களும், வாலிபமிடுக்கும் கொண்டு, கம்பீரமாய் நிற்கும் தன் கோலத்தைத் தந்தையோடு ஒப்பிட்டுப் பார்த்த போது, குபீரென்று பொங்கி வரும் துன்பம் சிறிது முன்னால் அனுபவித்த இன்ப நினைவுகளைக் கலைக்கச் செய்தது.

அடுத்தடுத்து ஐந்து பெண்களின் திருமணத்திற்கு அவிர்ப்பாகமாகத் தம் உடலை அளித்த பொன்னம்பலம், தன்னுடைய படிப்பிற்காகத் தம்மையே அர்ப்பணித்துத் தேய்ந்து ஒடுங்கிப் போனுர்என்றஉண்மை மிகப்பயங்கரமாக அவன் உள்ளத்தைத் தாக்கியதால் தியாகராசன் கலகலத்துப் போனுன். அவன் அழவில்லை. புலம்பவில்லை. ஆனுல் அவனது நெஞ்சில் எங்கோ உடைப்பு எடுத்துப் பொங்கிப் பெருகி வரும் சோக உணர்ச்சியை அவனுல் மட்டுப்படுத்த முடியாது போயிற்று.

தணிகாசலம் அவனுடைய கையிலிருந்த பெட்டியை வாங்கிய பொழுதுதான், தியாகராசன் சுய உணர்வை அடைந்தான். ஒன்றும் பேசாமல் சென்று வண்டியில் ஏறிக் கொண்டான்.

உற்ற நண்பனின் பிரிவு, தணிகாசலத்தை வாட்டி எடுத்தது. உணர்ச்சியைப் பொறுத்தவரை தணிகாசலம் ஒரு சிறு குழந்தை. தியாகராசனின் பிரிவை நினைத்தபோது அவன் வெளிப்படையாகக் கண்ணீர்விட்டுக் கலங்கினுன்.

தியாகராசன் ஒரு வார்த்தைகூடப்பேசவில்லை. அவனது உதட்டிடுக்கிலே சிறைப்பட்டு, விடுதலை பெறத் துடித்த சிறுநகை, வேதனையைப் பெரும்பாரமாகச் சுமந்துவெளிப்பட்டது. தணிகாசலத்தின் மெல்லிய உணர்வுகளை அந்தச் சிறுநகை கேலி செய்வது போல இருந்தாலும் தியாகராசனும் உணர்ச்சிகளிடையே அகப்பட்டு அலைக்கப்படுகிறு னென்ற உண்மையைப் புலப்படுத்தியது.

பொன்னம்பலம் வண்டியைத் திருப்பித் தெருப் பக்கம் செலுத்தினுர். கல்லிலே கடகடத்துப் பின் தார்த் தெருவிலே ஏறிய வண்டி, ஆடி அசைந்து செல்லத் தொடங்கியது.

## 3.

மாட்டு வண்டி கிராமத்தைச் சமீபித்துக் கொண்டிருந்தது. வயல்வெளி, கிராமச் சங்கக் கட்டடம், வாசிகசாலை, சங்கக்கடை யாவற்றையும் கடந்து வண்டில் ஒரு திருப்பத்தை அடைந்தது. அங்கேயிருந்து அவர்களின் வீடு ஒரு கூப்பிடு தொலைவுதான்.

வழியெல்லாம் பொன்னம்பலம் தொணதொணத்தபடியே வந்தார். மகனின் முன்னிருந்த கடமைகளை விரிவாக எடுத்துரைத்தார். ஈடு வைத்த வளவுக் காணியை மீட்பது, தங்கையை மணம்செய்து கொடுப்பது, கிராமப் பள்ளிக்கூடத்தில் எட்டாவது வகுப்பில் சித்தியடைந்து விட்ட தம்பியைப் பட்டினத்துக் கல்லூரியில் சேர்ப்பது என்று அவன் முன்னுள்ள கடமைகளை வாய் ஓயாது நினைவுபடுத்தினார்.

தியாகராசன் எல்லாவற்றிற்கும் 'உம்' போட்டுக்கொண்டே வந்தாலும், அவனின் சிந்தனை மிகத் தீவிரமாக வேலைசெய்தபடி இருந்தது. "அப்பாவுக்குத்தான் எவ்வளவு அவசரம்? சிறகு முளைக்க முன்னரே பறக்கச் சொல்கிறாரே? எனக்கு உத்தியோகம் கிடைக்கவேண்டுமே! நிலையான வாழ்வு அமைய வேண்டுமே! அதன் பின்னல்லவா குடும்பப் பொறுப்பை ஏற்கலாம்."

நீண்டதொரு பெருமூச்சு தியாகராசனது இருதய அடித்தளத்திலிருந்து அவனையும் மீறி வெளிப்பட்டது.

பொன்னம்பலம் தம் மகனின் மனநிலையை உணர்ந்துகொண்டார். தியாகராசன் என்றைக்குமே அவரோடு அதிகம் பேசியதில்லை. சிறு வயதிலிருந்தே ஏற்பட்ட பழக்கம் அது. தாய், தமக்கையார் எல்லோரும் தியாகராசனைச் செல்லமாக வளர்க்க, அவரோ அவன் விஷயத்தில்

மிகுந்த கண்டிப்பாய் இருந்து வந்தார். இந்த மனோபாவம் இருவருக்குமிடையே இருந்த சுமூகத்தைக் குறைத்தாலும் ஆழமாக ஓடிக்கொண்டிருந்த பாசத்திற்கு எத்தகைய குந்தகத்தையும் விளைவிக்கவில்லை. தியாகராசனுடைய விருப்பு வெறுப்புக்களை அவன் முகபாவத்திலிருந்தே அறிந்துகொள்ளும் திறமையை அவர் பெற்றிருந்தார். இப்பொழுதும் அவன்விட்ட பெருமூச்சின் கருத்து அவருக்குப் புரியத்தான் செய்தது. இதன் காரணமாக அவர் சிறிது மௌனமானார்.

''வந்தது வர முன்னமே இப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாதுதான்'' என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவர் நெஞ்சில் தலைகாட்டியது.

''ஆனாலும் என் பேச்சில் தவறு ஒன்றுமில்லையே? எவ்வளவு நாளைக்குத்தான் இந்தப் பாரத்தைத் தனி ஒருவனைச் சுமப்பது?'' என்று அவர் தமக்குள் சமாதானமும் சொல்லிக்கொண்டே வண்டியை ஓட்டுவதில் முனைந்தார்.

வீட்டு முன்னால் வண்டில் நின்றது. தியாகராசனின் தாய் வள்ளிப்பிள்ளை கையிலே மண்ணெண்ணெய் விளக்கோடு வெளியே வந்தாள். விளக்கின் சுடர் காற்றிலே ஆடி அலைந்தது.

தியாகராசன் ஆறுதலாக இறங்கினான். பெட்டி படுக்கைகளை இறக்கி வைத்தான். பொன்னம்பலம் வண்டியை வளவிற்குள் ஓட்டிச் சென்று, மாடுகளை அவிழ்த்துத் தீனி போடுவதில் முனைந்தார்.

வள்ளிப்பிள்ளை நெஞ்சம் முழுவதும் நிறைந்து ததும்பும் பாசக் குழைவோடு, வாயெல்லாம் பல்லாக ''வா தம்பி'' என்று தன் மகனை வரவேற்றாள். அதற்கிடையில் தியாகராசனின் தம்பி சுப்பிரமணியம் வந்து பெட்டி படுக்கைகளை உள்ளே தூக்கிச்சென்றான்.

தியாகராசன் அம்மாவின் ஆசை மகன். ஐந்து பெண் மகளுக்குப் பின்னர் ஆசைக்கு ஒன்று என்று பிறந்த தவப் புதல்வன். அவனை வள்ளிப்பிள்ளை கண்ணிற் கருமணியாக

க் கருதியதும், தியாகராசன் தன் தாயை உயிருக்கு மேலாக நேசித்ததும் இயற்கையான விஷயங்கள்தான்.

குமுறும் உணர்ச்சிகளையெல்லாம் கொட்டித்தீர்க்கும் கொள்கலமாய்த் தியாகராசனுக்கு அமைந்திருந்தவர்கள் இரண்டுபேர்தாம். ஒருத்தி அவன் தாய். மற்றவன் அவன் நண்பன் தணிகாசலம். தாயைக் கண்டதும் பாச ஊற்று அவன் நெஞ்சை உடைத்துக்கொண்டு வெளிப் பட்டது.

''அம்மா'' என்று சொல்லிய வண்ணம் தியாகராசன் ஓடிச்சென்று தாயை அணைத்துக் கொண்டான். இருவரும் சிலவிநாடிகள் அந்த அணைப்பிலே மெய்மறந்து நின்றனர்.

சில விநாடிகள்தாம். ''போய்க் கால்முகம் கழுவிவிட்டு வா தம்பி சாப்பிடுவோம்'' என்று சொல்லியவளாய் வள்ளியம்மை தன்னை விடுவித்துக்கொண்டு உள்ளே போனாள். தியாகராசன் கிணற்றடியை நோக்கிச் சென் றான்.

தியாகராசன் வரும் வரை வள்ளிப்பிள்ளையை ஆட்டி வைத்த தலைவலி போன இடம் தெரியவில்லை. இளம் பெண் போன்று ஓடி, ஆடி வேலைசெய்தாள். அடுப்படி யைக் கூட்டி பாயை விரித்து, உணவுகளை எடுத்துவைத் தாள்.

முதலில் தியாகராசன் வர, பின்னால் பொன்னம்பல மும், சுப்பிரமணியமும், தங்கை புவனேஸ்வரியும் வந் தார்கள். அவர்களை இருத்திவிட்டு வள்ளிப்பிள்ளை உண வைப் பரிமாறத் தொடங்கினாள்.

இந்தச் சிறிய இடைவேளையில் தியாகராசனுக்கு வீட் டின் உண்மைநிலை நன்கு விளங்கிவிட்டது. விருந்தையிலிருந்த பத்தாயம், தாயின் கழுத்திலிருந்த சங்கிலி, தங்கையின் கையிலிருந்த தங்க வளையல்கள் எல்லாம் எங்கே போய் விட்டன என்று சிந்தித்து மண்டையை உடைத்துக்கொள்ள வில்லை அவன். தன் படிப்பு என்ற அரக்கனின் கோரப் பசிக்கு அவையெல்லாம் இரையாக்கிவிட்டன என்பது அவ னுக்கு எளிதில் விளங்கியது.

தாய் குனிந்து உணவு பரிமாறும்பொழுது அவளது சேலையின் கீழ்ப்பாகம் கிழிந்து இருபட்டுகளையும் ஒன்று சேர்த்து முடிச்சுப் போட்டிருந்ததைத் தியாகராசன் உன்னிப்பாகக் கவனித்தான். வீட்டிற்கு வந்தபோதிருந்த மகிழ்ச்சி, தாயை அணைத்துக்கொண்ட குதூகலம் யாவும் ஈரம் பிடித்த வானம் போலப் பிசுபிசுத்துப் போய்விட்டன. தம்பியும், தங்கையும் என்னவெல்லாமோ பேசியதும், தாய்கேட்ட கேள்விகளும் இந்த அசுவாரஸ்ய நிலைமையில் அவனுக்கு வேம்பாய்க் கசந்தன. ஏதோ ஒப்புக்குப் பதில் சொன்னான்.

தியாகராசனுக்கென்று விசேஷமா முட்டைப் பொரியலும், இறால் சொதியும் செய்து வைத்திருந்தாள் தாய். அவை விஷம் போல இருந்தன அவனுக்கு. தாய், தகப்பன், தம்பி, தங்கைகளின் தசையையும், குருதியையும் சாப்பிடுவது போன்ற குற்ற உணர்ச்சி அவனுள்ளே ஏற்பட்டுப் பூதாகாரமாய் வளர்ந்தது. இதனால் அவன் தன் சாப்பாட்டையும் குறைத்துக்கொண்டான்.

பரீட்சை எழுதிய களைப்பு, பிரயாண அலுப்பு என்பவற்றால்தான் மகன் உற்சாகமற்றிருக்கிறான் என்று நினைத்த வள்ளிப்பிள்ளை, மேலும் தொந்தரவுகொடுக்க விரும்பாமல் அவன் சாப்பிட்டு எழுந்ததும் அவனுக்குப் படுக்கையைப் போட்டுவிட்டாள்.

தியாகராசனுக்கும் ஓய்வு வேண்டியிருந்தது. அவன் தனது உடைகளைக் களைந்துவிட்டுச் சாரத்தை அணிந்தவனாய்ப் படுக்கையில் விழுந்தான்.

ஆனால், நித்திரை நினைத்தவுடன் தரிசனம் கொடுக்கும் மாயயோகினி அல்லவே! ஸ்திரமற்ற எதிர்காலம் பயங்கரமாக மலைப்பாம்பு போல நீண்டு கிடக்க அதன் அருகிலே அமைதியாகத் தூங்குவது முடியுமா?

“நானோ ஒரு தமிழாசிரியன். எனது பிச்சைச் சம்பளத்தில் குடும்பத்தைக் கவனிப்பது எப்படி? தம்பியின் படிப்பு, தங்கையின் திருமணம், இவற்றை நடத்துவது எப்

படி?'' என்று பல கேள்விகள் தியாகராஜனின் நெஞ்சைக் குடையத் தொடங்கின.

நித்திரையின்றி இரவு முழுவதும் அவன் படுக்கையிலே புரண்டபடி விடையில்லாக் கேள்விகளுக்கு விடைதேடும் வீண் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

## 4.

பொழுது புலர்ந்தது. தியாகராஜன் சோம்பல் முறித்தபடி படுக்கையைவிட்டு எழுந்தான். அவன் முன் ஆவி பறக்கும் முட்டைக் கோப்பியை வைத்துக்கொண்டு காத்திருந்தாள் தங்கை புவனேஸ்வரி. வறுமை என்ற மேகத் திரையைக் கிழித்துக்கொண்டு, இளமை என்ற முழு மதி அவளின் உடலிலே ஒளியைப்படர விட்டிருந்தது.

ஓடி ஆடி வேலைசெய்ததால் அவளின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. தன் அண்ணனின் கையில் கோப்பியைக் கொடுத்துவிட்டு, அவன் அதை ரசித்துக் குடிப்பதைப் பார்க்கும் ஆசையில் நின்று கொண்டிருந்தாள்.

அவன் கோப்பியை உறிஞ்சிக் குடிக்கும் வேகத்தைப் பார்த்த போது, வந்த சிரிப்பை அவளால் அடக்க முடிய வில்லை. தியாகராஜன் தங்கையைப் பார்த்தான். கடந்த இரவின் நித்திரையின்மையால் ஏற்பட்ட சோர்வு யாவும் அவள் கொடுத்த கோப்பியின் உற்சாகத்திலே கரைந்து விடவே புவனேஸ்வரியின் அவஸ்தையை ரசிக்கவும் தொடங் கினான்.

தியாகராஜனுக்குச் சிறுபிள்ளைத்தனமான விஷமச் செயல்களில் ஆர்வமோ, விருப்பமோ என்றும் இருந்த தில்லை என்பதை அவள் நன்கு அறிவாள். அதனால்தான்

அவள் தன் சிரிப்பை அடக்க முயன்றாள். ஆனால், கனிவு கூத்திடுகின்ற விழிகளோடு தன் அண்ணன் தன்னையே உற்றுப் பார்ப்பான் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. அதனால் கூச்சம் அடைந்தவளாய்த் தியாகராசன் குடித்து விட்டுத்தந்த கோப்பையை வாங்கிக்கொண்டு, அந்தச் சூழலிலேயிருந்து தப்பிவிட முயல்பவள் போலத் திரும்பி ஓட எத்தனித்தாள். தியாகராசனும் இதற்கே காத்திருந்தவன் போல அவளின் சட்டையை எட்டிப்பிடித்தான்.

சட்டை குறுக்குப்பாடாய்க் கிழிந்தது. புரையேறி விட்ட புண்ணிலே 'கல்' அடிபட்டு வேதனை அடைந்தவன் போல தியாகராசன் தடுமாறினான். புவனேஸ்வரி மலைத்துப் போய் நின்றாள்.

அந்த மலைப்பும் சிறிதுநேரந்தான். "விட்டுத்தள்ளு அண்ணை! நான் போய்த் தைத்துப் போட்டுக்கொள்ளுறன்" என்று ஆறுதல் சொல்லிவிட்டுப் புவனேஸ்வரி ஓடி மறைந்தாள்.

தியாகராசனுடைய வேதனை ஆரோகண கதியில் ஏறிக் கொண்டிருந்தது. தன் தங்கை நைந்து போன பழஞ் சட்டையை அணியவேண்டிய அளவிற்கு வீட்டு நிலை சேவலமாய்ச் சென்றுகொண்டிருப்பதை இனியும் தாள முடியாது. இந்நிலையைப் போக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று அவன் உறுதி செய்துகொண்டான்.

ஆனால், நிலைமையைச் சீர்செய்வது எவ்வாறு? அவனுக்கு விளங்கவில்லை, விளங்கவேயில்லை!

★

காலை உணவை முடித்துக்கொண்டு தியாகராசன் வயல்வெளியைக் கடந்து, வாசிகசாலையை நோக்கிச் சென்ற பொழுது இன்ப துன்ப விருப்பு வெறுப்பற்ற ஞானியின் மனோநிலையில் அவன் இருந்தான்.

வயல்களில்வளர்ந்து மதமதத்த நெற்றாள்களையும், அவற்றிடையே முளைத்துவரும் பசுமை அழியாத நெற்கதிர்களை

யும் கண்டபொழுது பழைய நாட்களின் இன்ப நினைவுகள் அவன் நெஞ்சகத்தே ஓடிவந்தன.

அந்தக் காலத்தில் அவன் தந்தைக்கு வளங்கொழிக்கும் நூறு பரப்பு வயல் இருந்தது. விடுமுறை நாட்களின்போது தன் தந்தைக்கு உதவியாய் இருப்பான் அவன். அரிவு வெட்டு நாட்களிலும், சூடுமிதிக்கும் நாட்களிலும் எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு குதூகலம்! உம்...! அவையெல்லாம் பழங் கனவுகள், பழங்கதைகள்! ஒவ்வொரு பெண்ணின் கலியாணமும், சிறிது சிறிதாய் ஒவ்வொரு வயலையும் ஏப்பமிட்டது. இப்பொழுதோ இருக்கும் வீட்டிற்கும் அந்தரம் ஏற்படும் நிலை!

இன்று, மாரிக்கால மென்காற்றில் அசைந்தாடுகின்ற நெற்கதிர்களைக் கண்டபொழுது "பழையபடி உழவு வாழ்க்கையை மேற்கொண்டால் என்ன?" என்ற எண்ணம் அவன் சிந்தையில் குருத்துவிட்டது. இருந்த அரைகுறைச் சொத்தையும் விற்று ஓர் ஆசிரியராய் விட்டதில் அர்த்தமே இல்லாதது போலத் தோன்றியது அவனுக்கு. மண் மாதாவை மறந்து, உழைப்பின் பெருமையை உதாசீனம் செய்து கண்ட பயன்தான் என்ன என்று அவன் தன் உள்ளத்தையே கேட்டுக்கொண்டான்.

தியாகராசனின் கால்கள் நடந்தன. ஆனால் சிந்தனையோ மறுகி மறுகி, அந்த வயல்களுக்கிடையே நின்று கண்ணாமூச்சி விளையாடியது. ஒருவகையாக வாசிகசாலையை வந்தடைந்தான்.

★

அதற்கு வாசிகசாலை என்ற பெயர் பொருத்தமே இல்லை. என்றோ ஒருநாள் யாரோ பரோபகார சிந்தையில் உபகரித்த சில சஞ்சிகைகள், கிழிந்துபோன பழைய புதினப் பத்திரிகைகள் ஒரு மூலையில் கிடந்தன. மேசைகளில் செம்மண் படிந்திருந்தது. தரையெங்கும் திருவாளர் வைரவரின் திருவிளையாடல் மூக்கைத் துளைத்தது.

இந்த மோசமான சூழ்நிலையையும் பொருட்படுத்தாது வாசிகசாலையின் வாங்கொன்றில் ஒரு ஜீவன் நிச்சிந்தையாக துயின்று கொண்டிருந்தது. அதற்கு வயது இருபத்தைந்துக்கு மேல் இருக்காது. கட்டுக்குலையாத உடல். அது விடும் குறட்டை ஒன்றுதான் உடலில் உயிர் இருப்பதை அறிவித்தது.

தியாகராசன் அந்த உருவத்தைத் தட்டி எழுப்பினான்.

'அட! இவன் கந்தையா அல்லவா? கடந்த ஆண்டு ஆசிரியப் பயிற்சி முடித்தவனையிற்றே! இங்கே என்ன செய்கிறானே?'

தியாகராசனுக்கு விளங்கவில்லை.

கந்தையா தூக்கமயக்கத்துடன் தியாகராசனை நோக்கினான். பின் கண்களை நன்றாகத் திறந்து, "அட, தியாகுவா வாடா வா" என்று சொல்லிக்கொண்டு சிறிது தள்ளி உட்கார்ந்தான். தியாகராசனும் வாங்கிலில் அமர்ந்தான்.

"சரி விசேஷம் என்ன? சொல்லு" என்று கேட்டான் கந்தையா.

"நேற்றுதான் இறுதிப் பரீட்சை முடிந்தது. இருக்கட்டும், நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று வினவினான் தியாகராசன்.

கந்தையா தனக்கே உரிய அலட்சியச் சிரிப்பை உதிர்த்தான். "தெரியவில்லையா?புத்தூர்க் கிராமமுன்னேற்ற சங்க வாங்கு, மேசைகளின் கௌரவ 'வாச்சர்' வேலை என்னுடையதுதான்."

கந்தையாவின் பதிலைக்கேட்டு தியாகராசனுக்கு சிரிப்பும் வந்தது, வேதனையாகவும் இருந்தது. "உன் பரிகாசத்தை விட்டு, விஷயத்தைச் சொல். உனக்குப் படிப்பிக்க இடம் கிடைக்கவில்லையா? நீ பயிற்சிக் கல்லூரியால் வெளிப்பட்டு ஒரு வருஷம் ஆகிறதே?"

கந்தையா மீண்டும் சிரித்தான். "ஏன் கிடைக்கவில்லை அப்பா! கல்வித் திருச்சபையின் முகாமைக்காரரின் திருவருளால் அடியேனுக்கு ஒரு இடம் கிடைத்தது, ஆனால், அவ

ரின் திருவருள் முற்றுமுழுக்காகக் கிடைக்காததால் ஆறு மாதச் சேவையுடன் வீட்டிற்கே திரும்பி வந்துவிட்டேன்.'' என்று பாதி கேலியாகவும், பாதி வருத்தத்துடனும் கூறி முடித்தான்.

தியாகராாசனுக்கு அவன் கூறியதன் தாற்பரியம் புரியவில்லை. அவன் முகத்தில் விழுந்த விஞக்குறியைப் புரிந்து கொண்ட கந்தையா, தன் கடந்த ஒராண்டு வரலாற்றையும் விபரித்தான். அதன் சுருக்கம் இதுதான்:

கந்தையாவை அரசாங்க உதவி நிதிபெறுத பாடசாலை ஒன்றில் அப்பர் கல்வித் திருச்சபை முகாமையாளர் ஆசிரியராய் நியமித்திருந்தார். மாதாந்தம் இருபது ரூபா கிடைத்தது, சம்பளம் என்ற பெயரால்! ஆறுமாதங்களால் அரசாங்கம் அப்பாடசாலையை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாய் அங்கீகரித்தது. அங்கே கற்பித்த ஆசிரியர்கள் கந்தையா உட்பட மூவரின் ஆறுமாதச் சம்பளப் பாக்கியும் கல்விப் பகுதியினரால் கொடுக்கப்பட்டது. ஆனல், அப்பணத்தை முகாமையாளர் பாடசாலை வளர்ச்சி நிதிக்கென்று கூறி எடுத்துக்கொண்டுவிட்டார்! மற்றைய ஆசிரியர்கள் மௌனம் சாதித்து இச் செயலுக்கு அங்கீகாரம் வழங்கினர். கந்தையா மட்டும் சம்பளப் பாக்கியைத் தருமாறு வற்புறுத்தியிருக்கிறன். அதன் பயன்? வேலைக்குச் சீட்டுக் கிழிப்பு. கிராம முன்னேற்றச் சங்க வாசிகசாலையின் கௌரவ 'வாச்சர்' வேலை!

தியாகராாசனல் நம்பவே முடியவில்லை. எவ்வளவு பெரிய அநியாயம்! இப்படியும் நடக்குமா?

கந்தையா தொடர்ந்தான். ''இனிது இனிது ஏகாந்தம் இனிது என்பது பெரியோர் வாக்கு. அதை மெய்ப்பிக்க வேண்டாமா? எனவேதான் இந்த வாசிகசாலையின் ஏகாந்தத்திலே இன்பங் காண்கிறேன். அப்புவின் தோட்டத்தில் வேலை ஏதாவதிருந்தால் செய்வேன். மிச்ச நேரமெல்லாம் இங்கே வந்து தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவேன். இதுதான் என் திட்டம். வீட்டிற்குப் போனல் நோக்காக்குச்

சோறு கிடைக்கும். சயன சுகத்திற்கு இந்த வாங்கு, வேறு என்ன வேண்டும்?'' என்றான் தனக்கே உரிய திருப்தியுடன்.

தியாகராசனுக்கு, கந்தையாவின் பேச்சைக் கேட்க ஆச்சரியமாயிருந்தது. ''அப்பப்பா என்ன நெஞ்சழுத்தம் இவனுக்கு! விருப்பு வெறுப்பற்ற ஞானிபோலல்லவா பேசுகிறான். தோல்வியை எள்ளிநகையாடுகின்ற மனோபாவம் சாமானியமாய்க் கிடைக்கக் கூடியதா?'' என்ற சிந்தனைகள் அலையலையாக அவன் உள்ளத்தில் எழுந்தன. ஆனால், கந்தையாவின் மன அடித்தளத்திலே இழையோடுகின்ற துன்பத்தின் அளவை அவன் எங்கே கண்டான்.

''சரி, அதற்குப் பிறகாவது வேலைதேட முயற்சிக்கவில்லையா நீ? இங்கேயே எத்தனை காலத்திற்கு இருக்கப் போகிறாய்? அரசாங்கத்திலாவது பதிந்து கொண்டிருக்கலாமே?'' என்று மிகுந்த அக்கறையோடு தியாகராசன் கேட்டான்.

கந்தையா, தியாகராசனின் அனுபவமில்லாத வார்த்தைகளைக்கேட்டு கடகடவென்று சிரித்துவிட்டு, ஓர் அபூர்வப் பிறவியைப் பார்ப்பது போல் தியாகராசனைப்பார்த்தான். ''தம்பிக்கு இன்னும் விஷயம் புரியவில்லைப் போலிருக்குது! வாத்திவேலை ஒன்றும் இங்கே போட்டுக் கிடக்கவில்லை!''

தியாகராசனுக்கு நெஞ்சில் ஒரு பாறாங்கல்லைவைத்து அழுத்துவது போல் இருந்தது. கந்தையாவின் நிலையே தனக்கும் ஏற்படுமோ என்ற அச்சம் அவன் உள்ளத்தில் முளைவிட்டது.

''நான் போய்வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவன் எழுந்து நடந்தான்.

''தியாகு! நீ அதிகம் யோசிக்கிறாய் போலத் தெரிகிறது ஒன்றுக்கும் பயப்படாதே, இந்த வாசிகசாலையில் மேலும் ஒரு வாங்கு இருக்கும்வரை நீ ஏன் வீணாக கவலைப்படவேண்டும்? அடிக்கடி வா, நானும் துணைவன் ஒருவன் கிடைத்துவிட்டான் என்று ஆனந்தப்படுவேன்'' என்று கந்தையா

கூறிய வார்த்தைகள் அவனைத் துரத்தி வந்து அவனின் பிடரியில் மோதின.

கவலை என்னும் பலிபீடத்தில், தன் சிந்தையைப் பலியிட்டுவிட்டு மேலே மேலே நடந்துகொண்டிருந்தான் தியாகராசன்.

## 5.

தணிகாசலம் தன் நண்பனைத் தேடிக்கொண்டு தியாகராசனின் வீட்டிற்கு வந்திருந்தான். நீண்ட தூரம் சைக்கிள் ஓட்டியதால் அவன் சட்டை தெப்பமாய் நனைந்து போயிருந்தது. வியர்வைக்கும், வேட்டிக்குமிடையே அகப்பட்ட கால்கள் பிசுபிசுத்தன.

படலையைத் திறந்து கொண்டு அவன் வீட்டிற்குள் நுழைந்த பொழுது, முதலில் காட்சிதந்தவள் புவனேஸ்வரி தான். குளித்துவிட்டு கிணற்றடியிலிருந்து அவள் வந்து கொண்டிருந்தாள்.

இருவரின் விழிகளும் ஒன்றுடன் ஒன்று மோதிப் பின் சங்கமமாயின. ஒருகணந்தான்......!

எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் இருவரும் சிக்கிக் கொண்டு தடுமாறினர். தணிகாசலத்துக்கோ இந்த நிலையில் அவளைக் கண்ட தடுமாற்றம். புவனேஸ்வரிக்கோ நனைந்த அரைகுறையுடையில் ஆண்மகன் ஒருவன்முன் சென்றுவிட்டோமே என்ற கூச்சம்.

''வாருங்கோ'' வார்த்தையை மென்று விழுங்கிக் கொண்டே கூறிவிட்டு, அவள் வீட்டினுள் ஓடி மறைந்து விட்டாள். தணிகாசலம் சைக்கிளை முற்றத்தில் நிறுத்தி விட்டு, உள்ளே சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்தான். 'புவனம்' என்ற பெயரை அவன் உள்ளம் முணுமுணுத்தது. பனியில் நனைந்த புத்தம்புது ரோஜா மலரைக் கண்ட கவிஞன் ஒருவனின் மனநிலையில் அவன் களித்துபோனான்.

"பெண்களுக்குத்தான் எவ்வளவு விரைவான வளர்ச்சி! சென்ற ஆண்டு நான் வந்தபொழுது சிற்றாடை கட்டிச் சிறுமியாய் ஓடித்திரிந்த புவனம் இன்று அழகுக்கு வரைவிலக்கணம் கூறும் குமரிப் பெண்ணாகி, மலர்ந்து நிற்கிறாள்! கார்முகில் போன்ற இவளின் கூந்தல், என் உள்ளத்திலே ஆனந்த வர்ஷத்தைப் பெய்து திளைக்க வைக்கிறது. இவளின் பட்டுமேனி என் சிந்தையைக் கிளறி வேடிக்கை பார்க்கிறது."

கனவுலகில் மிதந்த தணிகாசலத்தை, அப்பொழுது அங்கே வந்த சுப்பிரமணியத்தின் குரல் இவ்வுலகிற்கு இழுத்து வந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு "அண்ணை எங்கே?" என்று சாட்டுக்கு தணிகாசலம் வினவினான்.

"இப்ப அரைமணித்தியாலத்துக்கு முந்தித்தான் மூத்த அக்கா வீட்டை போனவர். போய்க் கூட்டிவரவா?" என்று கேட்டான் சுப்பிரமணியம்.

"தூரமெண்டால் சைக்கிளை எடுத்துக்கொண்டு போ" என்று தணிகாசலம் பதில் கூறியதும், அவன் அதற்காகக் காத்திருந்தவன் போல், மறுபேச்சின்றி சைக்கிளை ஓட்டிக்கொண்டு சிட்டாகப் பறந்தான். "மெதுவாகப் போ, கவனம்" என்ற தணிகாசலத்தின் வார்த்தைகள் வெகுதூரம் பின்தங்கிவிட்டன.

தணிகாசலத்தின் தனிமை நீடிக்கவில்லை, வள்ளிப்பிள்ளை வந்து அவனுடன் பேச்சுக் கொடுத்தாள். அடிக்கடி வந்து போய்ப் பழகியவனாதலால் தணிகாசலம் அவளோடு கலகலப்பாய்ப் பேசினான். ஆனால், அடிக்கடி அவளையுமறியாமலே அவன் கண்கள் வீட்டின் உட்பக்கம் பார்வையைச் செலுத்தியவண்ணம் இருந்தன.

"ஏன் தம்பி! உனக்கு எங்கையாவது வேலைகிடைச்சுதோ? எங்கடை தம்பியும் அடிக்கடி வேலைக்கு எழுதிப் போட்டுக்கொண்டுதான் இருக்குது. பள்ளிக்கூடம் விட்டு வந்தும் இரண்டு மாதமாகுது. இன்னும் இடம் கிடைச்சபாடில்லை" என்று குறைபட்டாள் வள்ளிப்பிள்ளை.

அவளுக்கு இருந்த மன நிலையில் தனக்கு வேலை கிடைத்துள்ள சந்தோஷச் செய்தியை எப்படிச் சொல்வது, என்று ஒருகணம் தடுமாறினன் தணிகாசலம். ''தாயல்லவா? எனக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று சொன்னல், தன் பிள்ளைக்கு வேலை கிடைக்கவில்லையே என்று அவள் ஆதங்கப் படமாட்டாளா?'' என்று நினைத்தான் அவன். ''ஆனலும் எப்படியோ தெரியப்போகிற விஷயந்தானே'' என்பதை எண்ணித் தனக்கு பதுளையில் ஒரு கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டது என்று கூறிமுடித்தான்.

''மிச்சம் சந்தோஷம். தூரம் எண்டாலும் இடம் கிடைச்சது பெரிய காரியந்தான். தம்பிக்கும் இடம் ஒண்டு அங்கேயே தேடிவிடு. ஒருத்தருக்கொருத்தர் துணையாயிருக்கும்'' என்றுவள்ளிப்பிள்ளை முகமலர்ச்சியோடு சொன்னள்.

அந்தத் தாயுள்ளத்தின் பரந்த மனேபாவத்தைப் பிழையாக உணர்ந்துவிட்டதை எண்ணித் தனக்குள்ளேயே நாணமடைந்தான் தணிகாசலம். அந்த நாண நிலையில் சற்று மௌனம் நிலவியது அங்கு.

இந்தச் சமயத்தில் புவனேஸ்வரி கோப்பி கொண்டுவந்து கொடுத்தாள். கோப்பியை வாங்குகையில் புவனேஸ்வரியை நிமிர்ந்து பார்த்த தணிகாசலத்திற்குக் கண்களை எடுக்கவே முடியவில்லை, அவளின் பரிசுத்தமான சௌந்தர்யம் அவனுள்ளேயிருந்த ரசனையைத் தூண்டிவிட அவன் தன் நயப்பையெல்லாம், ''நல்லாய் வளர்ந்து விட்டீர், அடையாளமே தெரியவில்லை'' என்ற சொற்களிலே வடித்தான்.

''அதையேன் கேட்கிருய் போ. கிசு கிசு எண்டு இவள் வளர்ற மாதிரியைப் பார்க்கப் பயமாயிருக்கு. எல்லாரும் பிள்ளையைப் பார்த்துவிட்டு இப்பிடித்தான் கேட்கினை''. என்று வள்ளிப்பிள்ளை பெருமிதம்நிறைந்த குரலிலே கூறினள்.

புவனேஸ்வரிக்கு நாணம் மிகுந்தது. அவள் ஒன்றும் பேசாது, கடைக் கண்ணல் தணிகாசலத்தைக் கனியவைத்துவிட்டு உள்ளே ஓடிப்போய்விட்டாள். தணிகாசலம் சில கணங்கள் மெய்மறந்து. அவள் சென்ற திக்கையே

நோக்கினான். தன் முன்னால் இனிய காவியக் கனவு ஒன்று நடந்து முடிந்ததுபோல் இருந்தது அவனுக்கு.

கோப்பியைக் குடித்தான். சிறிது சிறிதாகக் கோப்பியைச் சுவைத்துக் குடிக்கையில், அந்தக் கோப்பையில் புவனேஸ்வரியின் மென்கரம் பட்டது என்ற நினைவு அவனைக் கிளுகிளுக்க வைத்தது.

சிறிது நேரத்தில் தியாகராசனும், சுப்பிரமணியமும் சைக்கிளில் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் படலையைத் திறக்கும்வரை முன் அறையினுள் நின்று, கதவிடுக்கால் தணிகாசலத்தின் மாறுகின்ற முக பாவங்களை இரசித்துக் கொண்டிருந்த ஒருசோடிக் கண்கள், தாம் அமைந்திருக்கப் பாக்கியம் செய்த உடலோடு உள்ளே சென்று மறைந்தன.

6.

இரண்டு மாதங்களின் பின்பு இன்றுதான் நண்பர் இருவரும் சந்திக்கின்றனர். பேச எவ்வளவோ விஷயங்கள் அவர்களுக்கு. தியாகராசன் அப்படி ஒன்றும் கலகலப்பான சுபாவம் உள்ளவனல்ல. ஆனால் தணிகாசலத்தோடு பேசும் போது மாத்திரம் எங்கிருந்தோ அந்தக் கலகலப்பு வந்து விடும்.

பிற்பகல் தியாகராசன், தணிகாசலத்தையும் அழைத்துக்கொண்டு வயல்களின் நடுவிலிருந்த குளக்கரைக்குச் சென்றான். அதன் படிகளில் நண்பர்கள் இருவரும் அமர்ந்தனர்.

குளத்தைச் சுற்றியிருந்த புல்தரையில் சில மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. மாலைக் கதிரவனின் ஒளிக் கற்றைகள் குளத்துத் தண்ணீரில் பட்டுத் தெறித்தன. அந்த ஒளியோடு குளத்தினுள் நெளியும் மீன்கள் போட்டி போட்டன.

''இனி என்ன? தணிகாசல வாத்தியார் இந்த ஏழையை எங்கே கவனிக்கப்போகிருர்?'' என்று கிண்டல் செய்தான் பேச்சுவாக்கில் தியாகராசன். அவனுடைய கை சிறிய கூழாங் கற்களைப் பொறுக்கிக் குளத்தினுள்ளே எறிந்த வண்ணம் இருந்தது. கல் ஒவ்வொரு தடவையும் விழுந்து 'தொலொக்' என்ற ஒலியை எழுப்பிப் பின் வட்டவட்ட மாய்த் தண்ணீரிலே சிற்றலைகளை உண்டாக்குவதை அவன் கண்கள் உற்று நோக்கிஞலும் மனம் அதில் லயிக்கவில்லை.

''ஏன் அப்படிப் பேசுகிருய்? நீ மட்டும் வாத்தியாராக மாட்டாயோ? ஏனடாப்பா இந்தக் கிண்டல் உனக்கு?'' என்று சொல்லும்பொழுது தணிகாசலத்தின் உதட்டில் சிறுநகை மலர்ந்தது.

''எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா? உத்தியோகம் கிடைத்த சூட்டோடு, ஒரு பெண்ணையும் கைப்பிடித்துவிட்டால் உன் வாழ்க்கை லட்சியமே பூர்த்தியடைந்துவிட்ட மாதிரித்தான்; இல்லையா?'' என்ருன் தியாகராசன்.

''நீ சொன்ன இரண்டாவது விஷயங்கூடப் பூர்த்தி யடைந்து விட்டமாதிரித்தான்'' என்று தணிகாசலம் சொல்ல எண்ணியவன், வார்த்தைகளை மென்று விழுங்கிய வண்ணம், ''அதற்கெல்லாம் கால நேரமிருக்கிறது. முதலில் உனக்கு ஓர் உத்தியோகம் தேடவேண்டும். அதுதான் இப்பொழுது என் இலட்சியம்'' என்ருன்.

''என் அதிர்ஷ்டம்தான் தெரிந்ததாயிற்றே. இதுவரை பத்து விண்ணப்பங்கள்வரை அனுப்பிவிட்டேன். ஒன்றுக் குமே சாதகமான பதில் கிடைத்தபாடில்லை'' என்று பெருமூச்சோடு கூறிஞன் தியாகராசன்.

தன் நெஞ்சில் நிறைந்திருந்த சோகத்தை வெளியிட நேரிட்டதையிட்டு வருந்திய தியாகராசன், கவலையை மறந்த வன்போல கலகலவென்று சிரித்தான். பேச்சை மாற்றநினைத் தவனுய், ''பதுளைக்குப் போஞலும் அடிக்கடி கடிதம் எழுதத் தவருதே. அது ஒன்றுதான் எனக்கு ஆறுதல்'' என்று கூறி ஞன். மேலே பேசமுடியாத வார்த்தைகள் தடையாயின.

அவனது பேச்சு, தணிகாசலத்துக்கு ஆச்சரியத்தைக்கொடுத்தது. குன்றுபோல் அசையாத மனஉரம் கொண்டவன் என்று எல்லோரும் நினைத்திருந்த தியாகராசனா இவன்? இரண்டு மாதங்களுக்கிடையில் எவ்வளவு மாற்றம்? தணிகாசலத்துக்கு வியப்பாயிருந்தது; வேதனையுமாயிருந்தது. அவன் சொன்னான்: ''தியாகு! இரண்டு மாதங்களுக்கிடையில் இவ்வளவு கோழையாகிவிட்டாயா? 'வாழ்க்கை என்ற கடலில் எதிர்நீச்சல் போடத் தெரிந்தவன்தான் வாழத் தெரிந்தவன்' என்று அடிக்கடி நீ சொல்வாயே? அதைக் கூட மறந்துவிட்டாயா? மனத்தைத் தளரவிடாதே! நீ சொல்லித்தானா நான் கடிதமெழுதுவது? என் உடல் அங்கிருந்தாலும், என் உயிரும், உள்ளமும், உன்னையும், உன் குடும்பத்தவரையும் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருக்கும்'' என்று கூறிவரும்போது, தணிகாசலத்தின் உதடுகள் உணர்ச்சியால் நடுங்கின. கண்களில் நீர் முட்டி நின்றது. குடும்பத்தவர் என்ற சொல் பன்மையாயிருந்தாலும் அது ஒருமைப் பொருளையே குறித்து நின்றது என்பதைத் தமிழாசிரியனான அவன் தனக்குள் உணர்ந்து, அந்த உணர்ச்சிநிலையிலும் மன அமைதியடைந்தான்.

இருள் பரவ ஆரம்பித்ததும், நண்பர் இருவருமெழுந்து வீட்டைநோக்கி நடந்தனர். ஏதோ ஒன்று வாயையும், மனதையும் அடைத்துவிட்டதுபோல இருவரும் மௌனமாகவே சென்றனர்.

அடுத்தநாள் காலையில் தணிகாசலம் தன் வீட்டிற்குப் போய்விட்டான். இரண்டு நாட்களின் பின் அவன் பதுளைக்குச் செல்வதற்காகப் புகைவண்டியில் ஏறியபொழுதும், பதுளைக்கு வந்துசேர்ந்தபொழுதும் அடிக்கடி எதனையோ நினைத்துப் பைத்தியக்காரன் போலத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

யாவரிடமும் விடைபெற்றுச் சைக்கிளை உருட்டியபடி படலையைத் திறந்தபொழுது, புவனேஸ்வரி கிணற்றுக் கட்டின்மேல் ஏறிநின்றா. தன் அண்ணனுக்குத் தெரியாமல்

தணிகாசலத்தைப் பார்வையாலும், புன்முறுவலாலும் வழி அனுப்பி வைத்ததை அவனல் மறக்க முடியுமா?

## 7.

அர்ச். சூசையப்பர் கல்லூரி,
பதுளை,
18 - 5 - 48

தியாகு,

உனக்கு இத்துடன் மூன்று கடிதங்கள் போட்டு விட்டேன். நீ ஒன்றுக்குமே பதில் எழுதவில்லை. தயவு செய்து இதற்காவது பதில் எழுது. காத்திருப்பேன்.

இங்கு வாழ்க்கை மிக இன்பமாகக் கழிகிறது. ஆனல் அதற்கு நான் கொடுக்கும் விலைதான் அதிகம். அதாவது என் சக்திக்கு மேற்பட்டது.

அறை வாடகை, உணவு, உடை, பத்திரிகை, படம் பார்த்தல் என்பவற்றில் மாதந்தோறும் நூறு ரூபாய்க்கு மேல் செலவாகிறது. மீதி ஐம்பது ரூபாய்தான் வீட்டிற்கு அனுப்புகிறேன். அவர்கள் எப்படித்தான் சமாளிக்கிறார்களோ?

கல்லூரிக் கடமையைப் பொறுத்தவரை எவ்வித சிரமமும் இல்லை. எங்கள் அதிபர் மிக நல்லவர். மற்றும் இடங்களில் உள்ளதுபோல் ஆங்கில ஆசிரியர், தமிழாசிரியர் என்ற பாகுபாட்டை என்றைக்கும் அவர் காட்டியதில்லை. கடமைக்குத்தான் அவர் மதிப்பளிப்பவர்.

உன் உத்தியோக விஷயமாய் முயன்றுதான் வருகிறேன். எப்படியும்விரைவில் இடம் கிடைக்குமென்ற நம்பிக்கையுண்டு.

உன் குடும்பத்தவர் யாவருக்கும் என் அன்பைக் கூறும் அவர்களை நான் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும்.

என்றும் நினைக்கின்றேன் என்று சொல். சுப்பிரமணியம் கவனமாய்ப் படிக்கிறுனு? அவனுக்கு என் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
உன்—தணிகாசலம்.

இந்தக் கடிதத்தைத் தியாகராசன் தாய்க்கு வாசித்துக் காட்டினுன். வள்ளிப்பிள்ளையின் முதுகோடு ஒட்டிய வண்ணம் இருந்துகொண்டு, புவனேஸ்வரியும் அவன் படித்துக் கூறுவதை ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தாள்.

"நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், என்றும் நினைக்கின்றேன்" என்ற வாக்கியம் அவள் உள்ளத்திலே சென்று இனித்தது. தணிகாசலம் யாரைப்பற்றி அப்படியெல்லாம் நினைத்துக்கொண்டேயிருக்கிறுன் என்பது அவளுக்குத் தெரியாதா?

"நீங்கள் மட்டுமா நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? என் நெஞ்சுகூட உங்கள் திருநாமத்தையல்லவா எந்நேரமும் செபித்துக்கொண்டிருக்கின்றது?" என்று அவளின் உதடுகள் முணுமுணுக்காவிட்டாலும், உள்ளம் பேசியது.

"ஏனடா மோனை! பொடியன் பாவமல்லே? ஒரு கடதாசி எழுதிப் போடன்" என்று மகனை நோக்கி வள்ளிப்பிள்ளை கூறிஞள்.

"போடலாந்தான். அதுக்குக் காசு வேண்டாமோ?" என்று இழுத்தான் தியாகராசன்.

உடனே வள்ளிப்பிள்ளை தன் சேலை முடிப்பை அவிழ்த்து ஒரு பாசி பிடித்த இருபத்தைந்து சத நாணயத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

தியாகராசனின் இதயத்தைப் பிளந்துகொண்டு ஒரு பெருமூச்சு வெளிவந்தது.

தாயும், மகளும் மலைப்போடு அவனைப் பார்த்தார்கள்.

## 8.

நிலவுப் பூவின் ஒளியிதழ்களிலிருந்து தெறித்து விழுந்த தேன் துளிகள் மண்ணைக் கோலஞ் செய்தன. மெல்லிளந் தென்றல் கன்னியரின் நெஞ்சை நீவி விட்ட வண்ணம் இளங் காதலர்களின் உள்ளங்களிலே கிளுகிளுப்பை மூட்டிக்கொண்டு வீசியது. நிலவை வரவேற்று வாழ்த்துப் பாடிய நாய்களும் தூக்க மயக்கத்தாற்போலும் மௌனம் சாதித்தன. இரவு கழிந்துகொண்டிருந்தது. நேரம் ஒரு மணி. நடுச்சாமம்.

புவனேஸ்வரி பாயில் புரண்டவண்ணமிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் படுத்திருந்த வள்ளிப்பிள்ளை ஆழ்ந்த நித்திரையில் தன்னை மறந்து கிடந்தாள். பகலில் ஓடி ஆடி வேலை செய்த அசதி அவளுக்கு. இடைகழித் திண்ணையில் சுப்பிரமணியமும், தியாகராசனும் நித்திரையில் விடும் மெல்லிய குறட்டை கேட்டவண்ணமிருந்தது. முற்றத்தில் இருந்த கட்டிலிலே படுத்திருந்த பொன்னம்பலம் ஆழ்ந்த நித்திரையிலே இடைக்கிடை வாய் புலம்பிக்கொண்டிருந்தார். நித்திரையின்போது அவர் வாழும் உலகமே வேறுதான். நிஜ வாழ்க்கையிலே கிடைக்காத சிரிப்பு, குதூகலம் எல்லாம் அவருக்கு அந்த உலகிலே கிடைத்தன. அவற்றின் பிரதிபலிப்புப் போலவே அவரின் வாய் ஏதோவெல்லாம் அரற்றிக் கொண்டிருந்தது.

தூரத்தில் அம்மன் கோயிலில் ஒலிபெருக்கி ஏதோ சினிமாப் பாட்டொன்றை வெளிப்படுத்தியது. இன்று அந்தக் கோயிலில் எட்டாந் திருவிழா. கிராமமே அங்கே திரண்டிருக்கும். கிராமத்து மோகினிகள் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களின் கடைக்கண் நோக்கிற்கு ஏங்கிக் காளையர் கூட்டம் அங்கு வட்டமிடும்.

அறையின் இடுக்குகளூடாக அம்மன் கோயிலில் விட்ட மத்தாப்பின் ஒளி வந்து புவனேஸ்வரியின் விழிகளைக் கூசத்

செய்தது. நீண்டு சென்ற அவளின் சிந்தனையில் ஒரு திருப்பம்! வேலையற்று ஏங்கித் தவிக்கும் அண்ணன்; தங்கள் வாழ்வுக்காக வாய், வயிற்றைக் கட்டிக்கொண்டு சாகாது சாகும் அன்னை; வாழ்வின் இறுதிச் சாமத்தில் நிற்கும் தனது தந்தை; எல்லோரைப் பற்றியும் அவள் சிந்தித்தாள். அவர்களை ஒருகணம் மறந்துவிட்டு விழாக்கோலம் கொண்டிருக்கும் அம்மன் கோவிலையும், சிற்றுடை கட்டிச் சிறுமியாய், பாவாடை அணிந்த பருவக் குமரியாய்த் தான் சென்றுவந்த நாட்களையும், தன் கற்பனையில் ஒருகணம் எண்ணிப் பார்த்தாள்.

கடந்த ஒருவருடமாய் அவளோ, தாயோ கோயிற் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. ''வள்ளிப்பிள்ளை! உன்ரை சங்கிலி எங்கை?'' ''புவனம்! உன்ரை காப்பு எங்கை?'' என்று பெண்கள் யாரும் கேட்டால் என்ன பதில் சொல்வது? அந்தப் பயந்தான், கூப்பிடுதொலைவில் இருந்த அம்மன் கோவிலுக்கும் செல்லாது அவர்களைத் தடுத்து வைத்திருந்தது.

இன்று புவனேஸ்வரிக்கு நகைகளில் ஆசையில்லை. நல்ல சேலை அணிய வேண்டுமென்பதை அவள் மறந்துவிட்டாள்.

ஆனல்... ஆனல்... ஒரேயொரு ஆசை; அது, பருவப் பெண்கள் எல்லோருக்குமே ஒருநாள் ஏற்படும் ஆசை. அந்த ஆசை அவளின் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்தது. தணிகாசலத்தைக் கண்டபின் ஏற்பட்ட விளைவு அது.

வியர்வையில் முழுக்காடியபடி இரண்டு மாதங்களின் முன்பு தணிகாசலம் வந்ததும், அவனைக் கண்டு தான் நாணத்தோடு ஓடி ஒளித்ததும், அடுத்தநாள் அவன் திரும்பிச் சென்றபொழுது, கிணற்றுப் படியில் ஏறிநின்று விழிகளினல் அவனை வழியனுப்பி வைத்ததும் அவளின் நினைவுக்கு வந்தது. தணிகாசலம் படலையைத் திறந்துகொண்டு தெருவிலே இறங்கிச் சைக்கிளில் ஏறும்வரை பார்த்த அந்த ஏக்கப் பார்வையையும், எதையோ வைத்து மறந்தவன்போல் மறுகி மறுகிச் சென்ற தன்மையையும் அவளால் எப்படி மறக்க முடியும்?

காதலுக்கு வார்த்தைகளா அவசியம்? கனிவான ஒரு பார்வை, பாசம் வழிந்தோடும் ஒரு சிறு புன்னகை,— இவை போதுமே!

புவனேஸ்வரி அதிகம் படித்தவளல்ல. கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்போடு அவளின் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. கள்ளமற்ற குழந்தைத் தன்மையே அவளுக்கு இயற்கை வழங்கியிருந்த உயர் கல்வி. உயிர்போனாலும் நிறைபோகா உறுதியே அவள் கற்ற பாடநூல்.

ஆனால் இன்று அவள் நெஞ்சையும் கேளாது, சிந்தையையும் சூழாது ஒரு விஷயம் நடந்துவிட்டது! எங்கோ ஒரு மூலையிலிருக்கும் ஒருவனுக்காக அவள் நெஞ்சும், நினைவும் பாகாய் உருகியவண்ணமிருந்தன. அவனின் காலடியிலே தனக்குள்ள அனைத்தையும் அர்ப்பணிக்க அவள் தயாராகிவிட்டாள்!

தணிகாசலம் தெய்வமாக அவள் உள்ளத்தில் குடியேறி, உணர்வின் உயிர்ப்பாய், உயிர்ப்பின் சக்தியாய் ஆகியிருந்தான்.

செம்மண் சுவரால் மூடப்பெற்று, கிடுகினால் வேயப்பட்ட அந்தச் சிறிய வீட்டிலிருந்து புறப்பட்டுக் கனவுத் தேரிலேறி அவள் விண்ணிலே சென்றாள். நட்சத்திரப் பூக்களிடையே நிலவுத் தாமரையில் சௌந்தர்ய தேவதையாய், ஒளிப் பிழம்பாய் விளங்கிய தணிகாசலம், அவளை நோக்கி ஒரு நகைமுத்தை உதிர்விட்டான். அந்த நகைதான் எவ்வளவு ஒளி வாய்ந்தது. அப்பப்ப!

தணிகாசலம் மலரிலிருந்து இறங்கிவந்தான். அவளுடைய தேரிலேறி அவளை இறுக அணைத்துக்கொண்டான். தென்றலுக்கு இருக்குமா இந்தக் குளிர்மை? மலருக்கு இருக்குமா இந்த மென்மை? வெண்நிலவுக்கு இருக்குமா இந்தத் தண்மை? ஓ! இது தனித்தன்மை வாய்ந்தது. ஈடு சொல்ல முடியாதது.

விண்ணெங்கும் நிறைந்து விண்மீன்களையெல்லாம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்த்திவிடும் இன்ப இசை

ஒன்று அவர்களின் நெஞ்சிலே உருவாகி, உதடுகளிலே தவழ்ந்தது. காதல் தேவதை மின்னலை வீணையாக்கித் தன் இதயத்து நரம்புகளைப் பூட்டி ஆனந்தமாகப் பக்கவாத்தியம் வாசித்தது! எத்தகைய ஆனந்தம்!

கண்களை மூடிக்கொண்டு, நீண்ட நெடுங் கனவில் மிதந்த புவனேஸ்வரியை, வைகறையை அறிவிக்கும் சேவலின் கூவல் நிஜ உலகிற்கு அழைத்து வந்தது. திடுக்குற்று கண்களை விழித்துப் பார்த்தாள்.

பொட்டுப் பொட்டாய் விழுகின்ற நிலவுத் தேன் துளிகளுக்கிடையே, நாலு பக்கமும் இருள் படிந்த சுவர்களின் மத்தியில், கிழிந்த ஓலைப் பாயில் தான் கிடப்பதை அப்பொழுதுதான் கண்டவள்போல் புவனேஸ்வரி திடுக்குற்றாள்.

இத்தனையும் கனவா?

வெண்ணிலவு தன் கதிர்களை மூடியவண்ணம் மேற்குத் திசையிலே குவிந்தது. பொழுது புலர்ந்தது. புவனேஸ்வரி பரபரப்பாய் எழுந்து பாயைச் சுருட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

அம்மன் எழுந்தருளுவதற்கான மணியோசை அவளின் காதுகளிலே வெற்றிநாதமாக ஒலித்தது.

## 9.

தியாகராசன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளிவந்து ஆறு மாதங்களாகிவிட்டன. பரீட்சையின் முடிவும் வெளியாகியிருந்தது. அவன் சித்தியெய்திவிட்டான். ஆனல் ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வதுதான் முடியாத விஷயமாக இருந்தது.

விண்ணப்பங்களின்மேல் விண்ணப்பங்கள் அனுப்பினன். பல பெரியவர்களைப் போய்க் கண்டான். தணிகாசலத்துடன் வதுளையில் போய்ச் சில நாட்கள் நின்றும் இடம் தேடிப் பார்த்தான், எதுவும் பயன் தரவில்லை.

என்றாலும் அவன் ஏதோ ஒரு வழியாய் சில காசுகள் உழைத்துக்கொண்டுதான் இருந்தான். இரவு நேரங்களில் சங்கக்கடைக் கணக்கு எழுதுதல், பகல் வேளையில் ஏதாவது பத்திரிகைகளுக்கு எழுதுதல் என்று அவன் பொழுது கழிந்தது. இடைக்கிடை தகப்பனின் குத்தகைத் தோட்டத்தில் அவருக்கு உதவி செய்வதும் உண்டு.

இப்பொழுதெல்லாம் எழுதுவதிலேயே அவன் நாட்டம் அதிகமாகச் சென்றது. தன் இதயத்துத் தாபங்களையும், ஆசாபாசங்களையும், இலட்சியங்களையும் சிறுகதைகளாக, கவிதைகளாக, கட்டுரைகளாக, வடித்து வடித்து வழங்கினான் அவன். இலங்கைப் பத்திரிகைகள் வார்த்தைக்கு 'டொலர்' என்று கொட்டிக்கொடுக்கும் நிலையில் இல்லாவிட்டாலும், வார்த்தைகளாலும் அவ்வப்போது ஐந்து, பத்து ரூபாக்களாலும் அவனை ஓரளவு குளிர்வித்து வந்தன.

இன்றுகூட அவன் சிறுகதைக்கு ஒரு பத்திரிகை பத்து ரூபா பணம் அனுப்பியிருந்தது. அதனை உடனே மாற்றி, கல்லூரி ஒன்றில் சேர்ந்திருந்த சுப்பிரமணியத்திற்குக் கல்லூரிச் சகாயப்பணம் கட்டக் கொடுத்துவிட்டான் அவன். அப்பாடா! இன்னும் மூன்று மாதங்கள் நிம்மதியாக இருக்கலாம். இனிச் சகாயப்பணம் கட்டுவது அடுத்த தவணையில்தானே?

தியாகராசனின் எழுத்துப் புகழ் பரவியதுபோலவே, அவனுடைய பேச்சாற்றலும் பலராலும் வரவேற்கப்பட்டது.

தியாகராசனின் முயற்சியால் கிராம முன்னேற்ற வாசிகசாலை பழையபடி கலகலப்பு எய்தியது. இளைஞர்கள் அங்கு கூடினார்கள். ஆண்டுக்கு ஒருநாள் வாசிகசாலை ஆண்டு விழாவின்போது, 'பெற்றோமாக்ஸ்' விளக்கினடியில் கூடியோர், இப்போது நாள் தவறாமல் வாசிகசாலைக்கு வந்தார்கள். அங்கு அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்ந்தன; விவாதங்கள் நடந்தன.

கிராமத்திலும், வெளியிலும் தியாகராசனின் புகழ் பரவியவண்ணமிருந்தது. அவனுடைய கம்பீரமான உருவமும், கவர்ச்சி வாய்ந்த பேச்சும் இளைஞர்களைக் கவர்ந்தன. பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்கள்போல அவர்கள் அவனைச் சுற்றி மொய்க்கத் தொடங்கினர்.

புகழ் இருந்தது; செல்வாக்கிருந்தது; ஆனல் உத்தியோகம் இல்லையே! படித்ததற்குப் பயனில்லையே! ஆசிரியராய் அவன் ஒருநாளும் வரவே முடியாதா? உழைத்துக் கடன் தொல்லைகள் நீங்கித் நலைநிமிரல் சாத்தியமில்லையா?

பூமியின் ஒரு பக்கத்தில் ஒளி விழும்போது, மறு பக்கத்தில் இருள் படிந்திருக்குமாமே? அதுபோல அவன் வாழ்வும் ஒரு பக்கம் புகழொளியையும், மறுபக்கம் வறுமையிருளையும் பெற்றுள்ளதோ?

இத்தகைய சிந்தனைகளோடு தியாகராசன் கிராம முன்னேற்ற வாசிகசாலையைக் கடந்து வந்துகொண்டிருந்தான். பல நாட்களாய் வராத கந்தையா, தூரத்தில் பதுங்கிப் பதுங்கி வருவதையும், சிதம்பரப்பிள்ளையின் சைக்கிள் கடையைக் கடந்ததும் விரைவாக நடப்பதையும் அவன் கண்கள் கண்டன.

தியாகராசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''இவன் ஏன் இப்படிச் செய்கிறுன்?'' என்ற கேள்வியை அவன் மனதுள் கேட்டுக்கொண்டு மேலே நடந்தான். அதற்குள் கந்தையா அவனைச் சமீபித்துவிட்டான். நண்பர் இருவரும் முதலில் திகைத்தனர்; பின்பு சமாளித்துக்கொண்டனர்.

''எப்படிச் சுகம் தியாகு?'' என்று கந்தையாதான் பேச்சைத் தொடங்கினுன்.

''சுகத்திற்கு என்ன குறைச்சல்? அது இருக்கட்டும். சிதம்பரப்பிள்ளையின் கடையைக் கடக்கும்வரை ஏன் தயங்கி வந்தாய்? அதைச் சொல்'' என்று தியாகராசன் கேட்டான்.

கந்தையா முதலில் சொல்வதற்குக் கூசினுன். ''தியாகு என் நண்பன்தானே; அவனுக்குச் சொல்வதற்கு ஏன் கூச வேண்டும்? போலிக் கௌரவம் பாராட்டுவதில் என்ன

பயன்?'' என்று நினைத்தவனைக் கந்தையா பின்வருமாறு சொன்னான்: ''சிதம்பரப்பிள்ளை கடையில் அன்றைக்கு வாடகைக்குச் சைக்கிள் எடுத்தேன். திருப்பிக் கொடுக்கும் பொழுது, பணம் அடுத்தநாள் தருகிறேன் என்று சொன்னேன். ஆனால் காசுதான் என்வரையில் கானல் நீராகிவிட்டதே! என்ன செய்வது? சிதம்பரப்பிள்ளை கடையில் இருக்கிறானே என்று பார்த்து, அவன் இல்லாத நேரத்தில் தான் நான் வாசிகசாலைக்கு வருவது வழக்கம்.''

தியாகராசனுக்கு அவனுடைய செயல் அளவிட முடியாத வெறுப்பையும், அருவருப்பையும் அளித்தது. ஆனாலும் அவற்றை அவன் வெளிக்காட்டவில்லை. ''சரி! எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?'' என்று அவன் கந்தையாவைக் கேட்டான்.

''அதிகமில்லை. ஒருரூபாதான்.'' இது கந்தையாவின் பதில்.

தியாகராசன் தன்னிடமிருந்த ஒருரூபாவை எடுத்துக் கந்தையாவிடம் கொடுத்தான். ''முதலில் இந்தப் பணத்தைக் கொண்டுபோய்ச் சைக்கிள் கடையில் கொடுத்துவிட்டு வா'' என்று கட்டளையிடுவதுபோலக் கூறினான்.

கந்தையா பணத்தை வாங்கிச்சென்று கடையிலே கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தான்.

''சரியோ, தப்போ, நாம் புனிதமான ஒரு தொழிலை மேற்கொண்டுவிட்டோம். இன்றோ நாளையோ. இன்னும் சில மாதங்கள் கழித்தோ நாம் ஆசிரியராவது உறுதி. கள்ளங் கபடமற்ற குழந்தைகளின் கல்வி மாத்திரமல்ல, அவர்களின் ஒழுக்க வாழ்வே எங்களிடம்தான் ஒப்புவிக்கப் படும். கடையில் கடன் வைத்துவிட்டு ஒளித்துத் திரியும் நீ, அவர்களை எப்படி ஒழுக்கமுள்ளவர்களாய் ஆக்க முடியும்?'' என்று தியாகராசன் சிறிது கடுமையாகத்தான் பேசினான்.

வாழ்க்கையில் முதல் தடவையாக கந்தையா கூனிக் குறுகி, உள்ளங் கூச, ஒரு குற்றவாளியைப்போலத் தலை குனிந்து நின்றான். ''மன்னித்துக்கொள் தியாகு!'' என்று

குரல் தளதளக்கக் கூறியவன், அந்த இடத்திலேயே நிற்கப் பிடியாதவன்போலத் திரும்பி விரைந்து நடந்தான்.

தியாகராசனும் வந்த வழியே திரும்பினுன். மேலும் தொடர்ந்து செல்ல அவனுக்கு என்ன வேலை இருக்கிறது?

## 10.

வெள்ளை வேட்டி, வெள்ளை நாஷனல் சட்டை, நெற்றியில் கண்ணுக்குத் தெரியாத சின்னஞ்சிறு சந்தனப் பொட்டு, பொதுநிறம், வாழ்வின் அனுபவத்தையும், வயதின் முதிர்ச்சியையும் விளைவுசெய்யும் நரைத்த தலைமயிர், சிறிது தடித்துக் குள்ளமாய்க் காட்சிதரும் உருவம். இறுங்கிப்போய் எவரையும் அவநம்பிக்கையுடன் பார்க்கும் விழிகள்; சிரிக்க வேண்டாத இடத்தும் சிரிக்கின்ற உதடுகள்; இவைதாம் இராமுப்பிள்ளை வாத்தியார்.

ஒருநாள் பட்டணத்திலேயுள்ள கடையொன்றில் தியாகராசன் அவரைக் கண்டான். சிறு வயதிலேயே கிராமப் பள்ளிக்கூடத்திலே அவரிடம் அவன் கல்வி கற்றவன்.

''வணக்கம் வாத்தியார்!'' என்று கூறிய தியாகராசனை, முதலில் இராமுப்பிள்ளைக்கு அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. பன்னிரண்டு வருடங்களின் மாற்றத்தைக் கடந்து, தன் நினைவுத் திரைக்கு அவனைக் கொண்டு வருவது சிரமமாகவே இருந்தது அவருக்கு!

''ஓ! தம்பியே? (அவருக்கு அப்பொழுதுகூடப் பெயர் ஞாபகம் வரவில்லை) இப்ப என்ன செய்கிருய்?'' என்று கேட்டார்.

''ஆசிரியப் பயிற்சி முடித்துவிட்டேன். படிப்பிப்பதற்கு ஆறு மாதமாய் இடம் தேடிக்கொண்டிருக்கிறேன். கிடைத்தபாடில்லை'' என்று தியாகராசன் மனவருத்தத்தோடு கூறினுன்.

"அட, இதை முந்தியே சொல்லுறதுக்கென்ன? அப்பர் கல்வித் திருச்சபையில் நான் ஒரு சொல்லுச் சொன்னுல் போதும். இடம் உன்னைத் தேடிவரும்" என்று தற்புகழ்ச்சிப் புராணத்தில் இறங்கினுர் வாத்தியார்.

"அப்படியா?" என்று பாதி கேலியாகவும், பாதி அக்கறையின்றியும் தியாகராசன் சொன்னுன். இராமுப்பிள்ளைக்கோ அவன் தன் தற்புகழ்ச்சியை அங்கீகரித்து விட்டானென்ற எண்ணம்.

"சரி, மோனை! வாற வெள்ளிக்கிழமை பின்னேரம் என்ரை வீட்டிற்கு வா. கோப்பாயிலை வந்து, இராமுப்பிள்ளை வாத்தியார் வீடு என்று விசாரித்தால் ஆரும் காட்டுவினம். போய் முகாமையாளரைச் சந்திப்பம்."

"சரி" என்று தியாகராசா தலையாட்டினுன். இராமுப்பிள்ளை போய்விட்டார்.

அடுத்தநாள் வாசிகசாலையில் கந்தையாவைச் சந்தித்த பொழுது, இராமுப்பிள்ளையைக் கண்டதும், தாங்கள் பேசிக்கொண்டதுமாகிய விஷயங்களை விவரித்தான் அவன்.

கந்தையா கடகடவென்று சிரித்தான். "இராமுப்பிள்ளை சரியான ஆள். அப்பர் கல்விச்சபை அவர் ஆடு என்றுல் ஆடும். முகாமையாளருக்கு ஆசிரியர்களைப் பிடித்துக்கொடுக்கும் தரகர் அவர். இந்தத் தரகு முயற்சியாலேயே கல்வீடு, வளவு, இருபத்தையாயிரம் ரூபா 'பாங்க் பலன்ஸ்' வைத்திருக்கும் புள்ளியாகிவிட்டார். சக ஆசிரியர்களுக்கு அவரைக் கண்டால் சிம்ம சொப்பனம். சரியான பந்தம்காவி."

தியாகராசனுக்கு இன்னமும் நம்பிக்கை பறிபோகவில்லை.

வெள்ளிக்கிழமை பிற்பகல் இராமுப்பிள்ளை வாத்தியாரும், தியாகராசனும் அப்பர் கல்வித் திருச்சபைக் காரியாலயத்தை அடைந்தார்கள். ஏதோ அவர்களுடைய நல்லகாலம், முகாமையாளரும் இருந்தார்.

நீண்ட பெரிய மேசையின் பின்னுல் பெரிய கதிரை ஒன்றின் அரைவாசிப் பகுதிக்குள் ஒடுங்கிக்கொண்டு ஒரு

மெல்லிய உருவம் இருந்தது. அதை வெளி விறாந்தையில் கண்டதுமே இராமுப்பிள்ளைக்குத் தாம் கோயிலில் நிற்கும் உணர்வு ஏற்பட்டது. பக்தியுணர்ச்சி பெருகி ஓடத் தொடங்கியது. விறாந்தையிலேயே செருப்பைக் கழற்றி விட்டார். தோளில் இருந்த சால்வையைத் தூக்கி இடையைச் சுற்றி வரிந்து கட்டினார். இப்பொழுது மாத்திரம் யாராவது அவருடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்திருந்தால், அது மணிக்கு நூறு மைல் வேகத்தில் அடித்துக் கொண்டதைக் கண்டிருக்கலாம்.

தியாகராாசனுக்கு அவருடைய செயல்கள் அளவிட முடியாத சிரிப்பை வரவழைத்தன. எனினும் முயன்று அதை அடக்கிக்கொண்டான். ''இன்னும் என்ன வேடிக்கை நடக்கிறது என்று பார்ப்போமே'' என்ற ஒருவித விபரீத ஆவல் தூண்ட, அவரைத் தொடர்ந்து சென்று விறாந்தையில் நின்றான்.

இராமுப்பிள்ளை உடனடியாக உள்ளே செல்லவில்லை. முகாமையாளரின் பார்வையில் தெரியவேண்டுமென்று அறை வாசலில் நடையயின்றார். வரண்ட தொண்டையைச் சரிசெய்வதுபோலச் செருமிவிட்டுக்கொண்டார்.

நீண்ட நேரத்திற்குப் பின்னர் முகாமையாளர் தலை நிமிர்ந்தார். பரிதாபமாகக் கூனிக்குறுகி நின்ற வாத்தியாரின் உருவத்தைக் கண்டார். ''ஆர் அது?'' என்ற அதட்டல் ஓசை கேட்டு, ஐந்தறிவும் கெட்டு ஒடுங்கிப்போய், ''நான்தான் ஐயா!'' என்று முனகினார் இராமுப்பிள்ளை.

''உள்ளே வாரும்'' என்ற முகாமையாளரின் பதிலைக் கேட்டபின்னர்தான் அவர் முகம் மலர்ந்தது. ''தம்பி! மெதுவாய் வா. சத்தம்போட்டு நடந்து செல்வது அவருக்குப் பிடிக்காது'' என்று குசுகுசுத்தபடி முன்னே செல்ல, தியாகராசன் பின்னே சென்றான்.

''ஓ! இராமுப்பிள்ளையோ? என்ன சங்கதி? என்ன காணும்? கனநாளாய் இந்தப்பக்கம் வரவில்லை?'' என்று பேச்சைத் தொடங்கினார் முகாமையாளர். வந்தவர்களை

உட்காரச் சொல்லவுமில்லை; 'வணக்கம்' என்ற முகமன் வார்த்தையும் பேசவுமில்லை.

தியாகராசனின் நெஞ்சத்தில் எரிமலை குமுறியது; சிந்தையில் பெரியதொருபுயல் அடித்தது. அருவருப்புணர்ச்சி அவன் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் கருநாகம்போல் நெளியத் தொடங்கியது. ''வந்தது வரட்டும்'' என்று எண்ணியவன், மேசையின் முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டான்.

முகாமையாளருக்கு அவன் செயல் முற்றிலும் புதிய அனுபவம்! பவ்வியமாகக் கைகட்டி, வாய்புதைத்து நின்ற இராமுப்பிள்ளையோடு, இப் புதியவனை அவர் ஒப்பிட்டுப் பார்த்திருக்க வேண்டும்.

அவரின் முகச்சுளிப்பில் எத்தனை எத்தனையோ உணர்ச்சிகளைக் கண்ட தியாகராசனுக்குச் சிரிப்புத்தான் வந்தது; அடக்கிக்கொண்டான். முகாமையாளரும், அவனும் ஒருவரையொருவர் பார்வையாலே அளந்தனர். ஒரு கணந்தான்; ஆனல் அது ஒரு யுக அனுபவம்!

இராமுப்பிள்ளை, ''தம்பி இந்த வருசந்தான் றெயினிங் கொலிச்சாலை வெளிக்கிட்டது. ஆளின்ரை ஊர் பொன்னாலை. நல்ல கெட்டிக்காரன். பெரிய பேச்சாளி. பேப்பரிலை கூடப் பார்த்திருப்பியள் ஐயா!'' என்று நாட்டு வருணனை; தலைவன் வருணனை என்பவற்றில் இறங்கினார்.

''ஓம்! ஓம்! ஆளை ஓரளவு தெரியுது. இப்ப இவருக்கு என்ன வேணும்?'' என்றார் முகாமையாளர்.

இராமுப்பிள்ளை எண்சாண் உடம்பை ஒருசாணய் வளைத்து அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தவண்ணம், பிடரியைச் சொறிந்தார். ''பள்ளிக்கூட நிதிக்கு இவர் ஆயிரம் ரூபா தருவார். ஒரு இடம் கொடுத்தால்...''

தியாகராசனல் மேலும் பொறுக்கக்கூடவில்லை. ''இடைமறித்துப் பேசுவதற்காக மன்னிக்கவேண்டும். வாத்தியார் பள்ளிக்கூட நிதிக்கு எதுவும் கொடுக்க வேண்டுமென்று முன்கூட்டி என்னிடம் சொல்லவில்லை. அப்படிச் சொல்லி

யிருந்தால் நான் இங்கு வந்திருக்கமாட்டேன். எனது சேவைக்கு முறையாகச் சம்பளம் பெற வகைசெய்வார் என்றுதான் வந்தேன். பணம் கொடுத்து அந்த உத்தியோகத்தைப் பெற நான் தயாராயில்லை. அது என் இலட்சியத்திற்கு விரோதம்.''

இவ்வாறு படபடவென்று கூறிவிட்டுத் தியாகராசன் முகாமையாளரின் மறுமொழிக்கும் காத்திராது அலுவலகத்திலிருந்து வெளியே வந்து நேராகப் பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடந்தான்.

இராமுப்பிள்ளைக்கு ஐந்தறிவும் கெட்டுவிட்டது. அவர் அச்சத்தால் நடுநடுங்கினார். உடம்பெல்லாம் வியர்வை வழிந்தது. ''மன்னித்துக்கொள்ளுங்கோ ஐயா! இந்தப் பொடியனை நான் தப்பாய்க் கணக்குப் போட்டிட்டன்'' என்று அவர் பதட்டத்தோடு, வார்த்தைகள் தள்ளாடக் கூறினார்.

முகாமையாளர் சிரித்தார். ''இராமுப்பிள்ளை! பயப்படாதையும். பொடியன் கெட்டிக்காரன். அவனிடம் பணம் வாங்காமலே இடம் கொடுப்பதாகத் தீர்மானித்திட்டன். நீ இப்ப போய்வாரும். பொடியனை ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் என்று சொல்லும்'' என்று சிரிப்பினிடையே கூறினார் அவர். வரப்போகிற தேர்தலில் வேட்பாளராகத் தாம் நிற்கையில், தியாகராசனின் உணர்ச்சி நிறைந்த பேச்சுகளால் வாக்குகளை எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம்'' என்ற அவரின் திட்டம் இராமுப்பிள்ளைக்குத் தெரிய நியாயமில்லை.

## 11.

பருவ விடுமுறை வந்தது. தணிகாசலம் ஊருக்குத் திரும்பினான். உடனேயே தியாகராசனிடம் போகவேண்டும்போல இருந்தது. ஆனால், பிரயாணக் களைப்பு ஒருபுறம்.

பெற்றோரின் தடை மறுபுறமாய் எப்படியோ இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. 'இனியும் பொறுக்க முடியாது' என்ற நிலையில் மூன்றாவது நாள் அவன் தியாகராசனுடைய வீட்டிற்குச் சென்றான்.

அவன் அங்கு சென்றபொழுது பிற்பகல் மூன்று மணி இருக்கும். முன்போலச் சைக்கிளோடிக் களைத்து விழுந்து வரவில்லை அவன். பஸ்ஸிலிருந்து இறங்கிச் சிறிது தூரம் நடந்து வருவதற்கு அறிகுறியாக அவனின் நெற்றியில் குறுவியர்வை அரும்பியிருந்தது. அவனின் கையிலே அப்பிள் பழங்களும், பிஸ்கட் பெட்டியும் வைத்த ஒரு சிறு பையும், தேயிலைப் பார்சல் ஒன்றும் இருந்தன.

தியாகராசனின் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தபொழுது அவனின் கையிலிருந்த தேயிலைப் பார்சல் தவறி கீழே விழுந்தது. அதை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தான். இடைகழித் தூணொன்றிலே சாய்ந்திருந்தபடி ஏதோ தைத்துக்கொண்டிருந்த புவனேஸ்வரியை அவன் கண்கள் கண்டன. பார்சல் விழுந்த சத்தம் கேட்டு திடுக்குற்று புவனேஸ்வரியும் நிமிர்ந்து பார்த்தாள்.

தான் காண்பது கனவா என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. முன்னறிவித்தல் எதுவுமின்றித் திடீரென்று வந்து குதித்த தணிகாசலத்தைக் காண முதலில் திகைப்புடன் துடித்த அவள் முகத்தில் தொடர்ந்து மகிழ்ச்சி விரிந்தது.

தணிகாசலம் நடந்துவந்து, திண்ணையில் அவளின் பக்கத்திலே தான் கொண்டுவந்த பொருள்களை வைத்தான். மேலுதட்டுடன் கீழுதடு இறுக ஒட்டிக்கொண்டதுபோல ஓர் உணர்ச்சி. பேச முடியவில்லை.

புவனேஸ்வரி தையல் வேலையை நிறுத்திவிட்டு எழுந்தாள். "எல்லாரும் வெளியிலை போயிட்டினம். இருந்து கொள்ளுங்கோ. அடுத்த வீட்டுக்குப் போய் அம்மாவைக் கூட்டிவாறன்" என்று சொல்லிவிட்டு முற்றத்தில் இறங்கினாள்.

தணிகாசலம் தயங்கினான். 'புவனேஸ்வரியுடன் பேசக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இது. தவறவிட்டால் இதைப் போலத் தனிமையான சந்தர்ப்பம் வேறு கிடைக்காது'' என்று எண்ணியவனாய், ''புவனம்'' என்று மெல்ல அழைத்தான்.

புவனேஸ்வரி திரும்பினாள்.

''இப்படி இரும். உம்மோடு பேசவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது'' என்று சொல்வதற்குள் தணிகாசலம் மிகவும் சிரமப்பட்டுப் போனான். அவன் உடம்பெங்கும் வியர்த்துக் கொட்டியது; நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தான் அவளைத் திரும்ப அழைத்தது தவறோ என்று கூட அவன் எண்ணினான்.

புவனேஸ்வரி, ஆசிரியரின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் நன்மாணவிபோலத் திரும்பி வந்தாள். ஆனால் அவள் திண்ணையில் உட்காரவில்லை; தூணைப் பிடித்துக்கொண்டு நின்றாள். தணிகாசலம் பேசப்போகும் விஷயத்தை அறியும் ஆவலில் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

நேரம் வளர்ந்தது; தவழ்ந்தது; ஓடியது; பறந்தது. வார்த்தைகள் வெளிவரவில்லை. மௌனத்தில் இருவரும் புதைந்து போயினர்.

சிறிது பொறுத்து புவனம் தனக்கே கேட்கக்கூடிய மிக மெல்லிய குரலிலே, ''ஏன் என்னைக் கூப்பிட்டீர்கள்?'' என்றாள்.

தணிகாசலத்துக்குத் துணிவு பிறந்தது. அவன், அவளை நேருக்கு நேர் கனிவோடு நோக்கினான். ''நான் எழுதிய கடிதங்களை தியாகராஜன் வாசித்துக் காட்டினானா?'' என்று அவன் கேட்டபொழுது, அழகிய புன்னகை ஒன்று புவனத்தின் உதடுகளில் மலர்ந்தது.

''ஓம்! நின்றும், கிடந்தும் என்றும் உங்களையே நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்பது நீங்கள் எழுதியதையும் வாசித்துக் காட்டினார்'' என்றாள் அவள்.

தணிகாசலத்துக்கு விண்ணில் பறப்பதுபோலிருந்தது. அவன் தன் நடுக்கத்தை, தயக்கத்தையெல்லாம் துறந்து

கம்பீரமாக நிமிர்ந்து புவனத்தை மீண்டும் பார்த்தான்; மீண்டும் மீண்டும் பார்த்தான். அவனின் குறும்புத்தனத்தையும், பேசாது பேசும் அவன்விழிகளையும் பார்க்கக் கூசியவளாய் புவனேஸ்வரி தலைகுனிந்தாள்.

"நான் மிகவும் பாக்கியசாலி புவனம்! நீ என்னைப் புரிந்துகொண்டுவிட்டாய். அது போதும். எனக்குப் புதுப் பலம் வந்துவிட்டது" என்று தணிகாசலம் மகிழ்ச்சியைச் சொல்லிலே தேக்கிக் கிளுகிளுத்தான்.

புவனம் நிலத்தில், காற்பெருவிரலால் கோடுகிழித்த படி நெடுநேரம் நின்ருள். தணிகாசலம் அவளுக்கு அருகில் சென்று அவளின் முகத்தை நிமிர்த்தினுன்.

அங்கே—அந்த நீலக்கடல் போன்ற விழிகளில் கண்ணீர் ததும்பி நின்று விழுவதா, வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்தது.

தணிகாசலம் திகைத்துப் போனுன் "புவனம்! என்ன இது! நான் தவருக ஏதாவது சொல்லிவிட்டேனே? அப்படியானுல் என்னை மன்னித்துவிடு. என் துணிச்சலுக்காக நான் மிகவும் வருந்துகிறேன்." நெருப்பிற் கையை வைத்தவன்போலப் பதைபதைத்து அவன், அவளின் முகத்திலிருந்து கையை எடுத்துக்கொண்டான்.

புவனேஸ்வரி தணிகாசலத்தை அன்போடும், அச்சத்தோடும் நோக்கிவிட்டுத் தலைகுனிந்தாள்.

"கண்ணீர் கவலையை மாத்திரம் வெளிப்படுத்துகிறதில்லை. அது கரைகடந்த மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும். இந்தக் கணத்தில் எனக்குள்ளே நிறைஞ்சு பொங்குகிற மகிழ்ச்சிக்கு வேறு வடிவம் கொடுக்க எனக்குத் தெரியேல்லை... சரி; நேரமாகுது. நான் போய் அம்மாவைக் கூட்டிவாறன்."

புவனேஸ்வரி, தணிகாசலத்தின் ஒரு பிடியளவு நெஞ்சைத் தனது ஓரக் கடைவிழியிலே சிறை செய்தவளாய், படலையை நோக்கி நடந்தாள். தணிகாசலம் நடட்த்தில் நயத்தை உணர்ந்தவனாய் அவள் வைக்கும் ஒவ்வொரடிக்

கும் தனது உயிரைக் காவு கொடுத்தபடி நின்றான்; நெடு மரம்போல நின்றான்.

## 12.

''வாடா, மோனை வா. நல்ல சமயத்திலை வந்திருக்கிறாய். இப்படி இருந்து என்ரை வயிற்றெரிச்சலையும் கொஞ்சம் கேட்டுவிட்டுப் போ'' என்று கூறி, மகன் வேலையில்லாமல் திரிவதுபற்றி தணிகாசலத்திடம் குறைபட்டுக் கொண்டார் பொன்னம்பலம்.

தணிகாசலம் எல்லாவற்றுக்கும் ''உம்'' கொட்ட வேண்டியிருந்தது. ஆனால், அவனுக்கும் தியாகராசனின் பிடிவாதப் போக்குக் கண்டு ஓரளவு கசப்பு ஏற்பட்டிருந்தது.

''அப்பு! உங்களின்ரை மனவருத்தம் எனக்கு நல்லாய் விளங்குது. எப்படியும் நான் போறதுக்கிடையிலை தியாகுவின்ரை மனதை மாற்றிவிடுவன். யோசியாதையுங்கோ. உங்களுக்கும் தோட்டத்துக்கு நேரமாயிருக்கும். போயிட்டு வாருங்கோ'' என்று அவன் பொன்னம்பலத்துக்கு ஆறுதல் வார்த்தை கூறினான்.

''அதைமட்டும் செய்தாயெண்டால் உன்னை எண்டைக்கும் மறக்கமாட்டன் தம்பி. என்ரை வீட்டிலை விளக்கேத்தி வைச்ச குலதெய்வமெண்டு உன்னைக் கையெடுத்துக் கும்பிடுவன்'' என்று கூறியபடி நீர் தயங்கும் விழிகளோடு பொன்னம்பலம் தன் கைகளைத் தூக்கியபோது, தணிகாசலத்தால் தன் உணர்ச்சிகளை அடக்கமுடியவில்லை. அந்த முதியவரின் உள்ளத்தில் நிறைந்து வழியும் வேதனையின் அளவை அவன் நன்றாய் விளங்கிக் கொண்டான்.

அவன், அவரின் இரு கைகளையும் பற்றியபடி, ''அப்பு! என்னைக் கும்பிடாதையுங்கோ. நானும் உங்கள்

பிள்ளைமாதிரித்தான். தியாகராசனின் மனதைத் திருப்புவது என் பொறுப்பு'' என்று கலங்கும் குரலிலே கூறினான்.

''சரி, தம்பி! நான் வாறன்'' என்று சொல்லிவிட்டு, பட்டையைத் தோளில் போட்டபடி பொன்னம்பலம் தோட்டத்தை நோக்கி நடந்தார்.

## 13.

பிற்பகல் நாலு மணிக்கு தியாகராசன் சங்கக்கடையில் இருந்து வந்தான். அன்று மாதமுடிவாதலால் கையிருப்பு எடுப்பதற்கு உதவிசெய்ய அவன் பகலிலும் செல்லவேண்டியிருந்தது. அப்பாடா! ஒருபடியாக வேலை முடிந்தது. இனித் திங்கட்கிழமை இரவுதான் கடைக்குப் போக வேண்டும். அதுவரை விடுதலை. எந்தவிதமான தடைகளுமின்றி ஏதாவது எழுதுவதில் காலம் போக்கலாம் என்ற நிம்மதியில் மலர்ச்சி பெற்ற முகத்தோடு அவன் வீட்டிற்கு வந்தான்.

தணிகாசலத்திற்கு இந்தச் சூழ்நிலைதான் வேண்டியிருந்தது. தியாகராசன் தேநீர் அருந்தி முடிந்ததும், அவனின் பக்கத்தில் தணிகாசலம் சென்று உட்கார்ந்தான். பேச்சுத் தொடங்கியது. நீண்ட உரையாடல். காரசாரமான வாக்குவாதம்! என்றாலும் அதிர்ஷ்டவசமாகத் தணிகாசலத்தின் புத்திமதிகளைத் தியாகராசன் ஏற்றுக்கொண்டான். இதயபூர்வமாக எவ்வித கரவுமின்றிப் பேசுவதில் பயன் இருக்கவே செய்கிறது.

அதிகம் ஏன்? தணிகாசலம் கிளம்பிச் சென்றபொழுது பொன்னம்பலத்தின் இருண்ட வாழ்விலே ஒளியை ஏற்றி வைத்துவிட்டுத்தான் சென்றான். ''மகன் வேலையை ஒப்புக்கொண்டான்'' என்ற செய்தியை அவர் அறிந்தபொழுது நீண்ட காலத்தின்பின் அவரின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

தணிகாசலம் மட்டும் என்ன? புவனேஸ்வரியின் நிறைந்த அன்புள்ளத்தை தனக்கே ஆக்கிக்கொண்ட குதூகலம் அலைமோதும் நெஞ்சத்தோடு தலைநிமிர்ந்து சென்றுன்.

தியாகராசன் ஆசிரியராகிவிட்டான். தன் உணர்ச்சிகளுக்குச் சமாதி எழுப்பிவிட்டு, அப்பர் கல்வித் திருச்சபை முகாமையாளரின் கோரிக்கைக்குச் சம்மதித்து, அவரின் முகாமையின் கீழிருந்த பாடசாலையில் ஆசிரியராகிவிட்டான்.

''பணம் கொடாமல் இடம் எடுப்பது'' என்ற அவனுடைய இலட்சியம் நிறைவுபெற்றது உண்மையே. ஆனுல் எதிர்காலத்தில் அவர் தொந்தரவு செய்யமாட்டாரா என்பது என்ன நிச்சயம்?

கந்தையா சொல்வதன்படி பார்த்தால் திருச்சபை முகாமையாளருக்கு மனிதத் தன்மையே இல்லையென்று தான் கொள்ளவேண்டும். ''குள்ளநரி, நச்சுப் பாம்பு, இரத்தம் உறிஞ்சும் மூட்டைப்பூச்சி'' என்றல்லவா அவன் அவரை வருணிக்கிருன்? ஒருவேளை, கந்தையா அவரைப் பிழையாகப் புரிந்துகொண்டாளுே? இல்லாவிட்டால் அவருக்கும், இவனுக்கும் தனிப்பட்ட பகைமை ஏதாவது இருக்குமோ?

முகாமையாளரைக் கொடியவர் என்று கூறத் தியாகராசனின் மனம் ஒருப்படவில்லை. தான் இவ்வளவு கடுமையாகப் பேசி அவரை உதாசீனம் செய்துவந்த பின்னரும் கூட வலுவில் இடமளிக்க முன்வந்தவருக்கு மனிதப் பண்பு இல்லையென்று எப்படிச் சொல்வது? ஆனுல், அவன் உரையாடிய வேறு பல ஆசிரியர்களுங்கூட முகாமையாளரைப் பற்றி நல்லபிப்பிராயம் தெரிவிக்கவில்லையே! ஏன்? தான் படிப்பிக்கும் பள்ளிக்கூடம் இது என்று கூறியதும், ''எவ்வளவு பணம் கொடுத்தீர்?'' என்று அவர்கள் கேட்பது ஏன்?

இத்தனை தூரம் பிரபலமடைந்துள்ள ஓர் உண்மையை தனக்கு மாத்திரம் மறைத்துப் பணம் வாங்காமலே அவர் இடம் தந்தாரே! அது ஏன்?

மற்றவர்களுக்கெல்லாம் கொடுங்கோலனாய் விளங்கும் அவர், தன் விஷயத்தில்மட்டும் தாராள மனப்பான்மை யுடன் நடப்பதற்குக் காரணம்—? தியாகராசன் தடுமாறி னான்.

இராமுப்பிள்ளை அன்று முகாமையாளரின் முன்பு கூனிக் குறுகி நின்றதும், முகாமையாளர் அதட்டலாய், ''ஆர் அது?'' என்று கேட்டதும் அவனின் சிந்தனையில் நிழ லாடின. மற்றவர் தன்னை மதிக்கவேண்டும்; தமக்கு அடங்கி நடக்கவேண்டுமென்ற மமதையின் பிரதிபலிப் பல்லவா அது?

தொண்டு செய்யும் பண்பு மாத்திரம் இருந்தால், இந்த மனப்பாங்கைப் பெரிதுபடுத்தாது மன்னித்துவிடலாம். முகாமையாளருக்குக் கல்வித்தொண்டில்தான் கரிசனையா? அதைச் சரிவர நடாத்துவதற்குத்தான் 'கடுமை' என்ற போர்வைக்குள் அவர் மறைந்திருக்கிறாரா? அல்லது தமி ழாசிரியரின் இயல்பான அடிமை மனப்பான்மை அவரைத் தலைமேல் தூக்கிவைத்துக் கூத்தாட, அதன் பலனைத்தான் இந்த மரியாதை எதிர்பார்ப்பு அவருக்கு ஏற்பட்டதா? தியாகராசனின் உள்ளம் நெடுநேரம் ஒரு முடிவு காணாது தத்தளித்துக்கொண்டிருந்தது.

''ஆவது ஆகட்டும்! துணிந்து நியமனத்தை ஏற்றுக் கொண்டுவிட்டேன். நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போக முடியுமா? என் தன்மானத்துக்கு எப்போதென்றாலும் இழுக்கு வந்துவிட்டால், இந்த வேலையை உதறி எறிந்து விட்டுப் போகிறது. இதற்கு ஏன் இவ்வளவு யோசிக்க வேண்டும்'' என்று இறுதியாக அவன் ஓர் முடிவுக்கு வந்தான்.

மேசையின் அருகில் ஒரு நாற்காலியில் இருந்து கொண்டு ஏதோ எழுத முயன்றவனை நினைவுகள் தட்டா

மாலையாடி மீண்டும் பழைய நிலையில் கொண்டுவந்து வைத்தன. எழுதக்கூடிய மனோநிலை இன்னமும் உருவாகவில்லை.

மேசையிலிருந்த திருக்குறளை எடுத்து ஒருவித நோக்கமும் இன்றிப் பிரித்தான். அவன் பிரித்த பக்கத்தில்:

''ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை''

என்ற குறள் இருந்தது. ''எந்த நிலையிலும் இந்தக் குறள் காட்டும் வழியிலேயே நான் நடப்பேன்'' என்று அவன் உறுதி செய்துகொண்டான்.

## 14.

தியாகராசன் கல்வி கற்பித்த பாடசாலை அவன் வீட்டில் இருந்து எட்டு மைல் தூரத்திலிருந்தது. அதிகாலையில் எழுந்து பாடசாலைக்குப் புறப்படவே அவனுக்கு நேரம் சரியாக இருக்கும். மத்தியானச் சாப்பாட்டிற்கும் காலைப் பலகாரத்திலேயே கொண்டு செல்வான்.

பஸ்ஸிற்கு காத்து நிற்பதும், கிடைத்த இடத்தில் வௌவால் போலத் தூங்கிநின்று செல்வதும் அவனுக்குப் பழக்கமாகி வந்தன.

பிற்பகல் ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புவான். அதன்பின் களைப்பாறி இரவு உணவு உட்கொண்டால் நித்திரை கண்ணைச் சுழற்றிக்கொண்டு வரும். ஏதாவது பத்திரிகை வாசிப்பதே சிரமமாக இருந்தது. இந்நிலையில் எழுத்து வேலைகளைத் தொடர்வது எப்படி?

தன் கற்பனைகளும், உணர்ச்சிகளும் மரத்துவிட்டது போன்ற நிலை ஏற்படுவதை அவனால் தடுக்கக்கூடவில்லை.

தியாகராசன் திரிசங்கு சுவர்க்கத்திலே தத்தளித்துக் கொண்டிருந்தான். எழுத்தா, ஆசிரியர் வேலையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் அவன் நிலை இருந்தது.

மாணவர்களிடையேயும் அவன் செல்வாக்கு வளர்ந்தது. தலைமையாசிரியரும் பொறுப்பான வேலைகளை அவனிடம் கொடுத்தார். கலாவிருத்திச் சங்கப் போஷகனாய் அவன் தெரியப்பட்டபொழுது, மாணவர் மட்டுமல்ல, ஆசிரியர்களும் உண்மையான மகிழ்ச்சியடைந்தனர்.

பாடசாலையில் இத்தனை புரட்சியேற்பட்டுங்கூடப் பயனில்லாத நிலையொன்று உருவாகி வந்தது. பிள்ளைகளின் பெற்றோர்கள் அடிக்கடி பாடசாலைக்கு வந்து, பாடசாலை நிருவாகத்தில் அநாவசியமாகத் தலையிட்டனர். தமது பிள்ளைகளின் படிப்பு, முன்னேற்றம் சம்பந்தமான விடயங்களிலே தலையிட்டாலும் சகித்துக் கொள்ளலாம். ஆனால் இதுவோ படிப்போடு சம்பந்தப்படாத விஷயமாக இருந்தது.

சாதிவெறி ஏறியிருந்த கிராமம் அது. ஒருநாள் தியாகராசன், வேளாள வகுப்பை ச்சேர்ந்த ஒரு பிள்ளையோடு தாழ்ந்த சாதிப் பிள்ளையை ஒரே வாங்கிலில் இருத்திவிட்டான்.

அடுத்தநாள் வேளாளச் சிறுவனின் தந்தை பாடசாலைக்கு வந்துவிட்டார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ''என்ன வாத்தியார்! இந்தச் சமாசனம், சமபோசன விடயங்களை நீர் உம்மடை வீட்டோடை வைத்துக்கொள்ளும். இங்கை உந்தச் சேட்டையை வைத்துக்கொள்ளாதையும்; தெரியுமே?'' என்று அவர் முழங்கினார்.

தியாகராசனின் இலட்சிய ஆவேசத்தை அவரின் வார்த்தைகள் சீண்டிவிட்டன. அவன் கொதித்தெழுந்து சாதி வெறியின் தீமையைப்பற்றிப் பெரும் பிரசங்கமே செய்துவிட்டான்.

அது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் பிரச்சினையை மேலும் கூட்டுவதாகவே முடிந்தது. கோபத்தில் தம்மை மறந்த வேளாளப் பிள்ளையின் தந்தை, ''உம்மை எனக்கு நல்லாய்த் தெரியும்காணும். பொன்னுலைப் பொடியன்

ஒருத்தனை நீர் உம்முடைய தங்கைக்கு வளைச்சுப் பிடிச்சு வைச்சிருக்கிறது எனக்குத் தெரியாதெண்டே நினைச்சிருக்கிறீர்? அவன் என்ன சாதியெண்டு தெரியுமே? அவன்......! அவனை மச்சானுக்கப் போற நீர், சமாசனம் பேசாமல் என்ன செய்கிறது? பேசும், பேசும்'' என்று மிகக் கேவலமான வார்த்தைகளை உபயோகித்தார். இது தியாகராசனின் பொறுமையை வெகுவாகச் சோதித்துவிட்டது. அந்த இடத்திலே சக ஆசிரியர்கள் அவனைப் பிடித்திருக்காவிட்டால் ஒரு கொலையே விழுந்திருக்கும்!

✱

தியாகராசன் பஸ்ஸிற்குத் திரும்பி வந்தபொழுது அவனின் உள்ளம் வேதனையாலும், அவமானத்தாலும் குழப்பட்டுச் செய்வதறியாது தத்தளித்தது. சாதிமான் என்று பீத்தற் பெருமை பேசிக்கொண்ட அந்தக் கீழ் மகன் எவ்வளவு மோசமான வார்த்தைகளை அள்ளி வீசினான்.

தியாகராசன் சிந்தித்தான். ''தணிகாசலம் என்ன சாதியாயிருந்தாலென்ன? அவன் என் நண்பன். மனித மாணிக்கம். அவனை என் தங்கை அடைந்தால் அவள் பாக்கியசாலிதான்; ஆனல்... ஆனல்... அது நடக்கலாமா? 'நண்பன் என்று சேர்த்து வைத்திருந்ததே இதற்குத்தான்' என்ற மிகக் கீழான கருத்து எனது ஊரையும் தாண்டி, இவ்வளவு தூரம் பரவி விட்டபிறகு அது நடக்கலாமா? கூடாது!'' ஒருகாலமும் நடக்கக்கூடாது.''

''இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் தணிகாசலத்தை என் வீட்டுக்கு வர அனுமதிக்கக்கூடாது. அது எங்கள் தன்மானத்திற்கே பெரும் இழுக்கு.''

தியாகராசனுக்கு ஊருலகத்தின் மிக இழிந்த அருவருக்கத்தக்க போக்கு இப்பொழுதுதான் ஒருவாறு புலனைகத் தொடங்கியது. தன்னைக் கண்டால் மரியாதையாகவும், அன்பாகவும் பேசும் ஊர் மக்கள், இத்தகைய இழிந்த கருத்தை உள்ளத்தினுள்ளேயே பதுக்கி வைத்

திருப்பார்கள் என்று நினைக்கவே அவனுக்குத் திகைப்பாகவும் இருந்தது; வியப்பாகவும் இருந்தது; வெறுப்பாகவும் இருந்தது.

ஆனால், உலகைக் கோபித்து என்ன பயன்! பாம்புக்குப் பல்லில் நச்சுப்பை என்றால், ஊராருக்கு வாயில் வம்பளப்பு! போகவிட்டுப் புறஞ் சொல்வது அவர்கள் இயல்பு! அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்!

தியாகராசனின் சிந்தனையில்கூடப் புவனேஸ்வரியையும், தணிகாசலத்தையும் ஜோடியாக்கிப் பார்த்த தவறு நடந்துதானே இருக்கிறது?

அப்படியானால் அது தவறுதான்! அதற்கு இன்றைய தண்டனை வேண்டியதுதான்.

தணிகாசலம் வாழ்நாள் முழுவதும் என் நண்பனாக இருக்கட்டும். என் மைத்துனனாக ஆவது கனவிலும் நடவாத விஷயம்!

★

தியாகராசனுக்கு தனது மனச்சாட்சியின்மீதே சந்தேகம் பிறந்தது. ஊரவரின் இழிபேச்சுக்காகவா அவன் அஞ்சுகிறான்? அல்லது தணிகாசலத்தின் சாதி... ஓ! எவ்வளவு பயங்கரமான சிந்தனை!

இலட்சியங்களை எவ்வளவுதான் வானளாவப் பேசினாலும், தன் குடும்பம், தன் வீடு என்று வரும்பொழுது மனிதன் ஒவ்வொருவனும் பலவீனனாகத்தான் ஆகிவிடுகிறான்.

அத்தகைய சர்வ சாதாரண மனிதன்தானா தியாகராசன்?...

தியாகராசனின் மனப் போராட்டம் முடிவடையாத சக்கரவியூகமாகி அவனையே சுற்றிவளைத்து வருத்திக் கொண்டிருந்தது.

ஆனாலும் எந்தப் பலவீன நிலையிலும் அவன் ஒரு விடயத்தில் மட்டும் உறுதியாகவே இருந்தான்.

''தணிகாசலத்தின் நன்மைக்காகவும், புவனேஸ்வரியின் நன்மைக்காகவும், குடும்ப நன்மைக்காகவும் இனி என்றைக்கும் அவர்களை ஒன்று சேர்க்கும் எந்த எண்ணத்தையும் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.''

இத் தீர்மானத்துடன் வீட்டுக்கு வந்த தியாகராசனுக்கு தணிகாசலத்தின் கடிதம் காத்துக் கிடந்தது.

நண்ப,

உன் வீட்டிற்கு வரவேண்டுமென்று முயன்றேன். பல அசந்தர்ப்பங்களால் கைகூடவில்லை. வெள்ளிக்கிழமை பருவ விடுமுறைக்காக உங்கள் பாடசாலை மூடுகிறார்களாமே? தயவுசெய்து ஒருதடவை இங்கு வந்து செல்.

நான் வருகிற புதன்கிழமை வதுளைக்குச் செல்கிறேன். அதற்கிடையில் வருவாய் என்று காத்திருக்கிறேன்.

உன்—தணிகாசலம்.

# 15.

தணிகாசலம் முதன் முதல் தியாகராசனின் வீட்டிற்கு வந்தபொழுது பொன்னம்பலம் அவனைக் கேட்ட கேள்வி ''தம்பி! உன்ரை அப்புவுக்கு வேலை என்ன? அவர் எந்தப் பகுதி?'' என்பதுதான். தணிகாசலம் தன் குடும்ப விபரத்தை ஒளிவு மறைவின்றிச் சொன்னான். ''அப்பு! என்ரை தகப்பனும் உங்களைப் போலக் கமந்தான் செய்கிறவர். ஆனால் நாங்கள் மாலை கட்டும் பண்டாரக் குடும்பம். உங்களைப் போல வேளாளர் அல்ல.''

இதனைக் கேட்டதும் பொன்னம்பலத்தின் முகத்தில் சிறிது சுழிப்பு ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அதை அவர் விரைவில் சமாளித்துக்கொண்டார். காலப் போக்கில் அவராவது, குடும்பத்தினராவது அவன் சாதியைப்பற்றி பெரிதாக எடுத்து எடைபோடும் வழக்கம் இல்லாது போய்

விட்டது. அவ்வளவு தூரம் அவன் அவர்களோடு ஒன்றிப் போய்விட்டான். வள்ளிப்பிள்ளையின் பரந்த தாயுள்ளம் அவனையும் தன் பிள்ளைகளுள் ஒருவனாகவே கருதி நடாத்தி வந்தது. புவனேஸ்வரியின் உள்ளமோ செம்புலப் பெயல் நீராகிவிட்டது.

'ஊரவர் ஐந்தும் மூன்றும் எட்டுந்தான் என்று முடிச்சுப் போட்டுப் பார்க்கின்றனர்' என்ற உண்மை தியாகராசனுக்கு வெளியானபொழுது அவன் உள்ளந்தான் பெரிதும் சலனமடைந்தது. அந்த சலனத்தைப் போக்க முடியாத குழப்ப நிலையோடுதான் அவன் அன்று தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றான்.

அவன் தணிகாசலத்தின் வீட்டை அடைந்தபொழுது நேரம் மாலை ஆறு மணி. நண்பர் இருவரும் தேநீர் அருந்திவிட்டுச் சமீபத்திலிருந்த கடற்கரைக்குச் சென்றார்கள்.

சந்திரன் வான மைதானத்தில் நட்சத்திரச் சிறுவருடன் விளையாட்டை ஆரம்பிக்கும் வேளை. அவனைக் கண்டதால் தன் தாயுள்ளத்தில் ஏற்பட்ட விம்மிதத்தை அலைகளில் ஏற்றி ஆனந்த ஆரவாரம் செய்துகொண்டிருந்தது கடல். பால்போல் பரந்துகிடந்த வெண் மணற் பரப்பிலே தியாகராசனும், தணிகாசலமும் அமர்ந்தார்கள்.

தியாகராசனுக்கு இருந்த மனநிலையில் அவனுக்குப் பேசவே தோன்றவில்லை. அவன் வானத்தை நோக்கியபடி அதிலே திரண்டுவரும் முகில் கூட்டங்களைப் பார்த்தபடி மௌனமாக இருந்தான்.

தணிகாசலத்திற்கு அவன் மௌனம் பயங்கரமாக இருந்தது. சற்றுப் பொறுத்து அவன் கேட்டான். ''தியாகு! இன்று ஏன் இந்த மௌனம்?''

தியாகராசன் அவன் கேட்டதைக் கேளாதவன் போலச் சிறிது இருந்துவிட்டு, தணிகாசலத்தின் தோளிலே தன் கைகளை வைத்து அவனையே ஆழ்ந்து நோக்கினான். ''இவ்வளவு அருகில் நாங்கள் இருந்தாலும், எங்கள் உள்ளங்களுக்கென்றே சில அந்தரங்கங்கள் சொந்தமாக இருக்

கின்றன அல்லவா? அந்த இரகசியங்கள் எங்கே திடீரென்று வெடித்து, உன் முன்னால் விழுந்துவிடுமோ என்று நான் பயப்படுகின்றேன்'' என்று அவன் சொன்னது தணிகாசலத்தின் நெஞ்சிலே அச்சத்தைக் கிளப்பியது.

தணிகாசலம் தன் நண்பனின் கைகளைப் பற்றித் தன் கைக்குள்ளே வைத்துக்கொண்டு, ''எங்களிடையே அந்தரங்கமா?'' என்று மிகுந்த கனிவோடு கேட்டான்.

''ஏன்? இருக்க முடியாதா? இருக்கக் கூடாதா?'' என்று சற்றுக் கடுமையாகத் தியாகராசன் கேள்விகளாலேயே பதில் கொடுத்த போது, தணிகாசலத்திற்கு ஏதோ புரிவதுபோல் இருந்தது. அந்தப் புரிதல் மகிழ்ச்சி தருவதாகத் தப்புக் கணக்குப் போட்ட அவன், தனக்குச் சாதகமான சூழ்நிலை ஒன்றை உருவாக்க வசதியும், வாய்ப்பும் கிடைத்துவிட்டதுபோலத் திருப்தியடைந்தவனாய், தனது அந்தரங்கத்தை அவிழ்க்க நேர்ந்த திருப்தியில் பேசத் தொடங்கினான்.

''சில நாட்களுக்கு முன் உன் வீட்டிற்கு வந்திருந்தேனே? ஞாபகம் இருக்கிறதா? அந்த நாளின் அந்தரங்கத்தை உனக்கு இப்பொழுது உடைத்துச் சொல்லப் போகிறேன். நீ கேட்கத் தயார்தானே?''

தியாகராசன் அசுவாரசியமாக ''உம்'' என்றான். தணிகாசலம் அதற்கு ஆர்வம் என்ற விபரீத அர்த்தத்தைக் கற்பித்தவனாய்த் தொடர்ந்தான். ''கலங்காத என் நெஞ்சில் ஒரு கலக்கம். தளராத என் சிந்தையில் ஒரு தளர்ச்சி. அன்று என் உள்ளத்தில் ஏற்பட்டது ஆனந்தமா? ஏக்கமா? என்று இன்னமும் எனக்கு விளங்கவில்லை.''

''நான் வீட்டுப்படலையைத் திறந்தபொழுது உன் தங்கையே என் கண்ணில் பட்டாள். உன் வீட்டிற்கு எப்பொழுது வரத் தொடங்கினேனோ, அன்றிலிருந்து அவளை எனக்குத் தெரிந்திருந்தாலும், புத்தம் புதிதாகக் காண்பது போன்ற உணர்ச்சி. எனது வாழ்க்கையில் என்றுமே ஏற்படாத ஒரு கிளர்ச்சி.''

''நண்பா! என் மனம் என்னை அறியாமலே அவளைச் சரணடைந்துவிட்டது. 'மணந்தால் இவளையே மணப்பேன்' என்று உறுதிபூண்டேன். அமைதியும், அன்பும செறிந்த அவளின் தூய உள்ளத்தை எனக்கே சொந்தமாக்கிவிட எண்ணினேன்.''

''தியாகு! நீ அவளின் அண்ணன், உன்னுடன் இப்படிப் பேசுகிறேன் என்றால் அந்த அண்ணன் என்பதிலும் பெரிய உரிமையை நான் உன்னில் பாராட்டுகிறேன் என்பதுதானே அதன் அர்த்தம். இந்த அந்தரங்கத்தை உனக்குச் சொல்ல நேர்ந்த இந்த சந்தர்ப்பத்தை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன்'' என்று தணிகாசலம் வைத்தியக்காரனின் மன நிலையிலே புலம்பிக்கொண்டிருந்தான்.

தியாகராசனால் மேலும் பொறுக்க முடியவில்லை. எந்த அந்தரங்கத்தின் பாரத்தால் அவன் உள்ளம் துவண்டு போய்ச் செய்வதறியாது திகைத்துக் கிடந்ததோ அதே அந்தரங்கத்தின் மீது தன் பாரத்தையுமல்லவா தணிகாசலம் சுமத்திவிட்டான். இந்த எண்ணம் அவனை உன்மத்தனாகவே ஆக்கிவிட்டது. ''தணிகாசலம்'' என்று அவன் இரைந்த இரைச்சலிலே கடல் அலைகளும் ஸ்தம்பித்துவிட்டது போன்றிருந்தது.

அவன் கை தணிகாசலத்தின் முகத்திலே பதித்த முத்திரையைத் தணிகாசலம் மௌனமாகத் தாங்கிக்கொண்டான்.

''மடையா! இப்படிப் பேச உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? என் உள்ளத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த நீ ஒரு நொடியில் அதல பாதாளத்தில் விழுந்துவிட்டாய். இனி உலகில் நான் யாரையும் நம்பப் போவதில்லை. இனியும் உன் உறவு எனக்கு வேண்டாம். இனி யாருடையவீட்டிலாவது நீ சென்று பழக நேரிட்டால், கௌரவமாக நடந்துகொள்ளத் தெரிந்து கொள்'' என்று படபடப்புடன் பேசிய தியாகராசன், எழுந்து விரைந்து நடக்கத் தொடங்கினான்.

தணிகாசலத்தின் வீட்டில் அவன் யாருடனும் பேசாது சைக்கிளை எடுத்துக்கொண்டு, அந்த இரவில் வீட்டைநோக்கிச் சென்றான். வழியெல்லாம் அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. "தணிகாசலம்! என்னை மன்னித்துவிடு. இந்த நாடகம் ஒன்றுதான் நான் என் குடும்ப கௌரவத்தையும், உன்னையும் காப்பாற்ற நடிக்கக் கூடிய பொருத்தமான ஒன்றாய் இருந்தது'' என்று அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு சைக்கிள் பெடலை வேகமாக மிதித்தான்.

# 16.

தியாகராசன் மிகுந்த வேகத்துடன் சைக்கிளை ஓட்டிவந்தான். உள்ளத்தில் எழுந்த ஆற்றாமை அசுரகதியில் வளர்ந்து தோல்வி மனப்பான்மையாய் கிளைவிட்டு அந்தத் தோல்வி மனப்பான்மையே ஆவேசமாய் விழுதுவிட அவன் செய்வதறியாது திகைத்தான்.

அவன் வந்த வேகத்தைக் கண்டு கோபமடைந்தது போல ஒரு நாய் குரைத்துக்கொண்டு அவனைத் தொடர்ந்தது. அது சமீபத்தில் வந்த பொழுது தியாகராசன் பெடலிலிருந்த தன் காலைத் தூக்கி அதைப் பலமாக உதைத்தான். "வாள்'' என்று அது வீரிட்டுக்கொண்டு ஓடி ஒளித்தது.

சீற்றத்தினால் குருடாகிவிட்ட அவன் தன் எதிரில் வந்த பல மோட்டார் கார்களையும், பாதசாரிகளையும் மோதாது தப்பிவந்தது ஆச்சரியமான ஒரு விஷயந்தான்.

வீடு வந்த தியாகராசன் பெருஞ் சத்தத்துடன் படலையைத் திறந்தான். அப்பொழுதுதான் பாயை விரித்துப் படுக்கப்போன வள்ளிப்பிள்ளை திடுக்குற்றவளாய் மாடத்

துப் பிறையிலிருந்த விளக்கையும் தூக்கியபடி வெளியே வந்தாள்.

பிரளய கால உருத்திரன் போலப் படலையைத் திறந்து கொண்டு வந்த தன் பிள்ளையைக்காண அச்சமாயிருந்தது அவளுக்கு. ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்ற உள்ளுணர்வு அவளுக்கு ஏற்பட்டது. ''என்னடா தம்பி! தணிகாசலம் வீட்டில் இல்லையே? போன கையோடேயே திரும்பிவிட்டாய். நிண்டு காலையிலை வந்திருக்கலாமே?'' என்று அவள் சொன்னாள்.

''எல்லாம் உள்ளே போய்ப் பேசுவம். வா'' என்று சொல்லிவிட்டுத் தியாகராசன் சைக்கிளை உருட்டியபடி உள்ளே வந்தான். வள்ளிப்பிள்ளை தொடர்ந்தாள்.

தியாகராசன் சைக்கிளை ஒருபக்கமாய் நிறுத்திப் பூட்டினான். திறப்பைக் கையிலெடுத்தவன் முதலில் கேட்ட கேள்வி ''புவனம் நித்திரையோ?'' என்பதுதான்.

வள்ளிப்பிள்ளை அதிர்ச்சியடைந்தாள். வந்தவுடனேயே புவனத்தை விசாரிப்பது ஏன்? வள்ளிப்பிள்ளைக்கு ஏதோ விளங்குவது போல இருந்தது.

அவளின் கண்கள் நாற்புறமும் நோக்கின. முற்றத்தில் தமது வழக்கமான இடத்தில் படுத்துத் தம் உலகத்தில் சஞ்சாரஞ் செய்து கொண்டிருந்தார் பொன்னம்பலம். விறுந்தைத் திண்ணையிலே சுப்பிரமணியம் படுத்துக்குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்.

வள்ளிப்பிள்ளை மிக மெதுவாகச் சொன்னாள். ''சத்தம் போடாதை தம்பி! வந்து படு. எல்லாம் நாளைக்குப் பார்ப்பம்.''

''நாளைக்குப் பார்க்க ஒண்டுமில்லை. எல்லாம் முடிஞ்சு போச்சு. இண்டைக்கே இரண்டிலொண்டு முடிச்சிட வேணும். நான் போய் மாமரத்தடியிலை நிக்கிறன். புவனத்தை எழுப்பிக்கொண்டு வா'' என்று சொல்லிவிட்டுத் தியாகராசன் அவள் பதிலையும் எதிர்பாராமல் மாமரத் தடிக்குச் சென்றான்.

நிலவு பால் பொழிந்து கொண்டிருந்தது. மாங்குருத்துகளை வருடிக்கொண்டு மெல்ல வீசிய தென்றல் அவன் உடலையும் தழுவியது. ஆனுல் அவன் உடலிலே வெப்பம் குறைவதற்குப் பதில் ஏறிக்கொண்டே சென்றது. பல்லை நெருமிய வண்ணம் வீட்டு வாசலிலேயே கண் வைத்து நின்ருன் அவன்.

புவனேஸ்வரியும், வள்ளிப்பிள்ளையும் வந்தார்கள். புவனேஸ்வரியைக் கண்டதும் அவனுடைய கோபம் எல்லை மீறியது. அவளின் கன்னத்தில் கைகளால் அறைந்துவிட்டான். அவனைத் தடுத்து நிறுத்துவது பெரும்பாடாய்விட்டது வள்ளிப்பிள்ளைக்கு.

''என்னடா இதெல்லாம்? அவள் வளர்ந்த பிள்ளையல்லே? இப்படியே அடிக்கிறது. நீ அடிக்கக் கூடியதாய் அவள் என்ன செய்துவிட்டாள்? அதைச் சொல்லு?'' என்று பாதி கோபத்துடனும், பாதி வருத்தத்துடனும் வள்ளிப்பிள்ளை கேட்டாள்.

''என்ன செய்திட்டாளோ? இவள் கொடுத்த இடம் தணிகாசலம் கேட்கிருன். இவளைக் கட்டித்தரச் சொல்லி'' என்று உணர்ச்சியால் வார்த்தைகள் தடுமாறப் பேசினுன் தியாகராசன். மேலும் அவன் தொடர்ந்தான்.

''இண்டு காலமை பள்ளிக்கூடத்திலை ஒருத்தன் கேட்கிருன், 'நீ தணிகாசலத்தை உன்ரை தங்கச்சிக்குக்கட்டிவைக்கத்தானே அவனை வீட்டிலை சேர்த்து வச்சிருக்கிருய்'' எண்டு. எங்கடை மானம் மரியாதையெல்லாம் காற்றில் பறக்குது. இவளின்ரை மனத்தை அறியாமல் தணிகாசலம் இவ்வளவு துணிவாய் என்னேடை பேசுவானு? பார்... பூனை போல இருந்து கொண்டு...'' மீண்டும் புவனத்திற்கு அடிக்கக் கையோங்கினுன். வள்ளிப்பிள்ளை தடுத்துவிட்டாள். தியாகராசன் உணர்ச்சியால் அழுதேவிட்டான்.

வள்ளிப்பிள்ளையின் நெஞ்சிலே திக்கென்றது. அவளுக்கு இப்படியொரு சூழ்நிலை என்னைக்காவது உருவாகும் என்று எண்ணமே ஏற்படவில்லை. அவள் தியாக

ராசனைப் போலவே தணிகாசலத்தையும் பின்னை போல என்னவிலவனல்லாமல் வேறுமாதிரியான முடிச்சுப் போட்டுப் பார்க்க முயன்றதேயில்லை. சாதிப் பிரச்சினைதான் அதற்குக் காரணம் என்பதல்ல. எதையும் கரவாகச் சிந்திக்கவோ நீண்ட திட்டங்களைப் போடவோ அவள் அறியாதிருந்தமைதான் காரணம். இப்பொழுது தியாகராசன் இவ்வாறு சொல்கையில் அவளுக்கு மலைப்பாகவும் வேதனையாகவுமிருந்தது.

ஆனால் இதைப் பெரிதொரு குற்றம் என்று அவளால் கருத முடியவில்லை. சிறிது நேரம் அவள் ஒன்றும் பேசாதிருந்தாள். பிறகு மகனை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள். ''உலகம் பொல்லாதது மோனை. எலும்பில்லாத நாக்கால் அது எத்தனையோ சொல்லும். அதுக்குப் பயந்து வாழேலாது. நிலவுக்கு ஒளிச்சுப் பரதேசம் போக முடியாது. அதுதான் போகட்டும். நீ படிச்சவன். ஒருத்தன் தன்ரை மனதிலை இருக்கிறவிருப்பத்தை எடுத்துச் சொல்லக் கூடாதே?'' என்று அவள் மெல்ல மெல்லச் சொன்னாள்.

''தணிகாசலம் ஒண்டும் கெட்டபிள்ளையில்லை. நீநிக்கு மாருய் அவன் நடக்கமாட்டான். வீணாய் ஒண்டுமில்லாமல் இந்தப் பிள்ளைக்கும் அடிச்சுப் போட்டாய். அவன் பிறந்து பதினெட்டு வருஷமாய்ப் போச்சு. ஒரு நாளும் நான் அவனின்ரை மேலிலை தொட்டதில்லை. நீ என்னெண்டால் முரட்டுத்தனமாய் அடிச்சுப் போட்டாய். போகுது. போய்ப்படு'' என்று மிக வருத்தத்தோடு அவள் கூறிமுடித்தாள்.

தியாகராசன் தன் செயலையிட்டு அளவிடமுடியாத நாணமடைந்தான். ஆனால் இந்த விஷப் பரீட்சையைக் கல்மனத்தோடு செய்யாவிட்டால் ஏற்படப் போகும் விபரீத விளைவுகள் பற்றி அவன் மீளவும் சிந்தித்ததால் வெள்ளம் வர முன் தான் அணை போட்டுவிட்ட திருப்தியை அடைந்தான். ஆனால் இந்த பிரச்சினையைத் தீர்க்

காது வளர்த்துவிடும் என்று ஏனோ அவன் சிந்திக்க வில்லை.

"சரி சரி! எக்கேடாவது கெட்டுப் போங்கோ. ஆனால் ஒண்டு. நீங்களும் ஒத்து இந்தக் கலியாணமும் நடந்தால் என்னைக் கண்ணிலை காணமாட்டியள்" என்ற இறுதிப் பய முறுத்தலையும் செய்துவிட்டு அவன் விரைவாக நடந்து சென்று தன் பாயை விரித்துப்படுத்தான்.

தாயும் மகளும் தொடர்ந்து சென்று தங்கள் படுக்கை யில் படுத்தார்கள். இருவரும் நீண்ட நேரம் எதுவும் பேச வில்லை. ஆனல் அவர்களுடைய நெடுமூச்சும், மௌனமாய் வடிக்கும் கண்ணீரும் பேசாத பல பேச்சுக்களைப் பேசின.

"அம்மா!" புவனேஸ்வரி தன் தாயை அணைத்துக் கொண்டு விம்மினள். வள்ளிப்பிள்ளை தன் மகளை ஆவிசேர அணைத்தவளாய் "என்ன பிள்ளை" என்று கேட்டாள்.

"அம்மா! நான் பிழை செய்திட்டனே? சொல் அம்மா" என்று விம்மல் பொருமலுக்கிடையே புவனேஸ் வரி தாயைக் கேட்டாள்.

"என்ரை பிள்ளையள் ஒருக்காலும் பிழைவிடாதெண்டு எனக்குத் தெரியும். நீ ஒண்டுக்கும் யோசியாதைமோனை" என்று கூறியபடி வள்ளிப்பிள்ளை தன் மகளின் கண்ணீரைத் துடைத்தாள். தியாகராசன் அடித்ததால் வீங்கியிருந்த கன்னங்களைத் தடவிவிட்டபொழுது வள்ளிப்பிள்ளையின் தாயுள்ளம் குருதிக் கண்ணீர் வடித்தது. அவள் கண்கள் குளமாயின.

இவ்வாறு தாயும், மகளும் ஒருவரை ஒருவர் அணைத்த படி நெடுநேரம் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தார்கள்.

# 17.

தியாகராசன் செல்லும் வழியை நோக்கி நின்ற தணிகாசலத்திற்கு எதிர்காலம் அந்தகாரம் சூழ்ந்ததாகவே காட்சியளித்தது. இனித் தன் வாழ்வில் இன்பம் மலர வகையே இல்லையென்று அவன் முடிவுகட்டினுன்.

''அந்த அகால வேளையில் தியாகராசன் ஏன் திரும்பிச் செல்கிறுன்'' என்று பெற்ருேரும், சகோதரரும் அவன் நெஞ்சப் புண்ணில் வேலேற்றினர். அவனுல் என்ன பதில் கூற முடியும்? அவன் மௌனம் பயங்கரமாய் இருந்தது.

மேலும் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்பது, முள் படுக்கைபோல அவனை உறுத்தியது. பயங்கரமான பாலை வெளியில், கொதித்துப் புகையுமிடமும் எரிமலைக்குப் பக்கத்தில் தன்னந்தனியனுய் நிற்பது போன்ற உணர்ச்சியை அவனுல் தாங்கக்கூட இயலவில்லை.

விடிந்தது. அன்றைய பகல் புகைவண்டியிலேயே பிரயாணம் செய்யப்போவதாய் அவன் அறிவித்தபொழுது வீட்டிலுள்ளோர் அதிர்ச்சியடைந்தனர். ஆனுல் தணிகாசலத்தின் பிடிவாதம் அவர்களுக்குத் தெரியும். எனவே அவனைத் தடுத்துநிறுத்தும் முயற்சியில் யாரும் இறங்கவில்லை.

குறித்த நேரத்தில் புகைவண்டி நிலையத்தை அடைந்து டிக்கட் பெற்று, புகைவண்டியிலும் இடம் பிடித்துக் கொண்டது அவன் அதிர்ஷ்டம்தான். சாமான்களை வைக்கும் இடத்தில் அவன் தன் பெட்டியை வைத்துவிட்டுத் திரும்பியபொழுது, தன்தோளில் யாரோ கைவைப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 'மச்சான்' என்ற குரலும் வந்தது. திரும்பினுன்.

கந்தையா நின்றுகொண்டிருந்தான். வெள்ளை வெளேரென்ற நாஷனல், வேட்டி அரையில் பட்டுச் சால்வை சகி

தம் காட்சி தந்த கந்தையாவுக்கு ரெயிலில் நீண்ட பிரயாணம் செய்வதில் இதுவே முதல் அனுபவம் என்பது நன்கு தெரிந்துவிட்டது. ரெயிலில் ஏறிய கையோடேயே வேட்டியை மாற்றிக்கொண்டு உள்பெனியனோடும், சாரத்துடனும் பிரயாணஞ் செய்யும் தணிகாசலத்திற்கு, ஏதோ கலியாண வீட்டிற்குச் செல்பவன் போன்ற ஆடையலங்காரங்களுடன் காட்சிதந்த கந்தையா புதினப் பொருளாகவே தோற்றினான்.

''என்னடாப்பா? எங்கே போகிறாய்?'' என்று தணிகாசலம் கேட்டபடி தான் பிடித்திருந்த ஆசனத்தில் உட்கார்ந்தான். கந்தையாவும் அவனுக்கு முன் உள்ள ஆசனத்தில் உட்கார்ந்தான். நெருக்கியடித்துக்கொண்டிருந்து தன் அளப்பைத் தொடங்கினான். ''தெரியாதா? சிறிது காலத்திற்குப் பண்டாரவளையில் சுகவாசஞ் செய்யப்போகிறேன். என்னடா அப்படி மலைத்துப்போய்ப் பார்க்கிறாய்? ஐயாவைப் பார்த்தால் சுகவாசம் செய்யத் தகுதி உள்ளவராய்த் தெரியவில்லையா?''

தணிகாசலத்திற்குக் கந்தையா என்ன சொல்கிறான் என்பது விளங்கவில்லை. ஆரடாப்பா தகுதியில்லையென்று சொன்னது? ஆனால் இது மாரிக்காலம் ஆயிற்றே! பண்டாரவளைக் குளிரைத் தாங்குவியோ என்பதுதான் சந்தேகம்'' என்று தணிகாசலம் கூறினான். கூறிவிட்டுக் கடகடவென்று சிரித்தான். இப்படி ஏதாவது அர்த்தமில்லாமல் பேசி, சிரித்து தம் நெஞ்சில் எழும் சிந்தனை அலைகளை அடக்கிவிட அவன் முயன்றான். விபரீதமான முயற்சி.

கந்தையா என்ன சாதாரண பேர்வழியா? அவனும் தணிகாசலத்திலும் அதிகமாய்ச் சிரித்தபடி'' மாரிக்காலம் இந்த உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதுதான். ஆனால் என்ன செய்வது? பண்டாரவளையிலுள்ள ஒரு கல்லூரியார், என்னைத் தங்கள் கல்லூரிக்கு ஒரு தடவை விஜயஞ் செய்யுமாறு வேண்டுகிறார்கள். என்ன செய்வது?'' என்று சொன்னான்.

கந்தையா ஏதோ ஒரு கல்லூரியில் இடம் கிடைத்துக் கல்வி கற்பிக்கச் செல்கிறானென்பதை தணிகாசலம் அறிந்து கொண்டான்.

"அடடே? என் அதிர்ஷ்டம் என்று சொல். பதுளையில் இருந்து பண்டாரவளை பதினேழு மைல்தான். அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம்" என்று சிரிப்புக் கருகாத முகத்தோடு பதிலிறுத்தான் தணிகாசலம்.

"அடிக்கடி சந்திக்கிற வேலைதான் வேண்டாம் என்கிறேன். அது என் உடம்புக்கும் ஒத்துக்கொள்ளாது; மணிப் பேஸுக்கும் ஒத்துக்கொள்ளாது" என்று ஏதோ ஹாஸ்யமாகப் பேசி விட்டவன்போன்று உரக்கச் சிரித்தபடி கந்தையா சொன்னான்.

புகைவண்டி ஒருதரம் அசைந்து கொடுத்து நகரத் தொடங்கியது. நண்பர்கள் இருவரும் ஒருவித கருத்துமின்றி வம்பளந்தபடி சென்றார்கள்.

★

இயற்கையன்னையின் அமுதம் பொழிந்ததால், வளங் கொழிக்கும் வயல்களையும், சிறிய பற்றைக் காடுகளையும் கடந்து புகைவண்டி சென்றுகொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அடிக்கடி காணமுடியாத அபூர்வ காட்சி அது- வெண்முகில் படிந்த வானத்திலே பறந்துசெல்லும் கொக்குக் கூட்டங்களையும், சூரியனின் கதிர்கள் பட்டு வெள்ளி அலைகளை வீசும் ஏரிகளையும் தணிகாசலத்தின் கண்கள் கண்டனவேயல்லாமல் அவற்றில் சென்று நிலைக்கவில்லை. குளிர்மையாய் வந்து வீசிய வாடைக் காற்றையும் அவன் பொருட்படுத்தவில்லை. யன்னலினூடாக வெளியே பார்த்தவனுக்கு இயற்கைக் காட்சிகள் அனைத்தும் சூனியமாய்ப் பாழ் வெளியாகத் தோன்றின.

சிறிது நேரத்தின்முன்தான் கந்தையாவும், தணிகாசலமும் புகைவண்டிச் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றுவிட்டு வந்திருந்தனர். உணவருந்தவல்ல; குடிப்பதற்கு. ஒருநாளும் இல்லாத திருநாளாய் அன்று கந்தையாவுடன் சேர்ந்து

தணிகாசலமும் 'பியர்' அருந்தினன். நெஞ்சில் எரியும் தணலை அணைத்துவிட, அவன் செய்த கடைசி முயற்சி அது!

கண்களை இழுத்து இழுத்துச் செருகும் மயக்க உணர்ச்சியும், காலுடன் கால் தயங்கித் துவண்டுவிடுவது போன்ற உணர்ச்சியும், விரும்பியோ, விரும்பாமலோ பேசுகின்ற அர்த்தமற்ற பேச்சும், நினைப்புக்குள், கட்டுப்பாட்டுக்குள் அடங்காத சிரிப்பும், ஒருசில நிமிஷங்கள்தான் அவன் கவலையை மறக்க உதவின. பின் பேச்சற்று பெரு மௌனத்தில் ஆழ்ந்துவிட்டான் அவன்.

★

அவனுடன் பேசிப் பேசிப் பார்த்து அலுத்துவிட்ட கந்தையா, இப்பொழுது மறுபக்கம் இருந்த பிரயாணிகள் சிலருடன் சென்று 'கடதாசி' விளையாடத் தொடங்கினன். அவனுக்கு ஏதாவது செய்துகொண்டே இருக்கவேண்டும்; அல்லது யாருடனுவது வம்பளந்து நேரத்தைப் போக்கடிக்கவேண்டும். சும்மாயிருந்து சுகங்காணமட்டும் முடியாது அவனுக்கு.''

அவனுடைய தொல்லை நீங்கியதும், தணிகாசலம் யன்னலில் சாய்ந்தபடி, ஆசனத்தில் கால்களை நீட்டியவண்ணம் சிந்திக்கத் தொடங்கினன்.

தியாகராசனும், அவனும் பழகியதெல்லாம் மூன்று வருடங்கள்தான். ஆனல் இந்த இடைவெளியில் நட்பின் சிகரத்தையே அடைந்து, திடீரென்று அதல பாதாளத்திலும் வீழ்ந்துவிட்டார்கள் அவர்கள்.

பயிற்சிக் கல்லூரியில் தான் நோயாய்க் கிடந்த இரண்டு நாட்களும் கண்மூடாதிருந்து, தாயினும் மேலாக சிசுருஷை செய்த தியாகராசன், தன் துன்பங்களை, வீட்டுக் கஷ்டங்களையெல்லாம் ஒளிவு மறைவின்றிக் கூறித் தன் உண்மை நட்பை நிரூபித்த தியாகராசன்; தன் வீட்டில் ஒருவனுக ஆக்கித் தன் அன்பையெல்லாம் சொரிந்து; தணிகாசலத்தின் வாழ்வே தன் வாழ்வு எனக்கொண்ட தியாகராசன், கடைசியாக வெகுளியும், வெறுப்பும் சுடரிட்ட விழிக

ளோடு கொந்தளித்துக் குமுறும் எரிமலையாய் நின்ற தியாகராசன்; என தியாகராசன், அவனின் மனக் கண்ணில் பல வண்ணங்கள் காட்டி நின்றான்.

*

தணிகாசலத்தால் தாழ முடியவில்லை. "ஐயோ! தியாகு! நான் உனக்குத் துரோகம் செய்துவிட்டேனென்று நீ நினைத்ததன் பின்னும், நான் எப்படி இந்த உலகில் மனிதனாய் வாழமுடியும்? ஆம்! நீ என்று உன் கைநீட்டி என்னை அறைந்தாயோ, அன்றே நான் செத்துவிட்டேன். இப்பொழுது வெறும் உயிர்க்கூடுதான் தணிகாசலம் என்ற பெயரில் உலாவுகிறது" என்று அவன் நெஞ்சம் புலம்பியது.

சிறிது நேரத்தில் அவன் கண்ணயர்ந்தான். மூடிய அவன் விழிகளில் ஆர்வமும், அன்பும் சுடர்விடும் விழிகளுடன் புவனேஸ்வரி பவனி வந்தாள். அவன் வாய், "புவனம்", "புவனம்" என்று முணுமுணுத்தது.

## 18.

தியாகராசனின் வீட்டில் அன்றைய சம்பவத்திற்குப் பிறகு, எல்லையற்ற சோகம் கவிந்துவிட்டது. தியாகராசனும், வள்ளிப்பிள்ளையும், புவனேஸ்வரியும் மௌனத்தால் தங்களை மூடி மறைத்துக்கொண்டு, நடைப்பிணங்களாக நடமாடினர்.

தியாகராசன், தான் முற்றிலும் ஓர் அயல் மனிதனாகி விட்ட உணர்ச்சியை அடைந்தான். பாசத்தின் உறைவிடமான தாய் பக்கத்திலிருப்பினும், மதிப்பிற்குரிய தந்தை வளைய வளைய வரினும், தான் "யாருமற்றவன்" என்ற ஏக்கத்தைப் போக்கிவிட அவனால் முடியவில்லை. புவனேஸ்வரியைக் காணும்போது, "தான் ஏதோ பெரிய குற்றம் செய்துவிட்டவன்"போல அவன் கூனிக் குறுகிப் போவான்.

அவளிடமிருந்து எவ்வளவு தூரம் விலகிப்போக முடியுமோ அவ்வளவுக்கு விலகிச் செல்வதென்று அவன் தீர்மானித்து அதனைச் செயற்படுத்தியும் வந்தான்.

தணிகாசலத்தை நினைக்கும்போது முன்போல வெறுப்பு வருவதில்லை என்பது உண்மையே. ஆனால் வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்து தானும், அவனும் நண்பராய்ச் செல்வது இனிமேலும் முடியாதென்றே அவன் நினைத்தான். தணிகாசலத்திற்குத் தான் ஏற்படுத்தியிருந்த ஆழமான வடு இன்னும் மாறாது அவனை வருத்தியபடியிருந்தது.

புவனேஸ்வரியின் உள்ளத்திலோ பெரியதொரு எரிமலை குமுறிக்கொண்டிருந்தது. வாழ்வுக்கும், சாவுக்குமிடையே அவள் சிந்தை ஊசலாடியவண்ணமிருந்தது. "எல்லார்க்கும் துன்பம் தரவா நான் பிறந்தேன்?" என்று அவள் தனிமையில் மௌனமாய்க் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்தாள்.

ஆனால், நடந்த சம்பவங்களையிட்டு அவள் தன் அண்ணனை வெறுத்துவிடவுமில்லை! அன்பு காட்டப் பழகியிருந்தாளேயன்றி, வெறுப்பை வித்திட்டு வளர்க்க அவள் அறியாதிருந்தாள். சிறு வயதிலிருந்தே அவள் பழகிவிட்ட பழக்கம் அது!

சிறுமியாய் விளையாடித் திரிந்த காலத்தில், முன்கோபக்காரனான அண்ணனிடம் அவள் வாங்கிய அடிகள் கொஞ்சமல்ல. ஆனால் அதை அடுத்தகணம் மறந்து, அவன் முன் சென்று சிரித்துக்கொண்டு நிற்கவும் தவறியதில்லை அவள்.

தன் துன்பங்களையெல்லாம் மறந்தவள்போல பாசாங்கு செய்துகொண்டு திவாகராசனின் முன் மலர்ந்த முகத்தோடு புவனேஸ்வரி சென்றுகொண்டுதானிருந்தாள். காலையில் திவாகராசன் வெளியே புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்பவளும் அவள்தான்.

என்னசெய்தாலும் வெறுத்த முகத்துடன் அலட்சியமாய்ச் செல்லும் திவாகராசன், ஒவ்வொரு சமயத்திலும்

அவள் இருதயத்தை நொருக்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஒருமுறை ஆனந்தம் மலர்வதாயிருந்தால், அதற்காக எந்தத் துன்பத்தையும் தாங்க அவள் தயாராயிருந்தாள். அவள் பாசம் அத்தகையது. ஆனல் தியாகராசன் தன் தங்கையின் உணர்ச்சிக்கு மதிப்பளித்தால்தானே?

இனியும் பொறுக்க முடியாதென்ற நிலையில், அன்றைக்கு அவள் தன் அண்ணன்முன் போனுள். ''அண்ணே! என்னை ஏன் கொல்லுறியள்? உங்களின்ரை விருப்பத்துக்கு மாறய் நான் ஒண்டுஞ் செய்யமாட்டன். நீங்கள் மாத்திரம் சந்தோஷமாய் இருங்கோ'' என்று விம்மல் பொருமலுடன் அவள் கூறினுள்.

தியாகராசன் சீற்றத்துடன் திரும்பினுன். ''உனக்கும் எனக்கும் ஒரு தொடர்புமில்லை. போயிடு என் முன்னலை வராதை; போ'' என்று அவன் சப்தம் போட்டான்.

புவனேஸ்வரி நம்பிக்கை இழந்தவளாய், வேதனைப் பொருமலை நெஞ்சில் தாங்கிக்கொண்டு வீட்டிற்குள் ஓடினுள்.

அவள் மறைந்ததும், தியாகராசன் பெண்களைப்போல விம்மி விம்மி அழுதான்.

★

வள்ளிப்பிள்ளை தன் குடும்பத்தின் அவலநிலைபற்றி சிந்தித்துக்கொண்டிருந்தாள். புவனேஸ்வரியின் தாய்தானே அவள். புவனேஸ்வரியின் உள்ளத்தில் அன்பு சிற்றுறுபோல் அனைதயாக ஓடியதென்றல், தாயின் உள்ளத்தில் அது சமுத்திரம்போல் ஓடிக்கொண்டிருப்பதில் என்ன ஆச்சரியம்?

செல்வத்தையும், வறுமையையும் கண்டு முறையே மகிழ்ச்சியோ, கவலையோ அடையவில்லை அவள். அது சகஜம் என்றே அவள் கருதினுள்.

'சுகம் துக்கம் சுழலும் சக்கரம்' என்ற பழமொழி அவளுக்குத் தெரியாது. ஆனல் இயற்கையாகவே அமைந்த உளப்பாங்கு இரண்டையும் சமநிலையில் காணவைத்தது

அவளே. ''மகன் உழையாமல் இருக்கிறனே'' என்று அவ ளின் கணவன் வருந்திய காலத்தில், அவருக்குத் தேறுதல் சொல்லியும், அதே சமயத்தில் தன் உள்ளத்தில் கவலையைப் புகவிடாதும் அவளே தடுத்தாள்.

ஆனால், தியாகராசன் புவனேஸ்வரியைக் கைநீட்டி அடித்த சம்பவம் அவள் உள்ளத்தில் சஞ்சலத்தை ஆழ மாய் வேரூன்ற வைத்துவிட்டது. அதைப் போக்க அவளால் கூட முடியவில்லை. புவனேஸ்வரி தியாகராசனை எதிர்த்து இரண்டு வார்த்தைகள் கூறியிருந்தால், அவளுக்கு இத்தனை வேதனை இருந்திருக்காது. தன் மகளுடைய சகிப்புத் தன்மை, பரந்துபட்ட அவளுடைய பாசம், தியாகராசனை அணுஅணுவாகச் சித்திரவதை செய்ததை வள்ளிப்பிள்ளை நன்குணர்ந்தாள்.

★

புவனேஸ்வரியும், வள்ளிப்பிள்ளையும் குண விசேஷங் களில் ஒத்துத்தானிருந்தனர். ஆனால் அந்த இளம் பெண் ணின் நெஞ்சாழத்தை, அந்தத் தாயுள்ளத்தால் அளக்கவே முடியவில்லை! ''நான் ஏதாவது பிழை செய்திட்டனே'' என்று அன்று இரவு புவனேஸ்வரி கேட்டாளே? அதன் கருத்து வள்ளிப்பிள்ளைக்குப் புரிவது போலவும் இருந்தது, புரியாமலும் இருந்தது!

நேற்றுக்கூட அவள் தன் மகளுடன் பேச்சுக்கொடுத் துப் பார்த்தாள். புவனேஸ்வரியோ எதற்கும் மௌனத் தையே அனுஷ்டித்தாள். வள்ளிப்பிள்ளை எவ்வளவோ பேசி னாள். எல்லாவற்றிற்கும் சுருக்கமாய் அவள் அளித்த பதில் சில வார்த்தைகளிலேயே அடங்கிவிட்டது. ''அம்மா! என்னாலே ஆருக்கும் துன்பம் இருக்காது. அண்ணனைச் சந் தோஷமாய் இருக்கச் சொல்லு. நானும் உங்களுக்காகச் சந்தோஷமாய் இருக்கிறேன்.''

''நானும் உங்களுக்காகச் சந்தோஷமாயிருக்கிறன்'' என்று மகள் கூறியதின் பொருள் என்ன? இந்த வசனத் தையே நூறு தடவை சொல்லிப் பார்த்தாள் வள்ளிப்

பிள்ளை. அதன் கருத்து அவளுக்குப் புரிவது போலவும் இருந்தது. புரியாமலும் இருந்தது.

பலநாட்களாய் வள்ளிப்பிள்ளை நினைத்து ஒரு முடிவுக்கு வந்தாள். அந்த முடிவு, தணிகாசலத்திற்கு எழுதும் ஒரு கடிதமாக உருக்கொண்டது. தனக்குத் தெரிந்த அரை குறைத் தமிழில் அவள் எழுதிய கடிதத்தின் திருத்திய பிரதி இது:

பொன்னூலை,
28-5-49

சிவபெருமான் கிருபையை முன்னிட்டு வாழும் எங்கள் மேல் பட்சம் மறவாத தம்பி தணிகாசலத்திற்கு எழுதிக் கொள்வது:

நாங்கள் யாபேரும் நல்ல சுகம். உம்முடைய சுகத்தை அறிய விரும்புகிறோம்.

அன்றைக்குத் தம்பி, உம்மை ஏதாவது கடுமையாகப் பேசியிருந்தால் அதை மன்னித்துக்கொள்ளவும். தம்பியின் குணம் உமக்குத் தெரிந்ததுதானே? அவன் முரடன்.

நீர் எதற்கும் யோசிக்கவேண்டாம். கடவுள் கண் விழித்தால் உம்முடைய எண்ணம் கட்டாயம் நிறைவேறும்.

நிற்க, இந்தக் கடிதத்திற்குப் பதில் போடவேண்டாம். தம்பி கண்டால் தொந்தரவு.

இத்துடன் முடிக்கிறேன்.

வேறு விசேஷமில்லை.

இங்ஙனம்,
உமது அன்பு மறவாத
பொ. வள்ளிப்பிள்ளை.

## 19.

மார்கழி மாதம், காலை நேரம். சீதளமான வாடைக் காற்று மெல்லென வீசுகின்றது. 'வளர்மதி' அமைதி பெற்ற கொட்டிலில் தாலாட்டப்பட்டுக்கொண்டிருக்

கிறது. அதன் காரியாலய அறையில் திருவாளர் இராமலிங்கம், பன்னலின் அருகேயுள்ள சுகாசனத்தில் அமைதியாகச் சாய்ந்திருக்கிறார்.

குளிருக்குப் பாதுகாப்பாக 'ஸ்வெட்டரும்'' குரங்குத் தொப்பியும் அணிந்திருக்கிறார். அவருடைய கால்கள் முன்னால் இருந்த ரீபோயில் போடப்பட்டிருக்க, அவருடைய விழிகளோ சிந்தனையில் தேங்கிச் சிறிது மூடிய நிலையில் இருக்கின்றன. ஏதாவது பிரச்சினைகளை அலசி ஆராய வேண்டுமானால், அவர்தம் கண்களைச் சிறிது மூடி, வலக் கரத்தால் தம் நெற்றிப்பொட்டைத் தாங்கிக் கொண்டிருப்பது வழக்கம்.

★

பக்கத்திலுள்ள சிறிய 'ஸ்டூல்' ஒன்றில் அவர் சுவைத்துக் குடித்த தேநீர்க் கோப்பை இருக்கிறது. மிச்சம், மீதி இருக்கும் தேநீரைச் சுவைத்துத் தம் காலைப் பசியைப் போக்கடிக்க வந்த ஈக்கள், அந்தக் கோப்பையைச் சுற்றி மொய்த்துக்கொண்டிருக்கின்றன. அதே 'ஸ்டூலில்' நுனியில் அவர் குடித்துவிட்டு வைத்த குறைச் சுருட்டு, சிறிது சிறிதாக எரிந்து புகையை வெளியிடுகின்றது.

வானொலிப் பெட்டியில் திருவெம்பாவைப் பாடல் ஒலிக்கின்றது. அதில் அவரின் கவனம் செல்லவில்லை. இடைக்கிடை பன்னல் துணியை நீக்கி வெளியே பார்க்கிறார், அவரின் இதழ்களிலே சிறுநகை மலர்கிறது. பின் பழைய நிலையிலேயே அவர் தியான யோகத்தில் ஆழ்ந்து விடுகிறார்.

முன்புறத்தில் இருந்த கொட்டில் ஒன்றில் குறுக்குக் கட்டுக் கட்டிய இரு இளம் பெண்கள் மாறிமாறி உலக்கையைப் போட்டு நெல் குற்றும் தாள லயத்திலோ, அல்லது அவர்களின் கட்டுக்குலையா இளமையிலோ, கிழடு தட்டிய அவரின் ரசிக உள்ளம் சென்று, மொய்த்துத் திரும்பியதால்தான் அந்த மலர்ச்சி ஏற்பட்டது என்று கூற முடியாது!

அப்பர் கல்வித் திருச்சபையின் முகாமையாளர் அவர். சுதந்திர உணர்வோடு தலைநிமிர்ந்து நிற்கும் ஆசிரியர் யாரையாவது தண்டித்து, தண்ணீரில்லாக் காடு ஒன்றுக்கு மாற்றிவிடுவது பற்றி அவர் யோசித்தாரோ? இருக்காது! அது மிக மிக சாதாரண விஷயம் அவருக்கு. புதிதாக நியமனம் செய்யவிருக்கும் ஆசிரியர் எவராவது அளிக்கப் போகும் பணத்தில் ஏற்பட்ட தகராறு பற்றி அவர் நீள நினைக்கின்றாரோ? நிச்சயமாக இல்லை!

இராமுப்பிள்ளை போன்ற ஆசிரிய விபீஷணர்கள் அந்த விஷயத்தை மிகமிகச் சுலபமாகத் தீர்த்துவிடுவார்கள். உள்ளூர்ப் பாடசாலை ஒன்றின் ஸ்தாபகராயும், அதன் ஸ்தல முகாமையாளராயுமுள்ள யாராவது, அரசாங்கம் அளித்த ''உதவி நன்கொடையைத் தரவில்லை''யென்று முரண்டுபண்ணுவது அவர் தலைவலிக்குக் காரணமோ?

அதற்குத்தான் அவருடைய காவல் நந்தியான காரியாலய இலிகிதர் இருக்கின்றாரே. ஸ்தல முகாமையாளர்களின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டும் இரகசியக் கலையில் அவரை மிஞ்ச யார் இருக்கின்றார்கள்? எனவே அதுவும் அவருடைய சிந்தனைக்குக் காரணமல்ல!

பின்...? பின் என்ன?

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல்தான் அவரை ஆட்டிப்படைக்கின்றது! ஏவியது செய்ய ஆசிரியர்கள் காலடியில் மொய்க்கின்றார்கள். வீட்டிற்கும், தத்தம் குடும்பத்திற்குமே அவர்கள் கைகள் கருணைக்கிழங்காய் இருந்தாலும் அவருடைய சேவையென்று ஏற்படும்பொழுது கார்மேகக் கைபெற்ற கொடைவள்ளல்களாக அவர்கள் மாறிவிடுவார்கள். பின் என்ன வேண்டும்? 'புத்தூர்த் தொகுதிக்கு ஒரு தடவை நின்று பார்ப்போம்' என்று சபலம் தட்டியது அவருக்கு. சபலம் என்ன? இரவிலும், பகலிலும் அவர் காணும் கனவு பாராளுமன்றத் தேர்தல்தான்.

★

இராமலிங்கம் இப்பொழுது கனவுலகில் மிதக்கிறார். திருவாளர் இராமலிங்கம் எம். பி. என்று அடிக்கப்பட்ட கடிதத் தலைகள் அவர் விழிகளின் முன் மிதந்துவருகின்றன. எம். பி. மட்டுமா? சிறிது காலத்தில் அவரையும், இவரையும் காக்காய் பிடித்து பிரதமரின் கடைக்கண் நோக்கிற்கு அவர் ஆளாகிறார். பயன்? கல்வி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி அவர்! கேட்கவேண்டுமா? அவருடைய கைகளிலே முரண்டு பண்ணும் ஆசிரியர்களின் விதிக்கயிறு அளிக்கப்படுகின்றது.

அந்த முட்டாள்ஆசிரியர்கள் அனைவரும் அவர் காலடியில் வந்து விழுகிறார்கள். அவர் தம் திருமுகத்தில் அருளினைக் கூட்டி அவர்களை மன்னித்துவிடுகிறார். ஒவ்வொரு மன்னிப்பின் போதும் அவருடைய இரும்புப் பெட்டியில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அடைக்கலம் பெறுகின்றன. எத்தகைய இனிய கனவு?

இராமலிங்கம் பைத்தியக்காரன் போன்று சிரித்துக்கொள்கிறார். ''வெற்றி எனதே!'' என்று அவர் வாய் முனகுகின்றது. சோம்பல் முறித்துக்கொண்டு சிறிது நிமிர்கிறார். எரிந்து சிறிதாகிவிட்ட சுருட்டை எடுத்து வாயில் வைத்து இரண்டு இழுவை இழுக்கிறார். பின் பழையபடி ஆசனத்தில் சாய்ந்து யோக நித்திரை செய்கிறார்.

'தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. ஓடி ஆடி வேலை பார்க்க வேண்டும். பொன்னுலைப் பொடியனின் (யார் அது? ஓ! தியாகராசன்) உதவி இப்போதுதான் நமக்கு அவசியம் தேவை. பணச் செலவின்றியே பிரசாரக் கூட்டங்களில் அவனைப் பேசவைக்கலாம். இளமட்டங்களிலிருந்து விழு கிழவர் வரை அவன் பேச்சினால் கவரப்படுகிறார்கள் என்று கேள்வி. இன்றைக்கே அவனுக்குக் கடிதம் எழுதி அழைக்க வேண்டும்.'

''தேர்தல் காரியாலயத்திற்குச் சென்று கொஞ்சம் 'சுறுப்பும்' வாங்குவிக்க வேண்டும். புத்தார் போற்றில்

சில குழப்படிக்காரர் இருக்கிறார்களாம். அவர்களைச் சரிப் படுத்த அதுதான் வழி'' என்று சிந்தித்தவராய்த் தம் ஆசனத்திலிருந்து இராமலிங்கம் எழுந்திருக்கிறார்.

இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின் அவர் 'வளர் மதி'யிலிருந்து புறப்பட்ட பொழுது சுத்த சைவப்பழமாகக் காட்சி தருகிறார். வெள்ளை வேட்டியும், வெள்ளை நேஷன லும் 'பரமாசுச்' சால்வையும் அணிந்து, பட்டை பட்டை யாக நெற்றியில் விபூதி அணிந்து, புளியமிலை வடிவில் சந் தனப் பொட்டையும் அதன் நடுவில் வைத்துப் புன்னகை அரும்பிய முகத்தராய் அவர் காரை நோக்கிச் சென்ற தோற்றம், எவர் நெஞ்சையும் ஈர்க்கும்.

அவர் தேர்தற் காரியாலயத்தை அடைந்த சூட்டோடு சூடாக, மறுநாள் தம்மைவந்து சந்திக்குமாறு தியாக ராசனின் பாடசாலை விலாசத்திற்கு ஒரு கடிதம் வரைந்து அனுப்புகிறார்.

அந்தக் கடிதத்தை சுப்பிரமணியத்திடம் தபால்பெட்டி யில் இடுமாறு கொடுக்கிறார் அவர். அதைக் கொடுக்கும் பொழுது அவர் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியும் அவரின் பவ்வியமான தோற்றமும் சுப்பிரமணியத்திற்கே ஆச்சரி யத்தை விளைவிக்கின்றன.

## 20.

தியாகராசன் தேர்தற் காரியாலயத்துள் நுழைந்த பொழுது, அங்கு ஒரே கலகலப்பாய் இருந்தது. அங் கிருந்த வாங்குகளில் செம்மண் படிந்த வேட்டிகளுடனும் வைரித்த தேகங்களுடனும் சிலர் அமர்ந்திருந்தனர்.

அவர்களுடைய கண்கள் இரத்தம் போலச் சிவந்திருந் தன. அவர்கள் ஒவ்வொருவரும் சாராயப் போத்தல் ஒவ் வொன்றைத் தத்தம் பக்கங்களில் வைத்து, பெற்ற பிள்ளை யிலும் பெரும் பாசத்தோடு அதை அணைத்துக் கொண்

டிருந்தனர். தியாகராசனுக்கு அந்தக் காட்சியே அருவருப் பளித்தது.

தியாகராசனைக் கண்டதும் இராமலிங்கம் சிறிது திடுக் குற்றார். பின் சமாளித்துக் கொண்டவராய், வாங்குகளில் இருந்தவர்களைப் போய்வருமாறு ஜாடைகாட்டினார். அவர் கள் எழுந்து நடையைக்கட்டினார்கள். நடக்கும் பொழுது 'ஜதி' போட்ட கால்களைச் சரியாக நிறுத்துவது அவர் களுக்கு மிகவும் சிரமமாய் இருந்தது.

★

"வா தம்பி! வா!" என்று சொல்லித் தியாகராசனை வரவேற்றார் இராமலிங்கம். அவர்கள் இருவரையும் சேர்த்து இப்பொழுது அங்கே இருந்தவர் நாலே நாலு பேர்தாம். ஒரு பக்கத்தில் எப்பொழுதும் போல அடங்கி ஒடுங்கி இராமுப்பிள்ளை இருந்தார். இராமலிங்கத்திற்கு மிக நெருங்கி, இப்பொழுதுதான் கப்பலால் இறங்கிய வெள்ளைத் துரைபோல ஒருவர் இருந்தார். பெருத்த ஒரு சதைக்கோளத்தை அமர்த்திவிட்டது போல் நாற்காலியே பொலிவடையும் வகையில் அமர்ந்திருந்தார் அவர். தியாக ராசன் "யார் இவர்?" என்று தனக்குள் கேட்டுக்கொண் டான். ஆனால் விடைதான் கிடைக்கவில்லை. சிந்தித்தபடியே அவன் இராமலிங்கம் காட்டிய நாற்காலியில் அமர்ந்தான். அந்தப் புதியவரை எங்கேயோ, எப்பொழுதோ கண்ட ஞாபகம் அவனுக்கு.

இராமலிங்கம் மேலும் சிந்திக்க வேண்டிய சிரமத்தைத் தியாகராசனுக்கு வைக்கவில்லை. "இந்த ஐயா யார் என்று தெரியுமே? இவர்தான் பாரிஸ்டர் மூர்த்தி. என்னை எலெக்‌ஷனுக்குப் பொறுப்பாளர் இவர்தான்" என்று கூறினார். அதே கையோடு "இவர் என்னை பள்ளிக்கூடம் ஒன்றிலே வாத்தியார் வேலை பார்க்கிறார்" என்று தியாக ராசனை பாரிஸ்டர் மூர்த்திக்கு அறிமுகம் செய்துவைத்

தார். தியாகராசனும், பரிஸ்டர் மூர்த்தியும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டதற்கு அறிகுறியாகச் சிரித்தனர்.

தியாகராசன் முன் அன்றொருநாள் பட்டினத்தில் நடந்த விஷயம் ஞாபகம் வந்தது. புடைவைக் கடை ஒன்றின் முன்னால் நடந்த சம்பவம் அது. கார் ஒன்றிலிருந்து இறங்கி ஒரு சிறுபிள்ளை தெருவின் குறுக்கால் வருகிறது. இளைஞன் ஒருவன் எதிர்த்திசையில் சைக்கிளில் வருகிறான். பிள்ளையோ அங்கும் போகாமல் இங்கும் போகாமல் கிளித்தட்டு மறிக்கிறது. இளைஞன் சைக்கிள் பிரேக்கைப் போடுகிறான். சைக்கிள் கிறீச் என்ற ஒலியுடன் பிள்ளையை உரசிக்கொண்டு நிற்கிறது.

ஆவேசம் கொண்ட தந்தை உள்ளேயிருந்து ஓடிவருகிறார். பிள்ளை அழுதுகொண்டு நிற்கிறது. அதிர்ச்சிதான் அதற்குக் காரணம். ஆனால் அதையெல்லாம் பார்க்கிறாரா அவர்? இளைஞனை நடு வீதியில் இழுத்து வீழ்த்திக் கை அலுக்குமட்டும் அறைகிறார். அவருடைய வாயோ பேசத் தகாத பல கேவலமான வார்த்தைகளை உதிர்க்கிறது.

சிறிது நேரத்தில் கடைகளில் இருந்தவர்கள் வந்து இருவரையும் விலக்கிவிடுகின்றனர். இளைஞன் வீங்கிப் போன முகத்துடன் தலை குனிந்தபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு உருட்டிச் செல்கிறான். நோவிலும் பார்க்க வேதனையும், அவமானமுமே அவன் முகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அவனை அடித்த 'பெரியாரும்,' தம் மனைவியாருடனும், பிள்ளையுடனும் காரில் ஏறிச் செல்கிறார். காரை அவர் ஸ்டாட் பண்ணிய வேகத்தில் குறுக்கே வந்த நாயொன்றின் கால் கார் சில்லுள் அகப்பட்டு நெரிகிறது. அது 'வாள்' என்று சத்தமிட்டு நொண்டிக்கொண்டு ஓடி மறைகிறது. பின் அங்கு நின்றவர்கள் அந்தப் பெரியவர் தாம் 'பாரிஸ்டர் மூர்த்தி' என்று பேசிக்கொள்கிறார்கள். அவருடைய முரட்டுத்தன்மை. வேலைக்காரரை நாய்கள்

போல் நடத்தும் சுபாவம் என்பவற்றைப் பற்றி விளாசித் தள்ளுகிறார்கள்.

''ஓ! அந்த பரிஸ்டர் மூர்த்தியா இவர்?'' தியாகராசனுக்கு விளங்கிவிட்டது. பேயோடு ஒரே அறையில் இருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுவதை அவனால் தடுக்கக்கூட முடியவில்லை.

ஒரு சில கணத்துக்குள் தியாகராசன் இத்தனையும் சிந்தித்து முடித்துவிட்டான். அவன் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டவன் போல நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய உறுதி அவன் முகத்தில் முத்திரையிடப்பட்டிருந்தது.

ஆனால் இராமலிங்கத்திற்கு அது விளங்கக் காரணமில்லை. அவர் பேச்சைத் தொடங்கினார்.

''தம்பி! நான் இம்முறை எலக்ஸனுக்கு நிற்கிறன் என்பது தெரியுந்தானே?''

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான் தியாகராசன். இராமலிங்கம் தொடர்ந்தார். ''நீ எனக்கு ஒரு உதவிசெய்ய வேணும். அது ஒண்டும் அப்படிக் கஷ்டமான விஷயமில்லை. விஷயம் இதுதான். நான் சில தேர்தற் கூட்டங்கள் வைக்கப் போறன். அதிலை நீ என்னை ஆதரித்துப் பேசவேணும். நீ கூட்டத்திற்கு வந்து கூட்டம் முடிஞ்சதும் திரும்பிப் போக என்ரை காரை விடுவன். நீதான் பெரிய பேச்சாளியாச்சே! என்ன சொல்லுறாய்?''

தியாகராசன் ஒன்றும் கூறவில்லை. அவன் மௌனமாய் இருந்தான். இராமுப்பிள்ளை வாத்தியார் இராமலிங்கத்தைத் தொடர்ந்து தியாகராசனைப் பசையடிக்கத் தொடங்கினார். ''என்ன தம்பி யோசிக்கிறாய்? ஐயா, உன்னை மதிச்சு, உனக்குக் காயிதம் எழுதிக் கூப்பிட்டிருக்கிறார். தயங்காமல் ''ஓம்'' எண்டு சொல்லு. இந்த நாளைப் பொடியளெல்லாம் மேடையிலே பேச எங்கே சந்தர்ப்பம் கிடைக்குமெண்டு மோப்பம் பிடிச்சுத் திரியி

ருங்கள். உன்னையோ சந்தர்ப்பம் தேடிவருது. விட்டு டாதை'' என்ற அவர்வார்த்தைகள் தியாகராசனின் உதட்டிடுக்கில் ஓர் ஏளன நகையை வருவித்தன.

''எனக்கு அரசியல் கூட்டமென்றாலே பிடிக்கிறதில்லை. அதோடை இது 'எலக்‌ஷன்' கூட்டம். உங்கள் கொள்கை என்னவென்றும் எனக்குத் தெரியாது. தேர்தல் என்றாலே அது ஒரு சூதாட்டம் என்று நம்புகிறவன் நான். தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று தியாகராசன் நிதானமாக இராமலிங்கத்தைப் பார்த்துப் பதிலிறுத்தான். இராமலிங்கத்தின் முகம் கூம்பியது. இராமுப் பிள்ளை முகத்தைச் சுழித்தார்.

''பொலிஸியைப் பற்றி நீர் ஏன் வொறி பண்ணுறீர்? இவரோ உம் பள்ளிக்கூட மனேஜர். இவருடைய பொலிஸி தான் உம் பொலிஸியாய் இருக்கட்டுமே? இதிலே என்ன நட்டம் வந்திட்டுது?'' என்று ஏதோ ஹாஸ்யத் துணுக்கை உதிர்ப்பவர் போலக் குலுங்கக் குலுங்க நகைத்தபடி பரிஸ்டர் மூர்த்தி கூறினார். ஆங்கிலக் கன்னியின் தாசர் அவர். எதைப் பேசினாலும் ஆங்கிலம் கலந்து மணிப்பிரவாளமாய்ப் பேசிப் பேசியே பழக்கம் அவருக்கு.

தியாகராசனது பொறுமையின் மீது விழுந்த சம்மட்டி அடிகளாய், பரிஸ்டரின் வார்த்தைகள் அமைந்துவிட்டன. ''தங்களை எதிர்த்துப் பேச நேர்ந்ததற்கு மன்னியுங்கள். இவர் என் பாடசாலை மனேஜர்தான். நான் இவரின் கீழ் வேலை செய்யும் ஆசிரியர் என்பதும் உண்மையே. ஆனால் நான் ஒன்றும் இவருக்கு அடிமைச் சீட்டு எழுதிக்கொடுக்கவில்லையே. இவருடைய கொள்கை தான் என் கொள்கையாய் இருந்தால் என்ன? என்கிறீர்கள். அதிலிருந்தே உங்கள் கொள்கையின் சிறப்பு நன்கு புலனாகிறது. நான் ஒரு சந்தர்ப்பவாதி என்று நினைத்திருந்தால் தயவு செய்து உங்கள் கருத்தை மாற்றிக் கொள்

ளுங்கள்'' என்று உணர்ச்சிப் பரவசத்தில் பேசிச் சென்றவன் இராமலிங்கத்தை நோக்கினுன். கொவ்வைப் பழமாய்ச் சிவந்து, பிதுங்கி வெளியே வந்துவிடுமோ என்ற நிலையில் காட்சி தந்த அவர் விழிகள் பயத்திற்குப் பதில் சிரிப்பையே வரவழைத்தன அவனுக்கு. ''ஐயா! கொள்கையின் பலி பீடத்தில் ஏறி நின்று உங்களுக்கு உதவி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன். நான் வருகிறேன்.''

தியாகராசன் ஆசனத்திலிருந்து எழுந்தான். 'டே தியாகராசா! உன்னைச் சிப்பிலி ஆட்ட எனக்குத் தெரியும். எண்டாலும் மரியாதையாகக் கேட்கிறேன். எனக்கு எலெக்ஷனில் உதவப் போறியா? இல்லையா' என்றுபயங்கரமான தம் அடிக்குரலிலிருந்து இராமலிங்கம் வார்த்தைகளை உதித்தார்.

படித்தவர், சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர் என்ற போர்வைகளையெல்லாம் களைந்துவிட்டுத் தம் சுய ரூபத்தில் அவர் காட்சி தந்தார்.

''வெருட்டுகிறீர்களா?'' தியாகராசன் அலட்சியமாகச் சிரித்தான். ''எனது இருபத்திரண்டு வயது அனுபவத்தில் யாருடைய வெருட்டுக்கும் நான் பயந்ததில்லை. இன்றைக்கு பயப்படுவேன் என்று நினைத்தால் உங்களுக்கு ஏமாற்றந்தான்'' என்று அவன் அமைதியாகச் சொன்னுன். தொடர்ந்து நிதானமாக அறைக் கதவை நோக்கி நடந்தான்.

''போ! போ! உன்னை எப்படிக் கவனிக்கிறதெண்டு எனக்குத் தெரியும்'' என்ற இராமலிங்கத்தின் சொற்கள் தியாகராசனைத் தொடர்ந்து செல்லும் வலுவின்றி அந்தக் காரியாலய அறைக்குள்ளேயே கூர் மழுங்கி வீழ்ந்தன.

''என்றாலும் நீங்கள் இவனுக்கு இவ்வளவு இடம் கொடுத்திருக்கக் கூடாது. பார்க்கப்போனுல் ஒரு சாதாரணமான தமிழ் ஆசிரியர். அவன் வாய்க்கொழுப்பைப் பார்த்தீர்களா? இவனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். என்ன சொல்கிறீர் இராமுப்பிள்ளை?'' என்ற பொருள்

பட ஆங்கிலத்தில் பேசிவிட்டு பரிஸ்டர் மூர்த்தி இறுதியாக இராமுப்பிள்ளையைப் பார்த்தார்.

★

தம்மைப் பார்த்ததாலும் இராமுப்பிள்ளை என்று சொன்னதாலும் ஏதோ விளங்கிக்கொண்டவர் போல அசடுவழியச் சிரித்தபடி "யேஸ் சேர்!" என்றுர் இராமுப் பிள்ளை. அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று பரிஸ்டர் மூர்த்திக்குத் தெரியாது.

இராமுப் பிள்ளைக்கு, 'பரிஸ்டர்' தமிழ் ஆசிரியர் பற்றி வெளியிட்ட அபிப்பிராயம் விளங்கியிருந்தால்...? உம் அவருக்கு விளங்கியும் ஒன்றுதான். விளங்காமலும் ஒன்று தான். அவருடைய முதுகெலும்புதான் என்றோ 'அப்பர் கல்வித் திருச்சபைக்கு' அடகு வைக்கப்பட்டு விட்டதே. அவர் ஓய்வு பெறும்போது சிலவேளைகளில் அதை மீட்டுக் கொள்ளவும் கூடும்.

எழுந்து மெதுவாய் நடந்து யன்னல் பக்கம் சென்று யன்னல் ஊடாக வெளியுலகை நோக்கினுர் இராமலிங்கம். 'மைம்மல்' பொழுது. வானவெளியில் கரைந்துகொண்டு பறந்த காகக் கூட்டம் கூடத் தம்மையே பரிகசித்துக் கரைவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவருக்கு. "இவனை ஒரு கை பார்க்கத்தான் வேணும்" என்று அவர் முணு முணுத்தார்.

அவமானத்தின் 'பளு' அவர் நெஞ்சை மிகப் பலமாக அழுத்திக்கொண்டிருந்தது.

# 21.

தணிகாசலம் முற்றிலும் மாறிவிட்ட ஒரு மனிதனாய் பதுளையை அடைந்தான். அவனுடைய கலகலப்பான சுபாவம் மறைந்துவிட்டது. எவ்வளவுதான் அவன் சிரித்துப் பேச முயன்றாலும், அவன் நெஞ்சம் அவனுடைய கண்களின் வழியாக எட்டிப்பார்த்துக் கொண்டுதான் இருந்தது.

‘‘முற்றிலும் தனிமையிலே விடப்பட்ட, ஓர் அனாதை தான் நான்’’ என்று அவனால் நினையாது இருக்ககூடவில்லை.

அவன் தங்கியிருந்த விடுதியில் அவனோடு பல ஆசிரியர்களும் இருந்தார்கள். எல்லோரையுமே தன் கரிசனையாலும் வேடிக்கைப் பேச்சுக்களாலும் காந்தம் போல இழுத்து வைத்திருந்தவன் அவன். ஆனால் இன்றோ தனிமையை நாடுபவனும் யாருடனும் முகம் கொடுத்துப் பேசாதவனுமாகிய முற்றிலும் புதிய ஒரு தணிகாசலத்தைக் கண்டு அவர்கள் வியப்படைந்தார்கள். அவனைக் கேள்விகள் போட்டுத் துளைத்தார்கள். முன்போல அவன் கலகலப்பாய் இருக்க என்னவெல்லாமோ முயன்று பார்த்தார்கள். தோல்விதான் கண்ட பயன்.

என்றாலும், தணிகாசலம் தன் கடமையில் தவறவில்லை. கல்லூரிக்கு ஒழுங்காகச் சென்றான். ஒழுங்காகப் பாடங்களைக் கற்பித்தான். ஆனால் அவன் வகுப்புகளில் முன்பு இருந்த மகிழ்ச்சிக்களை எங்கோ மறைந்து விட்டது. ‘பிரம்பின்’ துணையை நாடாது தனது அன்பாலும், நகைச்சுவையாலும் மாணவருக்குப் பாடங்களை நன் முறையில் கற்பித்தவன் அவன். அதிபர்கூட நல்ல முறையில் நடக்கும் பாடங்களுக்குத் தணிகாசலத்தின் படிப்பித்தலையே உதாரணம் காட்டுவது வழக்கம். அவன் கல்வி கற்பித்த

வகுப்பறைகளில் மகிழ்ச்சி அலைகள் மிதந்துகொண்டிருக்கும். மாணவர் அவனை நேசித்தனர். தம் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் கூறினர். அவனைத் தம் ஆசிரியராக மட்டுமன்றித் தம் வழிகாட்டியாயும், தம் உற்ற நண்பனுயும் அவர்கள் கொண்டிருந்தனர்.

ஆனல் இன்றோ நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. தணிகாசலத்தால் முன் போல் மகிழ்ச்சி குலாவுகின்ற முகத்தோடு வகுப்புகளுக்குச் செல்லக்கூடவில்லை. சில சந்தர்ப்பங்களில் அவன் மாணவர்மேல் எரிந்தும் விழுந்தான். பிரம்பை நாடும் நிலையும் ஏற்பட்டது. மாணவருக்கு இது பெரிய அதிர்ச்சி.

பிற்பகல் பாடசாலைவிட்டதும் தனது அறைக்கு நேராகச் சென்றுவிடுவான் அவன். முன்பென்ருல் கரப்பந்தாட்டத்திலேயே பின்னேரம் முழுவதும் கழியும். இப்பொழுதோ எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாய் மனிதக் கும்பலை நீங்கித் தனிமையில் இருக்கவேண்டும் என்று அவன் விரும்பினுன்.

★

கல்லூரிக்கு அணிந்து சென்ற உடைகளைக் களைந்துவிட்டு, 'சாரம்' அணிந்தபடி தன் அறையிலுள்ள யன்னலின் அருகில் அவன் அமர்ந்துகொள்வான். அவன் கையில் பெயருக்கு ஒரு புத்தகம் இருக்கும். ஆனல் அவன் சிந்தனையோ யன்னலினூடாகப் போய், துல்லிய நீலவானில் பறந்து பொன்னுலையை அடைந்துவிடும்.

அங்கு புவனேஸ்வரியுடனும், தியாகராசனுடனும் அவன் அன்பாகப் பேசுவான். சண்டை பிடிப்பான். நம்பிக்கை பறிபோன துன்பம் நெஞ்சில் கவிந்திடப் பழையபடி பதுளைக்குத் திரும்பி வருவான். இவ்வாறு புரையோடிவிட்ட புண்ணைச் சுரண்டுவது போல, தன் நெஞ்சையும் அடிக்கடி வேதனைக்குள் ஆழ்த்திக் கொண்டிருந்தான் அவன்.

அன்று 'தேவதாஸ்' படம் மொடர்ன் தியேட்டரில் ஓடியது. ஆசிரியர்கள் பலர் அவனையும் வருமாறு அழைத்தனர். அவன் மறுத்துவிட்டான். விடுதியிலிருந்த எல்லோருமே கேட்டுப்பார்த்து அலுத்துவிட்டனர். தணிகாசலத்தின் பிடிவாதமே வென்றது.

★

அன்றிரவு ஆசிரியர்கள் அனைவரும் படம்பார்த்துத் திரும்பியதும் 'தேவதாஸ்' பற்றியே பேசினர். அதன் சிறப்பிற்காக மேலும் பல தடவைகள் அதைப் பார்க்கவேண்டுமென்ற தங்கள் கருத்தையும் வெளியிட்டனர்.

அதன் பின்னர்தான் தணிகாசலத்திற்கும் 'தேவதாஸ்' பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அடுத்தநாள் தனியனாக அவன் அந்தப் படத்திற்குப் போனான். காசைக் கொடுத்து பேயைக் கொண்டதுபோலாயிற்று. காதலில் தோற்றுவிட்ட தேவதாஸ் குடியைச் சரணடைவதும், பார்வதி ஏக்கமும் வேதனையும் கொண்டு சோகத்தின் சின்னமாய்த் திரிவதும் அவன் நெஞ்சில் குருதியை வருவித்தன. சிறிது நேரத்தில் பார்வதி மறைந்து, அவ்விடத்தில் புவனேஸ்வரியும், தேவதாஸ் மறைந்து அவ்விடத்தில் தானும் தோன்றுவது போல இருந்தது அவனுக்கு.

தணிகாசலம் "உறவுமில்லை, பகையுமில்லை, ஒன்றுமேயில்லை" என்று பாடினான். புவனேஸ்வரிக்குக் குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்ய முடியாது. அவள் அறையை விட்டு நகர்ந்ததும் அறைக் கதவில் தன் தலையை முட்டிக்கொண்டு 'புவனம் புவனம்' என்று புலம்பினான். "இறப்பதற்கு முன் புவனேஸ்வரியைச் சந்திப்பேன்" என்று உறுதியளித்து அந்தக் காக்கச் சாகும் நிலையில் புவனேஸ்வரியைத் தேடிக்கொண்டு புகை வண்டியில் சென்றான். அவளுடைய வீட்டு வாயிலிலே தணிகாசலம் தன் உயிரைவிட்டான். அதன்பின்...? அதன்பின் என்ன...? செத்ததன் பின் நடப்பது பற்றி அவனுக்கு என்ன தெரியும்?

தணிகாசலம் என்ற நடைப் பிணம் படம் முடிந்து எழுந்தது. நேரே 'பார்' ஒன்றுக்குச் சென்றது. மூக்கு முட்டக் குடித்துவிட்டுத் தள்ளாடியபடி தன் விடுதியை அடைந்தது.

★

''தணிகாசலம்! உனக்கு நான் புத்திமதி சொல்லும்நிலை வந்ததே என்றுதான் வருந்துகிறேன். ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும்போதே கள்ளுக்கொட்டில்களைத் தேடிச் சென்றவன் நான். ஆனால் நீயோ தூய்மையானவன். அந்தத் தூய்மையான நிலையிலேயே உன்னைக் காணவிரும்புகிறேன். ரோஜாப்பூவை அதன் வாழிடமாகிய செடியிலேயே வைத்துப் பார்க்க விரும்புகிறேன். மண்ணில் போட்டுக் கசங்கிய நிலையில் அல்ல'' என்று கந்தையா தணிகாசலத்தைப் பார்த்துச் சொன்னான். அவன் பண்டாரவளைக்கு வந்ததன்பின் இப்பொழுதுதான் தணிகாசலத்திடம் முதன் முதல் வந்திருக்கிறான். எத்தகைய அதிர்ச்சி அவனுக்கு! தணிகாசலமா இவன்? குடித்துக் குடித்து இரத்தச் சிவப்பேறிய விழிகள். உணவில் அக்கறைகொள்ளாததால் மெலிந்த உருவம்; ஒழுங்கற்று அலையும் தலைமயிர்! சீ! நினைக்கவே கூசினான் கந்தையா.

தணிகாசலம் சுருள்சுருளாக சிகரட் புகையைவிட்டு அதை இரசித்த வண்ணம் இருந்தான். அவன் ஒன்றும் பேசவில்லை.

கந்தையா தொடர்ந்தான். ''தணிகாசலம் உன் குடும்ப நிலையைக் கொஞ்சமாவது யோசித்தாயா? உன்னையே நம்பியிருக்கும் உன் பெற்றோர், சகோதரர்களின் நல்வாழ்வு பற்றி ஒரு சிறிதாவது யோசித்தாயா? நீ எடுக்கும் நூற்றி ஐம்பது ரூபாயில் இப்படிக் குடிக்கக் கட்டுமா? சிகரட்டிலேயே முப்பது ரூபாய் மாதம் மாதம் போய்விடும் போல இருக்கிறதே?''

தணிகாசலம் சிரித்தான். ''கந்தையா! குடும்பத்திற்காகவும், என்னைச் சேர்ந்தவர்க்காகவும் வாழும் நிலையில் இல்லை நான். என் நெஞ்சில் எரிந்து கொண்டிருக்கும் எரிமலை இருக்கிறதே, அதை வெறுந் தண்ணீரால் அணைத்துவிட முடியாது'' என்று மிகுந்த வேதனையோடு அவன் பதிலிறுத்தான்.

''எரிமலை என்கிறாய். ஆனால் அது எப்படிக் கிளம்பியது என்று சொல்ல மறுக்கிறாய். பரவாயில்லை. எனக்கு அது தெரியவும் வேண்டாம். ஆனால் நீ கவலைப்படுகிறாய் என்பது எனக்குத் தெரிகிறது. அது போதும். அதைப் போக்க வேண்டியது என் கடமை''

''தணிகாசலம் என் அனுபவத்தில் சொல்கிறேன். குடிப்பதனாலோ, புகைப்பதனாலோ, உன் துன்பம் அகன்றுவிடுமென்று நினைக்காதே. நெருப்பை அணைக்கும் 'நீர்' என்று நீ எதை நினைக்கிறாயோ, அதுவே பெற்றோலாக அமைந்துவிட்டால்...? தணிகாசலம் அந்த நிலையை உன்னால் தாங்க முடியாதல்லவா?''

தணிகாசலத்திற்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. தன் தோல்வியை ஒப்புக்கொள்ளவும். மனம் இடம் கொடுக்கவில்லை'' பெற்றோலோ என்னவோ? எரிகிறவரை எரிந்து சாம்பலாகட்டும். அக்கறையில்லை. இனித் தயவு செய்து அதைப் பற்றிப் பேசாதே'' என்று வெட்டொன்று துண்டு இரண்டாக அவன் கூறினான்.

''சரி! அது போகட்டும்; வீட்டுக்குப் பணம் அனுப்பினையா?'' என்று கந்தையா இப்பொழுது வேறு வகையில் அவனை வளைத்துப் பிடிக்க முயன்றான். அது ஓர் அளவு வெற்றியை அளித்தது.

தணிகாசலத்தின் முகம் சுருங்கியது. நடுக்கடலில் அகப்பட்டுத் தத்தளிப்பது போல அவன் நெஞ்சு சங்கடப்பட்டது.

''வீட்டிற்குக் கடிதமே எழுதுவதில்லை. பணம் அனுப்புவது பற்றிக் கேட்கிறுயே? அனுப்ப இங்கு என்ன பணம் கொட்டியாகிடக்கிறது. எனக்கே போதாமல் இருக்கும் போது அவர்களுக்கு எப்படி அனுப்புவது?'' என்று அலட்சியமாகக் கூறினுன் அவன். கந்தையாவிற்கு அவன் உள்ள நிலை நன்கு விளங்கியது.

அலட்சியமாகக் கூற முயன்ற அவன் முயற்சி. வேதனையாய் வடிவெடுத்து வெளிவந்ததைக் கந்தையா போன்ற பழுத்த அனுபவசாலியால்தான் உணர முடியும்.

இந்தச் சமயத்தில் அறைக் கதவை யாரோ தட்டினுர்கள். தொடர்ந்து 'சேர்' என்று அழைப்பதும் கேட்டது. கந்தையா கதவைத் திறந்தான். தணிகாசலத்தின் மாணவன் ஒருவன்தான் அங்கு வந்தவன். அவன், 'உங்களுக்கு ஒரு தந்தி கல்லூரி விலாசத்திற்கு வந்தது சேர்! அதிபர் கொடுத்தார்' என்று சொல்லி அதைத் தணிகாசலத்திடம் கொடுத்தான்.

தணிகாசலம் பரபரப்போடு தந்தியைப் பிரித்தான்.

## 22.

''கடிதம் ஏன் எழுதவில்லை? சுகத்திற்குத் தந்தி.''

—இராமநாதர்.

என்று அடிக்கப்பட்டிருந்த தந்தியை வாசித்ததும், நிம்மதிப் பெருமூச்சு விட்டான் தணிகாசலம். ''அப்பாடா! நானும் என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன்'' என்று அவன் அமைதியாகக் கூறினுன்.

''சரி இப்பொழுது என்ன செய்யப் போகிறுய்?'' என்று கந்தையா கேட்டான். ''என்ன செய்வது? நாளைக்குத் [illegible]

தம் ஒன்று எழுதிப் போட்டால் முடிந்தது'' என்று நிதான மாகத் தணிகாசலம் பதில்கொடுத்தான்.

''மிகச் சுலபமாகச் சொல்லிவிட்டாய். உன் தந்தியை எதிர்பார்த்து, உன் பெற்ருேர் எவ்வளவு ஆவலாக இருப் பார்கள் என்று யோசித்துப் பார்த்தாயா? உம்! புறப்படு தபாற்கந்தோருக்குப் போவோம்'' என்று கந்தையா துரிதப்படுத்தினுன். தணிகாசலம் எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். கந்தையா கேட்கவில்லை. தணிகாசலம் அரை மனத்துடன் புறப்பட்டான்.

இருவரும் தபாற் கந்தோர் சென்ருர்கள். கந்தையா தான் தந்தியை எழுதினுன்.

''சுகம், பயப்பட வேண்டாம். இத்துடன் பணம் ரூபா ஐம்பது வருகிறது.''

—தணிகாசலம்

என்று தந்தி வாசகங்கள் அமைந்தன. தணிகாசலத்திற் குக் கோபம் கோபமாய் வந்தது.

அவன் கந்தையாவை முறைத்தான். கந்தையாவோ அவனைப் பாராதவன் போலத் தன் சட்டைப்பையிலிருந்து ஐம்பது ரூபாவை எடுத்து அத்துடன் மேலும் இரண்டு ரூபாவைக் கவுண்டரிலிருந்த இலிகிதரிடம் கொடுத்தான். தணிகாசலத்தைப் பேசமுடியாத மௌனமும், மலைப்பும் ஆட்கொண்டன.

சிறிது நேரத்தில் தந்தி ரசீதையும், மிகுதிப் பணத் தையும் வாங்கிக்கொண்டு இருவரும் வெளியே வந்தனர். அதுவரை பொறுத்திருந்த தணிகாசலம் பொரிந்து தள் ளத் தொடங்கினுன். ''கந்தையா நீ ஒரு முட்டாள். என் பொருளாதார நிலை உனக்குத் தெரிந்ததுதானே? நீ அனுப் பிய இந்த ஐம்பது ரூபாயை நான் எப்பொழுதாவது திருப்பித் தருவேனே? என்பது சந்தேகந்தான்.''

கந்தையா சிரித்தான். "தணிகாசலம்! நான் நண்பரைப் பணத்தைக்கொண்டு கணிப்பதில்லை. பணம் சிலருக்குச் சர்வ சக்திவாய்ந்த தெய்வமாகக் காட்சியளிக்கலாம். ஆனால் எனக்கோ அவை வெறும் கடதாசிகள். அவற்றிற்கு உயிரில்லை; உணர்ச்சியில்லை; பாசமில்லை; அவற்றால் எங்கள் தேவைகளை நிவர்த்தி செய்யலாம்? அவ்வளவே! ஆனால் ஒரு இருதயத்தின் நோவை நிச்சயம் போக்க முடியாது" என்று அவன் வேதாந்தம் பேசினான்.

அவனுடைய வார்த்தைகளை தணிகாசலம் இரசிக்கவில்லை என்பது, தணிகாசலத்தின் முகக் குறிப்பில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அவன் பேசவில்லை. விடுதிக்குத் திரும்பி வரும் வரை கந்தையாவும் பேசவில்லை. "தன் செயல் மூலம் தணிகாசலத்தின் தன்மானத்திற்கு ஊறு ஏற்பட்டிருக்குமோ?" என்ற எண்ணம் அவனை மௌனியாக்கியிருந்தது.

அன்று இரவு கந்தையா பண்டாரவளை போகவேண்டும் என்று இருந்த பிரயாணமும் தடைப்பட்டது. தணிகாசலத்திற்கு இருந்த மனோநிலையில் அவனைத் தனியே விட்டுச் செல்வது சரியல்ல என்று கந்தையா நினைத்ததே அதற்குக் காரணம்.

ஆனால் தணிகாசலமோ தனிமையைத்தான் விரும்பினான். கந்தையாவின் முகத்தில் விழிக்கவே கூச்சமாயிருந்தது அவனுக்கு. எத்தனையோ சாக்குப்போக்குகளைச் சொல்லி கந்தையாவைக் கடத்திவிட அவன் முயன்றான். ஆனால் அவன் முயற்சி வெற்றிபெறவில்லை.

எந்த வழியிலும் தணிகாசலத்திற்கு உதவியாயிருந்து அவன் மனத்திற்கு அமைதியை ஏற்படுத்தவேண்டுமென்ற கந்தையாவின் கருத்திற்கு முன் அவன் முயற்சிகள் அனைத்தும் சுக்குநூறாய் நொறுங்கின.

கந்தையா அன்றிரவு தணிகாசலத்தோடு தங்கினான்.

★

தணிகாசலம் இரவின் இருளிலே ஐக்கியமாகியபடி, எண்ணாததெல்லாம் எண்ணினான். இந்த நிமிஷம் அவன் நினைவில் ஓடிக்கொண்டிருந்தவர்கள் புவனேஸ்வரியோ, தியாகராசனோ அல்ல!

தன் பக்கலில் படுத்தபடி அமைதியாக நித்திரை செய்யும் கந்தையா பற்றியே அவன் எண்ணிக்கொண்டிருந்தான்.

"காவாலி என்றும், குடிகாரன் என்றும், சோம்பேறி என்றும் பெயரெடுத்திருந்தவன் இந்தக் கந்தையா. ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் எந்த நேரமும் குறும்பும், கூத்துமே தொழிலாகக் கொண்டிருந்தவன் கந்தையா. வீடு வாசலின்றி, பகலிரவென்று பாராது நாய்போல் அலைந்து திரிந்தவன் இவன். இவனை அறிந்த நாளிலிருந்து இன்று வரை இவனைப் பற்றி எந்தவித நல்லபிப்பிராயமும் எனக்கு இருந்ததில்லை. ஆனால் உண்மையில் இவ்வளவு பரந்த இருதயமும், இரக்க சுபாவமும் உள்ளவனா இவன்? நான் 'போ போ' என்று கலைத்தும்கூட எனக்கு நிம்மதி தரவேண்டும் என்று என் பின்னால் சுற்றிக்கொண்டிருந்தானே? இவனா காவாலி? இவனா சமூகத்திற்கு உதவாதவன்?"

தணிகாசலத்தின் சிந்தையிலே கந்தையாவின் நற்குணங்கள் அனைத்தும் விசுவரூபம் எடுத்துநின்றன. மெதுவாக எழுந்து, கந்தையாவின் பாதத்தைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

★

மறுநாள் பிற்பகல் மூன்று மணிவரை மூட்டம்போட்ட வானம் போலத் துன்பம் கௌவியிருந்த தணிகாசலத்தின் முகத்தில், அதன்பின் மகிழ்ச்சி என்ற வெண்முகில்கள் படியத்தொடங்கின. அவன் உள்ளமும், சிந்தையும் நிர்மலமாய் இருந்தன. வள்ளிப்பிள்ளையின் கடிதம் கிடைத்ததே அதற்குக் காரணம். அக்கடிதத்தின் வாக்கியங்கள்

இருட்படலத்திலிருந்து அவனைப் பிரித்து வந்து ஒளிவெள் ளத்திடையே நீந்தச் செய்தன!

நண்பனின் முகத்தில் படிந்திருந்த மகிழ்ச்சியின் அள வைக் கண்டு கந்தையாவின் உள்ளத்திற்கு நிம்மதி ஏற்பட் டது. "கந்தையா! இனி நான் எதற்கும் வீணுக மனதை அலட்டிக்கொள்ள மாட்டேன். என் முன் நம்பிக்கை என்ற சுடர்விளக்கு ஏற்றப்பட்டுவிட்டது" என்று தணிகாசலம் கூறியதைப் பற்றிக்கூட அவன் அக்கறைப் படுத்தவில்லை. அவன் முன் யாரும் முகத்தைச் சுழித்தபடி இருக்கக் கூடாது. ஏக்கப் பெருமூச்சு விடக்கூடாது. அப்படி வருந்து பவர் தணிகாசலமாகக்கூட இருக்கவேண்டாம்! தெருவிற் செல்லும் ஒருவராய், அவன் தன் வாழ்க்கைப் பாதையில் என்றுமே காணுதவராய் இருந்தாலும்கூட அவர் கவலை யைப் போக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். அவன் வந்தவழி அப்படி!

"சரி! உன் மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டும் வா பாருக்குப் போவோம்" என்று தணிகாசலத்தை அவன் அழைத்தான். தணிகாசலம் மறுத்துக் கூறவில்லை. இரு வரும் பாருக்குப் போனுர்கள்.

அங்கு நிம்மதியான ஓர் இடத்தில் தனிமையின் அர வணைப்பில் இருவரும் அமந்தார்கள். கந்தையாதான் ஓட் டல் பையனைக் கூப்பிட்டு ஓடர் கொடுத்தான். "அரைப் போத்தல் சாராயம், ஒரு போத்தல் பியர், ஒரு கிளாஸ்."

மூன்றும் வந்தன. தணிகாசலத்தின் முகத்தில் ஒரு கேள்விக்குறி விழுந்தது, கந்தையா ஏன் ஒரு கிளாஸிற்கு மாத்திரம் ஓடர் கொடுத்தான். அவனுக்கு விளங்கவில்லை.

கந்தையா சிரித்தபடி சொன்னுன். "தணிகாசலம்! வாழ்க்கையிலே ஏதோ தோல்வி ஏற்பட்டுவிட்டது என்று மனம் முறிந்துபோய்க் குடிக்கத் தொடங்கினுய். தேவ தாஸ் படத்திற்குப் பிறகு குடியும் ஒரு நாகரிகமாகிவிட் டது. இல்லையா? அந்த நாகரிகக் குடிகாரர் கூட்டத்தில் ஒருவன் தான் நீ! நானே பரம்பரைக் குடிகாரன். என்

தந்தை ஒரு குடிகாரர். அவருடைய தந்தையும் ஒரு குடி-காரர் என்று கேள்வி. ஆகவே குடிப்பது என் பிறப்புரிமை. உனக்கோ கவலை ஒழிந்துவிட்டது. இனி நீ குடிக்க வேண்டியதில்லை, அதை மறந்துவிடு."

தந்தையார் பேசி முடித்ததும் குடிக்கத் தொடங்கினன் அவன். "மறந்துவிடு" என்று சொன்ன அன்புக்கட்டளையை மீறத் தணிகாசலத்தால் கூடவில்லை. அவன் மௌனமாகக் குடிக்கும் தந்தையாரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

தன்னில் களங்கத்தை ஏற்று, உலகிற்கு ஒளியைத் தரும் சந்திரனோடு தந்தையாரை ஒப்புநோக்கும் முயற்சியில் தணிகாசலத்தின் உள்ளம் ஈடுபட்டது.

## 23.

'மிஸ்டர் இராமலிங்கம்! 'எலெக்ஷனும்' ஒருவகையாய் முடிஞ்சுட்டுது. ஏதோ உம்முடைய 'பாட்லக்' தோற்றும் போயிட்டீர். இனி அதைப்பற்றி 'வொறி' பண்ணி என்ன பிரயோசனம்? விட்டுத்தள்ளும்" என்று பரிஸ்டர் மூர்த்தி சுடலை வேதாந்தம் பேசினார்.

"ஓம்! ஓம்! பரிஸ்டர் ஐயா, சொல்றதும் சரிதான். வீணாய் யோசிச்சு என்ன பிரயோசனம்?" என்று இராமுப்பிள்ளை உபாத்தியார் ஒத்தூதினார். இராமுப்பிள்ளை இப்பொழுது சாதாரண உபாத்தியார் அல்லர்; அவர் ஒரு தலைமை உபாத்தியாயர். தேர்தல் வந்து ஏதாவது பயன் ஏற்பட்டதென்றால் அது இராமுப்பிள்ளைக்குத்தான். இப்பொழுது அவரின் சம்பளத்தில் ஒரு கணிசமான தொகை உயர்ந்துவிட்டதல்லவா?

"நான் 'எலக்ஷனை'ப்பற்றி யோசிக்கேல்லை; ஏதோ என்ரை காசு நட்டம் போயிட்டுதே? வாத்திமார் தந்தாங்கள்! எலக்ஷனுக்கு நின்டன்; தோற்றுப்போட்டன்;

இதிலை ஒண்டும் எனக்கு வருத்தமில்லை. நேற்று முளைச்ச அந்தப் பயல் தியாகராசன் எனக்குப் பண்ணின சேட்டை! அதைத்தான் மறக்கேலாமல் 'இருக்கு'' என்று துக்கம் தொண்டையை அடைக்க, அடிக்குரலால் இராமலிங்கம் பேசினார். கோபமோ, வருத்தமோ அளவுக்குமீறினால் அவர் சாதாரண குரலால் பேசும் வழக்கம் இல்லை. தம் தொண்டையிலிருந்து சிங்கம் போலவும், கரடி போலவும் ஏதோவெல்லாம் அபூர்வ குரலை எழுப்புவார். இப்பொழுது அவருக்குத் துக்கம் அளவுமீறி இருந்தது. அதன் பிரதி பலிப்புத்தான் அந்த அடிக்குரல்!

''யேஸ்! யேஸ்! தியாகராசனை நாங்கள் கொஞ்ச நாளாய் மறந்துபோய் இருந்திட்டம். அவனுக்கு 'வீனியன்ராய்'' இருந்தீரெண்டால் எல்லா வாத்திமாரும் உம் தலையிலை ஏறிடுவாங்கள். அவனைச் சரியானபடி தண்டிக்க வேணும். உம்முடைய 'பவர்' இவ்வளவு எண்டு நீர் காட்ட வேணும்'' என்று பரிஸ்டர் கூறிவிட்டு, சிந்திப்பதற்கு அறிகுறியாய் நாற்காலியில் சிறிது அமர்ந்தார். அவருடைய பாரத்தைத் தாங்க இயலாததுபோல் நாற்காலி முனகிற்று!

''இந்தத் தியாகராசனுக்குத்தான் எவ்வளவு துணிவீக்கம். ஐயா! நீங்கள் முதலிலேயே இடம் கொடுத்திட்டியள் எண்டாலும் பரவாயில்லை. உவனை துலைக்கிறதுதானே பெரிய காரியம்?'' என்று இலிகிதர் செந்தில்நாதன் குரல்கொடுத்தார். அவர் ஏதோ, தியாகராசன்தான் தம் கையில் கிடைத்துவிட்டதுபோல ஒரு பென்சிலை 'சீவு சீவு' என்று சீவித் தள்ளிக்கொண்டிருந்தார்.

''என்னப்பா, செந்தில்! நீதான் இந்த விஷயங்களில் பழமும் திண்டு, கொட்டையும் போட்டவனெச்சே. இந்தத் தியாகனை மூட்டைப்பூச்சி போலை நசிக்க ஒரு வழியைச் சொல்லன்'' என்று செந்தில்நாதனைப் பார்த்து இராமலிங்கம் கேட்டார்.

அவர் மூளை குறள்கட்டியிருக்கும்போது, அதற்கு எண்ணெய்போல இருந்து உதவுபவர், இந்தச் செந்தில்நாதன் தான்.

செந்தில்நாதன் பென்சிலைச் சீவும் வேகம் கூடியது. அந்த வேகம் கூடக்கூட அவர் சிந்தனையின் வேகமும் கூடுவது வழக்கம். ஆம். அவர் சிந்தித்தார்! சிறிது நேரம் அந்தக் காரியாலய அறையில் நிசப்தம் நிலவியது. யாரும் வாய்திறக்கவில்லை.

''என் ஐயா! தியாகராசன்ரை கடமை புணர்ச்சி போதாதென்று, அவனிலை குற்றஞ்சாட்டி, சில மாதங்களுக்கு ஏதாவது தீவுப்பகுதிக்கு மாற்றலாக்கி அனுப்பினால் என்ன?'' என்று விரைவாகக் கேட்டார் இராமுப்பிள்ளை. மற்றவர்கள் சிந்தித்து ஒரு முடிவுகாணமுன் பேசி, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பாராட்டுதல்களைத் தாம் பெறவேண்டுமென்பது அவர் அவா!

''சும்மா கொஞ்சநேரம் இருங்காணும். மற்றவர்களை யோசிக்கவிடும்'' என்று இராமலிங்கம் அவரை அதட்டினார். இராமுப்பிள்ளை பெட்டிப் பாம்பாக அடங்கினார். மீண்டும் மௌனம் அந்த அறையை ஆக்கிரமித்தது.

இராமலிங்கம் பொறுமையையிழந்தார்; எதையும் ஆற, அமர யோசித்துச் செய்யும் சுபாவம் அவருக்கில்லை. நிதானமாகத் தம் சிந்தனையிலே மூழ்கிவிட்ட செந்தில்நாதனை பார்க்க அவருக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. ''என்னப்பா! உன்ரை யோசினைக்கு ஒரு முடிவு இல்லையே? இப்படி யோசிச்சுகொண்டே போனையெண்டால், தியாகன் பென்ஷன் எடுக்கிற காலத்திலைதான் உன்ரை திட்டம் வெளியாகும்'' என்று படபடத்தார் அவர்.

செந்தில்நாதன் அமைதியாகத் தன் சட்டையின் கீழ்ப்பக்கத்தில், சீவிய பென்சில் தூள்களை ஏந்திக்கொண்டு மிக மெதுவாக நடந்து சென்று அதைக் குப்பைக் கூடையுள் போட்டார். திரும்பிவந்து மேசையைப் பிடித்துக்கொண்டு நின்றார். அவர் கை மேசையைச்

சுரண்டியது. ''உவனைத் துலைக்கிறதா பெரிய காரியம்?'' என்றவருக்கு இப்பொழுதுதான் அந்தச் செயல் அப்படியொன்றும் சுலபமானதல்ல என்று விளங்கியது.

சிறிதுநேரம் இப்படியே நின்றதின்பின் அவர் திருவாய் மலர்ந்தருளியவை இவை:

''ஐயா! அவசரப்படாதைங்கோ. 'பதறுத காரியம் சிதறுது.' கொஞ்சம் பொறுங்கோ. தியாகராசனுக்கு, தான் தனது கடமையிலே தவறுவிட்டால் மற்றவர்களாலை தன்னை ஒண்டுஞ் செய்ய முடியாது எண்ட எண்ணம். அவனுடைய பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்மூலம் அவன்ரை கடமைகளிலை ஏதாவது தவறு கண்டுபிடிப்பம். பிறகுதான் இருக்கவே இருக்கு. ஆளை வேலையிலிருந்து நீக்கிறதெண்டாலும் நீக்கலாம். அல்லது எங்கையாவது காடு மேட்டுக்கு அனுப்பியும் வைக்கலாம்.''

இராமலிங்கம், செந்தில்நாதனுடைய ஆலோசனையை அங்கீகரிக்கவில்லை என்பதற்கு அறிகுறியாகத் தம் தலையைப் பக்கவாட்டில் பலமாக ஆட்டினார்.

''என்ன செந்தில்! நீ கூடச் சின்னப்பிள்ளை போலப் பேசுகிறாய்? சென்ற தவணையில் தியாகராசன் படிப்பித்த பள்ளிக்கூடத்திலை வருடாந்தப் பரிசோதனை நடந்தது தெரியுமல்லோ? அப்போ அவன்ரை திறமையையும், கடமை உணர்ச்சியையும் பகுதி வித்தியாதரிசிகரே புகழ்ந்து பேசினராம். அத்தோடை அவன்ரை தராதரப் பத்திரத்திலும் 'மிகுந்த திருப்தி' என்றும் எழுதினாராம். இந்த நிலையிலை அவனுடைய வேலையிலை பிழைபிடிப்பது எப்படி?'' என்று அவர் செந்தில்நாதனைக் கேட்டார்.

''ஓமோம்! இதுகளிலை நாம் மிச்சம் கெயர்புல்லாய் இருக்கவேணும். இப்பதான் இந்த வாத்திமாரும் 'றேட் யூனியனி'ல் (தொழிற்சங்கத்தில்) சேர்ந்திருக்கிறாங்களே! தியாகராசன் நினைத்தால் 'லீகல் அக்ஷன்' கூட உங்களிலை எடுக்கலாம்'' என்று பரிஸ்டர் மூர்த்தி, செந்திலைப் பார்த்துப் பயமுறுத்தும் பாணியில் கூறினார். அவருக்கு,

செந்தில்நாதன் வெறும் இலிகிதர் தானே என்ற எண்ணம்! அன்றியும் இராமலிங்கம் தன்னை விட்டுவிட்டு, செந்தில் நாதனிடம் புத்திமதி கேட்டதும், அவரைப் புகழ்ந்ததும் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. செந்தில்நாதனின் ஆலோசனையை, இராமலிங்கம் ஏற்காதிருக்கவேண்டும்; தம் யோசனையையே ஏற்று அவர் காரியமாற்றவேண்டும் என்ற ஓர் அசட்டு எண்ணமும் இருந்தது மூர்த்திக்கு. எனவேதான் சந்தர்ப்பம் கிடைத்தபோது, செந்தில்நாதனுக்கு அவர் பூச்சாண்டி காட்டினார்.

''இன்ஸ்பெக்டர்மார் அவனுக்குச் சாதகமெண்டால் கொஞ்சம் யோசிக்கவேண்டியதுதான்'' என்று தணிந்த குரலில் செந்தில்நாதன் கூறினார்.

''இந்தக்காலத்திலை வெறும் பொடியளைப் பிடிச்சு இன்ஸ்பெக்டராய் நியமிக்கிறாங்கள். அவன்களும் தங்களை விடப் பெரிய ஆட்கள் இல்லையெண்டு தலைவீங்கி நடக்கிறாங்கள். அனுபவசாலிகளான ஆசிரியர்களைக்கூடச் சிப்பிலி ஆட்டிப் போடுறாங்கள்'' என்று தமது ஆற்றாமையை வார்த்தைகளில் ஏற்றி வெளியிட்டார் இராமுப்பிள்ளை உபாத்தியார். பரிசோதகர் விஷயத்தில் நல்ல அனுபவசாலி அவர். ஆனால், இந்த ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் இருக்கிறதே, அது மிகப் புதியது அவருக்கு! அவர் தலைமை ஆசிரியர் பதவி ஏற்ற சூட்டோடு சூடாய் இந்த விஷயமும் நடந்துவிட்டது.

*

வருடாந்தப் பரிசோதனைக்கு வந்திருந்த வட்டார வித்தியாதரிசகர், இராமுப்பிள்ளையின் பள்ளிக்கூட வரவு டாப்புகளையும், மதிய போசன டாப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது, ஒரு பெரிய இரகசியம் புலனாயிற்று. வரவு டாப்பில் உள்ள தொகையிலும் இரண்டு மடங்காய் மதிய போசன டாப்பில் வரவு பதியப்பட்டிருந்தது. இராமுப்பிள்ளைதான் என்ன செய்வார்? முன்னிருந்த தலைமை ஆசிரியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றித்தானே அவரும்

அந்த வேலையைச் செய்தார். அரசாங்கம் அளிக்கும் பணத்தில் ஒரு பகுதியை மிச்சம் பிடித்துத் தம் செலவுகளுக்கு உபயோகித்தால் இந்த வித்தியாதரிசகருக்கு என்னவாம்? பைத்தியக்கார மனிதர்! தன் மகனுக்குச் சரியான அந்த இளைஞரிடமிருந்து அவர் கடுமையான எச்சரிக்கையை அல்லவா ஏற்க நேரிட்டது. நல்ல காலம்; எப்படியோ வேலைக்குப் பிழையேற்படாமல் தப்பிவிட்டார். அன்றில் இருந்து இளம் பரிசோதகரென்றால் சரியான வெறுப்பு அவருக்கு. அதன் பிரதிபலிப்புத்தான் அவர் உதிர்த்த பொன்மொழிகள்!

இராமுப்பிள்ளையின் பேச்சை ஒருவரும் சட்டைசெய்யவில்லை. அவர்கள் எண்ணமெல்லாம், "தியாகராசனைத் தொலைப்பது எங்ஙனம்?" என்பதிலேயே ஈடுபட்டிருந்தது. இறுதியாக பரிஸ்டர் மூர்த்தி ஒரு யோசனையை வெளியிட்டார். அதுவே உசிதமாகப்பட்டதால் இராமலிங்கம் அதை மறுபேச்சின்றி ஏற்றுக்கொண்டார். அன்றுவரை "பச்சைத் தண்ணிப் பரிஸ்டர்" என்று மூர்த்தியை நினைத்திருந்த செந்தில்நாதன்கூட, அவருடைய ஆலோசனையைக் கேட்டு, "இவரிலும் சரக்கிருக்கிறது" என்பதை வேண்டா வெறுப்போடு ஒத்துக்கொள்ள நேரிட்டது.

## 24.

பஸ்ஸில் இருந்து இறங்கித் தியாகராசன் பாடசாலைக்குச் செல்லும் வழியில், அவனுடைய மயிர்கள் குத்திட்டு நிற்கக்கூடிய பல புதுமைகளை அன்று அவன் காண நேரிட்டது. சொல்லமுடியாத திகைப்பையும், அதிர்ச்சியையும் அவன் அடைந்தான்.

அவன் நடந்து சென்ற தார்த் தெருவில் வெண்கட்டியால் ஆங்காங்கு பின்வருமாறு எழுதப்பட்டிருந்தன:

*தியாகராசன் — மங்கையர்க்கரசி காதல்!*
*புது வாத்தியாரின் லீலைகள்!*
*ஊருக்கு உபதேசம்—*
*விழுவதோ கூழ்ப்பானையில்!*
*வாத்தியாரே! உமது கலியாணம் எப்போது?*
*மங்கையர்க்கரசியா? ''மங்கி''க்கரசியா?*

தியாகராசனுக்கு அந்தத் தெருவே வெடித்து அத னிடையே தான் புதைந்துபோவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவனுடைய ஒவ்வோர் காலடியிலும் விநோத மான வாசகங்கள்! சில வாயால் உச்சரிக்கவே முடியாத ஆபாசக் களஞ்சியங்கள்!

அவன் வரும்வரையில் காத்துநின்றவர்கள்போலச் சில மாட்டுக்காரச் சிறுவர்கள், தெருவில் எழுதப்பெற்றிருந்த ''மங்கையின் மணாளனே, வருக!'' என்ற வாக்கியத்தைத் தப்பும் தவறுமாகப் படித்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அவன் கோபத்தோடு ஓடுகின்ற சிறுவர்களைப் பார்த்தான். அவர்கள் அவனுக்கு எட்டாத தொலைவில் போய்நின்று கொண்டு, மீண்டும் அந்த வாக்கியத்தைச் சொன்னார்கள். தியாகராசன் தன்னை மறந்த வெகுளியில் அவர்களைத் துரத் தக் காலை எடுத்து வைத்தபொழுது, ''கல கல'' வென்று நகைத்தபடி அவர்கள் ஓடினார்கள்.

★

செல்லும் வழியெல்லாம் தெரிந்தவர்களும், பெயரள வில் அறிமுகமானவர்களும் அவனை ஏதேதோ ஒரு விநோ தப் பிராணியைப்போலப் பார்த்தார்கள். தன் தலை மறைந்ததும், அவர்கள் பரிகாசமாகச் சிரிப்பது போலவும், தன்னைச் சுட்டிப் பேசுவதுபோலவும் தியாகராசன் உணர்ந் தான்.

''ஒரு கள்ளமும் அறியாத எனக்கு ஏன் இந்தப் பெரிய தண்டனை?'' என்று அவனின் உள்ளம் புலம்பியது. தலை நிமிர முடியாத அவமானம் அவனைச் சுற்றிக் கொண்டது.

தன்னுடன் சேர்ந்து அவமானத்தை அநுபவிக்க நேர்ந்த அந்தப் பெண்ணைப்பற்றி அவன் யோசித்தான். அவள்—மங்கையர்க்கரசி—அவனுடைய சக ஆசிரியர்களுள் ஒருத்தி. கள்ளங் கபடறியாச் சுபாவம்! எந்த நேரமும் சிரித்துச் சிரித்துக் கலகலப்பாய் இருப்பவள் அவள். 'அழகி' என்று சொல்லுவதா? அழகற்றவள் என்பதா? தியாகராசனுக்கு இத்தகைய ரசிக உணர்ச்சியில்தான் நம்பிக்கையில்லையே! அவன், இன்றுவரை மங்கையர்க்கரசியைத் தன் சக ஆசிரியை என்ற கண்ணோடு நோக்கியவனேயன்றி, வேறு எந்தக் கருத்தை வைத்துமல்ல.

பின்னேரங்களில் மங்கையர்க்கரசியும், அவனும் அனேகமாய் ஒன்றாகத்தான் பிரயாணம் செய்வார்கள். அவன் கிராமத்திற்குச் செல்லும் வழியில்தான் அவள் கிராமமும் இருந்தது. காலையில் எப்பொழுதும் தியாகராசன் முதலாவது பஸ்ஸைப் பிடித்து வந்துவிடுவான். மங்கையர்க்கரசியோ அடுத்த பஸ்ஸில் வந்து பாடசாலை தொடங்க ஐந்து நிமிஷமிருக்கப் பாடசாலைக்கு வருவாள். ஆனல்,போகும்பொழுது இருவரும் ஒன்றாகத்தான் போவது வழக்கம்.

''யாழ்ப்பாண பஸ்சேவை'' இருக்கிறதே! அது என்றைக்கும் ஒரேமாதிரித்தான். குறித்த நேரத்தில் ஓட வேண்டுமென்ற அக்கறை இருப்பதில்லை அதற்கு. ஏதோ உல்லாசப் பிரயாணம் புறப்பட்டவர்போல 'பஸ்'கள் ஆடி அசைந்து வரும். காலையில் ஒரு அலுவலாகப் புறப்பட்டவர், இந்த பஸ் சேவையை நம்பினல் கட்டாயம் பிற்பகலாவது சென்று அந்த அலுவலை முடிப்பார்!

இந்த நிலையில், பஸ் நிறுத்துமிடத்தில், பல நாட்கள் தியாகராசனும், மங்கையர்க்கரசியும் பஸ்ஸிற்காகக் காத்து நிற்க நேரிட்டதில் வியப்பில்லை. தொடக்கத்தில் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளக் கூசினர்களாயினும் நாட் செல்லச் செல்ல பஸ் வரும்வரை ஏதாவது பேசவேண்டு

மென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நிர்ப்பந்தம் விருப்பமாய் மாளாத தேவையாய் மாறியது உண்மையே.

இவ்வாறு அவர்கள் கலந்துரையாடும்பொழுது ஒருவரையொருவர் பரிகாசம் செய்வார்கள். சிரித்தார்கள்; ஆனால், அவர்கள் நெஞ்சங்கள் நிர்மலமாகவே இருந்தன!

★

போவோர், வருவோர், 'இவர்கள் இவ்வளவு சுதந்திரமாகப் பேசுகிறார்களே' என்று அதிசயமாகப் பார்க்கத்தான் செய்தார்கள். ஆனால், அதை என்றைக்குமே இவர்கள் பொருட்படுத்தியதில்லை. 'மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயமிருக்கும்?'

ஆனால், எதைப் பொருட்படுத்தவில்லையோ அதுவே விசுவரூபமெடுத்துத் தங்கள் இருவரையும் அழிக்கக் கங்கணம் கட்டியுள்ளதென்று தியாகராசனால் எண்ணுதிருக்கக்கூடவில்லை.

''நான் ஏன் கலகலப்பான சுபாவமுள்ளவனாய் மாறினேன்? சமூகப் பழக்கம் தெரியாதவனென்று மற்றவர்கள் சொல்லக்கூடாதென்பதற்காக என் இயற்கையை மாற்றிக் கொண்டேனே? அதற்குத் தண்டனையா இது? என் விஷயந்தான் போகட்டும். கள்ளங் கபடமறியாத ஒரு பெண்ணின் வாழ்வுமல்லவா என்னால் பாழாகப் போகிறது. கடவுளே! இந்த இக்கட்டிலிருந்து எங்களைக் காப்பாற்று'' என்று இவ்வாறு எண்ணியபடி தளர்நடை நடந்து, ஒரு படி பாடசாலையை அடைந்தான் அவன்.

★

''மன்மத லீலையை வென்றார் உண்டோ?
என்மேல் உனக்கேனோ பராமுகம்?''—(மன்மத)

என்ற பாடலைப் பாடியபடி முத்தையா அந்தத் தெருவால் வந்துகொண்டிருந்தான். குடிவெறியால் அவன் உடலோடு சேர்ந்து வார்த்தைகளும் தடுமாறின. தெருவின் இரண்டு பக்கங்களையும் அவனின் கால்கள் ஆக்கிரமிக்க,

சிவந்த விழிகளில் கருத்தற்ற கேலி குதித்திட அவன் வந்தான்.

முத்தையா ஒரு காவாலி. உலகத்திலுள்ள நல்லவை அனைத்திற்கும் அவன் விரோதி. விபரம் தெரிந்த நாளில் இருந்து நாடாறு மாதம், சிறையாறு மாதமாக வாழ்ந்து பழகிவிட்டவன் அவன். அந்தக் கிராமத்தில் ஆடு காணாமல் போய்விட்டால், நெற்கதிர்கள் இரவோடிரவு அறுக்கப்பட்டிருந்தால் யாரும் எங்கும் தேடிப்போவதில்லை. அது முத்தையாவின் திருவிளையாடலாய்த்தான் இருக்கும் என்று எண்ணி அவர்கள் பேசாதிருந்துவிடுவார்கள். பேசுவதால் மேலும் தங்களிடமுள்ள கோழிகளுக்கும், தென்னையில் உள்ள இளநீர்க் குலைகளுக்கும் ஆபத்து என்பது அவர்களுக்குத் தெரியும். சுருங்கச் சொன்னல் சங்கிலியை அறுத்துக்கொண்டு தெருவில் திரியும் வெறிநாய்தான் இந்த முத்தையா. இந்த வெறிநாயின் முன்னுல் செல்லாமல் தப்பிச் செல்வதே ஒரு பெரிய சாதனை.

மங்கையர்க்கரசியின் கண்ணீரை நீந்திக் கடந்து, சக ஆசிரியர்களின் பரிகாசப் புயலைச் சமாளித்து; எப்படியோ வந்த தியாகராசன், பஸ் நிற்குமிடத்தை அடைந்தபொழுது அவனை எதிர்ப்பட்ட முதலாவது ஆள் முத்தையாதான்.

தெருவைக் குத்தகையெடுத்தவன் போல வந்த முத்தையா, காரணமாகவோ, அகாரணமாகவோ தியாகராசனேடு மோதிக்கொண்டான்.

''யாரடா அவன்? தெருவுக்குக் குறுக்கை வாறவன்?'' என்று சொல்லியபடி நிமிர்ந்த அவனுடைய வாயிலிருந்து வீசிய மதுவின் நெடி, தியாகராசனுக்கு வாந்தியெடுக்கக் கூடிய அளவுக்கு அருவருப்பை அளித்தது. அவன் மூக்கைப் பிடித்துக்கொண்டு மறுபக்கம் திரும்பினுன்.

''ஓ! வாத்தியாரோ? உமக்கு இப்ப வரவரக் கண் தெரியாமல்தான் போகுது. என்ன மங்கையர்க்கரசியின்ரை எண்ணமோ?'' என்று முத்தையா அவனை எகத்தாளமாகக் கேட்டான்.

தியாகராசன் பொறுமையைக் கைவிடவில்லை. ஒன்றும் பேசாமலே அவனைத் தாண்டி மறுபுறம் செல்ல முயன்ருன்.

ஆனல், முத்தையா அவனை விடவில்லை. அவன், தியாகராசனது நெஞ்சுச் சட்டையைப் பிடித்தவண்ணம், "டே வாத்தி! இந்த ஊரைக் கெடுக்கிறதுக்கேயடா வந்தனீ? அவளும் ஒரு தேவடியாள்; நீயும் ஒரு நாய்மோன். என்னடா நினைச்சிருக்கிருய் எங்களைப்பற்றி? எங்கடை பிள்ளையளை நாசமாக்கவே இங்கை படிப்பிக்கிறது எண்டு வந்தனீங்கள்? கவனம்! இனிமேல் வாலையாட்டினுல் அந்த வாலை ஒட்ட அறுத்துப் போடுவன்! உங்கடை சரசத்துக்கு இது இடமில்லை. தெரியுமே? நாட்டாண்மை விடப் போறியோ நீ? இல்லைக் கேக்கிறன்" என்று ஒருவித தொடர்புமின்றி, கருத்தின்றிப் பேசினுன். வெறியால் தளர்ந்திருந்த அவனின் கை மாத்திரம் தியாகராசனுடைய நெஞ்சுச் சட்டையைப் பற்றியிருப்பதாக நினைத்துக்கொண்டு தவழ்ந்து விளையாடியது.

தியாகராசனல் மேலும் பொறுக்கக்கூடவில்லை. "மடையா! விடு" என்று சொல்லியபடி, அவன் முத்தையனின் பிடியிலிருந்து திமிறினுன். முத்தையனுடைய உடல் இருந்த நிலையில் அந்தத் திமிறலைத் தாங்கும் வலுவிருக்கவில்லை. முத்தையா கரணம் போட்டபடி தரையை முத்தமிட்டான். அவனுடைய ஆணவமும், வெறியும் முறிந்தன. "ஐயோ! ஐயோ! இந்த வாத்தி என்னைக் கொல்லுருன்" என்று அவன் சத்தமிட்டான்.

★

தியாகராசன் அவனைக் கவனியாது சென்று பஸ் நிற்கும் இடத்தையடைந்து, சிறிது நேரத்தில் வந்த பஸ்ஸில் ஏறி வீடு சென்ருன்.

முத்தையாவோ அப்பர் கல்வித் திருச்சபை முகாமையாளரின் உபயத்தில் குடித்த சாராய வெறி முறிந்துபோக,

எழுந்திருக்கவும் சக்தியற்று அந்த நடுத்தெருவிலேயே விழுந்து கிடந்தான்.

இரவோடிரவாகத் தன் ஆதிக்கத்தின் கீழிருந்த சில காவாலிகளைக் கொண்டு எழுதுவித்த வாக்கியங்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன.

## 25.

மங்கையர்க்கரசியின் விழிகள் அழுது அழுது வங்கிப் போயிருந்தன. உலகின் சோகம் அத்தனையும் ஒரு கட்டியின் உருவத்தையடைந்து, தன் நெஞ்சில் வந்தமர்ந்து அடைப்பது போன்ற பயங்கர அனுபவத்தை அவள் அடைந்தாள். இன்றுதான் வாழ்வின் உண்மையான சொரூபம் அவளுக்குப் புரிந்தது! ''வாழ்க்கை ஒரு முட்பற்றை! ஒவ்வொரு கணமும் அது தன் பாதையில் நடந்து செல்பவர்களைக் குத்தி வேதனைப்படுத்திக்கொண்டே இருக்கிறது'' என்ற அநுபவ அறிவு அவளுக்கு ஏற்பட்டது.

பஸ்ஸில் அவள் அமர்ந்த சிறிது நேரத்தில், தியாகராசன் அதே பஸ்ஸை மறித்து, உள்ளே ஏறி ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். மங்கையர்க்கரசி வெறுப்புடன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். நேற்றுவரை அவனின் வருகையால் பூரித்தவளல்லவா அவள்? அவனுடன் பேசுவதில், சிரிப்பதில் கலப்பற்ற இன்பம் கண்டவளல்லவா? இன்று மாத்திரம் அவன்மீது ஏன் இந்த வெறுப்பு? விஷம் போல ஏறிக்கொண்டிருந்த வெறுப்பை அவளால் போக்கி விடக்கூடவில்லையே!

மனித மனம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் அது ஒருநாளைக்காவது மண்ணில் இறங்கிவரவேண்டித்தான் இருக்கிறது. உலகின் கறை அதன் சிறகில் பூசப்படுவதையும் அதை தடுத்துவிட முடியாது. மங்கையர்க்கரசி

நல்லவள்தான்! மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் மாளாத ஆசைகொண்டவள்தான். ஆனல், இன்றோ அவள் சாதாரண நிலைக்கு இறங்கிவிட்டாள். அவள் உள்ளத்தில் சுயநலத்தின் கறை ஏறிவிட்டது. ஒரு குற்றமும் செய்யாதிருக்கவும், தியாகராசன்மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டதென்றால் அதன் காரணம் அவளின் சுயநலந்தான்!

தியாகராசனைப் பார்த்து அவளால் இனிச் சிரிக்க முடியாது; கலகலப்பாய்ப் பேசமுடியாது. ஏன்? அவன் செல்லும் திசையில் செல்வதுகூடத் தனக்கு ஆபத்தையே சம்பாதித்துத் தரும். இந்த உணர்ச்சியின் ஆவேச நிலையிலே மங்கையர்க்கரசி, தியாகராசனைக் கண்டதும் முகத்தை வேறு பக்கம் திருப்பியதில் வியப்பில்லையே!

"தியாகராசன் ஏன் இந்தப் பாடசாலைக்கு வந்தான்? தன் முகத்தில் கரிபூசியது மட்டுமல்லாமல், எனக்குமல்லவா அவமானத்தை உண்டாக்கிவிட்டான். அவனே ஆண். இன்று அவனைப்பார்த்துக் கைகொட்டி நகைக்கும் உலகம், நாளை, அவனை வரவேற்று வாழ்த்திசைக்கும். நானே பெண். என் வாழ்வு என்னுவது?" என்று அவள் சிந்தித்தாள்.

"நான் ஏன் படித்தேன்? வீட்டின் ஒரு மூலையிலிருந்து உழைத்து உழைத்து ஓடாகும் பெண்களுக்குள்ள அமைதிகூட எனக்கில்லையே? உண்மையில் என் வாழ்க்கைக்கு யமன் என் படிப்புத்தான். படித்ததுதான் படித்தேன், வீட்டில் இருக்காமல் உழைக்கப் புறப்பட்டேனே? அதை விடத் தவறு வேறு எதுவுமில்லை. யாழ்ப்பாணத்தின் மனோநிலை மாறுதவரையில், மக்கள் மக்களாய் வாழாதவரையில், படித்து, உழைக்கப் புறப்படும் என்போன்ற பெண்களின் வாழ்க்கை நரகந்தான்!"

உள்ளம், இவ்வாறு பல்வேறு சிந்தனையில் படர்ந்து சென்றதால் மெய்மறந்திருந்த மங்கையர்க்கரசிக்கு, "சுழிபுரம் வந்துட்டது. இறங்கவேண்டியவை இறங்குங்கோ" என்ற கண்டக்டரின் குரல் எங்கோ கனவில் கேட்பது போல் இருந்தது!

சிறிதுதூரம் பஸ் தொடர்ந்து சென்றதுந்தான், அவள் தன் நிலைக்கு வந்து, "இறங்கப்போறன்" என்று முனகினாள். அது யாருக்குக் கேட்டிருக்கப்போகிறது? பஸ் தொடர்ந்து சென்றது. மங்கையர்க்கரசி செய்வதறியாது தவித்தாள்.

"ஆள் இறங்கவேண்டும்; நிறுத்துங்கோ" என்ற தியாகராசனின் குரலைக் கேட்டபோது, அவள் முகத்தைச் சுழித்துக்கொண்டாள். ஆனாலும் இந்த ஆபத்து வேளையில் கைகொடுத்து உதவினானே என்ற நன்றியுணர்வும் அவள் நெஞ்சில் பெருக்கெடுத்தது.

"சுழிபுரத்தில் நிப்பாட்டேக்க இறங்கிறதுக்கென்ன?" என்று முணுமுணுத்த கண்டக்டரின் வாய், மங்கையர்க்கரசி இறங்குவதைக் கண்டதும் அடைத்துப்போயிற்று.

அவள் இறங்கியதும், பஸ் ஓர் ஊளைச் சப்தத்தையிட்டுவிட்டு நகர்ந்தது. வெளியே அதுவரை பார்த்துக்கொண்டிருந்த தியாகராசன், தலையை உள்ளே இழுத்துக்கொண்டான்.

மங்கையர்க்கரசி திரும்பியும் பார்க்காமல் 'விறுவிறு' என்று நடந்து சென்றாள். தியாகராசன் என்ற பெயரில் அவமானம் மேலும் தன்னைத் தொடர்ந்து வருகிறதோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டதுபோலும்!

மங்கையர்க்கரசி வீட்டை அடைந்தாள். பஸ் நின்ற இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தை எப்படி நடந்து வந்தாளென்று அவளுக்கே தெரியவில்லை. ஏதோ தனியாகப் பாழ்வெளியில் நுழைவது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

மங்கையர்க்கரசியின் தகப்பனார் இறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. தாயும், தம்பி ஒருவனும்தான் அவள் வீட்டில் வசித்த ஜீவன்கள். தாயோ அரைப் பைத்தியம். ஏதாவது அதிர்ச்சிதரக்கூடிய சம்பவத்தை அவளுக்குச் சொன்னால் போதும். உடனேயே ஒப்பாரி வைத்து அழத் தொடங்கிவிடுவாள்!

"தன் நெஞ்சக் கவலைகளையும், நீண்டெழுகின்ற சிந்தனைகளையும் யாருக்கு எடுத்துரைப்பது? யாரிடம் சொல்லி ஆறுவது?" அவளுக்கு விளங்கவில்லை.

★

வீட்டுப் படலையைத் திறந்து, முற்றத்தை அடைந்தவள், முன் வாசல் திண்ணையில் தாய் படுத்து அனுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் நெற்றியைச் சுற்றி ஏதோ பற்றுப் போடப்பட்டிருந்தது. வழக்கமான தலைவலி வந்துவிட்டதுபோலும்!

மங்கையர்க்கரசி ஒன்றும் பேசாது தன் உடைகளை மாற்றி, கால், முகத்தைக் கழுவிக்கொண்டு சமையலறைக்குள் சென்றாள். மூச்சுவிடாமல் வேலை செய்வதன் மூலமாவது தன் மனக் கவலையை மறக்க நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறதென்ற நிம்மதியோடு வேலையைத்தொடங்கினாள்.

"நாளைக்குப் பாடசாலைக்கு, லீவு எடுக்கத் தந்தியடிக்க வேண்டும். அந்தக் கையோடேயே மகேஸ்வரியிடம் போக வேண்டும். என்முன் உள்ள பிரச்சினையைத் தீர்க்க அவளால்தான் முடியும். எனக்கோ வேண்டிய பணமிருக்கிறது. தந்தை பாங்கில் போட்டிருக்கும் பணமே என் சீவியம் முழுவதற்கும் போதும். வயல் நெல்லு வேறு இருக்கிறது. இந் நிலையில் கைகட்டி நின்று, அவமானத்தையும் ஏற்று ஆசிரியை வேலை பார்க்க வேண்டியதில்லை.

"ஆனால், சும்மாயிருந்து வீட்டில் எப்படிக் காலந் தள்ளுவது? ஏதோ கள்ளங் கபடமற்ற சிறுவரின் முகத்தைக் கண்டும், அவர்களின் மழலை கேட்டும் ஒரு நாளில் சில மணித்தியாலங்களையாவது நிம்மதியாகக் கழித்தேன். அந்தத் தொழிலையும் விட்டால் பைத்தியம் பிடித்துவிடுமே! என்ன செய்வேன்? ... சீ! ஏன் இந்த வீண் யோசனைகள்? எப்படியும் நாளைக்கு மகேஸ்வரியைக் காணத்தானே போகிறேன்? எஸ். எஸ்.ஸி.யில் 'பெயில்' பண்ணினாலும் ஊழ்க்கப் பரீட்சையில் முதல் வகுப்பில் சித்திபெற்ற

வள் அவள். அவள் ஒருத்தியால்தான் எனது இருண்ட வாழ்வில் ஒளிவிளக்கேற்றி வைக்கமுடியும். பார்ப்போம்'' என்று கட்டவிழ்த்துச் சென்ற சிந்தனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டவாறு தன் வேலையில் மங்கையர்க்கரசி ஈடு பட்டாள்.

## 26.

அது ஒரு நாற்சார் வீடு. வீட்டு முற்றத்தில் நெல் காய்ந்துகொண்டிருந்தது. நெல்லுக்குப் பக்கத்தில் ஒரு ஊறு காய்ச் சாடி திறந்துவைக்கப்பட்டிருந்தது. பூஞ்சணவன் ஊறுகாயில் பிடிக்காமலிருப்பதற்கு இந்தப் பக்குவம். இன் னொரு பக்கத்தில் மாங்காய்களைச் சீவி வற்றல் போட்டிருந் தார்கள். கடந்தவாரம் அடித்த புயற்காற்றில் வளவில் இருந்த மாங்கொப்பொன்று முறிந்துவிட்டது. அதில் கிடந்த மாங்காய்கள்தான் அவை. அவற்றை வீணுக்கா மல் வற்றல் போட்டதிலிருந்து, அந்த வீட்டு எஜமானி யின் குடித்தனப் பாங்கு நன்கு விளங்கிற்று.

அதே முற்றத்தின் ஒரு மூலையில் நாயொன்று சுருண்டு படுத்துக்கிடந்தது. இரண்டு வயதேயான ஒரு சிறு குழந்தை அந்த நாயின் வாலைப்பிடித்து இழுத்தும், செவியைப் பிடித்து முறுக்கியும் சேஷ்டை பண்ணிக்கொண்டிருந்தது! நாயோ அந்தக் குழந்தையின் குறும்புகளுக்கெல்லாம் இட மளித்தபடி பரம சாதுவாய்க் கண்மூடிக் கிடந்தது.

மங்கையர்க்கரசி அந்த வீட்டின் வளவுக்குள் வந்து, முன்பக்கத்துக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த பொழுது அவள் கண்ட காட்சிகள் இவை. அவள் அந்த இடத்திலேயே நின்று, ''மகேஸ்வரி! மகேஸ்வரி!'' என்று குரல் கொடுத்தாள்.

அவளின் குரலைக் கேட்டுத் திடுக்குற்றெழுந்த நாய், தன் கடமையே கண்ணுகிக் குரைக்கத் தொடங்கியது. இது

வரை 'சேஷ்டை' பண்ணிக்கொண்டு நின்ற குழந்தை யும் திரும்பி அவளைப் பார்த்தது. சிறிதுநேரம் மலைப் படைந்ததுபோல் நின்றுவிட்டு, அது அழத் தொடங்கியது. அதன் அழுகையும், நாயின் குரைப்பும் சேர்ந்து சகிக்க இய லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கின.

அந்தச் சூழ்நிலை நீடிக்கவில்லை. சில நிமிஷங்களில் ஒரு பெண் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். அவள் மங்கையர்க்கரசியைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் "வா! மங்கை" என்று வரவேற்றாள்.

எஜமானியைக் கண்டதும் நாய் தன் குரைப்பை நிறுத்தியது. பின்னர் பழையபடி சுருண்டு படுத்து, தன் யோக நித்திரையைப் பயின்றது. ஆனால் குழந்தையோ இன்னும் தன் அழுகையை நிறுத்தவில்லை.

மகேஸ்வரி ஓடிச்சென்று குழந்தையைத் தூக்கி வந் தாள். குழந்தையைக் கையில் வைத்திருந்தபடியே தலை வாசலில் ஒரு பாயை எடுத்து விரித்து, "இப்படி இரு" என்றாள். மங்கையர்க்கரசியும் அந்தப் பாயில் அமர்ந்தாள்.

மகேஸ்வரியும் தன் தோழியின் பக்கத்தில் அமர்ந்தாள். "எப்படிச் சுகம்? உன் வீட்டிற்கு வரவேண்டும் என்று நானும்தான் யோசிக்கிறேன். நேரம் கிடைத்தால்தானே? நீ இருந்து பார். இன்னும் சிறிது நேரத்தில் அவர் வந்து விடுவார். அதற்கிடையில் சமையல் முடித்தாக வேண்டும். ஒருவகையாய்ப் பெரியவனையும், தங்கச்சியையும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு, இப்பொழுதுதான் குளித்து வந்தேன்" என்று மூச்சுவிடாமல் பேசினாள் மகேஸ்வரி.

"ஓ! நீங்கள்மட்டும் எங்கள் வீட்டிற்கு வரவேண்டாம். உங்களுக்கு நேரமில்லை. நாங்கள் மட்டும் அடிக்கடி வரு வோம். எங்களுக்குத்தான் வெட்கமில்லையே" என்று பாதி கோபமாகவும், பாதி கேலியாகவும் சொன்னாள் மங்கை யர்க்கரசி.

"கோபியாதே மங்கை! ஒருநாளைக்கு ஆறுதலாய் வரு கிறேன். சரி, பிள்ளையோடு விளையாடிக்கொண்டிரு. ஒரு

நிமிஷத்தில் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மகேஸ்வரி எழுந்து உள்ளே போனாள்.

உச்சி பிரித்து இழுத்து, அழகாக இடப்பட்ட கொண்டை, நெற்றியில் விபூதிக்கு நடுவில் இட்ட சிறிய குங்குமப் பொட்டு, சுத்தமாகத் தோய்த்துக் கட்டிய பச்சை நிறச் சேலை, துன்பத்தின் வாடையே வீசாத அழகிய முகம். இத்தனையும் அமைந்த மகேஸ்வரியைப் பார்த்ததுமே அரைவாசிக் கவலை குறைந்ததுபோல இருந்தது. அவள் நடந்து செல்லும் திசையையே மங்கையர்க்கரசி பார்த்தவண்ணமிருந்தாள். அவள் மடியிலிருந்த குழந்தை அவள் மௌனம் சாதிப்பதைப் பிடிக்காததுபோல, அவள் மடியிலிருந்து இறங்கி மெதுவாக நடந்து தாயைத் தொடர்ந்தது.

★

சிறிது நேரத்தில் ஆவி பறக்கும் கோப்பியை மகேஸ்வரி கொணர்ந்து கொடுத்தாள். கோப்பியைக் குடித்தபடி, இரு தோழிகளும் ஆனந்தமாக உரையாடத் தொடங்கினர்.

இடையிடையே மகேஸ்வரி எழுந்து சமையலறைக்குச் செல்வதும், உடனேயே திரும்பி வருவதும், குழந்தையைச் சமாதானம் செய்வதும், அவளுடன் பேச்சுக் கொடுப்பதுமாக இருந்தாள். ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர், ''குடும்பப் பெண், அஷ்டாவதானியாக இருக்கவேண்டும்'' என்று ஒரு தடவை சொன்னது இந்தச் சந்தர்ப்பத்தில் மங்கையர்க்கரசிக்கு நினைவில் வந்தது. ''அஷ்டாவதானம் என்ன, இவளுக்கு சதாவதானமே இருக்கும் போலும்'' என்று மங்கையர்க்கரசி மனத்துள் நினைத்துக்கொண்டாள்.

★

அன்று மத்தியானம் மங்கையர்க்கரசி தன் வீட்டிற்குச் செல்லவில்லை; தன் தோழியின் வீட்டிலேயே சாப்பிட்

டாள். மகேஸ்வரியின் கணவன் கடை வைத்திருப்பவர், நல்ல பண்பாடுள்ளவர். சிறிது நேரம் அவர் மங்கையர்க் கரசியுடனிருந்து உரையாடிவிட்டுச் சென்றார்.

குழந்தை 'எணை'யில் தூங்கியது. வீட்டு வேலைகள் யாவும் ஒருவாறு முடிவுற்றன. தோழிகள் இருவரும் வீட்டு முற்றத்து வேம்பின்கீழ் வந்து அமர்ந்தனர். மங்கை யர்க்கரசி முதல்நாள் நிகழ்ந்தவை அனைத்தையும் கூறினாள். மகேஸ்வரி அனுதாபத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள்.

''மகேஸ்! இந்த அவமானத்திற்குப் பிறகு பள்ளிக் கூடத்திற்கு எப்படிப் போவது? ஆனால், வீட்டில் இருக்க வும் பிடிக்கவில்லை. நான் என்ன செய்வது? நீதான் ஒரு வழி சொல்ல வேண்டும்'' என்று மங்கையர்க்கரசி இறுதியாகக் கேட்டாள்.

மகேஸ்வரி சிறிதுநேரம் யோசித்தாள்; பின் சொன் னாள்: ''மங்கை! நீ சொன்னதிலிருந்து உன் மனதில் ஒரு களங்கமும் இல்லையென்று தெரிகிறது. ஏன் பயப்படுகிறாய்? தொடர்ந்து பள்ளிக்கூடத்திற்குப் போ. ஆனால் ஒன்று...'' இந்த இடத்தில் மகேஸ்வரி சற்று நிறுத்தினாள்.

மங்கையர்க்கரசி ஆவலோடு தன் தோழியின் முகத்தை பார்த்தவளாய், ''அந்த ஒன்று என்ன சொல்'' என்று வினவினாள்.

''நீ விரைவில் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அதுவும் தியாகராசனையே!'' என்று மகேஸ்வரி சொல்லி முடித்தாள்.

மங்கையர்க்கரசிக்கு கோபம் கோபமாய் வந்தது. ''உனக்கு என்ன விசர் பிடித்துவிட்டதா? தற்கொலை பண்ண வழி என்ன என்று கேட்டால், 'இதோ நஞ்சு இருக்கிறது; குடி' என்று சொல்வது போலல்லவா இருக் கிறது உன் கதை'' என்று அவள் படபடப்போடு பேசினாள்.

''மங்கை! ஆத்திரப்படாதே! நீ சொல்வதிலிருந்து தியாகராசன் எந்தவகையிலும் உனக்குத் தகுதியானவர் என்றே தெரிகிறது. நீயோ தனித்தவள். என்றைக்காவது

மணம் செய்து கொள்வதின் மூலமே உன் தனிமை தொலைய வேண்டும். அந்த மணத்தில், உன் கையைப்பிடிப்பவர் தியாகராசனாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே?'' என்று சிரித்தபடி கூறினாள் மகேஸ்வரி.

மங்கையர்க்கரசி திணறினாள். ஏதோ கேட்கக்கூடாததைக் கேட்பதுபோல அவளின் உடல் நடுங்கியது. ''நான் தியாகராசனை வெறுக்கிறேன்; வாழ்வு முழுவதும் பிரமசாரிணியாக இருந்தாலும் இருப்பேன். ஆனால், தியாகராசனை மாத்திரம் மணக்கமாட்டேன்'' என்று பிடிவாதத்தோடு கூறினாள்.

மகேஸ்வரி. தன் சிநேகிதியின் பதிலைக் கேட்டு அதிர்ச்சி அடையவில்லை. அவள் நிதானமாகவே பேசினாள். ''சரி! இப்பொழுது நான் கேட்கிற கேள்விகளுக்கு நீ, 'ஆம்' என்றோ, 'இல்லை' என்றோ பதில் சொல்ல வேண்டும். வியாக்கியானம் எதுவும் கூடாது; சரிதானே?'' மங்கையர்க்கரசி 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

''உன் உள்ளத்தில் நீ கணவனாய் அடையப்போகும் ஒருவர்பற்றிய தெளிவான கருத்து இருக்கிறதல்லவா?''

''ஆமாம்.''

'உன் கணவன் அழகானவராயும், கம்பீரமானவராயும் இருக்க வேண்டும். இல்லையா?''

''ஆமாம்.''

''அவர் உன்னிலும் அதிகமாகப் படித்தவராகவோ, குறைந்தபட்சம் உன்னளவு படித்தவராகவோ இருப்பதை நீ விரும்புவாய்தானே?

''இது என்ன கேள்வி?''

''சரி! உன் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பவராயும், உன் உள்ளப்பாங்கை உணர்ந்தவராயும் அவர் இருந்தால் மிக மிக நல்லது. இல்லையா?''

''யார் இல்லை என்றது?''

''அப்போது சரி! இந்த அம்சங்கள் எவற்றிலாவது உன் சக ஆசிரியர் தியாகராசன் குறைந்தவராய் இருக்கிறாரா?''

''மகேஸ்! இது என்ன அதிகப் பிரசங்கித்தனம்?''

''நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், நான் கேட்கும் கேள்விகளுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்றுமட்டும் சொல்லவேண்டும் என்று கூறியதைவிட்டு, நீயோ உன் உறுதியில் பிறழ்ந்துவிட்டாய். உம்! இனிப் பேசி என்ன பயன்?''

''மன்னித்துக்கொள் மகேஸ்! உன் கேள்விக்குத்தானே பதில் சொல்ல வேண்டும். தியாகராசன் நீ குறித்த அம்சம் எதிலும் குறைந்தவரல்ல. மேலே சொல்.''

''அப்பொழுது அவரை மணம்செய்ய உனக்கு என்ன தயக்கம்?''

மங்கையர்க்கரசிக்கு இந்தக் கேள்விக்குப் பதில்சொல்ல முடியவில்லை. திணறினாள். ''என்னவோ எனக்கு விருப்பமில்லை; அவ்வளவுதான்!'' என்றாள்.

''மங்கை! தியாகராசனை நீ வெறுப்பதற்கு எனக்குக் காரணம் தெரியும். உன் மனதையே நீ கொலை செய்கிறாய். அவரைத் திருமணம் செய்துகொண்டால், இன்று ஏற்பட்ட அவச் சொல் நிலையானதாக ஆகிவிடுமே என்றுதான் பயப்படுகிறாய்? என்ன சுயநலமடி உனக்கு?''

மங்கை! இன்று, நீ தியாகராசனைத் தவிர வேறு யாரையாவது விவாகம் செய்ய நேர்ந்தால், உன் மனதுக்கு நிச்சயம் அமைதி கிட்டாது. உனக்கு மணம் பேசிச் செல்லும் இடமெல்லாம் நேற்று நடந்த சம்பவம் உன்னைத் தொடர்ந்தே வரும். உன் உள்ளம் கள்ளமற்றது என்று எனக்குத் தெரியும். ஆனால், உலகமோ, ''நெருப்பில்லாமல் புகையாது'' என்று பழமொழி கூறி, உனக்குப் பேசப்படும் திருமணத்திற்கெல்லாம் தடைபோடும். இதற்குத் தப்பி, நீ கலியாணம் செய்துகொண்டாலும், ஒருநாள் இல்லாவிட்டால், ஒருநாள் பழைய சம்பவங்களுக்கு காது,

மூக்கு வைத்து உன் கணவனுக்கு யாராவது சொல்லிவிட்டால்; உன் வாழ்வே அவ்வளவுதான்! தெரிந்துகொள்'' என்று கூறினாள் மகேஸ்வரி.

''அப்படியானால் நான் இந்தப் பள்ளிக்கூடத்திற்கே தொடர்ந்து போகமுடியாதே? ஒவ்வொருநாளும் இந்தச் சம்பவத்தின் எதிரொலி விஷ விருக்ஷமாய் வளர்ந்து வருமே? என்ன செய்வது?'' என்று மங்கையர்க்கரசி ஏக்கத்தோடு சொன்னாள்.

''அதுவும் சரிதான். ஒன்று நீ பாடசாலை மாறவேண்டும்; இல்லையென்றால் ஆசிரியை வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.''

''நீ சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மகேஸ்! தியாகராசனை மணம் செய்யாமலே, இந்த அவப் பெயரிலிருந்து தப்ப ஒரு வழி சொல்லேன்?''

''நீ ஏதோ தியாகராசனை அலட்சியம் செய்வது போலப் பேசுகிறாய். முதலில் இந்த ஏற்பாட்டிற்குத் தியாகராசனைச் சம்மதிக்க வைக்கவேண்டுமே என்று நான் யோசிக்கிறேன். அது இருக்கட்டும். உண்மையைச் சொல். கடந்த காலத்தில் ஒருநாளாவது நீ தியாகராசனை உன் மணவாளனாகக் கற்பனை பண்ணிப் பார்க்கவில்லையா? 'நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை'. உண்மையைச் சொல்.''

மங்கையர்க்கரசி பதில் பேச முடியாது நாணி முகம் சிவந்தாள்.

## 27.

அன்றைய பகல் வேலைகள் யாவும் முடிந்தன. வள்ளிப்பிள்ளைக்கு வெற்றிலை இடித்துக் கொடுத்து, அவளைத் தோட்டத்திற்கு அனுப்பிவிட்டு, புவனேஸ்வரி விறுந்தையில் வந்தமர்ந்தாள். வீட்டில் வேறு யாருமில்லை.

புவனேஸ்வரிக்குப் பொழுதுபோகவில்லை. முன்பு எவ்வளவுக்குத் தனிமையை விரும்பினாளோ, அவ்வளவுக்குச் சந்தடியையும், ஆரவாரத்தையும் இப்பொழுது அவள் விரும்பினாள். "முதுகொடிய வேலை செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் தாயோடோ, தம்பியோடோ வம்பளக்க வேண்டும்." இவைதான் கவலையை மறக்க வழியென்பது அவள் எண்ணம்!

புவனேஸ்வரி வெளியில் யாருக்கும் அஞ்சவில்லை. தன் நெஞ்சுக்கு அஞ்சினாள்; ஓயாது ஒழியாது குமுறுகின்ற சிந்தனைக்குப் பயந்தாள். இரவை நினைத்தாலோ நடுக்கம் ஏற்பட்டது அவளுக்கு! தனிமையில் நெடுமூச்செறிந்து கிடக்கும் நிலையை அவள் முற்றிலும் வெறுத்தாள்.

இரவில் கண்ணிமைகள் மூட மறுத்தன. மூடினாலோ நெஞ்சக் குருத்தையே கருக்கிவிடக்கூடிய கொடிய கனவுகள்! அப்பப்பா! அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல் இருந்தது.

சிந்தனைக்குத் திரையிட்டு மறைத்துவிட விரும்பிய புவனேஸ்வரி, எழுந்துசென்று தமையனின் மேசையில் ஏதாவது புத்தகங்கள் இருக்குமா என்று ஆராய்ந்தாள். "முன்பெல்லாம் நேரம் கிடைக்கும்பொழுது பத்திரிகையோ புத்தகமோ வாசிப்பது அவள் வழக்கம். அது பழங்கதையாகிவிட்டது. எங்கே அமைதியாயிருந்து வாசிப்பது? என்று நினைத்தவளாய் புத்தகம் தேடுவதில் ஈடுபட்டாள்.

புவனேஸ்வரியின் கையில் முதலில் தட்டுப்பட்டது "நளவெண்பா" என்ற புத்தகம். தியாகராசன் அந்தப் புத்தகத்திலிருந்து எத்தனையோ பாடல்களை அவளுக்கு விளக்கியிருக்கிறான். தன் தங்கைக்குக் கிடைக்காத பள்ளிக்கூடப் படிப்பை நிறைவுசெய்யத் தனக்கு ஒய்வு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் முயல்வான். ஆனால் இப்பொழுதோ...? இருவரும் இருவேறு துருவங்களில் வாழ்கின்ற பிராணிகளாகிவிட்டனர்.

புத்தகத்தை வீசிவிட்டுப் புவனேஸ்வரி எழுந்தாள். அவள் நெஞ்சுச் சட்டையில் ஏதோ உறுத்தியது. அதை வெளியே எடுத்தாள். தணிகாசலத்தின் கடிதம் அது. அவனுக்குத்தான் எவ்வளவு துணிவு? அந்தக் கடிதம் மாத்திரம் தியாகராசனின் கைகளில் கிடைத்திருந்தால்...? நல்லகாலம்... அவள் தப்பினாள்!

அந்தக் கடிதத்தில் தணிகாசலம் தன் நெஞ்சக் குமுறலை விபரித்திருந்தான். தான் ஏங்கி ஏங்கி விடும் நெடுமூச்சுகளை அற்புதமான கற்பனை ஆற்றலோடு விளக்கியிருந்தான்.

"வாழ்ந்தால் உம்மோடு வாழ்வேன்; இல்லாவிடில் காலம் முழுவதும் தனி மரமாகவே நின்று மாய்வேன்" என்று தன் உறுதியை எடுத்துக் காட்டியிருந்தான்.

"உமது அன்னை எனக்கு உறுதிமொழி கூறிக் கடிதம் எழுதியிருந்தார். நடைப்பிணமாய்த் திரிந்த நான், அது கண்டதும் புனர்ஜென்மம் அடைந்துவிட்டேன். இனி நான் எதற்கும் அஞ்சேன். வருவது வரட்டும் என்றே இக் கடிதம் எழுதுகிறேன். இனியும் மௌனம் வேண்டாம். அன்று உம்மை நான் வேண்டிக்கொண்டபோது, முகத்தைத் திருப்பிக் கொண்டு ஓடினீர். அதே முறையைக் கையாண்டு என் கடிதத்திற்குப் பதில் எழுதாதிருக்க வேண்டாம். உன் கடிதமே என் உள்ளப்பாலையில் பெய்யப்போகும் ஆனந்த வர்ஷம்! மறக்காதீர்; பதில்...பதில்...பதில்..." என்று அவன் என்ன வெல்லாமோ எழுதியிருந்தான்.

"அவருக்கென்ன? வதுளையிலிருந்துகொண்டு கடிதம் தீட்டிவிட்டார். ஆனால், நானோ ஒன்றும் அறியாப் பேதைப் பெண். இவர் கடிதத்திற்கு எப்படிப் பதில் எழுதுவேன்?" என்று கடந்த இரண்டு நாட்களாகச் சிந்தித்துச் சிந்தித்து முடிவுகாணாது தத்தளித்தாள் அவள்.

"இப்பொழுதோ தனிமையில் இருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கடிதம் எழுதினால் என்ன?" என்று அவளின் நெஞ்சுறுதிக்கும், உள்ளுணர்வுக்குமிடையே போர் நடந்தது.

இறுதியில் நெஞ்சுறுதி தோற்றுவிட, உள்ளுணர்வே வென்றது! பழையபடி அவள் மேசையில் அமர்ந்து, அங்கிருந்த சுப்பிரமணியத்தின் ''அப்பியாசப் புத்தகம்'' ஒன்றில் கிழித்த கடதாசியில் பென்சில் ஒன்றினுல் ஒரு கடிதம் வரைந்தாள்......

அன்பார்ந்த......!

உங்களை எப்படி அழைப்பது? எனக்குத் தெரியவில்லை. நானே படியாத பெண். இந்தக் கடிதத்தில் ஏதாவது பிழை இருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்.

உங்கள் கடிதம் கிடைத்தது. சகலதும் அறிந்தேன். உங்கள் அன்பை அறிந்து மிகுந்த சந்தோஷம்.

எனக்கும் இருதயம் இருக்கிறது. அதில் அன்பும் வேண்டியமட்டும் இருக்கிறது, உங்களையன்றி வேறொருவரைக் கனவிலும் நினைக்கமாட்டேன். இது உறுதி.

காலம் மாறும். கடவுள் அருளால் நாங்கள் ஒன்று சேர்வோம்.

இப்படிக்கு,<br>
என்றும் உங்கள்<br>
புவனேஸ்வரி.

இந்தக் கடிதத்தை எத்தனையோ அழித்தல், திருத்தலுடன் எழுதி முடித்தாள். எப்படியாயினும் நாளைக்கு சுப்பிரமணியம் மூலம் இந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்ப்பிக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்தாள். அந்தக் கடிதத்தைப் புவனேஸ்வரி பலதடவை படித்தாள்.

படிக்கப் படிக்க உற்சாகம் குறைந்துகொண்டே வந்தது. துணிவு காற்றில் வெடித்த 'பலூன்' ஆகியது. பரம்பரை பரம்பரையாகக் குருதியுடன் சேர்ந்துவிட்ட நாணமும், மடமும் அவளை நலிவித்தன. அவள் உடல் நடுங்கியது.

அவள் அந்தக் கடிதத்தை பல சுக்கல்களாய்க் கிழித்து வெளியே சென்று எறிந்துவிட்டு வந்தாள். இன்னும் அவளின் நெஞ்சு அடித்துக்கொண்டே இருந்தது.

தணிகாசலத்தின் கடிதத்தைத் தன் நெஞ்சோடு அணைத்தவளாய், அந்தப் பேதைப்பெண் நெடுநேரமாய் அழுதுகொண்டிருந்தாள்!

## 28.

தியாகராசன் அடுத்தநாள் பாடசாலை சென்றபோது வழியில் முன்போல அதே எழுத்துக்கள் இருந்தன. ஆனல், ஒரேயொரு மாற்றம்! முதல்நாள் இரவு பெய்த மழையில் சிறிது கரைந்தும், காலடிகள் பட்டு அழிந்தும் மங்கலாய் இருந்தன.

ஆனல்,அவற்றின் சாரம் அக் கிராமத்திலுள்ளவர்களின தும், சக ஆசிரியர்களினதும் நெஞ்சங்களில் ஏறிவிட்டன என்பது நன்கு தெரிந்தது. ஒருவரும் அவனுடன் முகங் கொடுத்துப் பேசவில்லை. ஆனல், அவனைக் காணும்பொழு தெல்லாம் அவர்களின் உதடுகளில் கேலிச் சிரிப்பு மலர் வதை தியாகராசன் கண்டான்.

பாடசாலைக்கு மங்கையர்க்கரசி வரவில்லை. எப்படி வர முடியும்? அவமானத்தின் கறை பூசப்பெற்ற முகத்தோடு, மற்றவர்களின் கேலிச் சிரிப்பும் பின்தொடர ஒரு பெண் அந்தச் சூழலில் ஒரு விநாடிகூட வாழமுடியாதே!''

''மங்கையர்க்கரசி வரவில்லைப்போலிருக்கிறதே!'' என்று தியாகராசனின் சக ஆசிரியர் ஒருவர், அவன் பாடசாலை யுள் நுழையும்போதே கிண்டலைத் தொடக்கி வைத்தார்.

''இனி அவவுக்கு இங்கே என்ன வேலை? குடும்ப அரசி ஆவதைவிட, வேறு என்ன பெரிய விஷயம் ஒரு கற் புடைய மங்கைக்கு?'' என்று வேறொரு ஆசிரியர் பேசினர். எல்லோரும் சிரித்தார்கள்.

''இந்த ஆசிரியர்கள் இருக்கிறர்களே, இவர்கள் காற் றின் பக்கம் சுழலும் காற்றாடி போன்றவர்கள். நேற்று வரை என்னைப் புகழ்ந்து பாடியவர்கள், இன்று என்னைக்

கிண்டல் செய்கிறார்கள். பரவாயில்லை. பொறுமை கடலினும் பெரிது'' என்று தியாகராசன் எண்ணியவாறு அவர்களைப் பாராததுபோல உள்ளே நுழைந்து தன் வகுப்பறைக்குச் சென்றான்.

உடனேயே ஒரு மாணவன் வந்து, அவனைத் தலைமை ஆசிரியர் அழைப்பதாய்க் கூறினான்.

''அவர் அழைப்பு ஒன்றும் நல்லதுக்கல்ல''. என்று அவன் உள்மனம் கூறியது.

''போகாதே! போகாதே!'' என்று அவன் கால்கள் பின்னுக்கு இழுத்தன. ஒருவாறு சமாளித்தபடி தலைமை ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தான்.

தலைமை ஆசிரியர் அவனை முன்னே இருந்த ஆசனத்தில் அமரச் சொன்னார். எடுத்த எடுப்பிலேயே பேச முடியாதவராய்ச் சிறிது தயங்கினார். தியாகராசன் அவர் என்ன பேசப் போகிறார் என்று அவர் முகத்தையே பார்த்த வண்ணம் அமைதியாக இருந்தான். சிறிது நேரம் கழிந்தது தியாகராசனுக்கு முள்ளின் மேல் இருப்பது போலத் தோன்றியது.

தலைமை ஆசிரியர் எழுந்தார். யன்னலின் அருகே சென்றார். தம் வாயுள் அதக்கியபடி இருந்த புகையிலையை யன்னலினூடாக வெளியே துப்பினார். திரும்பி வந்தவர் ஏதோ அவசரமான வேலையைச் செய்பவர் போல இடாப்புகளை ஒழுங்காக அடுக்கி வைத்தார்.

தியாகராசனின் பொறுமையின்மை எல்லை கடந்து போயிற்று. ''என்னை ஏன் அழைத்தீர்கள்? அலுவல் இல்லாவிட்டால் நான் போகட்டுமா?'' என்று படபடப்போடு கேட்டான்.

தலைமை ஆசிரியர் தாம் அமர்ந்திருந்த ஆசனத்தில் சிறிது நெளிந்துகொடுத்தார். ''ஏன் வாத்தியார்? நீர் வேறு இடத்திற்கு மாற்றம் கேளுமன்'' என்று அவர் மென்று விழுங்கிக்கொண்டே கேட்டார்.

''ஏன் நான் மாற்றம் கேட்க வேண்டும்? எனக்கு இந்தப் பள்ளிக்கூடம்தான் வசதியாய் இருக்கிறது'' என்று தியாகராசன் சிறிது சிரித்தபடி, தன் படபடப்பை அடக்கிக் கொண்டு அமைதியாய்ச் சொன்னான்.

★

இப்பொழுது தலைமை ஆசிரியர் உண்மையிலேயே பொறுமை இழந்துவிட்டார். ''ஓம்! ஓம்! உமக்கு வசதியாய்த்தான் இருக்கும். மங்கையர்க்கரசி இருக்குமிடந்தான் உமக்கு வசதி. ஆனால் இதையெல்லாம் என்னால் பொறுக்க முடியாது. ஏதோ கெட்டிக்காரன். பள்ளிக்காகப் பாடுபடுகிறான் என்று பார்த்தால், நீர் தலையிலேயே ஏறியிருக்கப் பார்க்கிறீர். உதெல்லாம் எனக்குச் சரிப்படாது. நீர் மாற்றம் கேட்காவிட்டால், உம்மை மாற்றச் சொல்லி முகாமையாளருக்கு நானே எழுதவேண்டிவரும்'' வார்த்தைகள் தடுமாறின. தலைமை ஆசிரியரின் தேகம் படபடத்தது.

தியாகராசன் பொறுமையை இழக்கவில்லை. அமைதியாக அவரை நோக்கினான். ஆனால் அவன் உள்ளத்திலே ஓர் எரிமலை வெடிக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. ''மங்கையர்க்கரசியுடன் என்னைச் சேர்த்து வீண் அவதூறு கிளப்பியிருப்பது உண்மைதான். ஆனால் அதில் சிறிதளவு கூட உண்மையில்லை. இந்நிலையில் வீண் சந்தேகத்தைக் கிளப்பி, அதற்காக என்னை மாறச்சொல்வது சிறிதும் நியாயமில்லை'' என்று அவன் நிதானமாய்ச் சொன்னான்.

''உண்மையோ, பொய்யோ அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்கு இந்தக் கரைச்சல் ஒன்றும் வேண்டாம் என்பதற்காகத்தான் உம்மை மாற்றம் கேட்கச் சொல்கிறேன். இன்றைக்குக் காலையில் கூட இந்தக் கிராமத்துப் பெரியவர்கள் வந்து என்னிடம் குறைகளை அளந்து விட்டுப் போகிறார்கள்.''

"முகாமையாளருக்கு இந்த விஷயத்தை அறிவிக்க நான் விரும்பவில்லை. அதனால் உமக்குத் தொந்தரவு. அறிவிக்காமல் விட்டால் "ஏன் அறிவிக்காமல் இருந்தீர்?" என்று முகாமையாளர் நெருப்பெடுப்பார். அது எனக்குத் தொந்தரவு. ஆனபடியால் தயவுசெய்து முகாமையாளரைப் போய்க் காணும். அவரைக் காலைப் பிடித்தோ, கையைப் பிடித்தோ மாற்றம் கேளும்" என்று தியாகராசனுக்குச் சந்தர்ப்பம் அளிக்காமலே அவர் பேசிக்கொண்டு போனார். முதலில் கோபமாய்த் தொடங்கி, கடைசியில் கெஞ்சலில் முடிந்த அவர் பேச்சைக் கேட்கச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது தியாகராசனுக்கு.

"வாத்தியார்! இந்த நிலைமை என்றோ ஒரு நாளைக்கு உருவாகும் என்பது நான் அறிந்ததுதான். என்றைக்கு நான் முகாமையாளரின் எலெக்ஷனுக்கு வேலை செய்ய மறுத்தேனோ, அன்றைக்கே என் ஆசிரிய வாழ்வின் இறுதி நாள் வெகு தூரத்தில் இல்லையென்பதை உணர்ந்துகொண்டேன்!"

"நான் கோழையல்ல. அக்கிரமத்துக்கு நான் என்றும் அடிபணிந்ததில்லை. ஆனால் என் எதிர்ப்பினால் ஒரு பெண்ணின் வாழ்வு பாழாகிவிடுமே என்றுதான் யோசிக்கிறேன். இந்தாருங்கள் இன்று காலை இங்கு வரும்பொழுதே வேலையில் இருந்து விலகும் கடிதத்தையும் எழுதிக்கொண்டுதான் வந்தேன். இதனை முகாமையாளருக்கு அனுப்பிவையுங்கள். உடன் அறிவித்தலானபடியால் இந்த மாதச் சம்பளத்தையும் நான் எடுக்கவில்லை, நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தியாகராசன் எழுந்து வெளியே வந்தான்.

தலைமை ஆசிரியர் பூகம்பமே ஏற்பட்டது போலப் பெரும் அதிர்ச்சியை அடைந்தார். நடந்தவை எல்லாம் கனவா, நனவா என்று அவருக்குச் சந்தேகமாய் இருந்தது. ஆனால் அவருடைய மேசையில் இருந்து காற்றில் படபடத்த தியாகராசனின் விலகற் கடிதம் 'நடந்தவை யாவும் உண்மையே' என்ற உணர்வை ஏற்படுத்தியது.

தியாகராசன் சிரித்த முகத்தோடு எல்லா ஆசிரியர்களிடத்தும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு; பள்ளிக்கூடத்தின் மைதானத்தில இறங்கி நடந்தான். விடுதலை கிடைத்து விட்டது. பேய்க் கூட்டங்களிடையேயும், பிசாசுக் கும்பல்களிடையேயும் வாழ்ந்த நாள் கனவாகி அந்தத் தொல்லை இனி இல்லை என்றாகிவிட்டது.

"இந்த கோழை ஆசிரியர்களை நினைத்து வருந்துகிறேன். என்ன செய்வது? ஒருநாளைக்காவது கூனி நிற்கும் இவர்களைத் தலை நிமிரச் செய்து, அதனால் எதிர்காலப் பரம்பரையையும் உயர்த்திவிடாமலா போகப் போகின்றேன். பார்ப்போம். அநீதிக்கு ஆராத்தி எடுக்கும் முகாமையாளரின் திருக்கூட்டத்திற்கு முடிவு காண்பதே இனி என் வாழ்க்கை இலட்சியம்" என்று பலதரப்பட்ட எண்ணங்கள் நெஞ்சில் குமிழியிட அவன் கம்பீரமாக நடந்து சென்றான்.

## 29.

அன்று பின்னேரம் தியாகராசன் மங்கையர்க்கரசியின் வீடு சென்றான். அவன் வருகையால் அளவிட முடியா வியப்பை அடைந்த மங்கையர்க்கரசி ஒருவாறு சமாளித்துக் கொண்டவளாய் அவனை வரவேற்றாள்.

இருவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். "இன்று நீங்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை?" என்று தியாகராசன் பேச்சைத் தொடங்கினான்.

"இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமா? உங்களுக்குத் தெரியுந்தானே?" என்று கூறியவள் "இருந்துகொள்ளுங்கள், வருகிறேன்" என்று தொடர்ந்து கூறிவிட்டு எழுந்தாள்.

''நீங்கள் எதற்காகப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். இப்போ எனக்குக் கோப்பி வேண்டாம். கொஞ்சம் நல்ல தண்ணீர் மாத்திரம் கொடுங்கள் போதும்'' என்ருன் தியாகராாசன். 'சரி' என்றுவிட்டு உள்ளே சென்று செம்பு நிறைய மங்கையர்க்கரசி தண்ணீர் கொண்டு வந்தாள். அவன் பேசாமல் தண்ணீரை வாங்கி மடமட வென்று குடித்தான். அதுவரை ஒன்றும் சாப்பிடவில்லை. அந்தக் களை அவனுக்கு.

சிறிது நேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள். பின் தியாகராசன், மங்கையர்க்கரசியைப் பார்த்து, ''சரி நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே'' என்ருன்.

''என்ன பதில் சொல்வது? அந்தக் காட்டு மிராண்டி ஊருக்கு இனிப் போக முடியாது. ஆசிரியர் வேலைக்கே இனித் தலை முழுக்குப் போடப் போகிறேன்'' என்று மங்கையர்க்கரசி வேதனையோடு பதில் கொடுத்தாள்.

''சே! அப்படி ஒன்றும் அவசரப்பட்டு முடிவுக்கு வந்து விடாதீர்கள். இப்பொழுது கூட நான் முத்தையனைச் சந்தித்துவிட்டுத்தான் வருகிறேன். இதெல்லாம் முகாமையாளரின் சூழ்ச்சி! அவர்தான் முத்தையனை ஏவிவிட்டு இவ்வளவு தடல்புடலையும் செய்வித்தார். முத்தையன் கூடத் தான் செய்ததற்கெல்லாம் வருந்துகிருன்'' என ஆறுதல் கூறும் வகையில் சொன்ஞன் தியாகராசன்.

மங்கையர்க்கரசி ஏளனமாய்ச் சிரித்தாள். ''முத்தையன் என்ன மகாத்மா காந்தியா? மகாசனங்களே! நான் ஒரு தவறு செய்துவிட்டேன். அது இமாலயத்தவறு. தியாகராசனும், மங்கையர்க்கரசியும் தூயவர்கள்'' என்று அவன் மேடையேறிச் சொன்னவுடன் சனங்களின் மனம் மாறி விடுமா? விட்டுத்தள்ளுங்கள் அந்தப் பேச்சை'' என்று சிறிது அலட்சியமாகக் கூறிஞள்.

''விட்டுத்தள்ளக்கூடிய பேச்சா இது? மங்கையர்க்கரசி! அவசரப்படாதீர்கள். அமைதியாய் யோசியுங்கள். பின்

எதற்காகவும் வருந்தக்கூடாது. நெருப்பு என்றவுடன் கை வேகப்போவதில்லை. உலகம் பழிச்சொல் கூறுகிறதே என்று அஞ்சி உலகத்தை விட்டுவிட்டுப் போக முடியுமா? கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்'' என்று மிகுந்த ஆதரவாய்த் தியாகராாசன் சொன்னான்.

மங்கையர்க்கரசி சிரித்தாள். வேதனையின் பாரத்தைச் சுமந்து நிற்கும் சுமைதாங்கிதான் அந்தச் சிரிப்பு. ''நீங்கள் சுலபமாய்ச் சொல்லிவிட்டீர்கள். நீங்களோ ஆண்! இந்த அவமானமெல்லாம் உங்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் நானோ பெண். நேற்று நடந்த செயல் சிறுபிள்ளை விளையாட்டாய் இருக்கலாம். ஆனால் அதனால் என் சிவனே போய்க்கொண்டிருக்கிறதே தியாகராசன்! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், நீங்களும் நானும் இனி ஒரே பள்ளிக்கூடத்தில் இருக்கமுடியாது!''

''அந்தத் தொந்தரவிற்கே இனி இடமில்லை.''

''என்ன?''

''ஆம்! நாங்கள் இருவரும் இனி ஒன்றாய்ப் படிப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

''எப்படி?''

''நான் படிப்பித்தல் தொழிலுக்குப் பிரியாவிடை கூறிவிட்டேன். தலைமை ஆசிரியரிடம் விலகுதற் கடிதம் கொடுத்துவிட்டேன். இனி உங்களுக்கு என் தொல்லை இல்லை. ஆனபடியால் அமைதியாகச் சென்று படிப்பியுங்கள். இனி அறிந்தோ அறியாமலோ உங்கள் வழியில் நான் வரமாட்டேன்'' என்றான்.

மங்கையர்க்கரசிக்கு வானமே இடிந்து தலைமீது விழுந்தது போல இருந்தது. எல்லையற்ற அதிர்ச்சிக்கு அவள் உள்ளானாள். ''இது உண்மையானால், தியாகராசன்! நீங்கள் பெரிய தவறு செய்துவிட்டீர்கள். எனக்காகத் தியாகம் செய்வதாய் நினைத்து என் இருதயத்தை நொருக்கிவிட்டீர்கள்.'' என்று படபடப்போடு, கண்ணீர் தயங்கும் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்துக் கூறினாள் அவள்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று நிதானம் குறையாதவனாய்த் தியாகராாசன் கேட்டான்.

"ஏன் என்று கேட்கிறீர்களா? வறுமையில் மூழ்கித் தத்தளிக்கும் ஒரு குடும்பத்திற்கு என் உத்தியோகம் துணையாய் அமைந்திருக்கிறது என்று அடிக்கடி சொல்வீர்களே! இன்று உத்தியோகத்தைத் துறந்ததால், கரைதுறைகாணுது அந்தக் குடும்பம் தத்தளிக்காதா? அவர்கள் விடும் கண்ணீர் என் வாழ்வையே வாள்கொண்டு அறுக்காதா? எனக்கு இத்தனை புத்திமதியையும் கூறிவிட்டு நீங்கள் இப்படி நடந்துகொள்ளலாமா?" மங்கையர்க்கரசியால் தொடர்ந்து பேசக்கூடமுடியவில்லை. அவள் விழிகளில் நீர் பெருகிய வண்ணம் இருந்தது.

தியாகராசன் சிறிது நேரம் ஒன்றும் பேசாதிருந்தான். அவனும் இருண்டுவிட்ட தன் எதிர்காலத்தைச் சிறிது எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

ஒரு கணநேரம் அவன் முகத்திலும் சோகம் கவிந்தது. ஆனால் தன்னம்பிக்கை நெஞ்சில் சுடர்கொழுவ அவன் முகம் மீண்டும் பிரகாசமடைந்தது.

"மங்கையர்க்கரசி! நான் கோழையல்ல. ஆசிரியத் தொழில் இல்லாவிட்டால் கூலிவேலை செய்தாவது என் பெற்றோரையும், சகோதர சகோதரிகளையும் காப்பாற்றுவேன்" என்று அவன் கம்பீரத்துடன் தலை நிமிர்ந்து கூறினான்.

மங்கையர்க்கரசி வியப்பால் சிலையானாள். அமைதியாய் அவன் செய்யும் தியாகங்களும், தளராத அவன் தன்னம்பிக்கையும் அவள் நெஞ்சைக் களிவித்தன. அவள் அவன் கால்களில் விழுந்தாள்.

"தியாகராசன்! நீங்கள் மனிதெதய்வம். தங்கள் காலடியில் விழுந்து இன்று நான் ஒன்று வேண்டுகிறேன் என் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்களா?" என்று அவள் தழதழக்கும் குரலோடு தியாகராாசனை வேண்டினாள்.

தியாகராசன் அவளுடைய கைகளிலிருந்து தன் கால்களை விடுவித்த வண்ணம், புன் சிரிப்போடு ''யாருடைய வேண்டுகோளையும் இதுவரை நான் புறக்கணித்ததில்லை. நீங்கள் தாராளமாகக் கேட்கலாம்'' என்று பதிலிறுத்தான்.

மங்கையர்க்கரசி மீண்டும் அவன் கால்களைப் பற்றிப் பிடித்தபடி, ''உங்கள் காலடியில் எனக்கு ஒரு இடம் தாருங்கள். நான் அனாதை! தனித்தவள்!'' என்று வேண்டு தலைத் தன் நெஞ்சிலிருந்து விழிகளுக்குக் கொணர்ந்து நிறுத்தி அவனைக் கேட்டாள்.

தியாகராசன் ஒன்றும் பேசவில்லை. தன் கால்களை விடுவிக்கவும் இல்லை. விறைத்துப் போய் ஆடாது அசையாது அமர்ந்திருந்தான். புவனேஸ்வரிக்கும், தணிகாசலத்திற்கும் செய்த கொடுமை அவ்வேளை அவன் நினைவில் வந்தது.

''என்ன பதில் பேசமாட்டீர்களா? என் வேண்டுகோளை ஏற்கமாட்டீர்களா? நீங்கள் பாடசாலையை விட்டுவிட்டதால் மாத்திரம் என் அவமானம் தொலைந்துவிடப் போவதில்லை. தியாகராசன்! உலகின் கேலிக் கணைகளை என்னால் தாள முடியாது. எனக்கு வாழ்வளியுங்கள்'' என்று மங்கையர்க்கரசி கூறியபொழுது, அவள் கண்ணீர் தியாகராசனுடைய கால்களை நனைத்தது. நீண்ட நேரத்திற்குப் பிறகு அவன் மங்கையர்க்கரசியின் தோள்களைப் பற்றித் தூக்கி விட்டபடி, ''உன் வேண்டுகோளை நான் ஏற்கிறேன்'' என்றான்.

# 30.

நடுப்பகல், போசனம் முடிந்தது. புவனேஸ்வரி உணவு அருந்திய கையோடு, நெல்லையும் எடுத்துக்கொண்டு உரலை உருட்டியபடி மாமரத்தடிக்குச் சென்றாள். அங்கு தான் அவர்கள் வழக்கமாய் நெல் குற்றுவது வழக்கம்.

பொன்னம்பலம் உண்ட களையில் சிறிது கண் அயர்ந்து கொண்டிருந்தார். சுப்பிரமணியம் வாசிகசாலைக்குப் போய்விட்டான்.

வள்ளிப்பிள்ளை வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு முற்றத்தில் வந்து அமர்ந்தாள். அவள் தனிமையில் இருப்பதுதான் தனக்குச் சாதகமான சந்தர்ப்பமென்று எண்ணிய தியாகராசன் மேசையில் ஏதோ எழுதியதையும் விட்டுவிட்டு அவள் பக்கலில் வந்து அமர்ந்தான். எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று அவனுக்கு விளங்கவில்லை.

''அம்மா!'' என்று மெதுவாய் அழைத்தான். வள்ளிப் பிள்ளை தன் முகத்தைத் திருப்பி ''என்னடா மோனை!'' என்று அன்போடு கேட்டாள்.

''நான் வேலையை விட்டது பற்றி உனக்கெல்லாம் கோபம், என்னணை? உண்மையைச் சொல்லு'' என்று அவன் மெதுவாகப் பேச்சைத்தொடங்கினான்.

வள்ளிப்பிள்ளை சிறிதுநேரம் ஒன்றும் பேசவில்லை. மகனுடைய முகத்தை தன் மெலிந்த கையால் நிமிர்த்தி, அவனையே பார்த்தாள். மகன் அழுகிறானோ என்ற ஐயம் அவளுக்கு.

தியாகராசன் அழவில்லை. ஆனால் அவன் முகத்தில் ஆழமான வேதனை இழையோடுவதை அவளால் அறிய முடியாதா? என்ன? அவள் மெதுவாய் அவன் நாடியைத் தடவினாள்.

''தம்பி! என்னடா மோனை பெரிசாய் யோசிக்கிறுய். இந்த வேலை கிடைக்காட்டி இருக்கிறதில்லையோ'' என்று ஆறுதல் கூறினுள்.

''அம்மா நான் அதுக்காக யோசிக்கேல்லை. என்றலை வீணுய் ஒரு பெம்பிளைக்கும் அவப் பெயரெண்டு யோசிச்சால்தான் வேதனையாய் இருக்கு'' என்று தியாகராசன் தளதளக்கும் குரலில் சொல்லி முடித்தான்.

''ஓமோம்! மோனை! அவள் பாவந்தான்! இந்த உலகம் மிச்சம் கெட்டது. பெண்ணுய்ப் பிறந்தாலே நரகந் தான்.''

புவனேஸ்வரியின் எதிர்காலம் பற்றி அவள் யோசித்ததமையால்தான் அந்த வேதனை ஏற்பட்டிருக்க வேண்டும்.

''சரியான தருணம் இதுதான்'' என்பதைத் தியாகராசன் அறிந்துகொண்டான். கடந்த இரண்டு நாட்களும் நடந்தவற்றையும், கடைசியாகத் தான் கொடுத்த உறுதி மொழியையும் அவன் விளக்கமாகச் சொன்னுன்.

வள்ளிப்பிள்ளைக்கு உலகமே தன் முன் சுழல்வது போல் இருந்தது. தான் தன் பிள்ளைகளைப் பற்றிக் கட்டிவைத்திருந்த கனவுக் கோட்டைகள் அனைத்தும் பொடிப் பொடியாய் உதிர்வதை அவள் உணர்ந்தாள். தியாகராசனு இப்படிப் பேசுவது? அவளால் நம்பவேமுடியவில்லை.

வள்ளிப்பிள்ளை தன் வாழ்க்கையில் உரத்துப் பேசியறியாள். மற்றவர் உள்ளம் நோக என்றுமே நடந்தறியாள். என்ன நிகழ்ந்தாலும் தன் இதயத்துக்குள்ளேயே அதை அடைத்து வைத்துத் தனிமையில் குமுறுவதே அவள் சுபாவம்!

ஆனுல் இன்று தன்னை அறியாமலே அவள் கண்களில் நீர்பெருகின. அவள் உடம்பு நடுங்கியது. பேச வாய் வரவில்லை. சிறிது பொறுத்துத் தன் உணர்ச்சிகளை அடக்கியவளாய் ''என்னடா மோனை? அவள் ஆர்? நாங்கள் ஆர்? [illegible]

யாமல் எழுந்தமானத்திலே போய் விழுகிறதே தம்பி!" என்று தன் மகனைப் பார்த்துக் கேட்டாள்.

தியாகராசனின் கண்களும் கலங்கின. "அம்மா! உன்ரை மோன் எப்பவாவது பிழையான வழியிலே போய் விழுவானே? நீ ஏன் அதை யோசிக்கேல்லை" என்று அவன் சமாதானப்படுத்தும் வகையில் பேசினான்.

"சாதகம் பார்க்கவேணும். பொருத்தமோ எண்டு அறியவேணும். இதுக்கெல்லாம் முதலிலை உன்ரை அப்புவின்ரை சம்மதம் பெறவேணும். இதென்னடா தம்பி! எல்லாத்தையும் போலை விளையாட்டே?"

தியாகராசன் அவள் மடியில் தன் தலையை வைத்துக் கொண்டு "அம்மா! உன்ரைமோன் கொடுத்த வாக்குறுதியிலிருந்து தவறலாமே? அவளோ ஒரு முரட்டுப் பிடிவாதக்காரி. எங்கடை கலியாணம் நடக்காவிட்டால் அவள் ன்ன செய்யிறாளோ? அல்லாமலும் ஒருத்திக்கு வாக்குக் காடுத்துட்டு, பிறகு வேறொருத்தியைக் கட்டினால் ன்ரை வாழ்க்கைதான் நிம்மதியாய் இருக்குமே? சொல் ம்மா?" என்று சிறு குழந்தை போலத் தேம்பிக்கொண்டு றினான்.

வள்ளிப்பிள்ளை தன்மகனின் தலையை ஆதரவோடு டவிவிட்டாள். "என்னவோ உங்கடை சுகந்தான் ன்ரை சுகம். நீயும் நாலெழுத்துப் படிச்சிருக்கிறாய். சித்து உன் மனதுக்குச் சரியானதைச் செய்." என் ள்.

தியாகராசன் துள்ளி எழுந்தபடி, "சரி அம்மா. உன்ரை மதம் மட்டும் போதாது. இதை நான் எப்படி அப்பு ம் சொல்லுவது? நீ தான் சொல்லி அவரைச் சரிப் த்த வேணும். என்ன?" என்று குதூகலம் குமிழியிடக் னான்.

வள்ளிப்பிள்ளையும் பெருமூச்சோடு "சரி" என்றாள்.

★

அன்று இரவு எல்லோரும் படுத்த பின்புதான் பொன்னம்பலம் வந்தார். பக்கத்து ஊரில் போய் ''எரு'' ஏற்றி வந்து தோட்டத்தில் போட்டுப் பரவிவிட்டுவர இவ்வளவுநேரம் சென்றது.

மாடுகளைக் கொட்டிலில் கட்டி, அவற்றிற்குத் தீனி போட்டுவிட்டுக் கால் முகம் கழுவி, விபூதி தரித்துக்கொண்டு அவர் வந்து சாப்பிட உட்கார்ந்தார். சரியான பசியும் களைப்பும் அவருக்கு.

வள்ளிப்பிள்ளை வட்டிலில்உணவைப்பரிமாறினுள்.உணவு வயிற்றில் செல்லச்செல்லக் களைப்பு சிறிது சிறிதாய்க் குறைந்தது. அவர் முகமும் மலர்ந்துகொண்டு வந்தது. அந்த நேரத்தில்தான் அவருடன் கலகலப்பாய் பேசலாமென்று வள்ளிப்பிள்ளைக்குத் தெரியும். அவள் சாவதானமாக நடந்த- நடக்க வேண்டிய விஷயங்களை விபரித்தாள்.

பொன்னம்பலத்திற்கு அவள் விபரங்களைக் கேட்கக் கேட்க, கலகலப்பான சுபாவம் மாறிக் கோபம் விஷம் போல ஏறத் தொடங்கியது. ''சீ! பொத்து வாயை. என்ரை மோனுக்கு ஒரு வேலையையும் ஒழுங்காய்ப் பார்க்கத் தெரியாது. போற இடங்களிலெல்லாம் சண்டை. பொழுது விடிஞ்சால் ஒரு நேரச் சோற்றுக்கு உழைக்க வக்கில்லை. இதுக்குள்ளை ஆரோ ஒருத்தியைக் கலியாணம் பண்ணப் போருனும், கலியாணம்!'' என்று அவர் பொரிந்து தள்ளினுர்.

வள்ளிப்பிள்ளை அவர் வாயைப் பொத்தினுள். ''உஷ்! இரையாதேயுங்கோ. மெதுவாய்ப் பேசுங்கோ. நாங்களும் ஒண்டுக்காறு பெம்பிளைப்பிள்ளை பெத்தனுங்கள். எங்கடை பெட்டை ஒருத்திக்கு இப்படி ஒரு பழி வந்தால் எங்களாலை தாங்க முடியுமே? அந்தப் பொடிச்சியும் பாவமல்லே. தகப்பனுமில்லையாம். ஒரு விசர்க்கிழவிதான் தாய். அவளுக்கு வாழ்வளிச்சால் எங்கடை பிள்ளைகளுக்கும் கடவுள் இரக்கம் காட்டுவார். ஆருடை ஏழாய் அவளும் வந்திருக்கட்டுமே? உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன்.

பொடியன்ரை மனசுக்கு வேதனையைக் கொடுக்காதேங்கோ. இப்பவே அவனுக்கு மனம் நொந்துகிடக்கு'' என்று அவள் தன் கணவனைக் கெஞ்சினுள்.

பொன்னம்பலத்திற்குச் சடுமுட்டாய்க் கோபம் வரும். சில நிமிஷங்களிலேயே வந்த சுவடும் தெரியாது மறைந்து போகும். அதுமட்டுமல்லாமல் அவர் தம் மனைவியின் சொல்லுக்கு அடங்கியவர். அவளுடைய பெருமையும், அருமையும் அவருக்குத்தான் தெரியும். வள்ளிப்பிள்ளை சொன்ன நியாயங்களும் அவருக்குச் சரியாகவே பட்டன.

என்றாலும் தன் தோல்வியை உடனடியாக ஒப்புக் கொள்வது மனித சுபாவமல்லவே! ஆகவே, அவர் 'சிடுசிடு' என்றுமுகத்தை வைத்தபடி வட்டிலைச்சப்தம் கேட்கத் தள்ளி விட்டு, ''என்னவாவது செய்து தொலையுங்கோ? எனக் கென்ன?'' என்று சொல்லி எழுந்திருந்தார். வெளியில் சென்று கைகழுவினுர்.

சிறிது நேரத்தில் அவர் சென்று தமது படுக்கையில் சாய்ந்தார். வள்ளிப்பிள்ளை அன்றிரவு ஒன்றுமே சாப்பிட வில்லை.

கணவனை அமைதிபெறச் செய்தாயிற்று. மகனுக்கும் அவன் நினைத்த வழியிலேயே செல்ல இடமளித்தாயிற்று. இன்னும் அவளுக்கு என்ன வருத்தம் இருக்கிறது?

''முதலில் புவனத்திற்குக் கலியாணம் செய்துவைத்து அதன் பிறகுதான் பார்த்து நல்ல பெண் ஒருத்தியைத் தெரிந்து மகனுக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டும்'' என்று அவள் நினைத்திருந்தாள். ஆனுல், அந்த நினைவு வெறும் பகற்கனவாகிவிட்டது வருத்தமாய் இராதா?

''கடவுளே! நான் பொன் வேண்டவில்லை. பொருள் வேண்டவில்லை. ஆனுல்என் ஆசைதீர என் விருப்பத்திற்கு இந்தஇரண்டு பிள்ளைகளுக்கும் ஒரு நல்லதைச்செய்ய நீ விட மாட்டாய் போல இருக்கு'' என்று நொந்துபோன அவள் உள்ளம் ஏங்கிக்கொண்டிருந்தது.

# 31.

தணிகாசலம், புவனேஸ்வரியின் கடிதத்தை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தான். பதுளையில் யாழ்ப்பாணக் கடிதங்கள் பின்னேரங்களில்தான் பட்டுவாடா செய்யப்படுவதுவழக்கம். எனவே கல்லூரிக் காரியாலயத்தில் கல்லூரி முடிந்ததும் தபாற்காரன் வரும்வரையில் காத்திருப்பான் தணிகாசலம்.

கடிதங்கள் வந்தன. ஆனால், புவனேஸ்வரியின் கடிதத்தைத்தான் காணவில்லை. கடிதக்காரனின் தலையைக் கண்டதும் ஆவல் பூக்கும் முகத்தோடு அவனை நெருங்கி, பின் கடிதத்தைப் பெறாது ஏமாற்றம் முகத்தைக் கருக்கத் திரும்புவது சகஜமாகிவிட்டது. எத்தனையோ நாட்கள் கடிதங்கள் கொடுக்கப்பட்டதன் பின்னரும், "கடிதம் வேறு எனக்கு இல்லையோ?" என்று தணிகாசலம் கேட்டுப் பரிகாசத்திற்கு உள்ளாகியிருக்கிறான். ஆனால், அவன் ஆவல் தணிந்தால் தானே?

சனிக்கிழமைகளிலும்கூடக் கடிதத்தை எதிர்பார்த்து தபாற்கந்தோரிலேயே நீண்ட நேரம் நிற்பான். முன்பெல்லாம் அவன் கேட்டதன் பின்னரே "கடிதம் இல்லை" என்று சொன்ன தபாற்காரன் இப்பொழுதோ அவனைக் கண்டவுடனேயே தலையைச் சிறிது அசைத்து, முகத்தைச் சுளித்துக் கடிதமில்லை என்பதைத் தணிகாசலத்திற்கு விளக்கினான்!

*

ஏமாற்றமும், அவமானமும் அவனை வாட்டின. நாட்செல்லச் செல்ல, 'ஒருவேளை கடிதம் புவனேஸ்வரியின் கைக்குக் கிடைக்கவே இல்லையோ?' என்று ஐயுறத் தொடங்கினான். "தியாகராஜனின் கையில் கிடைத்திருந்தால்...?" நினைத்துப் பார்க்கவே அச்சமாயிருந்தது அவனுக்கு.

இந்த நிலையில்தான் தியாகராசன் எழுதிய கடிதம் அவனுக்குக் கிடைத்தது. கடித உறையின்மேல் எழுதியிருந்த விலாச எழுத்துக்களே அக் கடிதம் தியாகராசனுடையதென்பதை அவனுக்குத் தெளிவாய் விளக்கின. 'இன்னும் என்ன சாட்டையடி காத்திருக்கிறதோ?' என்ற பதற்றத்தில் தணிகாசலம் கடித உறையைக் கிழித்தபொழுது அதன் 'மூலை' கோணல் மாணலாய்க் கிழிந்தது; நல்லகாலம்; கடிதம் கிழியவில்லை.

தணிகாசலம் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினன்.

புன்னலை,
15-11-49

அன்பார்ந்த தணிகாசலம்,

முதலில் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தான் இந்தக் கடிதத்தைத் தொடங்கவேண்டி இருக்கிறது. உன் நண்பன், உன் தாழ் பணிந்து வேண்டுவதாய் எண்ணி என்னை மன்னித்துவிடு. கைநீட்டி உன்னை அடித்ததற்காகவும், கண்ணியமற்ற கடுஞ் சொற்களைப் பிரயோகித்ததைமைக்காகவும் என்னை மன்னித்துவிடு. உன் உள்ளத்தையும், என் சகோதரியின் உள்ளத்தையும் நொருக்கினேன். அதற்காக என்னை மன்னித்துவிடு.

நான் உங்கள் இருவருடைய வாழ்வுக்கும் குறுக்கே நின்றேனென்றல் அதற்குக் காரணம் என் சுயநலந்தான். 'உலகம் என்னைப் பழிக்குமே!' என்ற கோழைத் தனத்தால், தூய்மையான உங்கள் அன்பின் அளவை என்னல் உணரக்கூட முடியவில்லை.

காதலின் அருமையை உணராதவன் நான். பாசம் இன்ன தன்மையது என்று அறியாத பத்தாம்பசலி நான். அதனல்தான் ஒட்டிவந்த உங்கள் உள்ளங்களை வெட்டிப் பிரிக்க முனைந்தேன். இவையெல்லாம் பழைய நிகழ்ச்சிகள்; பயங்கரக் கனவுகள்.

என் தங்கை உன்னை விரும்புகிறள். இந்தக் கடிதத்தை நான் எழுதும்போதுகூட அவள் உன்னை நினைத்து நெடு

மூச்சுகள் எறியவும் கூடும்! இனி அந்த நெடுமூச்சுகளுக்கு இடமில்லை. உன் ஏக்கத்திற்கும் வழியில்லை. அந் நிலைமையை ஆக்கி வைப்பது என் பொறுப்பு.

நண்ப,

உன்னளவு ஆழமான உணர்ச்சியோடு காதலிக்க எனக்குத் தெரியாவிட்டாலும், அந்த மெல்லுணர்வு இன்று என் உள்ளத்திலும் ஓரளவு செறிந்துகொண்டுதான் இருக்கிறது.

(இந்த இடத்தில் தியாகராசன் தனக்கும், மங்கையர்க்கரசிக்கும் ஏற்பட்ட அவதூறுகளையும், அதன் பலாபலன்களையும் விளக்கி எழுதியிருந்தான்.)

நிற்க, உன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். இந்த விடுமுறைக் காலத்திலேயே எங்கள் எதிர்காலத்திற்கான திட்டத்தை வகுத்துவிடல் வேண்டும். ''நன்றும் இன்றே செய்க'' என்ற பழமொழி நீ அறிந்ததுதானே?

மீண்டும் வேண்டுகிறேன். என்னை மன்னித்துவிடு; பழையவற்றை மறந்துவிடு; வாடிக்கிடந்த பாலையாய்விட்ட எங்கள் உள்ளங்கள், பசுங்கனிச் சோலைகளாக மாறட்டும்! அங்கு நட்பென்னும் இன்மலர் மலர்ந்து மணம் வீசட்டும்!

உனக்கு என் வாழ்த்துக்கள்
உன்—தியாகராசன்

என்று எழுதப்பட்டிருந்த கடிதம், தணிகாசலத்தை விண்ணிலே பறக்கவைத்துவிட்டது. அளவுமீறிய மகிழ்ச்சியால் அவனின் மூச்சே திணறியது. இந்த ஆனந்தத்தை யாரோடாவது பகிர்ந்துகொள்ள வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

அன்று வெள்ளிக்கிழமை; நேரம் பிற்பகல். அவன் உடனேயே புறப்பட்டு கந்தையாவிடம் சென்றான்.

அவனுடைய மகிழ்ச்சியின் அளவைக்கண்டு கந்தையா பெரும் வியப்பெய்தினான். ஆயினும் அவன் எதையும் துளைத்துக் கேட்கவில்லை; ''தணிகாசலமே சொல்லட்டும்'' என்று இருந்தான். தணிகாசலமும், தான் அதுவரை கந்தையாவுக்கு மறைத்து வைத்திருந்த விஷயங்களையெல்லாம் விளக்

கிக் கூறினான். அவன் முற்பிறப்பில் ஒரு கவிஞனாய் இருந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு 'கயஸா'கவாவது இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இவ்வளவு அற்புதமாகத் தன் உள்ளத்து உணர்ச்சிகளை அவனால் உருவகப் படுத்திக் காட்டியிருக்க முடியாது.

எல்லாவற்றையும் கேட்டு முடிந்ததும், கந்தையா கடகடவென்று சிரித்தான்.

''அடிச்சானும் பிரைஸ்! அப்படிச் சொல்லு. நீ இவ்வளவு நாளும் காதற் சக்கரத்திலா சுழன்றுகொண்டிருந்தாய்? என்றாலும் நீ கெட்டிக்காரன்தான்! இத்தனை வயது வந்தும், 'பீஷ்மர்' போல நான் இருக்க, நீ காரியத்தில் முந்திவிட்டாய்'' என்று சிரிப்புக்கிடையே அவன் கூறினான்.

''ஏன்? நீயும் விரைவில் ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்வதுதானே?'' என்று தணிகாசலம் அவனை இடைமறித்துக் கேட்டான்.

கந்தையா மீண்டும் சிரித்தான். ''இந்த ஐயாவின் வாழ்க்கையே மிக மிகச் சுருக்கமானது. இந்தச் சிறிய காலத்திற்கிடையிலே ஒரு பெண்ணையும் சேர்த்துக்கொண்டு அவள் வாழ்வை நான் பாழாக்க விரும்பவில்லை.''

''சே! அப்படியெல்லாம் அபசகுனம் மாதிரிப் பேசாதே'' என்று தணிகாசலம் அவன் வாயைப் பொத்தினான். கந்தையாவோ மேலும் மேலும் சிரித்தவண்ணம் இருந்தான். பின்பு, ''காயமாவது பொய்யடா; இது காற்றடைத்தவோர் பையடா'' என்று பாடத் தொடங்கினான்.

சிறிது நேரத்தில் அவன் அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு தணிகாசலத்தையும் அழைத்தபடி சாப்பாட்டு விடுதிக்குப் போனான்.

# 32.

விடுமுறை எப்பொழுது வருமென்று காத்திருந்தான் தணிகாசலம். அதுவும் ஒருவழியாய் வந்தது. வீட்டிற்கு வந்த கையோடு அவன் தியாகராசனிடம் போனான். இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். தணிகாசலத்தின் கண்கள் பேச்சினிடையே அங்குமிங்கும் சுழல்வதைத் தியாகராசன் கவனித்துவிட்டு, தன் உதடுகளிடையே ஒரு சிறு நகையை உதிர்த்தான்.

பின் அவன், ''புவனேஸ்வரி! புவனேஸ்வரி!!'' என்று கூப்பிட்டான். ''என்ன அண்ணே?'' என்று உள்ளே இருந்து பதில் வந்தது. ''இங்கே ஒருக்கால் வந்திட்டுப் போ'' என்று அவன் சொன்னான். பதில் இல்லை; புவனேஸ்வரியும் வரவில்லை.

தியாகராசன் அர்த்தபுஷ்டியோடு சிரித்தான். தணிகாசலம் ஒன்றும் விளங்காது சிரித்தான்.

''தணிகாசலம்! இது கிராமம்; ஒரு கன்னிப்பெண் விவாகம் ஆகமுன்னர் தன் எதிர்காலக் கணவன்முன் வர மாட்டாள்'' என்று சிரித்தபடியே தியாகராசன் சொன்னான்.

தணிகாசலத்தின் முகம் மலர்ந்தது.

★

தொடர்ந்து சம்பவங்கள் விரைந்து நடந்தன. ஒரு கிழமைக்குப்பின் கந்தையாவும் விடுமுறைக்கு வந்துவிட்டான். திருமண முயற்சிகளில் அவன் ஒரு தூண்போல நின்று உதவினான்.

திருமணப் பேச்சுக்கள் தொடங்கின. இதுவரை எங்கோ மூலையிலிருந்தவர்களெல்லாம் இந்தச் சமயத்தில் உறவுகொண்டாடி வந்து, ஒவ்வொரு விஷயத்திலும் குற்றம் குறை காணத் தொடங்கினர்.

எப்பொழுதோ பொன்னம்பலத்தின் மாமனுடைய மைத்துனனின் தம்பி, எங்கோ கோவிய வீடு ஒன்றில் விவாகம் செய்தது சந்திக்கு இழுபட்டது. மங்கையர்க் கரசியின் தந்தை பண்டாரம். பொன்னம்பலம் வெள் ளாளன் என்று பேச்சு அடிபடத் தொடங்கியது. வய தால் நரைத்த மயிரோடும், கறுத்த உள்ளத்தோடும் சிலர் வந்தனர்.

''பொன்னம்பலம், உந்தப் பெட்டையின்ரை வீட்டிலே நீ செம்புந் தண்ணியும் எடுத்தால், பிறகு எங்கடை சபை சந்தி ஒண்டுக்கும் நீ வரக்கூடாது; நல்லாய் யோசித் துச் செய்'' என்றார்கள்.

தணிகாசலத்தின் தந்தைக்கும் விஷப் போதனைகள் நடந்துகொண்டுதானிருந்தன. ''இராமநாதர்! பொன்னுலே யான்ரை வீட்டுக்கோ பெண் எடுக்கப் போறுய்? இந்தக் காலத்திலே ஒரு தோட்டக்காரனுக்குக்கூடப் பத்தாயிரம், இருபதினயிரம் எண்டு சீதனம் கொடுக்கிறுங்கள். உன்ரை மோனுக்குச் சீதனம் ஒரு வீடுவளவும், ஏதோ இரண்டாயிரத் திற்கு நகையுந்தானே? இது போதுமே?'' என்று பலர் அவருக்காக அனுதாபப்பட்டார்கள்.

நல்ல காலம்! இவர்கள் பேச்சுக்களுக்கு இருபகுதியா ரில் ஒருவர்கூடக் காது கொடுக்கவில்லை. அவர்களின் எண்ணமெல்லாம், தங்கள் பிள்ளைகள் நல்லாய் இருந்தால் போதும் என்பதிலேயே இருந்தது. வந்தவர்கள் தம் குறிக்கோள் நிறைவேருது ஏமாந்து போனதுதான் மிச்சம்.

''பார்த்தாயா? தணிகாசலம்! 'யாழ்ப்பாணத்தான்ரை குணம்' என்று யாராவது பேசினல் உனக்கு மூக்கின்மேல் கோபம் வந்துவிடும். இப்போது பார்; யாழ்ப்பாணத்தான் குணம் எப்படியென்று பார். இவர்களில் யாராவது ஒருவர் நீயோ, நானே வறுமையில் தத்தளிக்கையில் ஒரு அனு தாபச் சொல் சொன்னர்களா? கைகொடுத்து உதவினர் களா? இல்லை! இன்றைக்கு நாங்களும் ஏதோ ஆசிரியர் களாகி இரண்டுகாசு உழைக்கிறேம். திருமணம் நடக்கப்

போகிறது என்றவுடன் குறைகளின் பட்டியலைத் தயாரித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். கேடுகெட்டவர்கள்'' என்று தியாகராசன் மனம் பொருமினன். தணிகாசலம் ஒன்றும் பேசவில்லை! அவன் சாதித்த மௌனமே அவன் எவ்வளவுதூரம் இச் செயல்களால் வருந்துகின்றன் என்பதைக் காட்டியது.

★

''என்ன மோனை செய்யிறது? வீடுவளவும் தந்து, இரண்டாயிரத்துக்கு நகையும் போடுறன் எண்டு சொல்லிப் போட்டன். ஒரு செம்பால் அடிச்ச சல்லிக்கு என்னிட்டை வழியில்லை. இப்ப வளவை ஈடழிச்சு, நகையும் போட நான் என்ன செய்வன்?''என்று மிகுந்த மனவருத்தத்தோடு பொன்னம்பலம் சொன்ஞர்.

தியாகராசன் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான். 'பார்க்கப்போனுல் இந்த விஷயத்தில் கவனமெடுக்க வேண்டியதும், வருந்தவேண்டியதும் நான். ஆனுல், முதுமை அடைந்துவிட்ட என் தந்தையல்லவா இன்னும் எல்லாக் கவலைகளையும் தன்மேல் போட்டுக்கொண்டு வருந்தவேண்டியுள்ளது' என்று அவன் நெஞ்சம் குமுறியவண்ணம் இருந்தது. ஆனுல், அவனுல் என்ன செய்ய முடியும்?

அவர்களுக்குப் பக்கத்திலிருந்து அவர்கள் சொன்னவற்றைக் கேட்ட கந்தையா, சிறிது யோசித்துவிட்டு, ''அப்பு! ஒண்டுக்கும் பயப்படாதையுங்கோ. என்ரை அம்மா செத்தபோது, என்ரை பேரிலை அவவின்ரை வளவை வித்து அப்பு காசு போட்டவர். அப்ப நான் 'மைனர்.' அது ஒரு ஐயாயிரத்துக்குக் கிட்ட இருக்கும், அதை எடுத்து இப்போதைக்குச் சிலவைப் பார்ப்பம். பிறகு கொஞ்சக் காலத்தில் தியாகராசன் எப்படியோ உழைச்சு திருப்பித் தரட்டும். என்ன சொல்றியள்?'' என்று சொன்ஞன்.

தகப்பனும், மகனும் கந்தையாவைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் முகத்தில் வியப்பும், அதிர்ச்சியும் ஆழப் பதிந்திருந்தன!

''தம்பி! எங்களிட்டையோ தரப் பொறுப்பு ஒன்றுமில்லை. இந்த நிலையிலை உன்னிட்டைக் காசை எப்படிக் கைநீட்டி வாங்கிறது? உன்ரை கொப்பு முதலிலை இதுக்கு விடுவாரோ? ''பொடியனை ஏமாத்திக் காசை வாங்கிப் போட்டான்'' என்டு என்னைப் பேசமாட்டாரே? உன்ரை கொப்புக்கும் எனக்கும் இண்டைய நேற்றைய பழக்கமில்லை. தம்பி! உணர்ச்சிவசப்பட்டு ஒண்டைச் செய்ய நினைச்சிட்டுப் பிறகு கஷ்டப்படாதை'' என்று பொன்னம்பலம் தீர்மானமாகச் சொன்னார்.

''கந்தையா! என் நிலை உனக்குத் தெரியும். நானே வேலையற்றவன். நீ சொன்னதுபோல் உன் காசு ஐயாயிரத்தையும் கொஞ்சக் காலத்தில் என்னால் திருப்பித்தர முடியாது'' என்று நெட்டுயிர்ப்போடு தியாகராசன் கூறினான்.

கந்தையா அவனின் தோளில் தொட்டு, ''உனக்கு தன்னம்பிக்கை இல்லையா? கஷ்டப்பட்டு ஒரு நாலு புத்தகம் எழுதினுயென்ருல் ஐயாயிரத்தைப் பத்தாயிரமாய்த் திருப்பித் தர உன்னால் இயலாதா?'' என்ருன். பின் பொன்னம்பலத்தின் பக்கம் திரும்பி, ''அப்பு! பயப்படாதையுங்கோ. இது என்ரை அம்மாவின்ரை காசு. அப்பு சின்னம்மாவைக் கலியாணம் முடிச்சதுக்குப் பிறகு என்னை நடத்தினமாதிரி உங்களுக்குத் தெரியுந்தானே? இப்ப எங்களுக்கிடையிலை பேச்சுப் பறைச்சலே இல்லை. அவர்,நான் தன் மகன் என்பதை மறந்தே பல வருசமாய்ப் போச்சு. நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதேங்கோ. கலியாண அலுவலைத் தொடர்ந்து கவனியுங்கோ'' என்று சொல்லிவிட்டு அவன் எழுந்து போனான்.

தியாகராசனும், தந்தையும் அவன் போகும் திசையையே நோக்கியிருந்தனர். ''இவன் மனிசனல்ல; தெய்!

வம்!'' என்று தளதளத்த குரலில் பொன்னம்பலம் கூறினார். அந்தக் கருத்தைத் தியாகராசன் மானசீகமாய் ஒத்துக்கொண்டான். தணிகாசலம் கந்தையாவை உருவகப்படுத்திக் காட்டியதிலும் பல்லாயிரம் மடங்கு உயர்ந்தவனாய் அவன் காட்சியளித்தான்.

தியாகராசனின் நெஞ்சம் உருகிக் கண்களில் வழிந்தது!

# 33.

ஒருவாறு எல்லா விஷயங்களும் பூர்த்தியடைந்தன. தை மாதமும் வந்தது. இன்னும் இரண்டு நாட்களில் திருவளர் செல்வன் தியாகராசனுக்கும், திருவளர் செல்வி மங்கையர்க்கரசிக்கும், திருவளர் செல்வன் தணிகாசலத்திற்கும் - திருவளர் செல்வி புவனேஸ்வரிக்கும் விவாகம் நடக்கப்போகின்றது.

வள்ளிப்பிள்ளை உட்பட எல்லோருக்குமே ஒரு சிறு குறை! 'பெரிய மணப்பந்தல் இட்டு, ஊருக்கெல்லாம் அறிவித்து, நாலுநாள் கொண்டாட்டங்கள் நடத்தவேண்டும்' என்பது அவர்கள் விருப்பமாய் இருந்தது.

ஆனால், தியாகராசனும், தணிகாசலமும் ஒரேயடியாய் அதற்கு மறுத்துவிட்டார்கள்.

''சீ! இது என்ன பைத்தியக்காரத்தனம்? நாங்களோ ஏழைகள். எங்கள் நிலைபரத்தை மீறி, வீண் ஆடம்பரமாய் எல்லாவற்றையும் செய்தால், நாளைக்கு குத்துவிளக்கில் தான் கணக்குப் பார்க்க வேண்டும். இந்தக் கலியாணம் கூட இப்பொழுது கடன்பட்டுத்தான் செய்கிறோம். இதில் வேறு செலவுகளை வளர்த்து மேலும் கடனில் மூழ்க வேண்டுமா?''

''அம்மா, நான் முதல் ஆண்பிள்ளை என்றும், தன் ஆசைதீர இந்தத் திருமணத்தை நடத்திவிடவேண்டும் என்றும் சொல்கிறு. இந்த ஆசை அர்த்தமற்றது! இரண்டு

நாள் ஆனந்தத்தை அனுபவித்துவிட்டு வாழ்நாள் முழுவதும் கடன் தொல்லையை நினைத்து நாங்கள் வருந்துவதை அவசியம் விரும்பமாட்டா. என்னனை அம்மா! சொல்லன்?'' என்று தியாகராசன் உணர்ச்சியோடு பேசினன்.

வள்ளிப்பிள்ளை பலவந்தமாய்த் தன் முகத்தில் மலர்ச்சியைப் படரவிட்டு, ''ஓம் மோனை! நீ சொல்லிறதும் சரிதான்'' என்ருள்.

ஆனல், பொன்னம்பலத்திற்கோ தியாகராசனின் கூற்று ஒத்துக்கொள்ளக்கூடியதாயில்லை. ''என்னடா தம்பி! பெத்த பிள்ளையளின்ரை நல்லதுகள் நடக்கும்போதுதானே எங்களுக்கும் சந்தோஷம். நாலுபேர் வந்து போனல் எங்களுக்கு எவ்வளவு திறுத்தியாயிருக்கும். தெரியுமே? அல்லாமலும் நாங்கள் நல்லாயிருந்த காலத்திலை எத்தனை சாமத்தியச் சடங்குக்குப் போயிருப்பம்? எத்தனை கலியாணவீட்டுக்குப் போயிருப்பம்? சும்மாயே போனனுங்கள்? அங்கையெல்லாம் பத்தெண்டும், பதினைஞ்செண்டும் கொடுத்திட்டுத்தானே வந்தம்? அந்தக் கடனையெல்லாம் எப்ப திருப்பி வாங்கிறது? இதை விட்டால் எப்ப வசதி வரப்போகுது? கந்தையா நீதான் சொல்லு பார்ப்பம்'' என்று இறுதியில் தம் பக்கத்திற்குப் பலம் தேடுபவர்போலக் கந்தையாவைக் கேட்டார் அவர்.

கந்தையா சிரித்துவிட்டு, ''அதற்குத்தான் சுப்பிரமணியம் இருக்கிருனே! அவன்ரை கலியாணத்திலை எல்லாக் கடனையும் வட்டி முதலோடை வாங்கிப்போடுவம்'' என்ருன். அவன் பேச்சுக்குத்தான் இப்பொழுது அப்பீல் கிடையாதே!

இறுதியாய்ச் செல்வச்சந்நிதி கோயிலில் திருமணங்களை நடத்துவதாய்த் தீர்மானமாயிற்று.

மங்கையர்க்கரசியின் பக்கத்தில் மகேஸ்வரியும் கணவனும் ஓடி ஆடி வேலை செய்தார்கள். தியாகராசன் வீட்டிலும், தணிகாசலம் வீட்டிலும் அடிக்கடி ஆபத்பாந்தவனாய்த் தோன்றி இரவு, பகல் பாராது கந்தையா வேலை செய்தான்

அவனின் சைக்கிள் அடிக்கடி 'பனம்பால் நிலயங்' களின்முன் நின்றது. மும்முரமான வேலைகளில் ஈடுபடும் போது கந்தையாவுக்கு உணவுகூட அவசியமில்லை. ஆனால் இந்தப் பனம்பாலில் இரண்டு போத்தல்கள் உள்ளே சென்றால்தான், ஆவேசத்தோடு நாலாள் வேலையைத் தனி ஒருவனாக அவன் முடிப்பான். அந்த நேரங்களில் அவனுடைய கலகலப்பான சுபாவமும், ஹாஸ்ய வெடிகளும் எந்த சிடுமூஞ்சியையும் காந்தம் போலக் கவர்ந்திழுத்துவிடும்.

திருமண நாளும் வந்தது. அமைதியான சூழலில் முருகன் சந்நிதியில் மங்கையர்க்கரசியதும், புவனேஸ்வரியதும் கழுத்துகளில் தாலிகள் ஏறின.

ஒரு கிழமைவரையும் துன்ப, துயரங்களையெல்லாம் மறந்து அந்த இளந் தம்பதிகள் ஆனந்தத்தில் திளைத்தனர்.

நிலவு பால் சொரிந்துகொண்டிருந்தது. மெல்லிளந் தென்றல் அந்த வேப்பமரத்தின் இலைகளைத் தழுவி விளையாடிய வண்ணம் இருந்தது. இரவு நடை பயிலும் சிறு குழந்தை போலத் தளர்நடை நடந்தும், விழுந்தும், எழுந்தும் போய்க்கொண்டிருந்தது.

தணிகாசலம் அந்த வேப்பமரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். அவனை மிக நெருங்கி புவனேஸ்வரி இருந்தாள். தணிகாசலம் அவளின் நெற்றியில் விழுந்து புரண்ட கூந்தற்சுருளில் குறும்பு செய்தவாறு, "புவனம் உன் உள்ளத்தைத் திறந்துகாட்ட உனக்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தன. நீயோ மௌனமாய் இருந்துவிட்டாய். அதனால் நான் அடைந்த வேதனை எவ்வளவென்று உனக்குத் தெரியுமா? இப்பொழுது நினைத்தால்கூட எனக்கு வருத்தமாய் இருக்கிறது" என்று மிகத் தணிந்த குரலில் கூறினான்.

புவனேஸ்வரி அவன் மடியில் தன் முகத்தைப்புதைத்த வண்ணம், "என்னை மன்னித்துவிடுங்கோ அத்தான்!

எனக்கு அந்த நேரங்களில் ஒண்டுமே விளங்கவில்லை. ஏதோ ஒண்டு என் நெஞ்சில் இருந்துகொண்டு என் உணர்ச்சிகளையெல்லாம் தடுத்துவிட்டது. உங்கள் வருத்தம் எனக்குத் தெரியும். ஆனால் அதைப் போக்க எனக்கு வல்லமை இருக்கேல்லை. என்னிலை கோபமா? எனக்கு ஒண்டும் தெரியாது. நான் உங்களுக்குத் தகுதியேயில்லாதவள்'' என்று நடுங்கும் குரலில் சொன்னாள்.

தணிகாசலம் அவள் முகத்தை ஆதரவோடு நிமிர்த்தினான். நிலவுக் கதிரின் ஒளி விழுந்ததால், உருண்டுகொண்டிருந்த அவள் விழி நீர், முத்துபோலக் காட்சி தந்தது.

## 34.

ஆசிரியப் பெரு மக்களுக்கு ஒரு வேண்டுகோள்.

பெரியீர்!

உலகிலுள்ள தொழில்கள் அனைத்திலும் மேம்பாடானது ஆசிரியத் தொழில். எதிர்காலப் பரம்பரைகளை உருவாக்கும் பெரும் பணி எம் கைகளிலேயே உள்ளது. மற்றைய தொழில்கள் அனைத்தும் உயிரற்ற கருவிகளோடோ, தாள்களோடோ தொடர்புற்றுள்ளன. நம் தொழிலோ உயிரும், உணர்ச்சியும் நிறைந்த சின்னஞ்சிறு மழலைச் செல்வங்களுடன் தொடர்புற்றுள்ளது.

இச்செல்வங்களை எதிர்காலத்தில் தலை நிமிர்ந்து நிற்கச் செய்வது எம் கடமையாதலின், அதற்கு நாம் நம்மைத் தகுதியுள்ளோராய் ஆக்கிக்கொள்ள வேண்டும். சுதந்திரமாகத் தலைநிமிர்ந்து நின்று, மனச்சாட்சியின் வழியில் நடக்க எவனால் முடியுமோ அவனே சிறந்த ஆசிரியனாவான்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக நாம் அடிமை மனப்பான்மையில் ஊறித் திளைத்துவிட்டோம். எதற்கும் அச்

சம். எதனிலும் தயக்கம். கூனிக்குறுகி வாழ்தலே எம் இன்றைய நிலையாகிவிட்டது.

''அப்பர் கல்வித் திருச்சபை'' உங்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. நம் நாட்டுப் பெரியோர் பலர் தமிழை யும், சைவத்தையும் தழைக்கவைக்க முயன்று அமைத்த திருச்சபை இது. இதன் முகாமையின் கீழ் பல பாடசாலை கள் உள்ளன. அங்கெல்லாம் பல ஆசிரியர்கள் கடமை யாற்றுகின்றனர். இவர்கள் வாழ்வு ஒரு சோகச் சித்திரம். முகாமையாளரின் கைப்பொம்மைகளாய். அவர் விருப் பத்தின்படி ஆடுபவர்களாய் இவர்கள் வாழ்கின்றனர்.

ஆசிரிய அன்பர்களே!

தூங்கிக்கிடந்தது போதும். துயரப் பெருமூச்சு விட் டது போதும். அடிமை உணர்வில் ஆழ்ந்து கிடந்தது போதும்.

ஒன்றுபடுவோம். நம் உரிமைக்கு உழைப்போம். இன்று தொட்டு அப்பர் திருச்சபையின் கீழ் உள்ள அனைவரும் ஒன்று திரளவேண்டும்; முகாமையாளரின் சர்வாதிகாரத் திற்கு சாவு மணி அடிப் போம்.

வருகிற மாதம் பன்னிரண்டாந் திகதி வியாழக்கிழமை பொதுக்கூட்டம் ஒன்றினை மணிவாசகர் பள்ளிக்கூடத்தில் நிகழ்த்தப் போகின்றோம். அப்பர் கல்வித் திருச்சபையில் கடமையாற்றும் ஆசிரியர் அனைவரும் திரண்டு வருக;''

புன்னாலை. பொ. தியாகராசன்,
ஆசிரியர்.

★

தியாகராசன் இவ்வாறு எழுதிய விளம்பரம் ஒன்றினை மங்கையர்க்கரசிக்கு வாசித்துக்காட்டினான். நேரம் இரவு பன்னிரண்டு மணி. அவனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. எனினும் பொறுமையை இழவாதவனாய்

அவன் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். வாசித்து முடிந்ததும் தியாகராசன், "இந்த விளம்பரம் ஓர் அளவாவது ஆசிரியர்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடும், இல்லையா?" என்றான்.

"ஆமாம்? நம்பிக்கொண்டிருங்கள். எங்களுடைய வாத்திமாருக்கா புத்திவரும்? சும்மாய் இந்த வீண் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு எங்காவது வெளியிடத்திலாவது வேலைதேடிப் பாருங்கள்" என்று அலுப்போடு கூறினாள் மங்கையர்க்கரசி.

"மங்கை! நீயா இப்படிப் பேசுகிறாய்? அநீதிக்கு அடி பணிந்து, அதுபற்றி அக்கறையேபடாமல் இருக்கச் சொல்கிறாயே? நாங்கள் என்ன உயிரற்ற சடலங்களா?" என்று தியாகராசன் சிறிது கோபத்தோடு கேட்டான்.

"என்னவோ நடந்தது நடந்துவிட்டது. நானும் அந்தக் கல்வித்திருச்சபையை விட்டுவிட்டேன். எப்படியோ ஓடி ஆடி பரிசுத்த கன்னியர்மடப் பள்ளிக்கூடத்தில் எனக்கும் இடம் எடுத்துத் தந்துவிட்டீர்கள். அந்தச் சபையில் உள்ளவர்கள் வேண்டுமென்றால் போராடிப் பார்க்கட்டுமே உங்களுக்கு என்ன வந்தது என்று" சிறிது படபடப்போடு மங்கையர்க்கரசி சொன்னாள்.

தியாகராசனுக்கு அவள் பேச்சு சிறிதும் பிடிக்கவில்லை. ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது அவனுக்கு. "சீ! இப்படிப் பேச உனக்கு வெட்கமாயில்லை? பக்கத்து வீடு பற்றி எரிகிறது! எனக்கென்ன பக்கத்துவீடுதானே என்றுபேசாமல் இருந்துவிட முடியுமா? அநீதி என்ற விஷவிருட்சத்தை அடியோடு வெட்டி வீழ்த்தித்தானாகவேண்டும். அதை நீரூற்றி வளர்ப்பவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்ததன் பின்தான் எனக்கு நிம்மதியான நித்திரை" என்று உணர்ச்சி கொந்தளிக்க வார்த்தைகள் தடுமாறப் பேசினான்.

கோபத்தால் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. சிவந்த அவன் விழிகளையும், மேல் நிமிர்ந்த புருவக் கற்றை

யையும் கண்டு மங்கையர்க்கரசி உண்மையிலேயே பயந்து போனாள்.

''என்னவாவது செய்யுங்கள். எனக்கு நித்திரை வருகிறது'' என்று கூறிவிட்டு அவள் எழுந்துபோய்த் தன் படுக்கையில் படுத்தாள். சிறிது நேரத்தில் நித்திரையாகியும்விட்டாள்.

தியாகராசன் அந்த விளம்பரத்தை மடித்துப் புத்தகம் ஒன்றினுள் வைத்தான். அடுத்தநாள் திட்டங்களை மனத்தில் வகுத்தபடி எழுந்து சென்று, யன்னலைத் திறந்து, அதனூடே வெளியுலகை நோக்கினான்.

எங்கும் கனத்துவிட்ட இருள் குமைந்துகொண்டிருந்தது. வானத்தை நோக்கினான். நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இறைந்து கிடந்தன. தூரத்தில் சவுக்க மரங்கள் காற்று வீசுவதால் 'ஓ'வென்ற பெரும் ஒலியை எழுப்பின.

உருவற்ற அவன் திட்டங்களுக்கு. கற்பனை சுரங்கள் அமைத்து அந்த சவுக்க மரங்கள் கீதம் இசைத்தனவோ?

## 35.

கந்தையாவும், தணிகாசலமும் முறையே பண்டாரவளைக்கும், பதுளைக்கும் போய்விட்டார்கள். தணிகாசலத்தின் வீட்டிலேயே புவனேஸ்வரியும்இருந்தாள். தியாகராசன் மங்கையர்க்கரசியை வீட்டிற்கு அழைத்துவந்து விட்டான், மங்கையர்க்கரசி நாள்தோறும் பஸ்ஸில் தன் புதிய பள்ளிக்கூடத்திற்குச் சென்றாள்.

தியாகராசனின் மூச்சும், பேச்சும் அப்பர் கல்வித் திருச்சபையைச் சீர்திருத்தி அமைத்தல் என்பதாகவே இருந்தது. பகலில் வீட்டிலிருந்து புறப்பட்டால் இரவு வெகு நேரம் சென்றே அவன் வீடுதிரும்பினான். அவனது

நேரத்தில் பெரும்பகுதி அப்பர் கல்வித் திருச்சபையிலுள்ள
ஆசிரியர்களைப் பேட்டி காண்பதிலேயே கழிந்தது.

✶

அப்பர் திருச்சபை வாத்திமாருக்கெல்லாம் தான்
அச்சடித்துக் கையோடு எடுத்துச் சென்ற விளம்பரங்களில்
சில பிரதிகளைத் தியாகராசன் கொடுத்தான். சிலர்
அவற்றை வாசிக்கவே அஞ்சினர். "நமக்கு ஏன் இந்தத்
தொல்லை? எங்களை இன்னும் கொஞ்சக் காலத்துக்கு
இப்படியே இருக்கவிடுமப்பா!" என்று கெஞ்சினர் சிலர்.
"எங்களுக்கும் உவருக்குப் பாடம் படிப்பிக்க விருப்பந்
தான். ஆனல் என்ன செய்யிறது? நாங்களோ பிள்ளைகுட்
டிக்காரர். இந்த வாத்தி வேலையைவிட்டால் வேறு வழி
யில்லை. தயவுசெய்து எங்களை உந்தக் கரைச்சலில் இழுத்து
விடாதையும்" என்று நடுநடுங்கி உரைத்தனர் சிலர்.
சிலரோ "என்ன தம்பி? அந்த மனிதனுக்கு எதிராய்
வேலைசெய்யிறதா? எங்கள் பிள்ளைகளுக்கு வித்தியாதானம்
அளிக்கும் வள்ளலல்லே அவர். அந்நாள் சும்மாய் வாத்தி
மாரை அளந்து பார்க்கிறதல்லாமல் ஒருவருக்கும் ஒரு
தொந்தரவும் கொடுக்கிறதில்லை" என்று இராமலிங்கத்
தைத் தாங்கிப் பேசினர்.

தியாகராசனுக்கு அவர்களின் போக்கைக் கண்டு,
இரக்கம், வெறுப்பு, கோபம் முதலிய பலவகைப்பட்ட
உணர்ச்சிகள் ஏற்பட்டன. "இந்த ஆசிரியர்களுக்கு
விடிவே இல்லையோ?" என்று அவன் ஏங்கினன்.

சில நாட்கள் வீடு திரும்பும் போது அவன் முகத்தில்
தோல்வி உணர்ச்சி அப்படியே எழுதி ஒட்டப்பெற்றிருக்
கும்! சில நாட்களிலோ முற்றிலும் நம்பிக்கை இழந்த
வனாய், வேதனை புகாரிடும் முகத்தோடு வருவான் அவன்.
அபூர்வமாய் ஏதோ ஒருநாள்தான் அவன் முகம் மலர்ந்
திருக்கும்.

எனினும் அவன் தன் நம்பிக்கையை இழந்துவிட
வில்லை. 'நம்பினோர் கெடுவதில்லை; நான்மறையின்

தீர்ப்பு' என்ற பாரதியின் மணிமொழியை இந்த சந்தர்ப்பங்களில் அவன் நினைத்துக்கொள்வான். பழையபடி உற்சாகமும், வேலை செய்வதில் விருப்பமும் ஏற்படும்.

நாட்கள் சென்றுகொண்டிருந்தன. கூட்டத்திற்கு நியமித்தநாளும் சமீபித்தது. இப்பொழுது தியாகராசனுடன் சேர்ந்து வேறுசிலரும் வேலை செய்தனர். பள்ளிக்கூட ஆசிரியர்களிடையேயும், பெற்றோர்களிடையேயும் பெரும் பிரசாரம் நடந்தது.

எத்தனை நாளைக்குத்தான் போலியாய்க் கண்மூடி நித்திரை செய்வது? நாட் செல்லச் செல்லத் தியாகராசனின் கூற்றில் உள்ள நியாயத்தைக் கண்டு பல ஆசிரியர்கள் ஒன்று திரண்டனர். கூட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்வதில் மும்முரமாயினர். கூட்டத்தில் முகாமையாளரைக் கேட்டுக்கொள்வதாய்ச் சில பிரேரணைகள் தயாரிக்கப்பட்டன. "இனி எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் முன்னிலையிலேயே ஆண்டுதோறும் முகாமையாளர் தெரியப்படல் வேண்டும். முகாமையாளரின்அதிகாரங்கள் வரையறை செய்யப்படல் வேண்டும்" என்பன அப்பிரேரணைகளுட் சில.

இப்பிரேரணைகள் ஏற்கப்படாவிடத்துச் செய்ய வேண்டியவை பற்றியும் ஆசிரியர்கள் கலந்து உரையாடினர். சத்தியாக்கிரக அடிப்படையில் தொடர்ந்து போராடி உரிமைகளைப் பெறுவதாய்த் தீர்மானமாயிற்று. நிதிகள் முதலியன திரட்டினுல் ஒத்துழைப்பதில்லை என்றும், தண்டனை என்ற வகையில் மாற்றம் நடாத்தினுல் பணிந்து போவதில்லை என்றும் ஆசிரியர் சங்கம் மூலம் தம் உரிமைகளைக் கல்வி இலாகா வரை எடுத்துச் சென்று போராடிப் பெறுவது என்றும் தம் போராட்டத் திட்டங்களை அவர்கள் உருவாக்கினர்.

பொதுக்கூட்டம் என்று வரும் வரும் என்று எதிர்பார்த்திருப்பதே ஆசிரியர்களின் கனவும் நனவுமாயின. அந்த நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. "இன்று நம்

ஆசிரியர்களிடையே ஒற்றுமை இல்லை. பதவி மோகமும் சுயநலமும் வளர்ந்து வருகின்றன. இவர்களை ஒன்று சேர்ப்பது முடியாத காரியம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதவி கொடுக்க முடிந்தால் அவர்களை ஒருவாறு ஒன்று சேர்க்கலாம். தியாகராாசன்! உன் முயற்சி வீண்'' என்று தணிகாசலம் சொன்னதற்கும், இப்பொழுது நடப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்? உண்மையிலேயே தியாகராசனுக்கு இது வியப்பாகவே இருந்தது.

அன்று தியாகராசன் வீடுசென்றபொழுது, அவனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

பண்டாரவளை
8-6-50

அன்பார்ந்த நண்ப!

உன் கடிதமும், கூட்ட அழைப்பிதழும் கிடைத்தன. உன் முயற்சியைக் கண்டு உண்மையிலேயே பெருமை அடைகிறேன். ஆசிரியர்கள் திரள்வதையும், அவர்கள் ஒற்றுமையின் சங்கநாதம் கேட்பதையும் அறிந்து நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

நீ குறித்த திகதிகளில் விசாக விடுமுறை வருகிறது. எனவே நீ நடாத்தும் கூட்டத்தில் நானும், தணிகாசலமும் வந்து கலந்துகொள்வோம்.

ஆசிரியர் உரிமை வெல்க!

அன்பன்
கந்தையா.

தியாகராசன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான் என்று சொல்லவேண்டுமா?

இன்னும் நாலுநாட்கள் சென்றால் பொதுக் கூட்டம்.

## 36.

இராமலிங்கம் காரியாலயத்திலிருந்து பொழுதுபடும் நேரத்தில் வீடு திரும்பினார். 'வளர்மதி' ஒளிவெள்ளத்தில் மூழ்கி இருந்தது. முன் அறையில் அவருடைய இளைய மகன் 'இலக்கிய மஞ்சரி' என்ற புத்தகத்தில் இருந்து ஒரு பாடத்தை உரத்து வாசித்துக்கொண்டிருந்தான்.

''பொருள் சம்பாதிக்குமிடத்து தரும நெறியாலே சம்பாதித்தல் வேண்டும். தரும நெறியால் வந்த பொருளே மேற்சொல்லிய பயன்களெல்லாவற்றையும் கொடுக்கும். களவு, பொய்ச்சான்று சொல்லல், பொய் வழக்குப் பேசல், பொய்ப் பத்திரம் பிறப்பித்தல், விசுவாசகாதகம், பரிதானம் வாங்கல், சுங்கங் கொடாமை முதலிய பாவ நெறிகளாலே வந்த பொருள், முன் செய்த புண்ணியத்தையும் கெடுத்து, இம்மையிலே தீராத வசையையும், சந்ததி நாசத்தையும், இராச தண்டத்தையும், மறுமையிலே நரகத் துன்பத்தையும் விளைவிக்கும்.''

மேலும் கேட்க முடியவில்லை. ''டேய்! நிறுத்தடா!'' என்று அவர் அங்கிருந்தபடியே சப்தம் போட்டார். அவன் வாசிப்பது நின்றது.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு இன்றுதான் அவர் வாட்டமுற்றிருந்தார். கலவரமடைந்து கறுத்துப் போய் இருந்தது அவர் முகாரவிந்தம். அறுபது வயதே ஆகியிருந்த அவர், தொண்ணூறு வயதுத் தொண்டுக்கிழவனைப் போலச் சோர்வடைந்து காட்சியளித்தார். ''வாழ்வே அர்த்தமற்றது'' போன்ற பிரமை தட்டியது.

★

இன்று பிற்பகல் நடந்த விஷயம் அவருக்கு நினைவில் வந்தது.

காரியாலயத்தில் அவரும் பரிஸ்டர் மூர்த்தியும், இராமுப்பிள்ளை வாத்தியாரும், செந்தில்நாதனும் இருந்தார்கள். எல்லாருடைய முகங்களிலும் சிந்தனை தேங்கிநின்றது.

''அட நேற்று முளைத்த சிறுபயல் என்ரை பாதைக்குக் குறுக்கே வர்றான். அவன் விலகினதோடை தொல்லை தீர்ந்தது என்று சந்தோஷமாய் இருந்தன். 'ஓட்டட்டிக்காய்' போலையல்லே பிடிச்சுக் கொண்டிருக்கிறான். என்ரை வாத்திமாற்றை மனத்தையும் கலைக்கிறானாம். ஏதோ பொதுக் கூட்டம் கூட்டுறானாம். இவனை என்ன செய்கிறது,'' என்று எல்லை கடந்த வெகுளியுடன் இராமலிங்கம் பேசினார்.

''அப்படி விட்டுத்தள்ளக்கூடிய விஷயம் இல்லை. அவங்கள் ஏதோ பிரேரணை நிறைவேற்றப் போறாங்களாம். இந்த அப்பர் திருச்சபை ஒரு பொதுச் சொத்தெண்டு வாதாடப் போறாங்களாம். அப்பர் திருச்சபையில் வாத்திமாருக்கும் அங்கத்துவம் வேண்டுமெண்டு கேக்கப்போறாங்களாம்'' என்று சோகம் கவிந்த முகத்தோடு இராமுப்பிள்ளை சொன்னார். ஆசிரியர்களின் கை உயர்ந்தால் தம் போன்றவர்களுக்குத் 'திரிசங்கு நிலை' ஏற்படுமென்ற உணர்வே அவருடைய சோகத்திற்குக் காரணம்.

''பொதுச் சொத்து! இந்தச் சபையிலை நாலு பள்ளிக்கூடங்கள் இருந்த பொழுது கையேற்று என்ரை கெட்டித்தனத்தாலை இண்டைக்கு நானூறு பள்ளிக்கூடங்கள் ஆக்கிப்போட்டன். இதுவரையிலை என்னோடை எவன் ஒத்துழைத்தவன் எண்டு கேக்கிறன்? நான் தனியனாய் நிண்டு என்ரை சொந்தக்காசையும் போட்டு இந்தச் சபையை இண்டைய நிலைக்குக் கொண்டுவந்தனான். அவைக்கு இண்டைக்குத்தான் பொதுச் சொத்தெண்டு தெரியுதாக்கும்'' என்று வியர்க்க விறுவிறுக்கக் கூறினார் இராமலிங்கம். அவர் சொல்லிய மாதிரியைப் பார்த்தால் அந்த முந்நூற்றுத் தொண்ணூற்றாறு பாடசாலைகளுக்கும் அத்திவாரமிட்டு,

சாந்து குழைத்து, மேசன் வேலை பார்த்து அவரே கட்டி வைத்தாரோ என்ற ஐயம் யாருக்கும் தோன்றாமலிராது.

★

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பரிஸ்டர் மூர்த்தி இப்பொழுது தம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர் கொஞ்சக்காலமாய் அதிகம் பேசுவதில்லை, சில சொற்கள் பேசி அதனாலேயே தம்கருமத்தைச் சாதித்துவிடலாமென்ற நம்பிக்கை தியாகராசனின் விஷயத்திற்குப் பின் அவருக்கு ஏற்பட்டிருந்தது. எனவே இதுவரை பொறுத்திருந்தவர், தம் திருவாய் திறந்து, பொன் மொழிகளை உதிர்க்கத் தொடங்கினார்.

"மிஸ்டர் இராமலிங்கம்! உங்களுக்கு மனிதர் மாதிரிப் பேசச் சரிவராது! கவனிக்கிறமாதிரிதான் கவனிக்க வேணும். கொஞ்சம் குனியும் சொல்லுறன்" என்றுசொல்லி இராமலிங்கத்தைக் குனிய வைத்து, அவர் காதிற்குள் ஏதோ குசுகுசுவென்று பேசினார்.

இராமலிங்கம் முகத்திலே பலவகை உணர்ச்சிகளும் மாறிமாறி வர்ணம் காட்டின. இறுதியில் சில நிமிடங்கள் உள்ளங்காலிலிருந்து உச்சிவரை விறைத்தவர் போல் ஆடாது அசையாது நின்றார்! "சீ! சீ! அது மிக மோசமான தண்டனை. அது வேண்டாம்" என்று உதடு நடுங்க அவர் கூறினார்.

"ஏன் மிஸ்டர் இராமலிங்கம் பயப்படுகிறீர்? உமக்கு இதனாலே ஒரு 'றபிளும்' வராமல் நான் பார்த்துக்கொள்ளுறன். முத்தையாதான் எபிஷன் டிரைவராச்சே? அவன் எல்லாத்தையும் 'கொறக்டாய்' முடிப்பான். நீர் அவனுக்கொரு 'ரூ தவுசண்ட் றுப்பீஸ்' கொடுத்தால் போதும். அதிகமில்லை, ரூ தவுசண்ட் றுப்பீஸ்!

இராமலிங்கம் நெடுநேரம் சிந்தித்தார். பழி வாங்கும் மனோபாவத்திற்கும், இரக்கத்திற்குமிடையே நீண்ட போராட்டம் நடந்தது. முடிவாக, பழிவாங்கும் மனோ

பாவமே வெற்றிபெற்றது. அவர் ஒன்றும் பேசாமல் இரண்டாயிரம் ரூபாவிற்குக் காசோலை எழுதி, பரிஸ்டர் மூர்த்தியிடம் கொடுத்துவிட்டு உடனேயே புறப்பட்டார். செந்தில்நாதனுக்கும், இராமுப்பிள்ளைக்கும் ஒன்றுமே புரியவில்லை. விழித்தனர்.

அங்கிருந்து புறப்பட்ட இராமலிங்கத்திற்கு நேரே வீட்டிற்கு வரத்தோன்றவில்லை. எங்கெல்லாமோ சுற்றித் திரிந்துவிட்டு வீடு திரும்பினார்.

வீட்டில் நிம்மதி கிடைத்ததா? ஓரளவு கடந்தவற்றை மறந்திருந்தவருக்கு, மகனுடைய வாசிப்பு புண்ணில் புளி இட்டதுபோல ஆயிற்று.

★

அவர் கூனிக் குறுகிப் போய் அந்தச் சுகாசனத்துள் ஒண்டிக் கிடந்தபடி கண்களை மூடினார். மூடிய விழிகளுள் "பரிஸ்டரின் திட்டப்படி முத்தையா காரை ஓட்டிச் செல்வது போலவும், கூட்டத்தால் திரும்பும் தியாகராசன் மீது காரை ஏற்றுவதுபோலவும், அவன் குருதி வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பது போலவும்" உருவெளித் தோற்றங்கள் உண்டாயின. உடல் சன்னி கண்டவர்போல் நடுக்கம் எடுத்தது.

இராமலிங்கம் பஞ்சமாபாதகங்களில் கொலை ஒன்றிற்குத்தான் இதுவரை அஞ்சியவர். இன்று அதற்கும் துணிந்து தம் பாப மூட்டையில் இன்னும் ஒரு பெரும் பாரத்தை ஏற்றுவதா? அவரால் தாழமுடியவில்லை. நெடுங்காலத்திற்குப் பிறகு விழித்துக்கொண்ட மனச்சாட்சியை மேலும் சாகடிக்கச் செய்ய அவரால் முடியாது. முடியவே முடியாது.

உடனேயே சென்று பரிஸ்டர் மூர்த்தியின் செயலைத் தடுக்க வேண்டுமென்று எண்ணியவராய், அவசரம் அவசரமாய் உடையை மாற்றியபடி எழுந்து, கார் இருந்த இடத்திற்கு விரைவாய் நடந்தார்.

அவருடைய மகன் இப்பொழுது வேறு ஒரு பாடத்தை வாசிக்கத் தொடங்கினுன். ஒரு தடவை, ''நிறுத்தடா!'' என்று சப்தம் போட்டவர், பின் ஒன்றும் பேசாதது, உரத்து வாசிக்கும் துணிவை அவனுக்கு ஏற்படுத்தியது போலும்!

''உன் வாழ்க்கையினுலே ஒரு சிறு பரமாணுவுக்கு, ஊர்ந்து போகிற எறும்புக்குக்கூட, ஹிம்சை வரக்கூடாது. நீ நல்ல பிரபுவாய் இரு. மகாமகா முதலாளியாய் வாழு ஹிந்து தர்மம் அதற்குக் குறுக்கே நிற்கவில்லே. அதுசொல்லுவதெல்லாம் இதுதான். நீ நல்லாக வாழ். அந்த வாழ்க்கை பிற உயிருக்கு ஒரு சிறிதும் தீங்கு விளைவிக்கக் கூடாது; பாதகமாதல் ஆகாது; அது தா ன ப் பா வாழ்க்கை...!''

இந்த வாக்கியங்கள் இராமலிங்கத்தை ஓடஓடத் துரத்தின! அவர் கூனிய உடலேயும், குருதி வடியும் உள்ளத்தையும் சுமந்தவராய் ஓடிச்சென்று தம் காரை எடுத்தார்.

மிக விரைவாகக் காரைச் செலுத்தி பாரிஸ்டர் மூர்த்தி வீட்டிற்குச் சென்ருர். பாரிஸ்டர் வீட்டிலில்லே. அடுத்த நாள் மூன்று தடவைகள் சென்ருர். அப்பொழுதும் பாரிஸ்டர் வீட்டிலில்லே.

''இப்பொழுது பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருக்கும்'' இவ்வாறு எண்ணியவர், அங்காவது சென்று விபத்தைத் தடுப்போம் என்று கருதித் தம் காரை ஓட்டிக் கொண்டு மணிவாசகர் வித்தியாசாலேக்குச் சென்ருர்.

## 37.

"சகோதர சகோதரிகளே! வணக்கம்!

தியாகராசனுடைய உணர்ச்சி வாய்ந்த சொற்பொழிவைக் கேட்டீர்கள். தணிகாசலத்தின் அறிவுரையைச் செவிமடுத்தீர்கள். நானும் பேச முன்வந்திருக்கிறேன். எனக்கு அழகாய்ப் பேசத்தெரியாது. ஏன் எனக்குப் பேசவே தெரியாது.

ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் நான் பயந்த ஓரிடம் இருந்ததென்றால் அது பேச்சுமேடைதான். ''வருத்தம்'' என்று காட்டுச் சொல்லியோ பேச்சிற்குக்கூட கட்டாயமாக என் பெயர் போடப்பட்டிருந்தால், கல்லூரித் தோட்டத்தில் மரவள்ளிகளிடையே பதுங்கியிருந்தோ தப்பிவந்திருக்கிறேன். இது என் கன்னிப் பேச்சு. பிழையிருந்தால் மன்னியுங்கள்.

இன்று அப்பர் கல்வித்திருச்சபையின் அக்கிரமங்களை ஒழித்துக்கட்ட இங்கு கூடியிருக்கிறோம். நானும் இந்தத் திருச்சபையின் தொண்டனாய் இருந்தவன்தான். ''தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்பார்கள். அது உண்மைதான். இந்தத் தொண்டனின் பெருமை சொல்லவும் பெரிதுதான். முகாமையாளர் காற்றைத் தின்று விண்ணில் ஏறிச் சாடச்சொன்னார். அதையும் செய்தேன். ஆனால் பலன்? பல நாட்கள் எங்கள் கிராமத்திலுள்ள வாசிகசாலையில் வெறுமையான மேசை வாங்கிற்கு வாசகர் வேலை பார்க்கவேண்டியிருந்தது. வயிறு பசிக்காமலிருக்குமா? அந்த வயிற்றுப் பசிதான் என்னைப் பண்டாரவளைக்கு ஓட்டியது. திருச்சபை முகாமையாளர் வாழ்க! அவர் என்னை வெளியுலகிற்கு அனுப்பி வைக்காவிட்டால் இன்று பண்டாரவளைச் சுவாத்தியத்தை நான் அனுபவிக்க முடியுமா?

ஏன் சிரிக்கிறீர்கள்? நீங்களும் அப்படிப் புறப்படப் போகிறீர்களா? வேண்டாம்! உங்களுக்கு அந்த சுவாத்தியம் ஒத்துவராது. ஊசி போடத் தெரியாத உங்களுக்கு யாழ்ப்பாணந்தான் சரி! அப்படியானால் முகாமையாளர்? அவரைச் சில நாட்கள் ஓய்வெடுக்கச் செய்து, என்னுடன் பண்டாரவளைக்கு அனுப்பி வையுங்கள்; அவரை நான் கவனித்துக்கொள்கிறேன்.''

என்று இப்படியாகக் கந்தையா பேசிக்கொண்டே போனான். அவனுடைய பேச்சு அமைந்திருந்த ரீதியே எல்லோரையும் கவர்ந்தது. முதலிலிருந்து முடிவு வரை அவன் பேச்சு சிரிப்பையூட்டுவதாகவே இருந்தது. அதே சமயத்தில் சிந்திக்கவும் வைத்தது. அதன்பின் யாருடைய பேச்சும் எடுபடவில்லை. தியாகராசனின் எழுச்சி வாய்ந்த பேச்சுக் கூட மறக்கப்பட்டுவிட்டது. அன்று கந்தையாவைப் புகழாதவர்களே இல்லை எனலாம்.

என்றுமே நடவாத வகையில் அன்று கூட்டம் மிக அமைதியாய் நடந்தது. பிரேரணைகள் நிறைவேறின. தேசிய உடையணிந்து வரிசையாய் ஆசிரியர்கள் அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது.

இறுதியில் தியாகராசன் நன்றியுரை கூறினான்.

★

கூட்டம் இனிதுற்றது. நண்பர் மூவரும் 'பஸ்' வராமையால் தங்கள் கிராமத்தை நோக்கி அந்தத்தத் தெருவழியாக வந்துகொண்டிருந்தனர். அன்று கந்தையாவின் உற்சாகம் எல்லையற்றதாய் இருந்தது. கூட்டம் முடிவடைந்த கையோடு பக்கத்தில் இருந்த 'கள்' இறக்கும் தொழிலாளி ஒருவனைச் சென்று கண்டு, மூக்கு முட்டக் குடித்துவிட்டு வந்திருந்தான் அவன்.

என்றாலும் நிதானம் தவறவில்லை. அவன் தியாகராசனின் தோளில் கைவைத்தபடி, ஏதோ பாடல் ஒன்றைத் தப்பும், தவறுமாகப் பாடிக்கொண்டு வந்தான். அவ

னுடைய மகிழ்ச்சியைக் குழப்ப விரும்பாதவர் போன்று தியாகராசனும், தணிகாசலமும் மௌனமாகவே வந்தனர். 'பூம் பூம்' காரின் குழலோசை கேட்டது. கேட்டதுதான் தெரியும். அதற்கிடையில் அது மிக நெருங்கிவிட்டது.

நண்பர்கள் ஒதுங்கி அதற்கு வழிவிட்டனர். காரோ ஒதுங்கிப்போவதாயில்லை. மூவரும், 'என்ன செய்வது?' என்று தெரியாது தத்தளித்தனர்.

கார் இதோ நெருங்கிவிட்டது. இன்னும் ஒரு கணந் தான். அது தியாகராசனை மோதிவிடும். அந்த நேரத்தில் கந்தையாவின் வெறி எப்படி முறிந்ததோ? அவன் தியாக ராசனைத் தோளில் பிடித்து இழுத்தான். இழுத்த வேகத் தில் தியாகராசன் பாதையை விட்டு விலக கந்தையா தடு மாறித் தெருவின் குறுக்கே விழுந்தான்.

அதற்காகவே காத்திருந்தது போல, கார் அவன் மீது மோதியது. தொடர்ந்து அது அசுரவேகத்தில் ஓடி மறைந் தது.

கந்தையா இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

## 38.

நினைவு பறிபோய்விட, வெட்டிச்சாய்த்துவிட்ட மரம் போலக் கந்தையா தெருவின் நடுவில் விழுந்து கிடந்தான். அவன் நெஞ்சு மேலேறியும், இறங்கியும் உயிர் இருப்பதை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

தியாகராசனும், தணிகாசலமும் இருந்த நிலையை விப ரிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. மலையின் சிகரத்தை அடைந்தவர், அதிலிருந்து தலைக்குப்புற விழுந்துவிட்ட நிலை யில், அவர்கள் இருந்தார்கள் என்று ஓர் அளவுக்குச்சொல்ல லாம்.

ஆடாது, அசையாது மரத்துப்போன காலத்தின் வயிற் றிலே அவர்கள் நிலை தடுமாறிப்போய் வீழ்ந்து கிடந்தார்

கள். அந்தகாரம் அவர்களைச் சிறிது சிறிதாய் விழுங்கிக் கொண்டிருந்தது.

அந்த வேளையிலே ஒளியைப் பாய்ச்சியபடி ஒரு கார் அந்த இடத்தில் வேகமாய் வந்துநின்றது. 'யார் அது?' என்று கேட்டுக்கொண்டே, அந்தக் காரிலிருந்து இராமலிங்கம் இறங்கினர்.

நட்டநடுவீதியிலே கந்தையா விழுந்து கிடக்கும் அலங்கோல நிலை, அவர் நெஞ்சின் அடிக்குருத்தையே கருக்கி விட்டது. அவரோ, அல்லது தணிகாசலமோ, தியாகராசனோ ஒன்றும் பேசவில்லை.

மௌனமாகக் கந்தையாவை மூவரும் சேர்ந்து காரில் தூக்கிக் கிடத்திஞர்கள். தியாகராசனும், தணிகாசலமும் காரில் ஏறி அமர்ந்ததும், கார் மிக வேகமாகப் புறப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை அடைந்தது.

இராமலிங்கத்தின் செல்வாக்குக்காரணமாய் கந்தையா ஆஸ்பத்திரியில் உடனடியாய்ச் சேர்க்கப்பட்டான். டாக்டர்களும், நேர்ஸ்மாரும் மேல்மாடியிலிருந்த தனி அறை ஒன்றில் கிடத்தப்பட்ட கந்தையாவைச் சூழ்ந்து சிகிச்சை செய்வதில் முனைந்தனர்.

கந்தையாவிற்கு உடனேயே இரத்தம் தேவையாய் இருந்தது. தணிகாசலத்தினதும், தியாகராசனதும் இரத்தங்கள் பரிசோதிக்கப்பட்டு, தியாகராசனதே பொருத்தமானது எனத் தெரியப்பட்டது.

உடனேயே தியாகராசனின் உடம்பில் இருந்து ஒரு பைன்ற் இரத்தம் எடுத்துக் கந்தையாவிற்கு ஏற்றப்பட்டது. எனினும் கந்தையா கண் விழிக்கவில்லை.

பெலவீனத்துடன் தள்ளாடியபடி நின்ற தியாகராசனை, இராமலிங்கம் தனியாக அழைத்துச் சென்ருர், "தியாகராசா! இந்த நிமிஷம் நீ என்னை ஏதோ பரோபகாரி என்று நினைக்கக்கூடும்! அப்படி நினைத்தாயானல் அது பெரிய தவறு. நான் மிகமிகக் கொடியவன். இன்னும் சில நாட்களில் நீ பெரிய உண்மைகளையெல்லாம் அறிய நேரிட

லாம். அந்தச் சமயத்தில் இராமலிங்கம் இப்படிப்பட்டவனா, இவ்வளவு மோசமானவனா? என்று நினைத்து அதிர்ச்சி அடையவும் நேரிடலாம். அதற்காகத்தான் இப்பொழுதே நான் சொல்லிவிட்டேன். வருகிறேன்.''

இராமலிங்கம் காரில் ஏறிச் செல்லும்வரை அவர் செல்லும் வழியையே தியாகராசன் நோக்கிநின்றான். காரிருளில் மின்னல் போலச் சில உண்மைகள் அவன் உள்ளத்தில் பளிச்சிட்டு மறைந்தன.

அன்று இரவு தியாகராசன் ஆஸ்பத்திரியிலே தங்கினான். தணிகாசலம் எங்கோ சென்று, ஒரு கார் பிடித்துக் கொண்டு கந்தையா வீடு சென்றான். அவன் வீட்டுத் தகரப்படலையிலே தட்டு தட்டென்று தட்டினான்.

நெடுநேரத்திற்குப் பின்பு அரைத் தூக்கத்தில் கந்தையாவின் தகப்பனார் பூதப்பிள்ளை வந்து படலையைத் திறந்தார்.

அவர் சமீபத்தில் வந்தபோது, இன்னும் அவர் வாயில் மதுவின் வாடை அடிப்பதைத் தணிகாசலம் உணர்ந்தான். அவனுக்கு அருவருப்பாய் இருந்தது, அவன்கூட ஒரு காலத்தில் குடிகாரனாய் இருந்தவன்தான். ஆனாலும், கள்ளும் சாராயமும் கலந்த அந்த நெடி, அவன் சகிப்புத் தன்மைக்கே ஒரு பெரிய சோதனையாய் இருந்தது. என்றாலும் சமாளித்துக்கொண்டவனாய் விபரங்களை எடுத்துச் சொன்னான்.

பூதப்பிள்ளையில் எந்தவித சலனத்தையும் காணக்கூடவில்லை. எதுவும் நடவாதவர் போல, 'அப்படியே?' என்று சாவதானமாகக் கேட்டார் அவர்.

''சரி, பேச நேரமில்லை கார் நிற்குது. வாருங்கோ'' என்றான் தணிகாசலம்!

•'எங்கை?'' இது பூதப்பிள்ளையின் கேள்வி.

''எங்கையோ ஆஸ்பத்திரிக்குத்தான்! மகனைப் பார்க்க வேண்டாமே?''

''மகன்!'' பூதப்பிள்ளை பல்லை நெருமினார். ''எனக்கு அப்படி ஒரு மகனுமில்லை. ஏன்? நீங்கள்தானே அவனை சொந்தக்காரர். அவன்தானே உன்னை பொடியனுக்குச் சீதனம் தந்தவன்? நீதான் போய் அவனைப் பார்'' என்று சொல்லிவிட்டு, அவர் படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்.

அவர் படலையை சாத்திய சத்தம், 'படங்' என்று எழுந்து தணிகாசலத்தின் காதுச் சவ்வுகளைத் தாக்கியது.

''கந்தையாவுக்கும் இவருக்கும் எவ்வளவு வித்தியாசம்?'' என்று எண்ணியபடி அவன் காரில் சென்று ஏறினான். கல் நெஞ்சின் எல்லைக்கோட்டைக் காண்பதில் இது முதல் அனுபவம் அவனுக்கு.

கார் பெருஞ் சத்தத்துடன் கிளம்பியது!

அடுத்த நாள் பின்னேரம் கந்தையா நல்ல தெளிவாய் இருந்தான். வாடாத புன்னகை அவன் முகத்தில் மலர்ந்திருந்தது. டாக்டர்கள் அவனைப் பேசவேண்டாமென்று தடுத்திருந்துங்கூட, அவன் வந்தவர்களோடெல்லாம் கலகலப்பாய் பேசினான், சிரித்தான், சிரிக்க வைத்தான்.

அன்றைக்காவது பூதப்பிள்ளை வருவாரென்று தியாகராசனும், தணிகாசலமும் எதிர்பார்த்தார்கள். அவர் வரவேயில்லை. ''செத்தாலும் அவனை சவத்தைக் கூட இங்கை கொண்டுவரக் கூடாது'' என்ற செய்தியை மாத்திரம் அவர் சொல்லியனுப்பியிருந்தார். ''சீ! இந்தாளும் ஒரு மனிதனோ? பெத்தபிள்ளை என்ற பாசம் கொஞ்சங்கூட இல்லையே'' என்று பொன்னம்பலம் அடிக்கொரு தடவை முணுமுணுத்துக் கொண்டார்.

தியாகராசனுடைய வீட்டாரும், தணிகாசலத்தின் வீட்டாரும் ஆசுப்பத்திரியிலேயே குழுமியிருந்தனர், அன்று முழுவதும் தண்ணீர்கூட அவர்கள் அருந்தவில்லை. உயிருக்கு உயிரான ஒருவனைச் சிறிதுசிறிதாகப் பிரிந்து கொண்டிருக்

கிறோம்'' என்ற எண்ணம் அவர்களை சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

★

இரவு இருளைக் கைகோர்த்து வந்து வெளியுலகைத் தம்முள் பல வந்தமாய் அணைத்தது. கந்தையாவின் அறையில் வெளிச்சம் இருந்தது. ஆனல், அந்த அறையிலிருந்தவரின் நெஞ்சங்களிலெல்லாம் கனத்த இருள் மண்டிக்கிடந்தது.

கந்தையாவின் படுக்கையின் இரண்டு பக்கங்களிலும் தியாகராசனும், தணிகாசலமும் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் விழிகளில் வற்ருது கண்ணீர் ஊற்று மடைதிறந்து ஓடிய வண்ணமிருந்தது. அதை அவர்களால் தடுக்கக்கூட வில்லை.

கந்தையாவோ அப்பொழுதும் சிரித்துக்கொண்டுதான் இருந்தான். ''தணிகாசலம்! பண்டாரவளையில் ஒரு நாள் நான் பாடினேனே? ஞாபகம் இருக்கிறதா? காயமாவது பொய்யடா. இது காற்றடைந்த தோல் பையடா'' என்று. அதை நான் இதயபூர்வமாகவே பாடினேன். எனக்குத் தெரியாததா? என் வாழ்க்கை மிகமிகக் குறுகியது. இன்று இரவோடு அது முடிந்துவிடும்'' என்று மிக அமைதியாக அவன் சொன்னன்.

தியாகராசனுக்கோ, தணிகாசலத்திற்கோ பதில் சொல்லத் தோன்றவில்லை. குமுறிக் குமுறி அழுதார்கள். நெஞ்சே வெடித்துவிடுவது போல அதை அமர்த்திய வண்ணம் கதறினர்கள்,

''சே! சே! இது என்ன? மடையரே! ஏன் அழுகிறீர்கள்? ஏதோ இந்த உலகத்திலே சிரஞ்சீவியாய் இருக்க வந்தவர் போலவும், நான்தான் சாகப் பிறந்தவன் போலவும் நினைத்து அனுதாபக் கண்ணீர் விடுகிறீர்களே! தியாகராசா! எனக்கு இந்த அனுதாபமே பிடியாது என்று உனக்

குத் தெரியாதா?'' என்று கந்தையா சிறிது கடுமையாகப் பேசினான். அவனுக்கு மூச்சுவாங்கிற்று.

இரண்டு நண்பர்களும் கண்ணைத் துடைத்துக்கொண்டு சிரிக்க முயன்றார்கள். ''ஆ! இப்பொழுதுதான் சரி! எனக்கு முன்னால் யாரும் சிரித்த முகத்துடன்தான் இருக்கவேண்டும்'' என்று குலையாத புன்னகையோடு அவன் சொன்னான். பின் தணிகாசலத்தைத் தன் அருகில் அழைத்தான். ''தணிகாசலம் முன்பெல்லாம் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனையின் போது படிப்பாயே? அது என்ன தேவாரம்? ஆ! ''பத்தனாய்ப் பாடமாட்டேன்.'' அதுதான் அதைப்படி'' என்று அவனுக்குக் கட்டளையிட்டான்.

★

தணிகாசலம் குமுறும் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டபடி பாடினான். வார்த்தைகள் தளர்ந்தன; தள்ளாடின; நடுங்கின: சமாளித்துக் கொண்டு அவன் பாடினான்.

''பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே! பரம யோகி!
எத்தினாற் பக்தி செய்கேன்
என்னை நீ இகழ்வேண்டா
முத்தனே! முதல்வா! தில்லை
அம்பலத் தாடுகின்ற
அத்தா! உன் ஆடல் காண்பா
னடியனேன் வந்தவாறே!''

பாடல் முடிந்தது. கந்தையா, ''அத்தா! உன் ஆடல் காண்பான் அடியனேன்வந்தவாறே'' என்று ஒருதடவைக்கு இருதடவையாகத் தன் வாயுள் முணுமுணுத்தான். விபரம் தெரிந்த நாளின் பின்பு இன்று தான் முதன் முதல் அவன் கண்கள் பனித்தன.

''எல்லாம் சரி! எல்லாம் சரி!'' என்று தொடர்ந்து கந்தையா இரு தடவைகள் சொன்னான். பனித்து நின்ற நீர்த் துளிகள் கண்களில் அப்படியே தேங்கி நிற்கக் கடைசி தடவையாக அவன் கண்கள் மூடின.

''கந்தையா! ஐயோ கந்தையா!'' என்று உரத்த குரலில் தியாகராசனும் தணிகாசலமும் கதறினர். அது கந்தையாவின் விறைத்துவிட்ட காதுகளுக்குக் கேட்கவே இல்லை.

அந்தத் தியாக சொரூபம் அன்பின் விளைநிலம் பயங்கரமான இந்த உலகத்தைப் பார்க்கவே விரும்பாது, தன் கண்களை மூடி மீளா நித்திரையில் ஆழ்ந்தது. தணிகாசலம் பைத்தியம் பிடித்தவன் போல,

> ''முத்தனே! முதல்வா! தில்லை அம்பலத் தாடுகின்ற
> அத்தா! உன் ஆடல் காண்பானடியனேன்
> வந்தவாறே''

என்று விம்மி வெடிக்கும் குரலில் மீண்டும், மீண்டும், மீண்டும் பாடிக்கொண்டிருந்தான்!

## 39.

கந்தையாவின் மரணம் இராமலிங்கத்தின் வாழ்க்கையையே முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டது. எவ்வளவு தான் கொடியவராய் இருந்தாலும் ''கொலை'' என்ற பொழுது, அவர் உள்ளம் நடுங்கவே செய்தது. நிம்மதியான நித்திரையை வாழ்நாளில் இனி என்றுமே அடைய முடியாது என்ற நிலை அவருக்கு ஏற்பட்டது.

கந்தையாவின் சிரித்த முகம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் மனக் கண்ணில் தோன்றி அவரை சித்திர

வதை செய்தது. வெளியுலகில் நடமாடவே அவர் அஞ்சினார். தாம் வாழ்நாள் முழுதும் செய்த பாவங்கள் அவரைத்தொடர்ந்து பயமுறுத்தின.

★

ஓரளவு அவர் வாழ்க்கை சமயத்தின் எல்லைக் கோட்டைக் கடக்காமல் இருக்கவே முயன்றது. அவர் தற்கொலை செய்யாமல் இருந்தார் என்றால், மேலும் பாவத்தைச்சம்பாதிக்க வேண்டாம் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

இப்பொழுது அவர் அப்பர் கல்வித்திருச்சபையிலிருந்து தம் தொடர்புகளை அறுத்துக் கொண்டார். அவருடைய விலகல் எல்லோருக்கும் ஆச்சரியத்தையே அளித்தது. நெற்களஞ்சியத்தின் நடுவிலே இருந்த எலி எப்பொழுதாவது அதை விட்டு ஓட முயன்றது என்று உண்டா? இல்லையே! இராமலிங்கம் விலகிய காரணம் என்ன? யாருக்குமே விளங்கவில்லை.

தொடர்ந்து அவர் செய்த செயல் பலரை ஆச்சரியத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது எனலாம். தம்மிடம் மிச்சம் மீதியாக இருந்த பணத்தின் பெரும்பகுதியை அவர் அப்பர் கல்வித்திருச்சபைக்கே எழுதி வைத்துவிட்டார்! யார்தாம் அதிர்ச்சி அடைய மாட்டார்கள்?

இப்பொழுது இராமலிங்கம் தனிமையையே அதிகம் நாடினார், வீட்டின் ஒரு அறையிலே இருந்து கொண்டு, யாருடைய தொந்தரவும் இன்றிச் சிந்திப்பதே அவர் தொழிலாகிவிட்டது.

கண்களில் சிந்தனை பரிவட்டங்களை இட்டது. மிச்சம் மீதியிருந்த மயிர்கள் அனைத்துமே 'கொக்கின் சிறகு' போல வெண்மை அடைந்துவிட்டன. பசியை மறந்தார்; தாகத்தை மறந்தார்; உலகத்தையே மறந்தார்.

நாட்கள் சென்றன. முதுமை அவர் உடலை உருக்குலைத்து வந்தது. எலும்புகள் துருத்திக் கொண்டு வெளியே

வருவதாய்ப் பயமுறுத்தின. தோல் சுருக்கமடைந்து அருவருப்பைத் தந்தது.

அவர் வீட்டில் வேலை செய்தவர்கள் அவரது ஆணவக் குரல் ஒலிப்பதைக் கேட்டு ஏதோ யுகயுகாந்தரங்களாகி விட்டது போல உணர்ந்தனர். யாரிலும் அவர் சீறிச்சினப்பதில்லை. எவ்வளவுதான் பிழைகள்செய்தவர்களையும் அவர் பெரியமனது பண்ணி மன்னித்துவிட்டார்!

முன்போல 'உர்' என்று முகத்தை வைத்திருப்பதில்லை. எவரைக்கண்டாலும் சிரித்துப் பேசவேண்டும் என்று தீர்மானித்து விட்டவர் போல அவர் தோன்றினர். ஆனல் அந்தச் சிரிப்பின் அடிநாதமாகத் தாழ முடியாத சோகம் இழையோடுவதை அவரால் தடுக்கக் கூடவில்லை!

தமது கொடுமையின் பலனுகக் காடுகளிலும் மேடுகளிலும்நல்ல உணவையே கண்ணுல் காணுது வாழும், ஆசிரியர்களை அடிக்கடி நினைத்துக்கொள்வார். தமது 'திறை'யைச் செலுத்துவதற்காக வீடு வளவுகளை ஈடுவைத்து அந்தக் கடனைத் திருப்பமுடியாமல் அவலமடையும் ஆசிரியர்கள் பற்றிச் சிந்திப்பார்; தம்முன் கைகட்டி வாய்புதைத்துக் கண்ணீர் மல்கி நின்று வேண்டுதல்களை 'நா' தளதளக்கக் கூறிய ஆசிரியர்கள் பற்றி யோசிப்பார்.

அவர்கள் அனைவரும் 'முகாமையாளர் ஒழிக' என்று கோஷம் செய்து செல்வது போலவும், தம் முகத்தில் காறி உமிழ்வது போலவும் உருவெளித் தோற்றங்கள் உண்டாகும்

இராமலிங்கத்தின் கண்கள் இக்காட்சிகளைக்காணும் போது, அவரின் நெஞ்சம் வெந்து கருகிச் சாம்பலாகிக் கொண்டிருக்கும்.

★

தோய்த்துலர்ந்த நாலு முழ வேஷ்டி, பட்டை பட்டையாய்ப் பூசிய திருநீறு, தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியவற்றையே ஓயாது பாடும் வாய்

சந்தையா ஏதோ ஒரு கல்லூரியில் இடம் கிடைத்துக் கல்வி கற்பிக்கச் செல்கிறானென்பதை தணிகாசலம் அறிந்து கொண்டான்.

"அடடே? என் அதிர்ஷ்டம் என்று சொல். பதுளையில் இருந்து பண்டாரவளை பதினேழு மைல்தான். அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம்" என்று சிரிப்புக் கருகாத முகத்தோடு பதிலிறுத்தான் தணிகாசலம்.

"அடிக்கடி சந்திக்கிற வேலைதான் வேண்டாம் என்கிறேன். அது என் உடம்புக்கும் ஒத்துக்கொள்ளாது; மணிப் பேஸுக்கும் ஒத்துக்கொள்ளாது" என்று ஏதோ ஹாஸ்யமாகப் பேசி விட்டவன்போன்று உரக்கச் சிரித்தபடி சந்தையா சொன்னான்.

புகைவண்டி ஒருதரம் அசைந்து கொடுத்து நகரத் தொடங்கியது. நண்பர்கள் இருவரும் ஒருவித கருத்துமின்றி வம்பளந்தபடி சென்றார்கள்.

★

இயற்கையன்னையின் அமுதம் பொழிந்ததால், வளங் கொழிக்கும் வயல்களையும், சிறிய பற்றைக் காடுகளையும் கடந்து புகைவண்டி சென்றுகொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அடிக்கடி காணமுடியாத அபூர்வ காட்சி அது. வெண்முகில் படிந்த வானத்திலே பறந்துசெல்லும் கொக்குக் கூட்டங்களையும், சூரியனின் கதிர்கள் பட்டு வெள்ளி அலைகளை வீசும் ஏரிகளையும் தணிகாசலத்தின் கண்கள் கண்டனவேயல்லாமல் அவற்றில் சென்று நிலைக்கவில்லை. குளிர்மையாய் வந்து வீசிய வாடைக் காற்றையும் அவன் பொருட்படுத்தவில்லை. யன்னலினூடாக வெளியே பார்த்தவனுக்கு இயற்கைக் காட்சிகள் அனைத்தும் சூனியமாய் பாழ் வெளியாகத் தோன்றின.

சிறிது நேரத்தின்முன்தான் சந்தையாவும், தணிகாசலமும் புகைவண்டிச் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றுவிட்டு வந்திருந்தனர். உணவருந்தவல்ல; குடிப்பதற்கு. ஒருநாளும் இல்லாத திருநாளாய் அன்று சந்தையாவுடன் சேர்ந்து

வழி இல்லையே!" என்று பூதப்பிள்ளை கிண்டல் பண்ணினார்.

"பகிடியல்ல இப்ப என்னிட்டை ஆயிரம் ரூபா பணம் இருக்கு. இதை வைத்துக் கொள்ளுங்கோ. நாலாயிரம் ரூபாய்க்கும் நோட்டுத்தாறன். எப்படியும் ஒரு இரண்டு வருஷத்திலே மிச்சத்தையும் தந்திடுவன்."

பூதப்பிள்ளை ஆச்சரியம் அடைந்தார். மனிதத்தன்மையின் பிழம்புருவத்தை வாழ்க்கையில் முதல் தடவையாய்க் காண்பவர்போல சிறிது நேரம் அவர் மலைத்து அவர் வாய் அடைத்துப் போய் நின்றார். அவரை அறியாமலே அவர் கைகள் நீண்டு பணத்தை வாங்கி மடியில் செருகின.

"அதிருக்கட்டும்; இந்தக்காலத்திலே ஆரையும் நம்ப முடியாது. ஈடுபாடெண்டாலும், பறுவாயில்லை, இரண்டு வருசம் கழிச்சு நீ பணத்தைத்தரேல்லை எண்டு வைச்சுக் கொள்ளுவம். உன்னை மறியலுக்கனுப்பலாமல்லாமல் பணம் திரும்பி வராது" என்று பூதப்பிள்ளை இழுத்து இழுத்துப் பேசினார். என்றாலும் முந்திய கடுமை அவர் முகத்தில் இப்பொழுது இல்லை.

"பெரியவர் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. இப்ப நான் இந்தப் பணத்தை எண்டைக்கும் திருப்பித்தராமல் கூட இருக்கலாம்! ஒரு பொறுப்பும் கேட்காமல் தானே கந்தையா எனக்கு பணத்தை தந்தவர்? எண்டாலும் என்றை மனச்சாட்சி தான் எப்படியும் பணத்தை சேர வேண்டிய இடத்தில் சேர்க்க வேணுமெண்டு சொல்லிச்சு. அதனாலைத்தான் நான் இப்ப இங்கை வந்தனான். என்றை மனச்சாட்சியிலை உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் நோட்டை வாங்குங்கோ. நீங்கள் நோட்டு வாங்கேல்லை எண்டாலும் எண்டைக்கோ ஒரு நாளைக்கு இந்தப்பணத்தை திரும்பித்தரத்தான் போறன்" என்று தியாகராசன் தன் உள்ளத்தை திறந்து பேசினான். பூதப்பிள்ளை திகைத்துப் போனார்.

தியாகராசன் பஸ்ஸில் அப்பர் திருச்சபைக்குச் சென்றான். அங்கு தான் எவ்வளவு மாற்றங்கள்! இலிகிதர் செந்தில்நாதன் இருந்த மேசையில் புதிய ஓர் இலிகிதர் ஏதோ எழுதிக் கொண்டு இருந்தார். முகாமையாளருக் குரிய மேசையின் பக்கத்தில் புதிய முகாமையாளர் சிவநாதன் நின்ற வண்ணம் ஏதோ பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். அவர் இலைப்பாறிய அரசாங்க ஊழியர் நேர்மைக்கும் உண்மை உழைப்புக்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு பெயரைக் கேட்டால், பதில் சிவநாதனின் பெயரா கவே இருக்கும்.

அவர் தியாகராசனைக் கண்டதும், மலர்ந்த முகத்தின ராய் அவனை வரவேற்றார். இருவரும் நாற்காலிகளில் அமர்ந் திருந்து நீண்ட நேரம் உரையாடினர். தம் பேச்சிற்கிடை யில் சிவநாதன் கேட்டார். "ஏன் தம்பி! அடுத்த தவணை யிலிருந்து மணிவாசகர் வித்தியாசாலையில் நீ ஆசிரியரா ய்க் கடமை ஆற்றுவாயா? அப்படியென்றால் இப்பொழுதே நியமனப் பத்திரங்களை நிரப்பித் தந்து விட்டுப்போ.

தியாகராசன் சிறிது மௌனம் சாதித்தான். பின் வினயத்தோடு அவரை நோக்கி "ஐயா" மன்னித்துக்கொள் ளுங்கள். ஆசிரியராய்க் கடமை ஆற்றும் உத்தேசம் எனக்கு இல்லை. என் இலட்சியம் தலைசிறந்த எழுத்தாளன் ஆக வேண்டும் என்பது. அதற்கான முயற்சிகளிலேயே இனி ஈடுபடுவேன்" என்றான்.

அவனுடைய தன்னம்பிக்கையை கண்டு சிவநாதனின் பளிங்குபோன்ற தூய உள்ளம் உண்மையிலேயே மகிழ்ச்சி யும் பெருமையும் அடைந்தது.

மாலைநேரம் தணிகாசலமும், தியாகராசனும் வீட்டின் தாழ்வாரத்தில் இருந்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். புவனேஸ்வரி தரையில் இருந்து 'நெல்' புடைத்துக்கொண் டிருந்தாள்.

"அப்பொழுது நீ எழுத்து வேலையை செய்வதாகவே முடிவு கட்டிவிட்டாயா?" என்று தணிகாசலம் நேராக

ராசனைக் கேட்டான். புவனேஸ்வரி தன் வேலையை விட்டு விட்டு தன் அண்ணன் என்ன சொல்லப்போகிறான், என்பதைக் கவனித்தாள்.

'ஆம்' என்றான் தியாகராசன். அந்த வார்த்தையில் அவனுடைய உறுதி தொனித்தது. புவனேஸ்வரியின் முகம் குவிந்தது. தணிகாசலத்தின் முகத்தில் ஏமாற்றம் திரையிட்டது.

''ஆம்! நான் எழுத்தாளனாகவே வாழ்வை ஓட்டப் போகிறேன். என் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்போகிறேன். இரவும் பகலும் அதுவே என்கனவாய் இருக்கிறது. என் எழுத்தின் இனிமையாலே இந்த இகத்தையே ஆளப்போகிறேன்'' இவற்றைச் சொல்லும்பொழுது தியாகராசன் மெய்மறந்த நிலையில் ஒரு பைத்தியகாரனைப்போலத் தோற்றமளித்தான். அவன் கண்கள், எல்லையற்ற கற்பனை உலகிற் பறந்து திளைக்கும் இரு வண்டுகளைப்போல உருண்டபடி இருந்தன.

''தியாகு! இது விஷப்பரீட்சை. ஏதோ கதைப்போட்டியில் ஆயிரம் ரூபாய் கிடைத்தது என்று ஏமாந்து விடாதே. எழுத்து ஒரு மோகினி. முதலில் அவள் உன்னை இப்படித் தான் மயக்குவாள். அவள் மாயவிழிப்பார்வையில் மயங்கினையானால், பின் ஏமாற்றந்தான்! பசியும், பட்டினியும், துன்ப துயரங்களுமே உன் வாழ்க்கைத்துணையாகும்'' என்று தணிகாசலம் எவ்வளவோ எடுத்துரைத்தான் அவை செவிடன் காதில் ஊதிய சங்காயின.

தியாகராசன் சிரித்தான். ''தணிகாசலம் நீ என்னை புரிந்து கொள்ளவில்லை. நான் எழுதப்போவது பணத்திற்கல்ல; என் இதயதாபத்தைக்கொட்டி வைக்கும் பாத்திரமாகவே எழுத்து எனக்கு உதவும். நான் பறக்கின்ற கற்பனை உலகிற்கே இன்னும் ஒரு சௌரியமாக அழைத்துச்செல்ல என்னால் முடிந்தால். அதுவே எனக்குப் போதும்.''

''என் எழுத்துக்களுக்குப் பிரதியாகப் பசி, பட்டினி, மரணம் என்பவற்றையே இலங்கைத் தமிழுலகம் தருமானல் அதையும் திறந்த கைகளோடு ஏற்க நான் தயாராய் இருக்கிறேன்.''

இவ்வாறு கூறிவிட்டு எழுந்த தியாகராசன், சைக்கிளை எடுத்தபடி படலையைத் திறந்து கொண்டு வெளியில் சென்ருன்.

குமைந்து வருகின்ற இருளில் அவன் சென்ற வழியையே, நீர் மல்கும் விழிகளோடு தணிகாசலமும், புவனேஸ்வரியும் பார்த்துநின்றனர்.

## 41.

இருளின் நெஞ்சைக் கூறுபடுத்திக்கொண்டு தியாகராசனின் ''சைக்கிள்'' வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தது. தெருவின் இரண்டு பக்கங்களிலும் நின்ற மரங்கள், அசைந்தும் குனிந்தும் நிமிர்ந்தும் சிலிர்த்தும்அவனுக்குப் பிரியாவிடை அளித்தன.

கோடையின் புழுக்கத்தைத் தாங்க முடியாதுபோல முனகிக் கொண்டு சலித்து வீசிய காற்று, அவனுக்கு வழி விட்டு விலகி நின்றது.

பழக்க தோஷத்தால் அவன் கால்கள், ''பெடலை'' உந்தித்தள்ளின. ஆனல், மனமோ ஏகாக்கிரமான சிந்தனையில் தோய்ந்து கிடந்தது. இலட்சியங்களாகிய ''வியூகங்கள்'' வனைத்துப் பற்றி யுத்தம் நிகழ்த்திய பொழுது, அதனல் ஒன்றுமே செய்யக்கூடவில்லை சத்தியிழந்து கிடந்தது!.

காலம் பின்தங்கியது. இடம் பின்தங்கியது. அவனே மேலே, மேலே போய்க்கொண்டிருந்தான்.

அவன், இனி ஓர் எழுத்தாளன்; பேனவினலேயே வாழ்க்கை ஓடத்தைச் செலுத்தப்போகிறவன் வாசகர்

களின் நெஞ்சக் கருத்துக்களைத் தொட்டும், தடவியும், குத்தியும் விளையாடப் போகிற புதிய விளையாட்டிற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டியவன்! அந்த நினைவே இனித்தது அவனுக்கு.

இளமைக்கனவுகள், இன்பபோதைகள், சுபீட்ச வாழ்வு என்ற அனைத்தும் அவனது பாதையிலே அகப்பட்டு நசிந்து கொண்டிருந்தன. அவனோ மேலே மேலே, போய்க்கொண்டிருந்தான்.

வீடு வந்தது. தியாகராசன் சைக்கிளிலிருந்து இறங்கினான்; அதை உருட்டியபடி படலையைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

முற்றத்திலே உள்ள வாங்கில் படுத்துக்கொண்டு பொன்னம்பலம்சயனசஞ்சாரம் செய்து கொண்டிருந்தார். இடைகழித்திண்ணையில் சுப்பிரமணியம் படுத்திருந்தான். வீட்டுக்கதவு பாதி திறந்து வைத்தபடி, விளக்கிற்கருகில் வள்ளிப்பிள்ளை தன் சேலைத்தலைப்பை விரித்துப் படுத்திருந்தாள்.

தியாகராசன் சைக்கிளைப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டான். அதை மடியிற் செருகியபடி முற்றத்திலே பரப்பப்பட்டிருந்த குறுமணற் பரப்பில் தன் சால்வையை விரித்துப்படுத்தான்.

★

அவன் விழிகள் வானவெளியிலே சென்று நிலைத்தன. வானப்பாதையில் எண்ணற்ற நட்சத்திரங்கள், ஓய்வு ஒழிவு இல்லாது நடந்து கொண்டிருந்ததை அவன் கண்டான்.

அவை எங்கே போகின்றன? அவை செய்யும் யாத்திரையின் குறிக்கோள்தான் என்ன? விண்வெளியிலே அரைவாசிநாட்கள் தாம் சந்திரன் என்ற விளக்கும் எரியும்- மீதி அரைவாசி நாட்களும் அது அணைந்தே இருக்கும். ஆனால் நட்சத்திரங்கள் - தம் பாதையில் ஒளி இல்லையே என்று யாத்திரையை நிறுத்துவதில்லை. இருளைத் தடவிக்கொண்டு

நடம் பிசகாது அவை சென்று கொண்டுதான் இருக்கும். ஆச்சரியமான சங்கதி!

ஒருவகையில் மனித வாழ்க்கையும் இப்படித்தான். பாதை இருட்டாய் இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் ஒளி இருந்தாலும் இரண்டையும் பொருட்படுத்தாது தொடர்ந்து மேலே, மேலே செல்ல வேண்டியது தான். அது நியதி; தவிர்க்க முடியாதது.

ஆனால், முட்டாளான மனிதனே இந்த நியதியை மாற்றி அமைக்க முயன்று கொண்டே இருக்கிறான். தான் செல்லும் வழியில் இருட்டே புகக்கூடாது என்று முயல்கிறான். சாத்தியமான காரியமா இது? 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற குறளை இவன் ஏன் தன்வாழ்க்கையின் தாரக மந்திரமாக ஆக்கக்கூடாது?

வானவெளி விரிந்து, பரந்து கிடந்தது. நட்சத்திரங்கள் தம் இலட்சிய யாத்திரையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தன. நிமிடம், நாழிகை, மணித்தியாலம் என்று காலம் தன்னைக் கூறுபடுத்திக் கொண்டு, கிழட்டுப் பெருமூச்சுவிட்டு நகர்ந்தது.

தியாகராசன் தன் விழிகளை இமைக்காது வானப் பரப்பையே பார்த்தான். அங்கே உறுதி பெற்ற அவனது நம்பிக்கை போல விடிவெள்ளி பூத்துப் புதுமணம் வீசிக் கொண்டிருந்தது.

# வீரகேசரி பிரசுரங்கள்

| | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| கணையாழி * | (ரஜனி) | 1 — | 90 |
| பூஜைக்கு வந்த மலர் * | (ஞ. பாலேஸ்வரி) | 2 — | 25 |
| கதைக் கனிகள் * | (சிறுகதைத் தொகுதி) | 2 — | 00 |
| யுகசந்தி * | (மணிவாணன்) | 2 — | 25 |
| மைதிலி * | (ரஜனி) | 2 — | 90 |
| பண்டாரவன்னியன் | (முல்லைமணி) | 1 — | 60 |
| தீக்குள் விரலைவைத்தால் * | (கே.எஸ். ஆனந்தன்) | 2 — | 25 |
| நான் சாகமாட்டேன் | (செ. கதிர்காமநாதன்) | 2 — | 25 |
| ஆஷா | (ரஜனி) | 3 — | 90 |
| தூரத்துப் பச்சை | (கோகிலம் சுப்பையா) | 3 — | 40 |
| நிலக்கிளி | (அ. பாலமனோகரன்) | 2 — | 25 |
| விடிவை நோக்கி | (தெணியான்) | 2 — | 25 |
| மர்ம மாளிகை | (அருள் செல்வநாயகம்) | 2 — | 90 |
| புயலுக்குப் பின் | (பொ. பத்மநாதன்) | 2 — | 25 |

* கைவசமில்லை.

*வீரகேசரி பிரசுரங்களை உள்ளூர் ஏஜண்டுகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.*

**வீரகேசரி விநியோக இலாகா,**
**த. பெ. 160,**
**கொழும்பு.**

S. Jeyanathan
243, FAUIT Hill LANE
HATTON

[illegible]
[illegible]
243, [illegible] [illegible]
[illegible]

"நான் கோழையல்ல. அக்கிரமத்துக்கு நான் என்றும் அடிபணிந்ததில்லை. ஆனால் என் எதிர்ப்பினால் ஒரு பெண்ணின் வாழ்வு பாழாகிவிடுமே என்றுதான் யோசிக்கிறேன். இந்தாருங்கள்; இன்று காலை வரும்பொழுது வேலையிலிருந்து விலகும் கடிதத்தையும் எழுதிக்கொண்டுதான் வந்தேன். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தியாகராசன் வெளியே வந்தான்.

விடுதலை கிடைத்துவிட்டது!

பேய்க் கூட்டங்களிடையும், பிசாசுக் கும்பல்களிடையும் வாழ்ந்த நாள் கனவாகிவிட்டது!

"ஆனால், நான் செல்லும் பாதை...? என் எதிர்காலம்...??"

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.